வரு.75 இல. 01 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2023 ஜனவரி 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 01 Sunday, 2023
24 பக்கங்கள் 100/-






02 ஷாப்டர் மரணத்தின் மர்ம முடிச்சுகள்


08 தேர்தலை எதிர்கொள்ள தயாராகிறோம்


20 புத்தாண்டு ராசி பலன்கள் 2023


24 விடைபெற்றார் பீலே


### இந்த வருடத்தில் இலக்கை நிர்ணயித்து பணியாற்ற தீர்மானம்

# மக்களுக்கு வினைத்திறன் மிக்க அரசாங்க சேவை

## ஜனாதிபதியின் செயலாளருடன் அமைச்சு செயலாளர்கள் இணக்கப்பாட்டு உடன்படிக்கை

**ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் எண்ணக்கருவை நிறைவேற்ற புதிய வருடத்திலிருந்து புதிய பயணம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

அரச நிர்வாக சேவையை வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்குமிடையில் இணக்கப்பாட்டு உடன்படிக்கையொன்று இந்த வருட ஆரம்பத்தில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதியின் செயலாளரினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தான் செயலாளராக பதவி வகிக்கும் அமைச்சில் வினைத்திறனுடன் சேவையை முன்னேற்றுவதற்காக இந்த வருடத்துக்கு ஏற்ப இலக்கொன்று ஜனாதிபதியின் செயலாளரினால் பெற்றுக் கொடுக்கப்பட உள்ளதுடன் அந்த இலக்கினூடாக பயணிப்பது தொடர்பில் ஆராயும் வகையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு ஒன்றை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மீள் பரிசீலனை மேற்கொள்ளப்படும் போது இலக்கை அடைவதற்கு 06

# வளமான இலங்கைக்கான வெற்றி ஆண்டாக மலரட்டும்

## ஜனாதிபதி ரணில் புதுவருட செய்தியில்



வளமான இலங்கைக்கான கதவுகளைத் திறக்கும் வெற்றிகரமான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, புத்துணர்ச்சியுடன் புதிய வருடம் 06

# சவால்களை வெற்றிகொண்டு நாட்டை கட்டியெழுப்புவோம்

## புதுவருட செய்தியில் பிரதமர் தினேஸ்



அனைத்துவிதமான சவால்களையும் வெற்றிகொண்டு சிறந்ததோர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோமென பிரதமர் தினேஸ் குணவர்த்தன தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, குறிப்பாக நாம் 06

# இருள் மறையும் வெற்றி ஆண்டாக மலர வாழ்த்து

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் புதுவருட செய்தி



இருள் மறையும் வெற்றிக்கான பாதையை தெளிவுபடுத்தும் தீர்க்கமான மற்றும் வெற்றிகரமான ஆண்டாக இந்த ஆண்டு அமைய பிரார்த்திப்போமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். பாரிய நெருக்கடிகளை சந்தித்தும் பல நெருக்கடிகள் இன்னும் முடிவடையாத நிலையிலும் 2023 ஆம் ஆண்டு மலர்ந்துள்ளது. 06

# தீர்வுகளை தரும் தீர்க்கமான ஆண்டாக மலர பிரார்த்தனை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து



தமிழ் மக்கள் சுமந்து நிற்கும் தீராப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் தீர்க்கமான ஆண்டாக புதிய ஆண்டு மலரட்டுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புதுவருடச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிகளுக்கும், வேரோடிவிட்ட அரசியல் பிரச்சினைக்கும் 06

# KKS முதல் இந்தியாவுக்கான கப்பல் சேவை மார்ச் முதல்

## இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தைகளில்

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்தியாவுக்கும் காங்கேசன்துறைக்குமிடையில் பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையை எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள பணிப்புரைக்கமைய அதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு மாநில அரசாங்கத்துடன் அது தொடர்பில் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் இராஜதந்திர மட்டத்தில் 06




# முன்னாள் போப்பாண்டவர் 16ஆவது பெனடிக் போப் காலமானார்



வத்திக்கான் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த போப்பாண்டவர் 16ஆம் பெனடிக் நேற்றுக் காலை காலமானார்.

உலக கத்தோலிக்கர்களின் தலைவராக இருப்பவர் போப் பிரான்சிஸ். இவருக்கு முன்பு போப்பாண்டவராக 16ஆம் பெனடிக்ட் இருந்து வந்தார்.

உடல் நலக்குறைவு காரணமாக அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அதன்பின்பு அவர் வத்திக்கானிலுள்ள குரு மடத்தில் தங்கி ஓய்வெடுத்தெடுத்து வந்தார்.

95 வயதாகும் அவருக்கு கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதற்காக வத்திக்கான மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த ஓய்வுபெற்ற போப்பாண்டவர் 16ஆம் பெனடிக்ட்டின் 06

# அரசாங்க ஊழியர்களுக்கு விசேட முற்பணம் வழங்கல்

## பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

அரசாங்க ஊழியர்களுக்கு விசேட முற்பணம் வழங்குவது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு விசேட சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 4,000 ரூபாவுக்குட்பட்ட தொகையை முற்பணமாக செலுத்துமாறு அனைத்து அமைச்சுக்களுக்கும், உள்ளூராட்சி மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் பொது நிர்வாக அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

2015 டிசம்பர் 29 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கையின்படி, முற்பணத்தை ஏற்பாடு செய்யுமாறு பொது நிர்வாக 06

# ம.ம.மு முன்னாள் தலைவர் பெ.சந்திரசேகரனின் 13 ஆவது நினைவுதினம்

## இன்று ஹற்றனில் விசேட நிகழ்வு

நுவரெலியா தினகரன் நிருபர்



மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 13 ஆவது நினைவேந்தல் நிகழ்வு ஹற்றன் தலைமை காரியாலயத்தில் இன்று நடைபெறும். மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா 06

# புதுவருடத்தில் முன்னேற்றம் உண்டாகுமென நம்புவோம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார்



நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு,மலரும் 2023 புத்தாண்டில் மக்கள் வாழ்வியலில் முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படுமென்ற எதிர்பார்ப்புடன், இப்புத்தாண்டினை வரவேற்போமென கல்வி இராஜாங்க அமைச்சர்

அ.அரவிந்தகுமார் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவ் வாழ்த்துச் 06

# எங்கள் கருத்து...

## சுபிட்சம், நம்பிக்கை தரும் புத்தாண்டாக அமையட்டும்!

புதிய ஆண்டில் இன்று நாம் காலடி வைத்திருக்கின்றோம். நாம் கடந்து வந்துள்ள சுமார் மூன்றாண்டு காலப்பகுதி எமது நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக இல்லையென்பது வெளிப்படையான உண்மை. எனவே இன்று பிறந்திருக்கின்ற 2023 ஆம் வருடமானது, நெருக்கடிகள் நீங்கி, சுபிட்சமானதாக அமைய வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இலங்கை மக்கள் கடந்த மூன்று வருடமாக கடந்து வந்துள்ள பாதையானது மிகவும் கரடுமுரடானதாகும். மூன்று வருடங்களுக்கு முன்னர் பெருந்தொற்றான கொரோனா உலகையே பீடித்தது. கொரோனா தொற்று இலங்கை மக்களையும் விட்டுவைக்கவில்லை. கொடிய அத்தொற்றிலிருந்து எமது நாடு நம்பிக்கையுடன் மீள்வதற்கு சுமார் இருவருட காலம் சென்றது.

கொவிட் தொற்று தணிவு நிலைமைக்கு வந்த பின்னர், நாடு படிப்படியாக மீண்டெழுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியதும், மற்றொரு பூதாகரமான பிரச்சினையாக பொருளாதார நெருக்கடி உருவெடுத்தது. இலங்கைத் தேசம் தனது வரலாற்றில் முன்னொருபோதுமே சந்தித்திருக்காத வகையில், ஒட்டுமொத்தத் தேசமே நெருக்கடியில் சிக்கித் தவித்தது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், எரிபொருள் நெருக்கடி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றால் மக்கள் வாழ்வதற்கே போராடினர். பொருளாதார நெருக்கடியானது காலப்போக்கில் தானாகவே அரசியல் நெருக்கடியாக மாற்றமடைந்தது. 06

### இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு முயற்சி;

# தமிழக தலைவர்களது கவனத்தை ஈர்த்து ஒத்துழைப்பை பெற முயற்சி

## தொல். திருமா, சுமந்திரன், இராதா, சதீஸ் சென்னையில் சந்திப்பு

**சென்னை பெரியார் திடல் மண்டபத்தில் ஜனவரி 06 ஆம் திகதி ஏற்பாடு**



இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் வாயிலாக முழுமையான அதிகார பரவலாக்கத்தை அமுலாக்குமாறு இந்திய ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக தமிழகத்தின் தலைவர்களது 06

# யாழ். முதல்வர் பதவியை துறந்தார் மணிவண்ணன்

## உதவி ஆணையருக்கு கடிதம் அனுப்பினார்



யாழ். மாநகரசபை முதல்வர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு தனது பதவிவிலகல் கடிதத்தையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முதல் தடவை தோற்கடிக்கப்பட்டதையடுத்து, 02 ஆவது முறையாகவும் அடுத்த வாரம் வரவு செலவுத் திட்டம் 06

### ஹிக்கடுவை, காலி, பத்தேகம பகுதிகளில்

# மக்கள் வங்கி ஏ.டி.எம். இயந்திரங்களில் ஒரு கோடியே 65,000 ரூபா கொள்ளை

## சீ.சீ.டி.வி பதிவுகள் அடிப்படையில் விசாரணை ஆரம்பம்



ஹிக்கடுவை, காலி, பத்தேகம பகுதிகளிலுள்ள மக்கள் வங்கி கிளைகளின் ஏ.டி.எம். இயந்திரங்களில் சுமார் ஒரு கோடியே 65 இலட்சம் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை (30) அதிகாலை ஹிக்கடுவை, காலி, பத்தேகம ஆகிய நகரங்களிலுள்ள ஏ.டி.எம். இயந்திரங்களிலிருந்தே முறையே 46,80,000, ரூபா, 2,75,000 ரூபா மற்றும் 06

# நாட்டில் கொரோனா தொற்று ஆபத்து இன்னும் நீங்கவில்லை

## அவதானமாக இருக்க Dr.ஹேமந்த அறிவுரை



கொரோனா தொற்றுபவர்களின் உலகளாவிய அபாயம் தொடர்பில் இலங்கையும் மிகக் கவனம் செலுத்துவது அவசியமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று அபாயத்தைத் தவிர்ப்பதற்கு முறையான சுகாதார மற்றும் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதற்கு மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் 06

# தொழிலதிபர் ஷாப்டர் மரணத்தின் மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்படுமா?



இலங்கை வர்த்தக உலகை உலுக்கிய பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் இன்னும் அவிழ்க்கப்படாத மர்ம முடிச்சுகள் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

இதுவரை இக்குற்றத்தை செய்தது யார்? திட்டமிட்டு செய்யப்பட்டதா? எந்த வகையில் இக்குற்றம் இடம்பெற்றது என்பது தொடர்பாக எந்தவித தகவல்களும் வெளிக்கொணரப்படவில்லை. சம்பவம் இடம்பெற்று இன்றுடன் இருவாரங்கள் கடந்துவிட்ட போதிலும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. இந்நிலையில் தினேஷ் ஷாப்டர் தற்கொலை செய்துகொண்டார் என்ற வதந்திகளும் பரவலாக பரவிவருகின்றன.

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் பொரளை பொலிஸாரால் 48 மணிநேரங்கள் மேற்கொள்ளப்பட்டு, பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய குற்றப்புலனாய்வுத்துறையின் மனித கொலை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்டு தற்போது பல்வேறு கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. இச்சம்பவத்தில் பிரதான சாட்சியாளர் பொரளை பொது மயானத்தில் வேலைசெய்யும் நிலாமிய. நிலாமிய பொரளை பொது மயானத்திற்கு அருகிலுள்ள பிரதேசத்திலேயே வசித்து வருபவர். 2015ஆம் ஆண்டு தொடக்கம் இவர் பொரளை பொது மயானத்தில் வேலைசெய்துவருகின்றார். இப்பகுதிக்கு காலை 8.30 மணியளவில் தொழிலுக்காக வருவது நிலாமியவின் வழக்கம்.

அது கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வழமைபோல் 8.30மணியளவில் பொரளை பொது மயானத்திற்கு வேலைக்கு வந்த நிலாமிய, மயானத்தில் அனாத கொள்ள என்று அழைக்கப்படும் பகுதியில், இறந்த ஒருவரின் உடலை புதைப்பதற்கு தன்னால் ஏற்கனவே தோண்டப்பட்டிருந்த குழிக்கருகில் பிற்பகல் 2.00 மணியளவில் வருகின்றார். அதிலிருந்து தினேஷ் ஷாப்டரின் கார் 5 மீற்றர் தொலைவில் நின்றது. இதன்போதே அந்த கார் அருகே உயரமான மெலிந்த தோற்றத்தையுடைய காற்சட்டையும் மேற்சட்டையும் அணிந்திருந்த நபரொருவர் நின்றுகொண்டு மயானத்தின் பின்புறமாகவுள்ள சுடுகாட்டை நோக்கி வேகமாக நடந்து செல்வதை நிலாமிய அவதானித்ததாக தெரிவித்துள்ளார். இதுஇவ்வாறிருக்க தினேஷ் ஷாப்டரின் கார் அருகே வரும் இரண்டாவது நபர் கிரிஷ் பெரேரா. இவர் தினேஷ் ஷாப்டரின் பங்குதாரரும் நெருங்கிய நண்பருமானவர். இவர் தினேஷின் காரை நோட்டமிட்டவாறு பலத்த குரலில் கத்திகொண்டிருக்கும் சத்தம் கேட்டே நிலாமிய மயானத்தில் வேலைசெய்யும் ஜானையும் கூட்டிக்கொண்டு காருக்கு அருகில் ஓடுகின்றார்.



இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவியான செல்வி பு.காவ்யா அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் தனி நடனத்தில் (பதம்) முதலாம் இடத்தைப் பிடித்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். படத்தில் நடன ஆசிரியை ஆர். வரணியா கௌரியுடன் மாணவி காவ்யா.

நிலாமியவும் ஜானும் அங்கு வந்த பிறகு கிரிஷ் பெரேரா சாரதியின் இருக்கைக்கு அருகிலான கதவை திறந்து கைகள் கட்டப்பட்ட நிலையில் குற்றுயிராய் கிடந்த தினேஷை சாரதி ஆசனத்துக்கு அருகிலிருந்த ஆசனத்துக்கு மாற்றினார். மிகுந்த சிரமத்துடன் மூவரும் இணைந்து அவரது உடலில் கட்டப்பட்டிருந்த கேபிள் வயர்களை அகற்றினர். கிரிஷ் பெரேரா வாகனத்தை செலுத்த நிலாமிய தினேஷ் ஷாப்டரை சுயநினைவுக்கு கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டவாறு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அவரை கொண்டு வந்துசேர்ந்தனர். எனினும் அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. தினேஷ் ஷாப்டர் மர்மங்களுடனே இவ்வுலகிலிருந்து விடைபெற்றார்.

அண்மைக்காலங்களில் தினேஷ் ஷாப்டர் காருக்குள் தற்கொலை செய்திருக்க வேண்டும் என்ற வதந்தி பரப்பப்பட்டதை தொடர்ந்து காருக்குள் எவ்வாறு தற்கொலை செய்து கொள்ள முடியும் ?

என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. இலங்கையில் இது ஒரு புதியவிடயமல்ல.

2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பன்னாட்டு நிறுவனமொன்றில் பணியாற்றிய உயர் அதிகாரி ஒருவர் தனது காருக்குள் தற்கொலை செய்து கொண்டிருந்தார். அப்பகுதியிலிருந்த சீ.சீ.டிவி கேமரா ஆதாரங்கள், ஏனைய ஆதாரங்கள் அவரின் மரணம் சந்தேகத்துக்கிடமின்றி தற்கொலை என்பதை உறுதிப்படுத்தியது. எனினும் தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலைத்தான் என்பற்கு வலுவான எந்த ஆதாரங்களும் இதுவரை கிடைக்கவில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

## மனைவி உட்பட 90 க்கு மேற்பட்டவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். தினேஷின் மரணத்தை தற்கொலையாக காட்டுவதன் ஊடாக விசாரணைகளை திசை திருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகமும் தற்போது எழுந்துள்ளது. தினேஷ் ஷாப்டர், மனைவியின் தாயாருக்கு எழுதியதாகக் கூறப்படும் கடிதம், குறுந்தகவல், தொடர்பில் வெளியான செய்தியை தொடர்ந்தே இது தற்கொலையாக இருக்கக்கூடும் என கதைகள் பரவத்தொடங்கின. எனினும் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு அத்தகைய எந்த கடிதமும் கிடைக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமின்றி இதை தற்கொலையென நிரூபிப்பதற்கான அறிவியல் ரீதியான சாட்சியங்கள் போதுமானதாகவில்லை. எனவே இது ஒரு தற்கொலை சம்பவமாகவிருந்தால் அதை உறுதிப்படுத்தும் அறிவியல் சான்றுகள் சேகரிக்கப்பட்டு உறுதிபடுத்தப்படவேண்டும்.



தினேஷ் ஷாப்டர் போன்ற ஒருவர் பொருளாதார நெருக்கடியினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ தற்கொலை செய்து கொள்வதாகவிருந்தால் அதற்காக ஏன் பொரளை பொது மயானத்தை அவர் தெரிவுசெய்ய வேண்டும்? ஏன் வேதனை தரும் கேபிள் கம்பிகளால் கை, கால்களை கட்டிக்கொள்ள வேண்டும் என்ற கேள்விகள் விசாரணை அதிகாரிகளுக்கு எழுந்துள்ளன. எனவே இதுவொரு நகைச்சுவையான விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

தினேஷின் மரணம் தற்கொலையென கூறப்பட்டதற்கு மற்றுமொரு காரணமாக அவரின் கை, கால்கள் கட்டப்பட்டிருந்த கேபிள் கம்பிகளை ஒத்த கம்பிகள் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டமையாகும்.

கொழும்பு 7 இல் தினேஷ் வசித்துவந்த வீட்டை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் சோதனையிட்ட போது , அந்த வீட்டிலிருந்த ஆண்டெனா கேபிள்கள் தினேஷ் ஷாப்டரின் கை. கால்கள் கட்டப்பட்டிருந்த கழுத்தை நெரித்த அதே வகையை ஒத்த கேபிள்கள் என கண்டுபிடிக்கப்பட்டன. தினேஷ் ஷாப்டரின் அறையிலும் அத்தகைய கேபிள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.



தினேஷின் பூதவுடல் அஞ்சலிக்காக இந்த வீட்டிலேயே வைக்கப்பட்டு உறவினர்கள், நண்பர்கள், பாதுகாப்பு பிரிவினர், வெளியாட்கள் என பலரும் வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. எனவே இத்தகையதொரு பின்னணியிலேயே கேபிள் கம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுதவிர குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தினேஷ் ஷாப்டரின் கையடக்கத்தொலைபேசிச் செய்திகள், தொலைபேசி அழைப்புகள் என்பவற்றையும் ஆராய்ந்துள்ளனர். இந்நிலையில் தினேஷ் ஷாப்டரின் பிளவர் வீதி வீட்டுக்கும் பொரளை பொது மயானத்துக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள சீ.சீ.டி.வி காணொளிகளை பகுப்பாய்வு செய்யும் போது மற்றொரு விடயம் தெரியவந்துள்ளது. பிளவர் வீதியிலிருந்து காரை செலுத்தி வந்துள்ள தினேஷ் ஷாப்டர் மலலசேகர மாவத்தையிலுள்ள உணவகமொன்றில் உணவு கொள்வனவு செய்துள்ளார். அவரின் பிரேத பரிசோதனையிலும் அந்த உணவுகள் உடலில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே மனவிரக்தியில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்துடன் கேபிள் வயர்களை எடுத்துக்கொண்டு காரில் பொரளை மயானத்திற்கு செல்பவர்களுக்கு அந்த நேரத்தில் உணவருந்துவதற்கு விருப்பம் ஏற்படுமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

மேலும் தினேஷ் ஷாப்டர் உண்மையில் தற்கொலை செய்துகொள்வதற்காக தனது மனைவியின் தாயாருக்கு கடிதம் எழுதியிருந்தால் எதற்காக முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸுக்கு அவர் குறுந்தகவல் அனுப்பினார். கிரிஷ் பெரேராவின் கருத்துபடி முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸை சந்திப்பது இந்த பயணத்தின் நோக்கமாகவிருந்ததாக அவர் கூறியுள்ளார்.

இதுதவிர ரூ. 200 கோடியை தொழிலில் முதலீடு செய்து நஷ்டமடைந்தமையால் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என கூறப்படுகின்றது. எனவே 200 கோடி ரூபாவை உண்மையில் தினேஷ் முதலீடு செய்தாரா? அதுதொடர்பான கணக்கு பதிவுகள் இருக்கின்றனவா? அதற்கு வரி செலுத்தப்பட்டுள்ளதா? என்பது தொடர்பிலும் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் . மேலும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு தினேஷ் ஷாப்டர் வசித்துவந்த வீட்டை விற்பனை செய்வது தொடர்பில் விளம்பரம் வெளியிடப்பட்டிருந்ததாகவும் , வீட்டை விற்பது தொடர்பாக குடும்ப உறவினர்களின் நிலைப்பாடு குறித்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

அதற்கமைய மனைவி உட்பட 90 க்கும் மேற்பட்டவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும் இதனைவிட பிளவர் வீதி முதல் பொரளை பொதுமயானம் வரை ஷாப்டரின் கார் பயணித்த போது அதனை பின்தொடர்ந்த வாகனங்கள் தொடர்பிலும் ஆராய்ந்துவருகின்றனர்.

எனவே இச்சம்பவம் தொடர்பில் மறைந்துள்ள மர்மங்கள் எதிர்வரும் வாரங்களில் வெளிவருவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதுஎவ்வாறாயினும் விசாரணைகள் முறையாக இடம்பெற்று பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணத்தில் மறைந்துள்ள மர்மம் விரைவில் துலங்க வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்ப்பார்ப்பாகும்.



வசந்தா அருள்ரட்ணம்



கொடகே தேசிய சாகித்திய விருது விழா( 2022) அண்மையில் கொழும்பு தேசிய நூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பொறியியலாளர் தகுதி விருதைப் பெற்றுக்கொண்ட தெஹிவளை கேற்வே கல்லூரியின் ஏழாம் ஆண்டு மாணவியான இளம் கவிஞர் ஹிராஹ் இஸ்திகாரின் கவிதை நூலான கறுப்புவெள்ளை (BLAK AND WHITE) நூலின் முதல் பிரதியை, இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்கிறார். ஹிராவின் தாயார் திருமதி சபீனா சனீர் உடன் காணப்படுகிறார்.



தென் இந்தியாவின் தலைசிறந்த பின்னணிப் பாடகரும் நடிகருமான காலத்தால் அழியாத பாடல்களை பாடிய பாடகர் ஏ.எம்.ராஜாவின் 93ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ். கலட்டி மெதடிஸ் மிஷன் பாடசாலையில் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் சமூகப்பணியில் ஈடுபட்டுவரும் 10 பேருக்கு ஏ.எம்.ராஜா ஞாபகார்த்த விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டன. இதற்கான அனுசரனையை நீலாதேவி தனேந்திரன் வழங்கினார். யாழ் மாநகரசபை உறுப்பினரும் யாழ். மாவட்ட தேசோதய தலைவருமான லயன் கலாநிதி சாமஸ்ரீ தேசமானிய நா.தனேந்திரனின் அனுசரனையோடு நிகழ்வு நடைபெற்றது.
(படம்: வேலணை குறூப் நிருபர்)

# "சிவஸ்ரீ சிவானந்த சர்மா சமய அறிவியலையும் சமூக அறிவியலையும் சமாந்தரமாக கையாண்டவர்"

## 'உதயன்' பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் புகழாரம்

சத்தியன்

யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தொடர்ச்சியாக அந்த மண்ணிலேயே வாழ்ந்து வருபவருமான 'கோப்பாய் சிவம்' என்ற புனைபெயரைக் கொண்ட சிவஸ்ரீ சிவானந்த சர்மா சமய அறிவியலையும் சமூக அறிவியலையும் சமாந்தரமாக தனது கைகளில் எடுத்துக் கொண்டவர். அத்துடன் அவற்றை தொடர்ச்சியாக நன்கு மதித்தும் பேணியும் வருபவர். எவரையும் இவரோடு ஒப்பிட்டுச் சொல்வதும் மிகவும் சிரமமான ஒரு காரியமாகும்'' இவ்வாறு புகழாரம் சூட்டினார் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவருமான லோகன் லோகேந்திரலிங்கம். சிவஸ்ரீ சிவானந்த சர்மா எழுதிய 'அந்தணர்க்கு அருங்கலம், அடியார்க்கு அருட்கலம்' நூல் வெளியீட்டு விழா. கடந்த 25ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவர் சு. முத்துராஜலிங்கம் (முத்து) தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிவாச்சாரியப் பெருமக்களும் ஏனைய துறை சார்ந்த பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தார்கள். அங்கு நட்புரை வழங்கிய லோகன் லோகேந்திரலிங்கம், தொடர்ந்து தனது உரையில் "யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வருகை தரு விரிவுரையாளராகவும் பணியாற்றி உலகெங்கும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளுக்கு பயணித்து சமய உரைகளையும் சிவாகம பணிகளையும் செவ்வனே ஆற்றி வருபவர் தான் சிவஸ்ரீசிவானந்த சர்மா அத்துடன். யாழ்ப்பாணத்தில் 'கோப்பாய் சிவம்' என்ற பெயரில் படைப்பிலக்கியத் துறையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அறியப்பட்டவருமான சிவஸ்ரீ சிவானந்த சர்மா, தற்போது கூட சமய அறிவியலையும் நெறிகளையும் எவ்வாறு மதிக்கின்றாரோ அந்தளவிற்கு சமூகம் சார்ந்த படைப்புக்களையும் தொடர்ச்சியாக வாசித்து வருகின்றார் என்பதை அறிந்து அவரை நான் வாழ்த்துகின்றேன்" எனத் தெரிவித்தார். தொடர்ந்து வெளியீட்டுரை ஆற்றிய டாக்டர் சிவஸ்ரீசோமாஸ்கந்தக் குருக்கள் நூலையும் நூலாசிரியரையும் விதந்து பாராட்டி சபையோருக்கு விளங்கும் வண்ணம் பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். சைவப் பெருமக்களுக்கு பயன் தரும் வகையில் படைக்கப்பட்ட சிவாகமங்கள் மற்றும் சமயக் கிரியைகள் ஆகியவை தொடர்பாக மக்களுக்கும் மற்றும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் உள்ள சந்தேகங்களைப் போக்கும் முயற்சிகளில் பலரும் துணிந்து ஈடுபடுவதில்லை. நான்கு திசைகளிலும் எதிர்ப்புக்கள் கிளம்பும் என்பதால் அவ்வாறு அவர்கள் முன்வருவதில்லை. ஆனால் இவ்வாறான காரியங்கள் சைவப் பெருமக்களின் சமய ஈடுபாட்டுக்கு மிகவும் முக்கியமானவை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் துணிந்து தனது கருத்துக்களை தனது உரைகளில் தெரிவித்தும் நூல்களின் மூலம் பதிப்பித்தும் வெளிக்கொணர்ந்து வரும் சிவஸ்ரீ சிவானந்த சர்மா வை நான் பாராட்டுகின்றேன்" என்றார் அவர். பேராசிரியர் கலாநிதி இ. பாலசுந்தரம் அறிமுக உரையாற்றும் போது. 'சிவஸ்ரீ சிவானந்த' சர்மா எழுதிய 'அந்தணர்க்கு அருங்கலம், அடியார்க்கு அருட்கலம்' நூல் எமது சமயத்தவர்களின் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டிய ஒன்று என குறிப்பிட்டார். நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜய குமாரக் குருக்கள் தனது உரையில் சிவஸ்ரீ சிவானந்த சர்மா எழுதிய இந்த அரிய நூலை படைப்பதற்கு அவர் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் என்பதை நான் அறிவேன்.





ஏடுகளில் பதியப்பட்டவையாக இருந்த சைவம் சார்ந்த உண்மைகளையும் விபரங்களையும் எழுத்துவடிவில் மீளவும் படைத்து, அவற்றை அச்சில் பதிப்பித்து எமக்கு அளித்துள்ளார்.

அதற்காக அவர் எத்தனை மணித்தியாலங்களை அல்லது நாட்களை செலவு செய்திருப்பார் என்பதை நான் அறிவேன். நூலாசிரியர் எழுதிய சமய நூல்கள் பல தமிழ் நாட்டில் பல வேதாகம பாடசாலைகளில் பாட நூல்களாகவும் சான்றுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நான் அறிந்து பெருமைப் படுகின்றேன்.

உதாரணமாக தமிழ்நாட்டில் உள்ள பிள்ளையார்பட்டி ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பிச்சைக் குருக்கள் தலைமையில் அங்கு சிவஸ்ரீ சிவானந்த சர்மாவின் நூல் வெளியீட்டு விழா ஆலயத்தின் வேதாகம பாடசாலையில் நடைபெற்றது என்பதையும் நான் பெருமையோடு பகிர்ந்து கொள்கின்றேன்" என்றார்.

தொடர்ந்து நூலின் பிரதிகளை பல அன்பர்கள் விருப்பத்தோடு பெற்று மகிழ்ந்தார்கள். இறுதியில் சிவ ஸ்ரீ சிவானந்த சர்மாவின் பதிலுரையும் இடம் பெற்றது.







# முழுமையாக அபிவிருத்தியடையும் அனுராதபுரம் - ஓமந்தை ரயில் பாதை




## 33 பில்லியன் ரூபா செலவில் இம்மாதம் 5ஆம் திகதி திட்டம் ஆரம்பம்



வடக்கில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்காக நாட்டின் ஜனாதிபதி உட்பட பல்வேறு துறைகளையும் சார்ந்த அமைச்சர்கள் தத்தமது அமைச்சுக்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்தும் அங்குள்ள மாவட்டச் செயலாளர்கள் உட்பட துறை சார்ந்த அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டும் வரும் காலகட்டம் இது. அந்த வகையில் உதயமாகியுள்ள புது வருடம் வடக்கின் பாரிய அபிவிருத்திக்கு அடித்தளமிடும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

**ரயில் பாதை அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வசதியாக ஐந்து மாத காலங்களுக்கு அனுராதபுரம் – வவுனியா வரையிலான ரயில் சேவைகளை முற்றாக இடைநிறுத்த தீர்மானம்**

இத்தகைய அபிவிருத்தி திட்டங்களின் ஒரு அம்சமாக இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் அனுராதபுரம் ஓமந்தை வரையிலான ரயில்பாதை புனரமைப்புத் திட்டத்தை குறிப்பிட முடியும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ரயில் பாதைகளை புனரமைக்கும் செயற்பாடுகள் ஏற்கனவே இடம்பெற்றிருந்தாலும் பாதிக்கப்பட்டுள்ள ரயில் பாதைகளை முழுமையான அபிவிருத்திக்கு உள்ளாக்கும் திட்டமாக இந்த திட்டம் அமைந்துள்ளது.

இந்தத் திட்டமானது எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படுவதுடன் இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் 33 பில்லியன் ரூபா செலவில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த முழுமையான அபிவிருத்தி திட்டத்தினை நடைமுறைப்படுத்த வசதியாக எதிர்வரும் 5 மாத காலத்துக்கு அனுராதபுரம் வவுனியா வரையிலான ரயில் சேவைகளை முற்றாக இடை நிறுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் இந்திய டெல்கொன் நிறுவனம் இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதுடன்நவீனதொழிநுட்பங்களைப் பயன்படுத்தி அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன அது தொடர்பில் அண்மையில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது தெளிவுப்படுத்தினார்.

இந்திய டெல்கொன் நிறுவனத்தின் பணிப்பாளர்களான குருபட்சன், சி.கே.பன்டிட் ஆகியோரும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு மேற்படி பாரிய அபிவிருத்தி திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் 5 மாத காலத்துக்கு அனுராதபுரம் வவுனியாவுக்குயிடையிலான ரயில் சேவைகள் இடம்பெற மாட்டாது. எனினும் வடக்கிற்கான ரயில் பயணிகளின் நலன் கருதி விசேட பஸ் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் அனுராதபுரத்திலிருந்து வவுனியா வரை பயணிகள் பயணிப்பதற்காக ரயில்வே திணைக்களம் விசேட பஸ் சேவைகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இக்காலப்பகுதியில் வடக்கிற்கான ரயில் சேவை கொழும்பு மற்றும் கல்கிசையிலிருந்து அனுராதபுரம் வரை வழமை போன்று இடம்பெறும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவிக்கின்றது.

காங்கேசன்துறையிலிருந்து கிளிநொச்சி வரையான வழமையான ரயில் சேவை இக்காலங்களில் வவுனியா வரை இடம்பெறுவதுடன் கல்கிசை மற்றும் கொழும்பு கோட்டையிலிருந்து வடக்கு நோக்கி புறப்படும் யாழ்தேவி ரயில் உட்பட அனைத்து ரயில்களும் வழமை போன்று அனுராதபுரம் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் ரயில்வே பொதுமுகாமையாளர் குறிப்பிட்டார். இந்த அபிவிருத்திப் பணிகள்

காரணமாக மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு பதிலாக மக்கள் எதிர்வரும் காலங்களில் சிறந்த ரயில் சேவையை பெற்றுக்

**இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவடையும் போது சிறந்த ரயில் பயணத்தை அனுபவிக்க முடிவதுடன் ரயில் பயணத்தின் ஒரு மணித்தியாலத்தை மீதப்படுத்தவும் வாய்ப்பு**



கொள்வதற்கு இதன் மூலம் வழிவகை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தம் இடம்பெற்ற 30 வருட காலத்தில் வடக்கிற்கான ரயில் பாதை பெரும் பாதிப்புகளுக்குள்ளானது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் மாகோ ரயில் நிலையத்திற்கும் காங்கேசன்துறை ரயில் நிலையத்திற்கும் இடையிலான ரயில் பாதையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு யுத்தத்தின் பின்னர் மீண்டும் மக்கள் சேவைக்காக அது திறந்து வைக்கப்பட்டது.

அதற்கிணங்க 100 வருடங்களுக்கு மேல் எத்தகைய அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாத அனுராதபுரம் ஓமந்தை ரயில் பாதையை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்ததுடன் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு தற்போது கைகூடியுள்ளது.

இந்திய அரசாங்கமானது இலங்கையின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கும் தொடர்ச்சியாக உதவி, ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது. கொரோனா வைரஸ் பரவல் உக்கிரமடைந்த காலத்திலும் நாடு பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய பங்களிப்புகள் இன்றியமையாதவை.

அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரை இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் வடக்கு, கிழக்கு மலையகம் உட்பட பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. அந்த தொடர்ச்சியான உதவி ஒத்துழைப்புக்களின் ஒரு அம்சமாகவே இந்தியா வடக்கின் ரயில் பாதை அபிவிருத்தி திட்டங்களிலும் இலங்கை அரசாங்கத்துடன் கைகோர்த்துள்ளது.

இலங்கையின் நட்பு நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியா குறிப்பிடத்தக்க நெருக்கத்தை இலங்கைக்குக் காட்டுகின்றது. இந்தியா எமது அயல்நாடு மட்டுமின்றி எப்போதெல்லாம் இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுகின்றதோ அப்போதெல்லாம் உடனடியாகவே கை கொடுப்பதற்கு தயங்கியதில்லை. அந்த வகையில் பெரும் நிதிச் செலவில் இந்த திட்டத்தை இந்தியா பொறுப்பேற்றுள்ளமை பாராட்டுக்குரியது.

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**பிறந்துள்ள புத்தாண்டின் முற்பகுதியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் தயாராகி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினரும், தேர்தல்களுக்கான அவசியம் தற்பொழுது இல்லையென்று மற்றொரு தரப்பினரும் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.**



# ஆயிரம் கோடி ரூபாவை வீண்விரயமாக்கி உள்ளூராட்சி தேர்தல் தற்போது அவசியமா?



## நாட்டின் பொருளாதார நெருக்கடியை உணர்ந்து கொண்ட நிபுணர்கள் முன்வைக்கும் வினா!

குறிப்பாக நாடு பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், தேர்தலுக்கான அவசியம் உள்ளதா என்பதே தற்பொழுது முன்வைக்கப்படுகின்ற பிரதான கேள்வியாகும்.

உத்தேச உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு சுமார் 10 பில்லியன் ரூபா(ஆயிரம் கோடி ரூபா) செலவாகுமென தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். தேர்தல் நடத்துவதற்கான செலவு குறித்து தேர்தல் ஆணையத்திடம் ஆலோசித்து நிதி கேட்டு விண்ணப்பித்திருப்பதாகவும், உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்ட பிறகு மதிப்பீடுகளை தயார் செய்யவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த செலவினத்தில் வாக்குச் சீட்டுக்கான செலவு மற்றும் தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்களும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், நாடு அதன் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகவும், தற்போது அரசாங்கத்தின் மாதாந்த வருமானம் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி சலுகைகளுக்கு மட்டுமே போதுமானதாக இருப்பதால், தேர்தலுக்குப் பெருந்தொகை பணத்தை செலவழிப்பதற்கான நேரம் இது அல்ல என திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதுடன், எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் வெற்றிகரமான முடிவுகளை எதிர்பார்க்கலாம். இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தலுக்குப் பணம் ஒதுக்க முடியாது. அவ்வாறு செயற்படாவிட்டால் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டம் தடம்புரண்டுவிடும் என்பதும் திறைசேரி அதிகாரியின் நிலைப்பாடாக இருந்தது.

அரச ஊழியர்களின் சம்பளத்திற்காக அரசாங்கத்தின் மாதாந்த வருவாயில் 93,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட வேண்டும் என்பதுடன், 10 பில்லியன் ரூபா உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஒதுக்கப்படுவதாயின், பொருளாதார மீட்சிக்குப் பயன்படுத்தக் கூடிய தொகையில் பாரிய பாதிப்பு ஏற்படும். குறிப்பாக பொருளாதார மீட்சிக்கும், வறுமை ஒழிப்புக்கும் பயன்படுத்தக் கூடிய நிதியின் அளவில் குறைவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் என சுட்டிக்காட்டப்படுகிறது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலைப் பொறுத்தவரையில் நாட்டில் உள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். இவற்றில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் உள்ளடங்குகின்றன. இவற்றுக்காக 8,356 உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர். 2018 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் இருந்ததைப் போன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கு 4,486 உறுப்பினர்களை நியமிப்பது பொருத்தமானது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் தெரிவித்திருந்தார். இது தொடர்பான மாற்றங்களைக் கொண்டு வருவதாயின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

கள யதார்த்தம் இவ்வாறு இருக்கும் நிலையில், தேர்தலைக் கோரும் எதிர்க்கட்சியினர் உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தினாலேயே சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், இதற்கு அமைய தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.




**நாடு அதன் வரலாற்றில் மிகமோசமான பொருளாதார நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ளதால், அரசாங்கத்தின் மாதாந்த வருமானமானது அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி நிவாரணங்க–ளுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. இந்நிலையில் தேர்தலுக்குப் பெருந்தொகை பணத்தை செலவிடுவதற்கான நேரம் இதுவல்ல என்கிறார் திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர்!**

இருந்தபோதும் இந்தப் பிரசாரங்களில் உண்மை எதுவும் இல்லையென அரசாங்கத் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. தேர்தல் தொடர்பான கருத்தாடல்களானது நாட்டுக்குப் பொருளாதார மீட்சிக்கு வழி வகுப்பதற்குப் பதிலாக ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் வழமையான அரசியல் கலாசாரத்துக்கே வித்திடும். நாடு எதிர்கொள்ளும் சூழ்நிலைக்கு இது பொருத்தமானது அல்ல என்பதை அரசியல்வாதிகள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான பின்னணியில் பெருந்தொகையான பணம் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுமாயின் நாட்டில் மற்றுமொரு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்றும் திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரி சுட்டிக்காட்டுகின்றார்.

இருந்தபோதும் அரசியல் கட்சிகள் தேர்தலுக்கான தயார்படுத்தலில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தனது தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்காணல்களை நடத்தி வருவதுடன், ஆளும் கட்சியான பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

தேர்தலுக்கு முகங்கொடுக்கத் தாம் தயாராக இருப்பதாக பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

**பி.ஹர்ஷன்...**

# குறைந்த வருமானமுடைய நாடுகளின் வளர்ச்சியில் இந்தியாவின் வகிபாகம்




**உலகில் அவ்வப்போது ஏற்பட்டுவரும் பொருளா–தார மந்தநிலை, தே–க்கநிலையைக் கருத்தில் கொண்டு அதை எதிர்கொள்ளும் வகையில் உலக பொருளாதார நெருக்கடிகளை அலசி ஆராய்வதற்காக 1999 ஆம் ஆண்டு நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்களை உறுப்பின–ர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்புதான் G–20.**

2022ஆம் ஆண்டு முடிவடைந்து புதிய ஆண்டு தொடங்கியுள்ள இச்சமயத்தில், சர்வதேச அளவில் இந்தியா மையப்புள்ளியை நோக்கி நகர்ந்து வருகிறது. இந்த நகர்வில் முக்கியமாகக் கருதப்படுவது, G20 என அழைக்கப்படும் 20 நாடுகள் அடங்கிய கூட்டமைப்புக்கு 2023 ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பு சுழற்சி முறையில் இந்தோனேசியாவிடமிருந்து இந்தியாவுக்கு வந்திருப்பதாகும்.

இது தவிர அதிகாரம் நிறைந்த அமைப்பான ஐ.நா பாதுகாப்புக் கவுன்சிலின்கீழ் இயங்கும் உலக அளவில் பெரிய பிராந்திய அமைப்பான ஷாங்காய் கூட்டுறவு அமைப்புக்கான (Shanghal Cooperation Organization – SCO) தலைமைப் பொறுப்பும் இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிறது.

இது 2023 செப்டம்பர் வரையிலான பதவியாகும். எனவே உலக அளவில் ஊடகங்களின் பார்வை இந்தியா மீது கொஞ்சம் அதிகமாகவே பட ஆரம்பித்திருக்கிறது. இனிவரும் மாதங்களில் இது அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஜி20 இற்கான தலைமைப் பொறுப்பை இந்தியா பெற்ற தருணத்திலிருந்து கடந்த ஒரு மாத காலமாக பரவலாகப் பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருகிறது. ஜி 20 என்பது உலகின் முக்கிய, வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதார நாடுகளான 20 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு அமைப்பாகும். ஜி 20 குழுவில் இந்தியா, ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் நாடுகள் உள்ளன.




## G 20 தலைமைத்துவத்தினால் கிடைத்துள்ள செல்வாக்குமிக்க பொறுப்பு




ஜி 20யின் உறுப்பு நாடுகள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதத்தைக் கொண்டுள்ளன. உலக வர்த்தகத்தில் 75 சதவீதத்திற்கும் மேலான பங்களிப்பைக் கொண்டுள்ளன. உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கை G20 நாடுகள் கொண்டுள்ளன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஜி20 மன்றத்தின் தலைமைப் பதவி தற்போது இந்தியா வசம் வந்துள்ளது. அதன்படி 2022 டிசம்பர் 1ஆம் திகதி தொடக்கம், நவம்பர் 30, 2023 வரை ஒரு வருட காலத்திற்கு இந்தியா இந்தக் குழுவிற்கு தலைமை வகிக்கும்.

கடந்த நவம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் இந்தோனேசியாவின் பாலியில் நடந்த ஜி 20 உச்சிமாநாட்டின் நிறைவு விழாவில் செல்வாக்கு மிக்க அதன் தலைமைப் பதவி இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தியாவின் ஜி20 தலைவர் பதவிக்கான சின்னம் மற்றும் கருப்பொருள் ஆகியவற்றை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார். இந்தியாவின் ஜி20 சின்னம் தாமரை மலர் மேல் பூமி இருப்பது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவின் ஜி 20 இற்கான கருப்பொருள் – 'ஒரே பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்' என்பதாகும். இது உலகம் ஒரு குடும்பம் என்று கூறும் 'வசுதைவ குடும்பகம்' மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

இந்தியா அதிகாரபூர்வமாக அதன் தலைமைப் பதவியை ஏற்றதையடுத்து, இந்தியாவின் 50 நகரங்களில் இருநூறு ஜி 20 கூட்டங்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் ஜி20 தலைவர்களின் உச்சிமாநாட்டை இந்தியா தனது தலைமையின் கீழ் நடத்தவிருக்கிறது.

இந்தியாவில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாடுகளில் இந்தியாவில் உள்ள யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள 100 நினைவுச்சின்னங்களை முன்னிலைப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி நாடு முழுவதும் உள்ள இந்த 100 நினைவுச்சின்னங்கள் ஒரு வாரத்திற்கு ஜி20 சின்னத்தை சிறப்பிக்கும் வகையில் ஒளிரும்.

மேலும் இந்தியாவில் நடைபெறும் சிறந்த திருவிழாக்கள், கொண்டாட்டங்களை ஜி20 உறுப்பினர்களிடையே பிரபலப்படுத்தும் நடவடிக்கையாக 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் வருகின்ற மகர சங்கராந்தி மற்றும் பெப்ரவரியில் வரும் சிவராத்திரி போன்ற பல்வேறு திருவிழாக்களைக் காண்பிக்கும் திட்டங்களும் உள்ளன. தற்போது ஜி 20 குழுவின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றுள்ள நிலையில், ஒட்டுமொத்த மனித குலத்திற்கு நன்மை பயக்கும் வகையில் அடிப்படை மனநிலையை மாற்ற வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த ஒரு வருட தலைமைப் பதவியில் உலகளவிலான பொருளாதார மந்தநிலை மற்றும் காலநிலை நெருக்கடி போன்ற உலகளாவிய சவால்களை சமாளிப்பது, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும் என மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி 20 நாடுகளுக்கு இந்தியா தலைமை ஏற்றுள்ளது குறித்து பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி, இந்தியா, நடுத்தர வருமானம் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளைப் பற்றிய ஆழமான பொருளாதார புரிதலைக் கொண்டுள்ளது. இந்தியா, அதன் தனித்துவமான கண்ணோட்டத்துடன், இந்த நாடுகளின் நிதி பின்னடைவை மேம்படுத்த வேண்டும் என்ற இலக்கை அடைய உதவ முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஜி 20 கூட்டமைப்பு தனித்துவமான ஒன்று. இது வடிவமைக்கும் கொள்கைகள் சம்பந்தமாக உலக நாடுகள் மத்திய ஒருமித்தக் கருத்தை உருவாக்க உதவும். இந்தியாவின் ஜி 20 தலைமைத்துவம் இந்த பிரபஞ்சம் முழுவதும் ஒன்றே என்னும் உணர்வை மேம்படுத்த பாடுபடும் என்று எதிர்பார்க்கலாம்.

இன்று இந்தியா மிகவும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக உள்ளது. மக்களை மையமாக கொண்ட ஆட்சி முறை, திறன்மிக்க இளைஞர்களின் படைப்பாற்றல் தன்மையை ஊக்குவிக்கும் அதேவேளையில் மிகவும் விளிம்பு நிலையில் உள்ள மக்களையும் கவனத்தில் கொள்கிறது. ஜி20 தலைமைத்துவத்தின் போது இந்தியா தனது அனுபவங்கள், கற்றல்கள் மற்றும் மாதிரி செயல்பாடுகளை அனைவருக்கும் வழங்க முடியும். குறிப்பாக வளரும் நாடுகளுக்கு அவற்றை வழங்க இயலும்.

**எஸ்.சாரங்கன்...**

# கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருதுகள் பெறும் படைப்பிலக்கியவாதிகள் முருகபூபதி, பாவண்ணன்

கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் வழக்கமாக வருடா வருடம் வழங்கும் இயல்விருது கொவிட் தொற்று காரணமாக 2020 ஆம் வருடம் வழங்கப்படவில்லை. ஆகவே 2022 இல் இரண்டு இயல் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவை 2023 யூன் மாதம் கனடா ரொறொன்ரோவில் வழங்கப்படும்.

இம்முறை இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவரும் அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்றுள்ளவருமான எழுத்தாளர் லெட்சுமணன் முருகபூபதிக்கும், இந்திய எழுத்தாளரான பெங்களூரில் வதியும் பாவண்ணனுக்கும் இயல் விருது வழங்கப்படுகிறது.

## லெட்சுமணன் முருகபூபதி:

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் விருதை, கடந்த 50 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் இலங்கையில் பிறந்த படைப்பிலக்கியவாதியும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி அவர்களுக்கு வழங்குகிறது.


1972 இல் எழுத்தாளராக அறிமுகமான இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருது கிடைத்தது. வீரகேசரி பத்திரிகை ஆசிரிய பீடத்தில் இவர் பணியாற்றியபோது, சோவியத் ஒன்றியத்தின் அழைப்பில் உலக இளைஞர் – மாணவர் விழாவில் கலந்து கொண்டார்.

1987 இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த இவர், தொடர்ந்து சிறுகதை, கட்டுரை, பேட்டி, பயண இலக்கியம் என எழுதி வெளியிட்டு வருகிறார். அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடத்துவதில் முன்னின்று உழைத்துவரும் இவர், 2011 இல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம அமைப்பாளராக செயல்பட்டார்.

அவுஸ்திரேலியாவில் 1988 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், 2004 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் ஆகியனவற்றின் ஆரம்ப உறுப்பினருமாவார்.

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் 13 யூலை 1951 இல் பிறந்த முருகபூபதி , விவேகானந்த வித்தியாலயத்தில் (தற்போது விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி) தமது ஆரம்ப கல்வியை தொடங்கி பின்னர், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும், (தற்போது கனகரத்தினம் மத்திய கல்லூரி) நீர்கொழும்பு அல்கிலால் மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.


முருகபூபதி


பாவண்ணன்

இவருடைய வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் 'ரஸஞானி' என்ற ஆவணப்படத்தை 2017 இல் மெல்பேர்ன் எழுத்தாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தியும், வீடியோ கலைஞர் மூர்த்தியும் இணைந்து தயாரித்து வெளியிட்டனர்.

இவருடைய சிறுகதை தொகுதிகள் ஏழும், புதின, சிறுவர், பயண இலக்கியம் மூன்றும், கடித இலக்கியம், நேர்காணல் தொகுதி இரண்டும், கட்டுரை தொகுதிகள் பதினாறும் வெளிவந்துள்ளன.

### இவர் பெற்ற இலக்கிய விருதுகள்:

- சுமையின் பங்காளிகள் – 1975 ஆம் ஆண்டு சிறந்த சிறுகதை தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.
- பறவைகள்_2002ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.
- அக்கினிக்குஞ்சு இணைய இதழ் 2018 இல் வழங்கிய வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் விருது.

### இதர விருதுகள்:

2002 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தினத்தின் போது விக்ரோரியா மாநில டெறபின் மாநகர சபை வழங்கிய சிறந்த பிரஜைக்கான விருது.2011 ஆம் ஆண்டு விக்ரோரியா மாநில பல்தேசிய கலாசார ஆணையத்தின் விருது.2022 Aust Tamil TV (Tamil Linguistics Award) விருது.

## பாவண்ணன் (இயற்பெயர் பலராமன் பாஸ்கரன்):

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் விருதை, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் பாவண்ணன் அவர்களுக்கு வழங்குகிறது.

பாவண்ணன் 1980 களில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர்களின் தலைமுறையை சேர்ந்தவர். 'தீபம்' என்னும் இதழில் வெளிவந்த முதல் சிறுகதையை தொடர்ந்து சிற்றிதழ்களிலும், பெரிய இதழ்களிலும் இவர் இன்றுவரை தொடர்ந்து எழுதுகிறார்.

தமிழ் சிறுகதைகளையும், தமிழில் வெளிவந்த பிறமொழிச் சிறுகதைகளையும் முன்வைத்து திண்ணை இணைய இதழில் 'எனக்குப் பிடித்த கதைகள்' என்னும் தலைப்பில் இவர் அந்தக் கதைகளில் காணப்பட்ட அழகியலையும் வாழ்வியலையும் இணைத்து புரிந்துகொள்ளும் விதமாக எழுதிய நூறு விமர்சனக் கட்டுரைகள் மிகப்பெரிய வாசக கவனத்தைப் பெற்றன.

படைப்புகளை முன்வைத்து 'உயிரோசை' இணையதளத்தில் 'மனம்வரைந்த ஓவியம்' எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை.

பாவண்ணன், வளவனூர் என்னும் சிற்றூரில் 1958 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 இல் பிறந்தார். பள்ளிக் கல்வியை வளவனூரிலும் புகுமுக வகுப்பை விழுப்புரம் அரசுக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை புதுச்சேரி தாகூர் கலைக்கல்லூரியிலும் படித்து தேறினார். கோட்டப் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவருடைய கவிதைத் தொகுதிகள் மூன்றும், சிறுகதை தொகுதிகள் 21 , நாவல்கள் மூன்றும், குறுநாவல்கள் மூன்றும், கட்டுரை தொகுப்புகள் 34 , சிறுவர் இலக்கியத் தொகுப்புகள் ஒன்பதும், மொழிபெயர்ப்புகள் (கன்னடத்திலிருந்து) 24 நூல்களும், (ஆங்கிலத்திலிருந்து) ஐந்து நூல்களும் (எல்லாமாக 99 நூல்கள் ) இதுவரை வெளியாகியுள்ளன.




# "பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்" கொழும்பில் நூல் அறிமுக நிகழ்வு

"பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்" நூல் அறிமுக நிகழ்வு, ஜனவரி 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30க்கு கொழும்புத் தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் நடைபெறும்.

கடந்த நான்கு தசாப்தங்களாக லண்டனை தளமாகக் கொண்டு இயங்கும் பாலேந்திரா, இலங்கையில் 1972/1982 காலப் பகுதியில் மிக தீவிரமான அரங்க செயற்பாடுகளை மேற்கொண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட ஆற்றுகைகளை இலங்கையின் பல பாகங்களிலும் நிகழ்த்தினார்.

அவரது நாடக இயக்கத்தின் ஒரு பகுதியாக 1979/1982ஆம் ஆண்டு காலப் பகுதியில் அவர் எழுதிய கட்டுரைகளே பெரும்பாலும் இந்த நூலில் உள்ளன.நவீன நாடகத் துறையில் தீவிரமாக இயங்கிய காலங்களில் அனுபவச் செறிவுடன் பாலேந்திரா அரங்கு பற்றி எழுதிய கருத்துக்கள் இன்றும் பொருந்தும் என்கிறார் பிரபலமான இந்திய நாடக ஆளுமை இந்திரா பார்த்தசாரதி.



இலங்கைப் பத்திரிகைகளில் பிரசுரமாகிய கட்டுரைகளே முழுமையாக இந்த நூலை அலங்கரிக்கின்றன. ஒரு காலத்தைப் பதிவு செய்யும் ஒரு வரலாற்று ஆவணமாக இந்த நூலைப் பார்க்க முடியும். அரங்கியல் கற்கும் மாணவர்களுக்கு ஒரு அரிய பொக்கிஷம் இந்த நூல்.

இந்த நூலில் விவாதிக்கப்படும் அரங்கம், திரைப்படம், வானொலி போன்ற விஷயங்கள் மாணவர்களுக்கு பயன்படும் . ஈழத்து நவீன தமிழ் நாடக உலகில் 50 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இயங்குபவரும், தற்போது லண்டனை தளமாகக் கொண்டவருமான முன்னோடி நாடக நெறியாளர் க பாலேந்திரா எழுதிய இந்த நூல் குமரன் புத்தக இல்லம் வெளியீடாக இலங்கையில் வெளியாகிறது.



# பொது அறிவித்தல்

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

## துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

# அங்கீகரிக்கப்பட்ட விமானப் பயணச்சீட்டு முகவர்

2010இன் 14ஆம் இலக்க விமானப் போக்குவரத்துச் சட்டத்தின்படி, சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தினால், வெளியிடப்பட்ட செல்லுபடியான உரிமம் ஒன்று இன்றி விமானப் போக்குவரத்து வர்த்தகத்தில் எந்த ஒருவரும் ஈடுபட முடியாது. அதன்படி இலங்கையில் விமானப் பயணச்சீட்டுகளின் விற்பனைக்காக பயண முகவர் ஒருவர் செல்லுபடியான உரிமம் ஒன்றை வைத்திருப்பது அவசியமாகும்.

எவ்வாறாயினும், விமானப் பயணச்சீட்டுகளின் விற்பனையில், உரிமம் பெறாத விமானப் பயணச்சீட்டு முகவர்கள் ஈடுபடுவது மேல் குறிப்பிடப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்திற்கு அமைய தண்டனைக்குரிய குற்றம் என்று இலங்கை விசில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அறியத்தருகிறது.

இந்த சூழலில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) பின்வரும் விடங்களை பொதுமக்களுக்கு அறியத்தர விரும்புகிறது.

1. இலங்கை விமானப் பயணச்சீட்டுகளை வழங்கும் மற்றும்/ அல்லது விற்கும் அனைத்து முகவர்களும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் வழங்கப்படும் செல்லுபடியான விமானப் போக்குவரத்து வழங்குநர் (பயணிகள்) உரிமம் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்.
2. விமானப் போக்குவரத்து வழங்குநர் உரிமத்தின் (முகவர்) அனுமதிப்பத்திரத்தை வைத்திப்பவர் தமது வர்த்தகத்தின் முதன்மை அசல் உரிமத்தை அல்லது ஒவ்வொரு கிளை அலுவலகத்திலும் அதன் முறையாக உறுதி செய்யப்பட்ட பிரதியை பிரதானமாக காட்சிப்படுத்தல் வேண்டும்.
3. CAASL மூலம் வழங்கப்பட்ட உரிமத்தை பிரதானமாக காட்சிப்படுத்தாத எந்த ஒரு முகவரிடம் இருந்தும் விமானப் பயணச்சீட்டு ஒன்றை வாங்குவது தொடர்பில் அவர்கள் எந்த ஒரு பரிவர்த்தனையையும் மேற்கொள்ளமாட்டார்கள் என்பதை பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.
4. கொடுப்பனவு முறை எந்த வகையில் மேற்கொள்ளப்பட்டாலும் அனைத்து கொடுப்பனவுகளுக்காகவும் விரிவான பற்றுச்சீட்டு ஒன்றை வழங்குவதற்கு முகவர் ஒருவர் கடப்பாடு பெற்றுள்ளார். அந்தப் பற்றுச்சீட்டு முகவருடனான பரிவர்த்தனையின் ஆதாரத்தை உறுதி செய்வதாக இருத்தல் வேண்டும்.
5. உரிமத்தை அங்கீகரிப்பதாக முகவர் நிரந்தர வர்த்தக இடம் ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
6. CAASL அதன் சார்பாக போக்குவரத்து வர்த்தகத்தை நடத்துவதற்கு எந்த ஒரு நபருக்கும் அங்கீகாரம் அளிக்கவில்லை. எனவே எந்த ஒரு முகவராலும் CAASL முத்திரையை காட்சிப்படுத்துவது பொதுமக்களை தவறான வழியில் இட்டுச்செல்லும் முயற்சியாகவே கருதப்படும்.

**விமானப் போக்குவரத்து வழங்குநர் (பயணிகள்) உரிமம்**

அனைத்து முகவர்கள், விமான சேவைகள் மற்றும் பொது விற்பனை முகவர்கள் செல்லுபடியான விமானப் போக்குவரத்து வழங்குநர் (பயணிகள்) உரிமத்தை வைத்திருத்தல் வேண்டும் என்பதோடு அது தொடர்பில் மேலதிக விபரங்களை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் விமானப் போக்குவரத்து மற்றும் பொருளியல் ஒழுங்குமுறைகள் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**உரிமம்**

1. பொருந்தக்கூடிய சட்டத் தேவைகளை உறுதி செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. ஓர் ஆண்டுக்காக வழங்கப்படுவதோடு வருடாந்தம் புதுப்பிக்கப்படமாட்டாது.
3. விமான பயணச்சீட்டுகளின் விற்பனையில் ஈடுபடுவதற்கு இதனை வைத்திருப்பவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.
4. உலகளாவிய விநியோக முறைமைகளைப் பெறுவதற்கு அவசியமாகும்.
5. உரிமம் பெற்ற பயண முகவர்கள் அல்லது விமான சேவைகளுடனான பரிவர்த்தனைகளுக்கு அவசியமாகும்.
6. சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவசியமாகும்.

**போலி பயணச்சீட்டு முகவர்களை அடையாளம் காணல்**

1. அவர்களால் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்படும் உரிமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதி ஒன்றை காட்சிப்படுத்த அல்லது முன்வைப்பதற்கு முடியாமலாகலாம்.
2. அசாதாரணமான குறைந்த விலையில் பயணச்சீட்டுகளை கூறுவிலையிடல் அல்லது விற்பனை செய்யலாம்.
3. உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு ஒன்றை வழங்க முடியாத நிலையில் இருக்கலாம்.
4. வர்த்தகத்திற்கு நிலையான இடம் ஒன்று இல்லாமல் இருக்கலாம் மற்றும் வர்த்தகத்தின் இடத்தை அடிக்கடி மாற்றலாம்.
5. பயணச்சீட்டு விலைகளை முன்வைக்க அல்லது பயணத்திட்டத்தில் ஏதேனும் மாற்றத்தை மேற்கொள்ள காலம் எடுத்துக்கொள்ளலாம்.
6. அவர்களது தனிப்பட்ட கணக்குகளுக்கு பணம் வைப்புச் செய்வதற்கு கோரப்படலாம்.

**உரிமம்பெறாத பயணச்சீட்டு முகவர்களுக்கான நடவடிக்கைக்கான வழி**

1. இவ்வாறான முகவர்களிடம் இருந்து விமானப் பயணச்சீட்டுகளை வாங்குவதை எப்போதும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
2. இந்த முகவர்கள் பற்றி சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு அறிவுறுத்த வேண்டும்.
3. சந்தேகத்திற்கு இடமான செயற்பாடுகள் நடப்பதை நீங்கள் அறிந்தால், அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிப்பது சிறந்ததாகும்.

**பயணச்சீட்டு முகவரின் செல்லுபடித்தன்மையை உறுதிசெய்தல்**

1. சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமம் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தல்.
2. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் மாதாந்தம் புதுப்பிக்கப்படுகின்ற பட்டியலை கண்காணித்தல்.
3. dater@caa.lk என்ற மின்னஞ்சல் ஊடாக விமானப் போக்குவரத்து மற்றும் பொருளியல் ஒழுங்குமுறை பிரிவின் பணிப்பாளரிடம் மின்னஞ்சல் கோரிக்கை ஒன்றை செய்தல்.
4. அலுவலக நேரத்தில் 0112358888 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்தல்.
5. கட்டுநாயக்கவில் அமைந்துள்ள இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு அலுவலக நேரத்தில் வருகை தருதல்.

**முக்கியமாக அவதானிக்கவும் - உரிமம் பெறாத பயணச்சீட்டு முகவர்களிடம் இருந்து விமானப் பயணச்சீட்டுகளை வாங்க வேண்டாம்.**

**சிவில் விமானப்போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை**
**இல. 152/1, மினுவன்கொட வீதி, - கட்டுநாயக்க.**
**0112358800**

# இலங்கை மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி உருவாக்கும் ஆண்டாக 2023 அமைய வேண்டும்

**எஸ்.ஆனந்தகுமார்**



இலங்கை மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் ஆண்டாக 2023ஆம் ஆண்டு இருக்கும் என ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில்.....

புது வருடம் பிறக்கிறது என்றாலே அனைவருடைய மனதிலும் புதிய தன்னம்பிக்கை மேலோங்கும். இதுவரை சந்தித்த துன்பங்களும், துயரங்களும் புதிய வருடத்தில் நீங்காதா என்ற எதிர்பார்ப்பை உருவாக்கும்.

கடந்த 2022 ஆம் ஆண்டு, நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களையும், துன்பங்களையும் அனுபவித்த ஆண்டாக நிறைவு பெற்றிருக்கிறது. எத்தகைய சோதனைகள் வந்தாலும் தொடர்ந்து நம்பிக்கையுடன் முன்னோக்கிபயணிக்கவேண்டும்.அதுவே முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

கடந்த ஆண்டில் பட்ட துன்பங்களுக்கு முடிவு ஏற்படுகிற வகையில் ஆரோக்கியமான அரசியல் சூழல் ஏற்படும் என்று மிகுந்த நம்பிக்கை தற்போதைய ஜனாதிபதி மீது இருக்கிறது.

எதிர்வரும் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் மீட்சியில் பயணிக்குமென தரவுகள் கூறுகின்றன. புத்தாண்டில் புதிய முயற்சிகள் வெற்றியை நோக்கி பயணிக்கும் உறுதியை ஏற்போம். அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# மலர்ந்துள்ள புத்தாண்டு அனைத்து மக்களுக்கும் சுபிட்சமான ஆண்டாக அமைய வேண்டும்

**இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்**



மலர்ந்துள்ள 2023ஆம் ஆண்டு உலக மக்கள் அனைவருக்கும் சுபிட்சத்தையும் சமாதானத்தையும் அமைதியையும் பெற்றுத்தர வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நம்பிக்கைகளுடன் இந்த புத்தாண்டை மக்கள் வரவேற்கின்றனர். அவர்களது நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் இப்புத்தாண்டில் நிறைவேற வேண்டும். மக்களுக்கு அனைத்து நலன்களும், வளங்களும் கிடைத்திட வேண்டும் என்பதுடன் பொருளாதார ரீதியான நெருக்கடிகள் தீர்ந்து மகிழ்ச்சி பெருகிட வேண்டும்.

பழைய ஆண்டு கற்றுத் தந்த பாடங்களில் இருந்து புதிய ஆண்டில் நாம் வாழ்வை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய கனவுகளோடு, நம்பிக்கைகளோடு புத்தாண்டை வரவேற்போம்.

அனைவரின் வாழ்விலும் வசந்தம் மலரட்டும். மலையக மக்கள் வாழ்வில் இந்த ஆண்டு புதிய ஒளி வீசவேண்டும் எனவும் செந்தில் தொண்டமான் தனது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

# உலகளாவிய மனிதநேய அபிவிருத்தி பணிகளில் சவூதி அரேபியா முதலிடம்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

உலகளாவிய மனிதநேய அபிவிருத்திப் பணிகளில் சவூதி அரேபியா முதலிடத்தை பெற்றுள்ளதாக கலாநிதி அம்ஜத் ராசித் தெரிவித்தார்.

அவர் இது பற்றி தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

தனது தேசிய வருமானத்திலே 1.05% வீதத்தினை வளர்ச்சி குன்றிய நாடுகளுக்காக ஒதுக்கியதுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தி குன்றிய மற்றும் நடுத்தர மட்டத்திலான நாடுகளுக்கான உலகளாவிய மனிதநேய உதவித்திட்டத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ அறிக்கையினை உலக பொருளியல் மற்றும் கூட்டுறவு வளர்ச்சிக்கான அமைப்பு வெளியிட்டுள்ளது.

இவ்வமைப்பின் அபிவிருத்தி நித்தியத்திற்கான குழு சென்ற 21 டிசம்பர் 2022 புதன்கிழமை வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையின் பிரகாரம் உலகளாவிய மட்டத்தில் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு உதவிக்கரம் நீட்டிய பலம்வாய்ந்த நாடுகளின் பட்டியலில் சவூதி அரேபியா முதலிடம் வகித்துள்ளது என மனித நேயப் பணிகளுக்கான மன்னர் சல்மான் நிதியத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அப்துல்லாஹ் தெரிவித்தார்கள்.

ஷர்க் அல்அவ்சத், அல்மதீனா, அல்யவ்ம் போன்ற மத்திய கிழக்கின் முதல்தர நாளேடுகளுக்கு 26 .12.2022 அன்று வழங்கிய செவ்வியிலேயே பேராசிரியர் அவர்கள் இத்தகவலினை வெளியிட்டார்கள்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

சவூதி அரேபியாவின் 2021 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய உதவிகள் 7.12 பில்லியன் அமெரிக்க டாலர்களை (26.71 பில்லியன் சவூதி ரியல்களை) எட்டியுள்ளது. இது சவூதியின் தேசிய வருமானத்தில் 1.05% வீதத்தினை எட்டியிருப்பது விசேட அம்சமாகும்.

## 'லெப்ட் அலோன்' சிறுவர் நாவல் வெளியீட்டு விழா

குருநாகல் மலியதேவ பாலிகா வித்தியாலயத்தில் 11 ம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி செல்வி இல்மா நஸீர் எதிர்வரும் ஏழாம் திகதி 'லெப்ட் அலோன்' என்ற ஒரு சிறுவர் நாவல் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வு ஜனவரி 7ம் திகதி குருநாகல் நகர மண்டபத்தில் பி.ப. 3.30க்கு இடம்பெறவுள்ளது. முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜே ஜீ என் திலகரத்தின பிரதம அதிதியாகவும் மலியதேவ பாலிகா வித்தியாலய அதிபர் திருமதி நிரோதா அபேவிக்கிரம கௌரவ அதிதியாகவும் இன்னும் பலர் சிறப்பதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த மாணவி நிக்கவரட்டிய கல்வி வலயத்தின் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் பீ எம் நஸீர் மற்றும் மலியதேவ பாலிகா வித்தியாலய ஆங்கில ஆசிரியை பரீனா நஸீர் ஆகியோரின் புதல்வியாவார் .

## முன்னாள் போப்பாண்டவர் 16ஆவது ...

உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக கடந்த சில நாட்களுக்கு முன்பு மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந் நிலையில், போப்பாண்டவர் 16ஆம் பெனடிக்ட் நேற்று சிகிச்சை பலனின்றி காலமானார்.

இதுகுறித்து வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் மேட்டியோ புரூனி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"போப்பாண்டவர் 16ஆம் பெனடிக் நேற்றுக் காலை 9:34 மணிக்கு வத்திக்கானிலுள்ள மேட்டர் எக்லேசியா மடாலயத்தில் காலமானாரென்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தது.

## சவால்களை வெற்றிகொண்டு...

உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து, ஏனைய அனைத்துத் துறைகளுக்குமான அபிவிருத்தி முயற்சிகளில் செயற்திறமாகப் பணியாற்றுவோம்.

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கின்ற தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான மூலோபாயங்களுடன் செயற்பட்டு, மலரும் புத்தாண்டில் வளமானதொரு தேசத்தை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோமென்றும் பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அரசாங்க ஊழியர்களுக்கு...

அமைச்சு, நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. முற்பணம் வழங்கல் இன்று முதல் 28.02.2023 ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28.02.2023 ஆம் திகதிக்கு பின்னர் முற்பனம் பணம் செலுத்தக் கூடாதென்றும், 2023ஆம் ஆண்டுக்குள் இந்த முற்பணம் முழுமையாக அறவிடப்பட்ட வேண்டுமென்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்கள் வங்கி ஏ.டி.எம். இயந்திரங்களில்...

57,00,000 ரூபா பணம் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

30 ஆம் திகதி அதிகாலையில் இந்த ஏ.டி.எம். இயந்திரங்களுக்கருகில் வந்த வெளிநாட்டவர்களென சந்தேகிக்கப்படும் சிலர் அங்கு பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கமராக்களுக்கு ஸ்ரிக்கர் ஒன்றை ஒட்டி மறைத்துள்ளனர்.

கணினியூடாக ஏ.டி.எம். இயந்திர தரவுகளை மாற்றியமைத்து இவ்வாறு பணத்தை கொள்ளையடித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த மூன்று பிரதேசங்களிலுமுள்ள ஏ.டி.எம் இயந்திரங்களில் ஒரு முறையை கையாண்டே பணம் கொள்ளையிடப்பட்டுள்ளமையால் இந்தக் கொள்ளையை ஒரே தரப்பினரே செய்திருக்கலாம் அல்லது தொடர்பு பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஹிக்கடுவை, காலி, பத்தேகம உள்ளிட்ட பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## நாட்டில் கொரோன...

பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார். சீனாவில் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளதையடுத்து, தற்போது பல நாடுகள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த மீண்டும் கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளன.

இலங்கையில் தினமும் சுமார் 10 கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்படுவதாகவும், ஆனால் சந்தேகத்திற்குரிய அனைத்து நோயாளர்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தாத காரணத்தினால், சமூகத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கொரோனா தொற்றாளர் இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முறையான சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவதன் மூலம் இன்றைய நாட்களில் பரவி வரும் இன்புளூன்சா போன்ற நோய்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியுமென சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழ். முதல்வர் பதவியை...

சமர்ப்பிக்கப்படவிருந்தபோது, அதற்கு போதிய ஆதரவு இல்லாமையால் பதவி விலகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் இன்று முதலாம் திகதி முதல், பதவிவிலகுவதாக உள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ம.ம.முன்னாள் தலைவர்...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நிகழ்வு மாலை 2.00 மணிக்கு நடைபெறும் என மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் விஜேசந்திரன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 13 ஆவது நினைவேந்தல் நிகழ்வை மலையக மக்கள் முன்னணி தொடர்ச்சியாக 13 ஆவது வருடமாக முன்னெடுத்து வருகின்றது.

மேலும் இந் நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களும் அமைப்பாளர்கள் தோட்ட கமிட்டி தலைவர்கள் உட்பட ஆதரவாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

## தீர்வுகளை தரும் தீர்க்கமான...

நிலையான தீர்வொன்றை கண்டுவிட வேண்டுமென்ற தீர்மானம் ஏற்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பமும் முயற்சிகளும் நாட்டுக்கு விடிவொன்றை கண்டு தரும் என்று நம்புவோமென்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அந்தச் செய்தியில் தெரித்திருப்பதாவது,

மக்களை தோற்கடித்து அதில் சுயலாப அரசியல் செய்வோர் இன்னும் மாறவே இல்லை.

ஒற்றுமை என்கிறார்கள் அக்கணமே உள் முரண்பாடுகள் என்கிறார்கள், மக்களை மறந்து மறுகணமே மத்தியஸ்தம் என்றும் மாற்றுத் திட்டம் என்றும் புலம்பித் தள்ளுகிறார்கள்.

அவர்களை இனியும் நம்பினால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏதும் நடந்தேறாது என்பது மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமக்கான அரசியல் இலாபம் தவிர தமிழ் மக்களுக்கு தொடர் தோல்விகளை மட்டுமே பரிசளிக்கும் அவ்வழியை மறந்து, பிறக்கும் புத்தாண்டிலாவது நடைமுறைச் சாத்தியம் எனும் நல் வழி நடந்திட தமிழ் மக்கள் உறுதி ஏற்றிட வேண்டும்.

பல தசாப்த கால பிச்சினையான தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வொன்றை தருவதென்பது இலகுவான காரியமல்ல. அதற்கு ஜனாதிபதி தென் இலங்கையில் பல தடைகளை கடக்க பலம் பெற வேண்டும்.

அதற்கு தமிழ் மக்களும் தமது நேசக்கரம் நீட்டி புதிய நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

இத்தகைய தீர்க்கமான காலச்சூழலில் ஆரம்பமாகும் புதிய வருடமானது தீர்வுகளைத் தரும் ஆண்டாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## எங்கள் கருத்து...

### சுபிட்சம், நம்பிக்கை தரும் புத்தாண்டாக அமையட்டும்!

மக்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தியதனால், அரசுத் தலைவரே தனது பதவியைத் துறக்க வேண்டியதாயிற்று.

பொருளாதார வீழ்ச்சி ஒருபுறமிருக்க, அரசியல் நெருக்கடியைக் கடந்து வருவதற்கு எமது நாடு பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. இலங்கையின் அரசியல்யாப்பு விதிகளுக்கமைய புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகினார். அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ள நாட்டை மீட்டெடுப்பதற்கு ஆற்றல்மிகுந்த அரசியல் தலைவர் வேறெவரும் இல்லையென்று முடிவாகிய பின்னர், அதிகப்படியான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவானார் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கான அடித்தளத்தை அவர் பலமாகவே இட்டார். பொருளாதார முன்னேற்றத்துக்கான அவரது திட்டங்களை சர்வதேசம் பாராட்டுகின்றது. பொருளாதார முன்னேற்றத்துக்கான நம்பிக்கை அறிகுறிகளும் தென்படுகின்றன.

நாட்டின் நெருக்கடி இவ்வாறிருக்கையில், நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு எதிரணி போராடுகின்றது. நாட்டுக்கு தற்போது அவசியமானது அரசியலா அல்லது பொருளாதார மீட்சியா என்பதையிட்டு எதிரணிக்கு அக்கறையில்லை என்பது தெளிவாகின்றது.

பொருளாதார மீட்சி குறித்தே மக்கள் இன்றைய நிலையில் சிந்திக்க வேண்டியுள்ளது. நாம் விரைவில் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையே புதிய ஆண்டில் மக்களிடம் வலுப்பெற வேண்டும். தொடர்ந்து வந்த துன்பங்கள் விரைவில் நீங்கி விடுமென்று இன்றைய புத்தாண்டு தினத்தில் அனைவரும் நம்பிக்கை கொள்வோம். எமது வாசகநேயர்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துகள் உரித்தாகுக!

## மக்களுக்கு வினைதிறன்...

தேவையான அளவு செயற்பாடுகளை கொண்டிராத அமைச்சுகளின் செயலாளர்கள் ஆறு மாத காலத்துக்கு சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவர்.அதற்கான தீர்மானத்தை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மேற்கொண்டுள்ளார்.

அடுத்த வருடத்தில் 60 வயதை நிறைவு செய்யும் அமைச்சின் செயலாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஓய்வு பெற்று செல்லும் நிலையில் புதிதாக நியமிக்கப்படும் செயலாளர்கள் இந்த உடன்படிக்கைக்குள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்த இணக்கப்பாட்டு உடன்படிக்கைக்கிணங்க அரச சேவை செலவினங்களை 25% ஆக குறைத்தல், அனாவசிய செலவுகளை இல்லாதொழித்தல் உள்ளிட்ட உரிய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுவது உள்ளிட்ட இணக்கப்பாடுகள் பலவற்றை உள்ளடக்கி இந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தமிழக தலைவர்களது கவனத்தை...

ஒத்துழைப்பை பெறுவதற்கான சர்வகட்சி மாநாடும் கலந்துரையாடலும் செய்தியாளர் சந்திப்பும் எதிர்வரும் 06ஆம் திகதி மாலை சென்னை பெரியார் திடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுச்சித் தமிழர் தொல் திருமாவளவன் எம்.பி. தலைமையில் நடைபெறும் மாநாட்டுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி எம்.ஏ சுமந்திரன், மலையக மக்கள் முன்னணித் தலைவர் முனைவர் வே. ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்திய இலங்கை உடன்பாடு,வரலாற்று ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச ஒப்பந்தமாகும்.அதனடிப்படையில் இலங்கையின் அரசியலமைப்பு சாசனத்தில் 13ஆவது திருத்தம் அடிப்படையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட மாகாண நிர்வாக செயல்முறைகள் முழுமையான அதிகாரங்களுடன் சட்டப்பூர்வமாக தடையின்றி மக்களின் ஜனநாயக தெரிவுகள் மூலமாக இயங்க வேண்டுமென்பதே தீர்வுத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இருப்பினும் கடந்த சில வருடங்களாக இலங்கையில் நிலவிவரும் பல்வேறு அரசியல், சமூக பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்பட்டவில்லை. எனவே இந் நிலையில் மாகாண தேர்தல்களை நடத்துமாறு பல்வேறு கட்சிகள், சிவில் அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு மேலதிமாக இந்தியாவின் மத்திய, மாநில அரசு மற்றும் கட்சிகளினதும் வலியுறுத்தல், உரிய தீர்வை எட்டுவதற்கு மிகவும் உறுதுணையான காரணியாக அமையுமென நம்புகிறோம்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் தமிழகத்திலிருந்து ஏற்படக்கூடிய ஜனநாயக அழுத்தங்கள் ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்ப்பதுடன் இராஜதந்திர ரீதியான வெளியுறவு அணுகுமுறைகளிலும் தமிழ் மக்களுக்கு சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தலாம்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழர்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின சமூகங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக சர்வகட்சி கூட்டங்களை நடத்தி வருகிறார்.

எனவே இவ்வாறான சூழ்நிலையில் தமிழக தலைவர்களும் ஆர்வலர்களும் ஒன்றிணைந்து இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் நலன்களுக்காக ஆராய்ந்து யோசனைகளை, சிபாரிசுகளை தீர்மானங்களாக முன்வைப்பது சாலச்சிறப்பாக அமையுமென்றும் கூறப்பட்டுள்ளது.

## வளமான இலங்கைக்கான...

ஒன்று பிறக்கிறது. புதிய சிந்தனைகள், திடமான நோக்கு என்பவற்றுடன் எண்ணங்களைப் புதுப்பித்துக் கொள்ள இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

எண்ணிலடங்கா சிரமங்கள், நிச்சயமற்ற சூழ்நிலைகள், ஏமாற்றங்களுடனான ஒரு வருடத்தை முடித்துக்கொண்டு, நாம் 2023 எனும் புதிய ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றோம்.

முன்னெப்போதும் இல்லாதவாறு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாரிய சுமை மற்றும் நம்மில் பெரும்பாலானோர் சந்தித்த பின்னடைவு ஆகியவற்றை நான் நன்கு அறிவேன். எனினும், நாம் ஏற்கனவே நெருக்கடியான நிலையைக் கடந்துவிட்டதாக கருதுகின்றேன். 2023 புதிய ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்புமுனையைக் குறிக்கும் ஒரு தீர்க்கமான ஆண்டாக இருக்கும்.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான இளைஞர்கள் தற்போதுள்ள அரசியல் முறைமையில் மாற்றம் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கோரிக்கையைப் புறக்கணிக்க முடியாது. எதிர்வரும் தசாப்தத்துக்கு வளமான இலங்கையை கட்டியெழுப்ப உத்தேசித்துள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை நாம் அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வேலைத்திட்டத்தில் நாட்டை முன்னிலைப்படுத்தி, அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வரும் தீர்க்கமான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக பொறுமையுடனும் தைரியத்துடனும் காத்திருந்த அனைத்து இலங்கை மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## புதுவருடத்தில் முன்னேற்றம்...

செய்தியில் மேலும்,..

எமது நாடு எதிர்நோக்கியிருந்த கொவிட் 19 தொற்று மற்றும் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றினால், இந்நாட்டு மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இது போன்றதோர் அவல நிலைகளிலிருந்து மக்கள் விடுக்கப்படக் கூடிய சமிக்ஞைகள் புத்தாண்டில் தென்பட ஆரம்பித்துள்ளன.

வாழ்வியலில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள், விரும்பத் தகாத செயல்பாடுகள், வறுமை, பஞ்சம் ஆகியன அகன்று, புத்தாண்டில் மக்களின் வாழ்வியல்களில் சுபிட்சம், சமத்துவம், சகோதரத்துவம் மலர வேண்டுமென்று, எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

## KKS முதல் இந்தியாவுக்கான...

நடைபெற்று வருவதுடன் அது தொடர்பில் சாத்தியமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளதையடுத்து திர்வரும் மார்ச் மாதத்தில் இந்த படகு சேவையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான பயணிகள் படகு சேவையை நடத்தும்போது பழைமை வாய்ந்த இராமர் பால பாதையை உபயோகிப்பதா? அல்லது சங்கமித்திரை இலங்கைக்கு வருகை தந்த போது உபயோகப்படுத்தப்பட்ட பாதையை பயன்படுத்துவதா? என்பது தொடர்பிலான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி கப்பல் சேவையை ஆரம்பித்ததன் பின்னர் காங்கேசன்துறை அல்லது மன்னாரில் குடிவரவு குடியகல்வு நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல் மற்றும் சுங்க அலுவலகத்தை ஸ்தாபித்தல் அத்துடன் துறைமுக அதிகார சபையின் மத்திய நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அதிகாரிகளுக்குமிடையில் இந்த வருடத்தின் முதல் பகுதியிலேயே பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளது.

## இருள் மறையும் வெற்றி...

எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,...

ஒரு நாடாக கடந்த வருடம் முழுவதும் கேட்ட மற்றும் எதிர்கொண்ட பல செய்திகள் நல்லதை விட கெட்டவையாகவே இருந்தன. தூரநோக்கு இல்லாத ஆட்சி முறையால் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக வங்குரோத்து நிலைமைக்கு ஆளாகிய படுமோசமான ஆண்டாகவும்,இந்த நாட்டில் பொது மக்களின் தீர்க்கமான வெற்றி எழுச்சிக்கான தனித்துவமான ஆண்டாகவும் 2022 ஆம் ஆண்டை குறிப்பிட முடியும்.இந்த உன்னத எழுச்சிக்கு நாமும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்போம்.

ஒரு நாடாக, நாம் பல சவால்களுடன் 2023 ஆம் ஆண்டை எதிர்கொள்கிறோம்.நாட்டின்தற்போதைய ஆட்சியை மீட்சியாக மாற்றுவதற்கான முன்னணி நடவடிக்கைகள் இந்த வருடத்திற்குள் எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். தோல்வியடைந்த ஆட்சியின் துன்பத்தை இந்நாட்டு மக்கள் இனியும் அனுபவிக்க முடியாது என்பதே யதார்த்தம்.

ஒரு நாட்டின் உந்து சக்தி மக்களின் இறையாண்மை என்பதை மீண்டும் ஒருமுறை நினைவு கூர்ந்து அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# வீழ்ச்சியடைந்த நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்துகிறார் ஜனாதிபதி ரணில்

**தொலைநோக்கு பார்வையற்ற முன்னைய ஆட்சியினால் ஏற்பட்ட அனைத்து நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நீங்களும் நானும் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளோம். நாங்கள் உங்களுக்கு முன்னர் விளக்கியது போல், நாட்டின் மற்றும் தேசத்தின் அதிர்ஷ்டவசமாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுக்கும் சவாலை எதிர்கொண்டபடி தற்போதைய ஜனாதிபதிப் பதவியை ஏற்று, நாட்டை முன்னோக்கி நகர்த்திச் செல்கிறார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குறுகிய காலத்தில் ஆற்றிய பணிகள் சிலவற்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். கடந்த காலங்களில் நடைபெற்ற வன்முறைப் போராட்டங்களை அமைதிப்படுத்தி, விலைமதிப்பற்ற மனித உயிர்களைப் பலிகொண்ட அடக்குமுறை , வரிசை சகாப்தம் தற்போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நாளாந்த போக்குவரத்து நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்ள மக்கள் ஒரு காலத்தில் தேடியலைந்த பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், கேஸ் என எல்லாம் தற்போது எதுவித சிரமங்களும் இன்றி, தட்டுப்பாடுகள் இன்றி கிடைக்கப்பெறுகின்றது.

## 2023ஆம் ஆண்டு இனிய புத்தாண்டாக அமைய பிரார்த்திக்கின்றேன்!!

மந்தமாக இருந்த அரசு நிறுவனங்கள் இயல்பு நிலையில் இயங்கவும், நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை வருவாய் ஈட்டும் நிறுவனங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.

சீர்குலைந்த கல்வித் துறையை மீண்டும் செயல்படுத்துவதன் மூலம் மூடப்பட்ட பள்ளிகள் மீண்டும் செயல்படுவது மட்டுமல்லாமல், புதிய தொழில்நுட்பத்துடன் முறையான கல்வியை வழங்குவதன் அடிப்படையில் ஒரு புதிய திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. காலியாக இருந்த கருவூலமும் படிப்படியாக நிரம்பி வருகிறது. உலகில் தனிமைப்படுத்தப்பட்ட நாடாக இலங்கை தொடர்ந்தும் இருக்கவேண்டிய நிலை மாறி, முன்பை விட இன்று சர்வதேச ஆதரவைப் பெற்று வருகிறது.

உலகெங்கிலும் உள்ள மக்கள் மீண்டும் நம் நாட்டிற்கு வருவதால், சுற்றுலாத் துறையில் வருமான ஆதாரங்கள் தடுக்கப்பட்ட மோசமான காலம் முடிவுக்கு வந்துள்ளது. அதேபோல், மின் கட்டணம் மற்றும் பொருட்களின் விலையை குறைக்கும் இலக்குகளையும் நாம் அடைய வேண்டும். குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி உட்பட எமது அரசாங்கம் ஏற்கனவே விசேட கவனம் செலுத்தி வருகின்றது. மேலும், 2048ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே தமது நோக்கமாகும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு இந்த நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு பங்களிப்பு வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.



கடந்த 2020 பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சில விடயங்கள் குறித்து உங்களை எச்சரித்தோம். எங்கள் தேர்தல் அறிக்கையின் சிறப்பான விடயங்கள் சிலவற்றைக் குறித்து உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். பிரச்சினைக்கான காரணங்களைக் காட்டும் தெளிவான விளக்கமொன்றை அது உங்களுக்கு வழங்கியிருந்தது. அன்றைய சிக்கல் நிலையின் ஆணிவேர் குறித்து தெளிவான விளக்கம் வழங்கப்பட்டது. ஆனால் சிக்கலைத் தீர்க்க குறுக்குவழிகள் இல்லை என்பதையும் நாங்கள் வலியுறுத்தினோம். பிரச்சினை எப்படி தீவிரமடையக் கூடும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குளறுபடியை அவிழ்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், எப்படி, யாரால் மேற்கொள்ளப்பட முடியும் என்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது. குழப்பத்தை அவிழ்க்கும் வழியையும் கூறியிருந்தோம். இறுதியாக, குழப்பத்தை அவிழ்ப்பதற்கான திட்டங்கள் குறித்து தெளிவான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் முன்னைய அரசின் தோல்வியடைந்த பொருளாதார வேலைத்திட்டத்தினால் நாடு முழுவதும் அராஜகமானது. இவ்வாறானதொரு அராஜக நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நாட்டை மீட்கவும், இயல்பு நிலைக்கு மீளக்கொண்டு வரவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார்.

அதன் போது தன்னை விமர்சித்தாலும் பரவாயில்லை, தனது வீடு எரிக்கப்பட்டாலும் பரவாயில்லை, தயவு செய்து அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று அழைப்பு விடுக்கின்றார். அதுதான் தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள பொருத்தமான வழிமுறையாகும்.

தேசிய ஒற்றுமையால் மட்டுமே நமது நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வர முடியும். அந்த தேசிய ஒருமைப்பாட்டிற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மலரும் புத்தாண்டில், தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக நாட்டை மீண்டும் அராஜக நிலைக்குத் தள்ளாமல், வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

2023 ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டாக இருக்க பிரார்த்திக்கின்றேன்.!!

**ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன**

---

# மலையக தமிழர்களுக்கு இலங்கையில் பாண்டிச்சேரி முறையிலான அதிகாரப்பகிர்வு

## டில்லி செயலமர்வில் 18 ஆண்டுகளுக்கு முன்னர் அமரர் பெ. சந்திரசேகரன் கோரிக்கை

**மலையகமக்கள் முன்னனியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 13வது நினைவுதினத்தை முன்னிட்டு அவர் 2004 நவம்பர் புதுடில்லியில் முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பேர்கொவ் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த "இசைவாக்கம் குடியாட்சி வேற்றுமையும் முகாமைத்துவமும்" என்ற தலைப்பிலான செயலமர்வில் இந்திய வம்சாவளி மலையக மக்கள் பற்றி அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.**

19ம் நூற்றாண்டின் முற்பகுதியல் பிரித்தானியரின் ஆட்சியின் கீழிருந்த ஆசிய நாடுகளில் நவீன, விவசாய அபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இலங்கையில் பொருத்தமானதும் வளம்மிக்கதுமான நிலத்தை பிரித்தானியர் இனங்கண்டு பெருந்தோட்ட விவாசயத்துறையில் பெருமளவில் பணத்தை முதலீடு செய்தனர்.

இவ்வாறான பொருளாதார அபிவிருத்தியினூடாக புதிய, நவீன தேவைகள் மட்டுமன்றி புதிய பிரச்சினைகளும் எழுந்தன.

முதலாளித்துவ அடிப்படையில் விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்திய போது, நாட்டில் உடல் உழைப்பிற்கான தேவையும் அதிகரித்தது. கோப்பி, தேயிலை, றப்பர் முதலான பெருந்தோட்டப் பயிர்களில் முதலீடு செய்வதற்கு நாட்டில் முதலாளி வர்க்கம் இருந்தபோதும், உடல் உழைப்பிற்கான தொழிலாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவியது. பெருந்தோட்டத்துறையில் நிலவிய மனித சக்திக்கு முடியாத வேலை நியதிகளையும், மனிதாபிமானமற்ற முற்றிலும் புதிய வாழ்க்கை முறையை பின்பற்றுதலையும் அவர்கள் மறுதலித்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் உடல் உழைப்பாளர்களுக்காக அபிவிருத்தியடையாத நாடுகளை அணுகுவதற்கு பிரிட்டிஷார் தள்ளப்பட்டனர். 1834ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் அடிமைத்தனம் ரத்து செய்யப்பட்டமையால் ஆபிரிக்க நீக்ரோக்களை அவர்களால் இயங்க வைக்க முடியவில்லை. இச் சந்தர்ப்பத்தில் மலிவானதும், கடின உழைப்பாளர்களுக்குமான நாடாக இந்தியா தென்பட்டது. இவ்வாறு இந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டனர்.

150 ஆண்டுகளுக்கு முன் மலையகத் தமிழர்கள் அல்லது தற்போது இந்திய வம்சாவளி மலையக தமிழர் எனவும் அழைக்கப்படுகின்ற அல்லது பெருந்தோட்டத் தமிழர்கள் என சிலரால் குறிக்கப்படுகின்றவர்கள் 150 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர்.

கோப்பித் தோட்டங்களில் பின்னர், தேயிலை, றப்பர் தோட்டங்களில் மற்றும் பொது வேலைகளிலும் வேலை செய்வதற்கு இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டனர். இலங்கை தீவினுடைய பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக மாறிய தேயிலை, றப்பர் என்பன பயிரிடப்பட்ட தோட்டங்களில் உழைக்கக்கூடிய கடின உழைப்புசக்தியும், மலிவானதும் பணிவானதுமான தொழிலாளர்களாக இந்தியர்கள் உள்ளனர் என பிரித்தானிய தோட்ட உரிமையாளரும், ஆட்சியாளரும் இனங்கண்டனர்.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கப்படும் வரை தொழிலாளர்களின் எல்லையைத்தாண்டி போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்றது. காலத்திற்கு காலம் மிக அண்மித்து இருந்த தமது தாயகமான அண்டைய நாட்டிற்கு சென்று வந்த போதும் இவர்கள் இலங்கையிலேயே வசித்தனர். சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இந்திய வம்சாவளி தமிழர்கள் இலங்கையை தாயகமாக கொண்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இங்கேயே பிறந்ததுடன், இந்தியாவிலிருந்து தமது சந்ததியினருடன் கால ஓட்டத்தினால் தொடர்பினை இழந்ததுடன் தமது தாயகம் பற்றிய கனவுகளையும் இழந்தனர்.

இலங்கையில் குடியேறிய இந்திய வம்சாவளியினரில் சிலர் நகர்ப்புறங்களில் வேலை செய்ததுடன், சில்லறை வியாபாரம் மற்றும் ஏனைய தொழில்களைச் செய்ததுடன் இவர்களில் சிலர் கடின உழைப்பின் காரணமாக தொழில் அதிபர்களாகவும், முன்னனி வர்த்தகர்களாகவும், தொழில் முயற்சியாளர்களாகவும் பாரிய வளர்ச்சியடைந்தனர்.

பெரும்பாலான இந்திய வம்சாவளியினர் பெரும்பான்மையின மக்களாகிய சிங்கள மக்களிடமிருந்து விடுபட்டு தனித்து இயங்கிய உலகமாக இருந்த பெருந்தோட்டங்களில் அடைந்திருந்தனர். இவர்கள் தனது தனித்துவமான சமய, இனக்கலாசார, மரபுகள் என்பவற்றை பாதுகாத்து வந்தனர். பெருந்தோட்டத் துறை அதிகாரத்துவம் தனது அதிகாரத்துவ கூட்டமைப்பின் மூலமாக பெரும்பான்மையின சிங்களமக்களுடன் இந்திய சமூகத்தை தொடர்பு கொள்ளக்கூடிய ஒன்றிப் போகக்கூடிய போக்கினை தடைப்படுத்தியது.

சிலவர்த்தக நடவடிக்கைகளிலும், எழுதுவினைஞர், விற்பனை உதவியாளர், ஆசிரியர்கள் போன்ற தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற 15சதவீத சிறு தொகையினரைத் தவிர மிகுதி 85 சதவீத இந்திய வம்சாவளி மலையக மக்களும் பெருந்தோட்ட தொழிலாளர்களாக இந் நாட்டின் நகர்ப்புறம் தவிர்ந்த பகுதிகளில் வசிப்பதுடன் இப்பகுதியே மலையகம் எனவும் அழைக்கப்படுகிறது.

### பிரச்சினைகளை இனங்காணல்.

குடியிருப்பு (வீட்டுவசதி) உணவு, உடை, நீர் மற்றும் ஆரோக்கிய வசதிகள், கல்வி, தொழில் வாய்ப்பு முதலானவற்றின் வழங்கலில் சுயதேவையை அடையாத நிலையில் 21ஆம் நூற்றாண்டிலும் பின் தங்கியவர்களாகவும், பிரதிகூலமானதாகவும் மலையக பெருந்தோட்ட சமூகம் அடையாளம் காணப்படுகின்றது.

இம்மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக தங்களை அழைக்கின்ற அரசியல் கட்சிகளின் 50 வருடங்களுக்கு கூடுதலான நீண்ட அரசியல் போராட்டங்கள் இம்மக்களின் வாழ்க்கைத் துறையிலும், உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வரையும் எவ்வித அடிப்படை மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. இதன் காரணமாகவே நான் தலைமை தாங்கும் மலையக மக்கள் முன்னனி தனது தொழிற்சங்கம் மற்றும் அரசியல் முன்னெடுப்புக்களையும் நடவடிக்கைகளையும் பொறுத்தவரையில் தூரநோக்குடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்றது.

மலையக சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினருக்கு மட்டுமே பிரஜாவுரிமை இருந்த போது உள்ளூராட்சி மன்றங்கள், நாடாளுமன்றம் என்பவற்றின் பிரதிநிதித்துவம் குறைவாக இருந்ததெனினும், தற்போது முற்றுமுழுதாக அனைவருக்கும் (ஒரு சிறுதொகை தவிர) பிரஜாவுரிமை இருப்பதாக காணப்படுகின்ற போதும் எமது அரசியல் பிரதிநிதித்துவம் என்பது கனவாகவே தொடர்கின்றது.

### தேவையான ஒதுக்கீடுகள்.

இலங்கையின் சகல பிரதேசங்களிலும் பரந்து வாழுகின்ற ஏறத்தாழ 16 லட்சம் இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கு அவர்களின் நாடாளுமன்றம், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றில் பிரதிநிதித்துவம் இனவிகிதாசார அடிப்படையில் சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும்.


தற்போதுள்ள இனவிகிதாசார அடிப்படையில் எமது நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் பதினெட்டு பேருக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, அம்பேகமுவ என்ற இரு பிரதேச சபைகளே தற்போது இருக்கின்றன. மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க மேலும் பிரதேச சபைகளையும், கிராம, பிரதேச, மாவட்ட செயலகங்களையும் உருவாக்கி அவர்களின் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்களோடு அவர்களின் சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப நிர்வாக கட்டமைப்பு முறைகளை அதிகரிக்க வேண்டும்.

இந்திய வம்சாவளி மலையக மக்கள் எவ்வித சமூக கவனிப்புமின்றி நூற்றாண்டு காலம் வாழ்ந்து வருவதால், இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சட்டத்தின் மூலம் அரசியல், சமூக, கல்வி, தொழில்வாய்ப்பு போன்றவற்றில் விசேட முன்னுரிமை வழங்கப்படுவது போன்று மலையக மக்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.

தற்போது அமுலில் இருக்கும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலும் கூட இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாக இருப்பதுடன், எதிர் காலத்தில் தொகுதிவாரி முறையை அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இத்தகைய முயற்சி இந்திய வம்சாவளி மலையக மக்களது பிரதிநிதித்துவத்தை முழுமையான ஆபத்திற்கும், அபாயத்திற்கும் உள்ளாக்குவதுடன் அரசியல் பாதுகாப்பின்மைக்கு மேலும் இட்டு செல்லும்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் போது மத்திய மலைநாட்டில் தெரிவாகவும் மத்திய மலைநாட்டிற்கு வெளியே ஊவா, சப்ரகமுவ, தென் மாகாணம், வடகிழக்கு மாகாணங்கள் உட்பட நில தொடர்பற்ற வகையிலும் செறிந்தும் பரந்தும் வாழும் மலையக மக்களுக்கு இந்தியாவில் காணப்படுவது போன்று பாண்டிச்சேரி முறையிலான அதிகாரப் பகிர்வு மூலம் ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இதை மலையக மக்கள் முன்னணி ஸ்தாபித்த காலம் முதல் நாங்கள் வலியறுத்திவந்திருக்கின்றோம்.



இவ்வாறான முழு அரசியல் நடைமுறைகளால் இந்திய வம்சாவளி மலையக மக்களின் தொடர்பாக ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகள் மீது மலையக மக்கள் முன்னணி மிக ஆழமாக கவனத்தில் எடுத்துள்ளதுடன், இன விகிதாசார அடிப்படையில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் பலமுறை கோரியுள்ளது.

தற்போதுள்ள மனித தன்மையற்ற வாழ்க்கை சூழலான தோட்ட லயன் குடியிருப்புக்களை அகற்றி தனிவீட்டுத் திட்டங்கள் அமைத்து கிராமங்களை உருவாக்குவதே எமது நோக்கமாகும். இதற்கு இந்தியா அனுசரணை வழங்கவேண்டும் என எதிர்ப்பார்க்கின்றோம்.

திட்டமிட்ட குடியேற்றங்கள் (பெரும்பான்மையினக் குடியேற்றத்திட்டங்கள்) தொடர்பான அரசாங்கத்தின் நேரடி, மறைமுகத் திட்டங்கள் அல்லது இந்திய வம்சாவளி மலையக மக்களின் இனவிகிதாசாரத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும்.



மத்திய மலையகப் பகுதியில் இந்திய வம்சாவளி மலையக மக்களின் இருப்பு, விகிதாசாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிசெய்ய வேண்டும்.

**தொகுப்பு: எச்.எச்.விக்ரமசிங்க...**
முன்னாள் ஊடகச் செயலாளர்

---

# அக்குறணை வெள்ளப் பிரச்சினைக்கு தீர்வு!!

**அக்குறணை நகரின் நீண்டகால பிரச்சினைகளில் ஒன்றான மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தரும் நோக்கில் அரசாங்கமும் சிவில் அமைப்புகளும் தற்பொழுது அதீத பிரயத்தனங்களை மேற்கொள்கின்றன.**

கடந்த காலங்களில் துறை சார்ந்த அமைப்புகள் தனித்தனியே இதற்கான தீர்வுகளையும் தீர்மானங்களையும் பெற்றிருந்தபோதிலும் உரிய நிரந்தர தீர்வினை இதுவரை பெற்றிருக்கவில்லை என்பதனையே அண்மையில் இடம்பெற்ற வரலாறு காணாத அனர்த்தமும் அதன் சேதங்களும் பறைசாற்றுகின்றன. ஆகவே அவ்வாறு தனித் தனியாக தீர்மானங்களும் தீர்வுகளும் எடுக்காமல் இம்முறை அனைத்து தரப்பினரும் ஒரு குடையின் கீழ் அதற்கான பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்ற ஒரு நிலைக்கு உள்வாங்கப்பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத் தக்கதே.

இதனடிப்படையில் அரசியல் முக்கியஸ்தர்கள், அரச உயர் அதிகாரிகள், வர்த்த, சமூகம், சிவில் அமைப்புகள் என்பனவும் ஊரின் இன்னோரன்ன முக்கிய அமைப்புகளும் தற்பொழுது ஒன்றிணைந்து வெள்ளப் பெருக்காலான அனர்த்தங்களை நிறுத்துவதற்கு ஒன்றிணைந்துள்ளன.

குறிப்பாக இதற்கு வர்த்தக சமூகம் உள்ளிட்ட பிரதேசவாசிகள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கப்போவதாகவும் உறுதியளித்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

அக்குறணை பிரதேசத்தில் வருடாவருடம் ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணமாக அவ்வப்போது பல உயிர்களையும் கோடிக்கணக்கான உடமைகளையும் அப்பிரதேச மக்கள் இழந்து வருகின்ற அதேவேளை, கடந்த வாரம் பெய்த அடைமழை காரணமாக இம்முறை வரலாறு காணாத வகையில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரியது.

பாரிய முதலீட்டாளர்கள் இதனை பெரிதுபடுத்தாவிட்டாலும் நடுத்தர மற்றும் கீழ்மட்ட முதலீட்டாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக கடந்த வாரம் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாக அதாவது நேற்று வரையும் எடுக்கப்பட்டுள்ள புள்ளிவிரங்களின் அடிப்படையில் இருவரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருப்பதுடன் இதுவரை சுமார் 100 முதல் 125 கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் இழக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் கணக்கெடுக்கப்படாத வகையில் உடமைகள், வியாபாரஸ்தலங்கள், வீடுகள் வாகனங்கள் என பல்வேறுபட்ட சொத்துக்களின் விபரங்கள் இன்னும் கணக்கெடுக்கப்படாத நிலையில் இருப்பதாக அக்குறணை வெள்ள நிவாரணகுழு என்ற (ஏ.எப்.ஆர்.சி) அமைப்பு அறிவித்துள்ளது.

அக்குறணையில் அடிக்கடி ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் கடந்த 27ம் திகதி மத்தியமாகாண ஆளுநர் தலைமையில் ஆளுநர் அலுவலகத்திலும் அதுபோன்று கடந்த 29ம் திகதி கண்டி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் குணதிலக்க ராஜபக்ச எம்.பி தலைமையில் அக்குறணை பிரதேச சபையிலும் இரு வேறு முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

ஆளுநர் அலுவகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கண்டி மாநகர சபையின் முதல்வர் கேசர சேனாநாயக்க, அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திகார் இமாதுதீன், கண்டி நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சேன திஸாநாயக்க, மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, கண்டி மாவட்ட செயலாளர், சந்தன தென்னகோன் மாகாண ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கண்டியின் சில நகரங்களிலும் குறிப்பாக அக்குறணை பிரதேசத்திலும் இந்த வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிபுணத்துவம் கொண்ட துறை சார்ந்த அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் இவ்வாறு நிமிக்கப்பட்டுள்ள மேற்படி குழுவினர் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் தங்களது பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர் என மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போது மத்தியமாகாண ஆளுநர் லலித் தெரிவித்துள்ளார். கண்டியிலும் கண்டியை அண்மித்துள்ள நகரங்களிலும் சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை கண்டறிய விசேட குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் எந்த சூழ்நிலையிலும் எதிர்காலத்தில் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படவிருப்பதாகவும் ஆளுநர் அங்கு வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 25ம் திகதி பெய்த கடும் மழை காரணமாக கண்டி நகரின் சில பகுதிகள் மற்றும் அக்குறணை நகரின் சில பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தன. இதனை அறிந்து அவசரமாக விசேட கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து, கண்டி நகரில் உள்ள சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பில் கேட்டறிந்ததோடு, நகரில் நீர் வடிந்தோடுவதற்கு இடையூறாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பில் அவசர அறிக்கை கோருவதற்கு தீர்மானித்ததுடன், அதற்காக விசேட குழுவொன்று மிகவிரைவில் நியமிக்கப்படும் என்றும் மேலும் ஒரு சிலரின் சட்ட விரோத செயல்களால், அனைவரும் பாதிக்கப்படாமல், எந்த சூழ்நிலையிலும், சட்டத்தை உரிய முறையில் அமுல்ப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பல்வேறு நிறுவனங்களினால் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும், ஒவ்வொரு நிறுவனங்களுக்கிடையிலும் ஒருங்கிணைப்பு மற்றும் புரிந்துணர்வின்மையே தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு பிரதான காரணமாக அவதானிக்கப்படுகிறது. கண்டி மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தும் அனைத்து நிறுவனங்களும் இணைந்து செயல்படுவது முக்கியம்.

மாகாண ஆளுநர் என்ற ரீதியில் முடிந்த போதெல்லாம் கூட்டாக இணைந்து செயற்திட்டங்களை முன்னெடுக்க முயற்சிப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அது போன்று அக்குறணை பிரதேச சபையில் கடந்த 29ம் திகதி கண்டி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் கண்டி மாவட்ட எம்பியுமான குணதிலக்க ராஜபக்ஷ தலைமையிலும் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இக்குலந்துரையாடலில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஏ ஹலீம், அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாதுத்தீன், கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் , அக்குறணை பிரதேச செயலாளர் மஹாவலி அதிகார சபை, பொல்கொல்ல நீர்வழங்கல் அதிகார சபை அதிகாரிகள், வீதி அதிகார சபை, அக்குறணை பிரதேச சபை அங்கத்தவர்கள், அக்குறணை ஜமியத்துல் உலமா, அக்குறணை மஸ்ஜித் சம்மேளனம், மற்றும் அக்குறணை வர்த்தக சங்கம் ஆகிய அமைப்புக்களின் அதிகாரிகளும் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். அக்குறணை வெள்ள பிரச்சினைக்கு தற்காலிக தீர்வாக சேற்று மணல் அகழ்வு பணிகளை ஓரளவு முன்னெடுத்து வருகின்றோம். மணல் அகழ்வினால் நீரோடைக்கு அருகில் உள்ள வர்த்தக நிலைய கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்படும். ஆகவே அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடலை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் அவசரமாக மேற்கொள்ளவுள்ளதாக அக்குறணை பிரதேச தவிசாளர் இஸ்திஹார் இமாதுத்தீன் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த 24ம் திகதி அக்குறணை பிரதேச சபையில் இடம்பெற்ற கூட்டத்தில் வெள்ளப்பெருக்கினை கட்டுப்படுத்துவதற்கான கண்காணிப்பு குழுவொன்றை நியமித்துள்ளோம் அதனுடன் நாம் சில தீர்மானங்களையும் மேற்கொண்டுள்ளோம். அந்த வகையில் அக்குறணையை குறுக்கறுத்துச் செல்லும் பிங்கா ஓயா முதல் பொல்கொல்ல நீர்த்தேக்கம் வரையான பகுதியில் நிறைந்துள்ள சேற்று மண்ணை அப்புறப்படுத்தும் வேலையினை மும்முரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனவும் அது போன்று, ஆற்று நீர் வடிந்து செல்வதற்கு இடையூறாக உள்ள கட்டடங்களின் பகுதிகளை உடைப்பதுடன் இனங்காணப்பட்ட பாலங்களை உடைத்து பெரிய பாலங்களை அமைத்தல் மற்றும் இனி வரும் காலங்களில் அக்குறணையில் அதிக மழை பெய்யும் போது பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளை திறப்பதற்கான அறிவித்தலை இலகுவாக பரிமாற்றிக் கொள்வதற்கான பொறிமுறையை ஏற்படுத்துதல் மற்றும் அக்குறணை நகரில் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் இழப்புக்களுக்கு அரசினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களுக்கு அமைய பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டினை பெற்றுக் கொள்வதற்கான ஒருகட்டமைப்பை ஒழுங்கு படுத்தல் போன்ற சில முக்கிய தீர்மானங்களை தற்போதைக்கு எடுத்துள்ளோம் எனவும் தொடர்ந்து கூட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம் எனவும் தவிசாளர் தெரிவித்தார்.

**எம்.ஏ.அமீனுல்லா...**




# தேர்தலை எதிர்கொள்ள தயாராகிறோம்; ஒத்திவைக்குமாறு நாம் கோரவில்லை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு



**'கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குச் செல்ல தயாராகி வருகிறோம். தேர்தலை ஒத்திவைக்குமாறு நாங்கள் கூறவில்லை.தேர்தல் பிரசாரங்களையும் மேற்கொள்ளத் தயாராகி வருகிறோம்' என்று ஆளும் கட்சியின் முதற்கோலாசானும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் குறித்து திருப்தியடைகின்றோம். நாட்டுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்' என்றும் அமைச்சர் தெரிவித்தார். தேர்தல் விடயம் மற்றும் நாட்டின் அரசியல் நிலைவரம் குறித்து அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: எதிர்காலத் தேர்தலில் புதிய கூட்டணியின் மூலம் போட்டியிடுவோம் என்றும், கூட்டணியின் சின்னம் குறித்து உரிய நேரத்தில் முடிவு செய்யப்படும் என்றும் நீங்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தீர்கள். இதனை விளக்க முடியுமா?**

பதில்: எதிர்காலத் தேர்தல்களில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதே நல்லது என்று நாங்கள் முன்மொழிகிறோம் என்பதையே ஊடகங்களுக்குக் கூறியிருந்தேன். எதிர்க்கட்சிகளுடன் நாங்கள் நடத்திய கலந்துரையாடலின் பின்னர், கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் எதிர்காலத்தில் போட்டியிட ஒரு பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைத்தோம்.

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியொன்றுக்குச் செல்லவிருப்பதாக ஊகங்கள் பரவி வருகின்றன. இந்தக் கூட்டணியின் அடிப்படை என்ன?**

பதில்: ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமல்ல, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் ஏனைய கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடனும் பாராளுமன்றத்தில் கலந்துரையாடி வருகின்றோம். எதிர்காலத் தேர்தல்களில் புதிய கூட்டணியின் கீழ் போட்டியிட விரும்பும் எந்தக் கட்சியுடனும் நாங்கள் கைகோர்க்க விரும்புகிறோம்.

**கே: எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலிலும் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கையுடன் இருப்பதாகவும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவும், மேலும் சில ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: ஒரு கட்சி என்ற வகையில் நாங்கள் தேர்தலுக்குச் செல்லும்போது, அதில் வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை எப்போதும் ஆராய்வோம். எனவே, அதற்கான ஆரம்ப முன்னெடுப்புக்களை நாங்கள் செய்துள்ளோம், தற்போது அது தொடர்பாக எமது உள்ளூராட்சி பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி வருகின்றோம்.

உதாரணமாக, கம்பஹா மாவட்டத்தின் அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் உள்ள அனைத்து உள்ளூராட்சி பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியுள்ளோம். அடிமட்டத்திற்குச் சென்று பொதுமக்களுக்கு தெளிவூட்டல்களை மேற்கொள்ள முடியம் என நம்புகின்றோம்.

**தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்க ஆயத்தமாகிறோம். புதிய கூட்டணியின் கீழ் போட்டியிட விரும்பும் எந்தக் கட்சியுடனும் நாங்கள் கைகோர்க்கத் தயார்!**

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா?**

பதில்: அப்படி எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, அத்தேர்தலை ஓராண்டுக்கு ஒத்திவைத்தோம். 2018 இல் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றோம். 2019 இல் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது மற்றும் 2020 இல் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கொவிட்19 தொற்று காரணமாக நாடு பூட்டப்பட்டது. எனவே, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பொதுமக்கள் சார்பாக தமது கடமைகளை எதிர்பார்த்தபடி நிறைவேற்றுவதற்கு இடமில்லாததால், உள்ளூராட்சித் தேர்தலை ஓராண்டுக்கு ஒத்திவைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள விதிகளின்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதற்கு மேல் செல்லும் எண்ணம் எங்களுக்கு இல்லை. கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குச் செல்ல தயாராகி வருகிறோம்.

**கே: நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுன கட்சி எந்த வகையான தேர்தலையும் சந்திக்க பயப்படுவதாகவும், அதனால் தேர்தலை ஒத்திவைக்க திட்டமிட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: தேர்தலை ஒத்திவைக்குமாறு நாங்கள் கூறவில்லை. கட்சி என்ற ரீதியில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளத் தயாராகி வருகிறோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை எங்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளோம். தேர்தலில் போட்டியிட விருப்பமுள்ள புதியவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளோம். தேர்தலை தள்ளிப்போடுகிறோம் என்று யாரும் குறை சொல்ல முடியாது.

**கே: அப்போது ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக எதிர்த்த நீங்களும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களும், இப்போது அவரைப் பாராட்டுகின்றீர்கள். பொதுஜன பெரமுன ஏன் அவரை ஜனாதிபதி பதவிக்கு ஆதரித்தது? அத்துடன் அவர் செய்த முன்னேற்றத்தில் நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா?**

பதில்: முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்தபோது, அந்த முழு அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் நாம் விமர்சித்தோம். அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் அரசியல் மேடைகளில் பேசினோம். இறுதியாக கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய முடிந்தது. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முழு அமைச்சரவையும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ததுடன், பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் எவரும் ஜனாதிபதி பதவியையோ அல்லது பிரதமர் பதவியையோ ஏற்றுக் கொள்வதில்லையெனத் தீர்மானித்தோம்.

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளில் எமக்குத் திருப்தி**

அவ்வாறு கூறியதன் மூலம், அமைச்சுப் பதவிகளைப் ஏற்றுக்கொண்டு நாட்டை தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீட்டெடுக்க கைகோர்க்குமாறு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களிடமும் பகிரங்க வேண்டுகோள் விடுத்தோம். வெறும் விமர்சனங்களோடு மட்டும் நின்று அந்த சவாலை ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சிகள் சில தயங்கின. எவ்வாறாயினும், முக்கியமான தருணத்தில் சவாலை ஏற்க ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டார்.

பல்வேறு அரசியல் சித்தாந்தங்களை நாம் பேணி வந்தாலும், நாட்டில் ஸ்திரமற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு எங்களால் இடமளிக்க முடியாது. நாட்டுக்கே முன்னுரிமை என்பதே எங்களின் அதிகபட்ச நடவடிக்கையாக என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, ஒளிந்து கொள்ளாமல் சவால்களை எதிர்கொண்டு நாட்டிற்காகச் செயற்பட முன்வந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டவருக்கு எமது முழு ஆதரவையும் வழங்குவதற்கான அரசியல் நிலைப்பாட்டை எட்டினோம். அதனால்தான் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு எமது கட்சி முழுமையான ஆதரவை பாராளுமன்றத்தில் வழங்க முடிவு செய்தது.

ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முன்னேற்றம் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எரிபொருளைப் பெற நாங்கள் ஆறு, ஏழு மணித்தியாலங்கள் வரிசையில் நிற்க வேண்டியிருந்தது. சில நேரங்களில், எரிபொருள் கிடைக்காமல் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டன. சந்தையில் எரிவாயு இல்லை, கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள நகர்ப்புறங்களில் வசிப்பவர்களுக்கு உணவு தயாரிப்பதற்கு எரிவாயு இல்லை. இரண்டு முதல் மூன்று மணி நேரம் மின்வெட்டு மற்றும் 13 முதல் 14 மணி நேரம் வரை மின்வெட்டு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மக்கள் பலவிதமான அழுத்தங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. இவ்வாறான நெருக்கடியில் ரணில் விக்கிரமசிங்க சவாலை ஏற்றுக்கொண்டார். தற்போது, ஒரு மாதத்திற்குத் தேவையான பெட்ரோல், டீசல் கையிருப்பில் உள்ளது. எரிபொருள் விநியோகத்தை நாங்கள் நிர்வகித்தோம் மற்றும் எரிபொருள் வரிசைகள் இப்போது இல்லை.

இப்போது, ஒவ்வொருவரும் தங்கள் அன்றாட வேலை மற்றும் பிற அத்தியாவசிய வேலைகளை நிர்வகிக்க எரிபொருள் உள்ளது. எவ்வாறாயினும், நிலவும் பொருளாதார நிலைமைகள் காரணமாக எரிபொருள் விநியோகத்தை நாம் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. தற்போது, இரண்டு மணி நேரமாக மின்வெட்டு குறைக்கப்பட்டுள்ள நிலையில், மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி எரிவாயு வழங்கப்படுகிறது. எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நுரைச்சோலை மின் நிலையத் திட்டத்தை ஆரம்பித்து வைத்ததன் காரணமாகவே இந்தளவுக்கு கூட மின்சாரத்தை வழங்க முடியுமாக உள்ளது.

(17ஆம் பக்கம் பார்க்க)




# இந்தியாவுடனான நெருக்கத்தை வலுப்படுத்துவதால் இலங்கைக்கு கிடைக்கும் அனுகூலங்கள் ஏராளம்!

தொடர்புகளை மீண்டும் கட்டியெழுப்புவதென்பது 21ஆம் நூற்றாண்டில் ஒரு முக்கியமான மாற்றமாகும். இந்திய, இலங்கை சமூகங்களுக்கு இடையேயான இடைவெளி மேலும் குறைக்கப்பட்டு, யாழ்ப்பாணம் மற்றும் சென்னைக்கு இடையேயான விமான சேவை அண்மையில் மீண்டும் ஆரம்பமாகியது. 1970 ஆம் ஆண்டு முதல் எயார் லங்கா விமான சேவை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் ஊடாக சென்னை வரை நடத்தப்பட்டதோடு, பயங்கரவாத மோதல் விமானப் பயணத்தை தடை செய்தது. பயங்கரவாத நடவடிக்கை காரணமாக இலங்கையின் வடக்கு மற்றும் இந்தியாவின் தெற்கு பிரதேசத்துக்கு இடையே நடத்தப்பட்டு வந்த பயணிகள் படகுச் சேவையும், கப்பல் சேவையும் நிறுத்தப்பட்டன.

இரு நாடுகளுக்கிடையே நெருக்கமான பிரதேசம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தொடர்புகள் இடைநிறுத்தப்பட்டன. பயங்கரவாதத்தால் பீதி அடைந்த மக்கள் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு ஆளாகினர். இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை. இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாகினர். இலங்கை வம்சாவளியினர் தென்னிந்தியாவின் முகாம்களில் இன்றும் வாழ்கின்றார்கள். அவர்கள் கடினமான வாழ்க்கையை வாழ்வதோடு, தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் அதிகமாகவுள்ளன. வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சட்டவிரோத வழிகளில் தப்பியோடிய சிலரால் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்க முடியாதுள்ளது.

இரண்டு வருடம், எட்டு மாதத்திற்குப் பின்னர் மீண்டும் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டமை எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள விடயமாகும். மதுரை, திருச்சி, திருவனந்தபுரம் வரை விமான சேவைகள் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, சுற்றுலா நடவடிக்கையை இலக்காகக் கொண்டு மாலை தீவுக்கும் பயணிக்கக் கூடியவாறு விமான சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பயணிகள் அதிகரித்தால் தனியார் விமான நிறுவனங்கள் நகரங்களுக்கு இடையே சேவைகளை விஸ்தரிக்க இடமுண்டு. கொழும்பிலிருந்து நடைபெறும் சேவைகளுக்காக செலவிடும் பணம் மற்றும் காலத்துடன் ஒப்பிடும்போது வடக்கு தீபகற்பத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் சுற்றுலா மிகவும் இலாபகரமானது.

இந்தியா ஒரு பெரிய நாடு. ஒன்றுக்கொன்று மாறுபட்ட பிராந்தியங்களின் தன்மை ஆச்சரியமான அனுபவமாகும். உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு என்பதோடு மிகப்பெரிய உற்பத்தி நாடாகவும் விளங்குகின்றது. நாட்டுக்குத் தேவையான மின்சாரம், கட்டடப் பொருட்கள், உபகரணங்கள், சுற்றுலாத்துறை உள்ளிட்ட ஒன்றுக்கொன்று மாறுபட்ட பல சேவைகளின் தேவை அதிகமாகவுள்ளது. பல நாடுகளின் உற்பத்தியாளர்கள் இந்தியாவின் சந்தையை வெற்றி கொள்வதற்கு போட்டியிடுகின்றார்கள்.

பல நாடுகள் பொருளாதார மற்றும் சேவைகளுக்காக ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளதோடு, இந்திய பொருளாதாரத்தின் பங்குதாரர்களாக மாறுவதற்கு தயாராகவுள்ளன. இந்திய பொருளாதாரம் ஐந்து ட்ரில்லியனை தாண்டி உள்ளதோடு உலகில் ஐந்தாவது பாரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாக மாறியுள்ளது. அடுத்த வருடம் பொருளாதார வளர்ச்சி நூற்றுக்கு 6.8 என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியுடன் புதிய சந்தர்ப்பங்கள் உருவாகும். மின்சாரத் தேவை அதிகரிக்கும். பெட்ரோலியம் எரிவாயுவுக்கான கேள்வி அதிகரிக்கும். மின்சார உற்பத்திக்காக புதிய முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதோடு, அவை எல்லைகளை கடந்துள்ளன. பூட்டானில் முதலீடு செய்து நீர் மின்சார உற்பத்திக்கான நடவடிக்கையை எடுத்துள்ள இந்தியா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஹைட்ரஜன் தொழில்நுட்பத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது. சவூதி அரேபியா இந்தியாவின் மேற்குப் பிரதேசத்தில் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. அதைத்தவிர கர்நாடக பிராந்தியத்தில் எரிபொருள் தொகுதிக்காக களஞ்சிய வசதியையும் ஏற்படுத்தி வருகின்றது.

இந்திய பொருளாதாரத்துடன் இணையும் உலக நாடுகள் புதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. அண்டைய நாடான இலங்கை ஈடுபடக்கூடிய பல துறைகள் உள்ளன. திருகோணமலை துறைமுகம் மற்றும் அதனை அண்டிய வலயத்தை பிராந்திய பெட்ரோலிய மத்திய இடமாக அபிவிருத்தி செய்யலாம். 2030 ஆம் ஆண்டளவில் 50 வீத சுத்திகரிப்பு தேவையானது 30 வீதத்தால் அதிகரிக்கும் எனக் கருதப்படுகின்றது. இரண்டு நாடுகளுக்கு மிடையே குழாய் மூலம் மசகு எண்ணெயை பரிமாறிக் கொண்டால் செலவைக் குறைக்கலாம். பாவனையாளர்களுக்கு இலகுவான சந்தர்ப்பம் ஏற்படும். மன்னார் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இலங்கை தற்போது உற்பத்தி செய்யும் மின்சாரத்தை விட ஆறு மடங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியம் உள்ளது. மேலதிக மின்சாரத்தை இந்தியாவிற்கு விற்க முடியும்.

இந்தியாவின் தென்பிராந்தியத்திலிருந்து உல்லாசப் பயணிகளுக்கான கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும். இரண்டு நாடுகளுக்கு இடையிலான கப்பல் போக்குவரத்து புதிய ஒன்றல்ல. கொழும்பில் பயணத்தை ஆரம்பிக்கும் ரயிலில் தலைமன்னார் வரை பயணம் செய்து, அங்கிருந்து கடல் வழியாக இந்தியாவிற்கு பயணம் செய்துள்ளார்கள். இரண்டு நாடுகளையும் இணைத்தால் பொருளாதார ரீதியாக மாற்றங்கள் ஏற்படும். வளர்ச்சி அடைந்து வரும் இலங்கைக்கு அதனால் நன்மைகள் கிடைக்கும்.

இணைப்புகள் மூலம் விரும்பிய எதிர்பாராத வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. தொழில்நுட்ப தொடர்புகளை ஏற்படுத்த வழி ஏற்படுகின்றது. பல தசாப்தங்களுக்கு முன்னர் உலகில் இரு முனையில் வசிக்கும் மக்களை இணைப்பதற்கு வாரக்கணக்கானது. தற்போது சில நொடிகளில் நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

அதன் மூலம் உருவாகும் பின்னணியில் உள்ள நன்மைகளை நாம் அனுபவிக்கலாம். நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் மேலும் விரிவடைந்து வருகின்றன. நாடுகளுக்கிடையிலான உறவை ஏற்படுத்துவது காலத்துக்கு ஏற்ற தேவையாகும். இதனால் நன்மை அடைவது மக்கள் சமூகமே.

பலாலி மற்றும் சென்னைக்கிடையிலான விமானப் பயணங்களை ஆரம்பிக்கும் போது அங்குள்ள புதிய சந்தர்ப்பங்கள் பிரயோசனமானவை. பொருளாதார மற்றும் சமூகத் தொடர்புகள் மேலும் வளர்ச்சி அடையும் போது கிடைக்கும் சந்தர்ப்பங்கள் மேலும் விரிவாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# தேர்தல் கூட்டணியை உருவாக்கும் தீவிர முயற்சியில் தமிழ்க் கட்சிகள்!

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இந்த வருட முற்பகுதியில் நடத்தப்படலாம் என்ற ஊகத்தில் அரசியல் கட்சிகள் அதற்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளன. வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் இதில் விதிவிலக்காக அமையவில்லை.**

இதற்கு முன்னரும் தேர்தல்களை இலக்காகக் கொண்டு அரசியல் கூட்டணிகள் உருவாகியிருந்தபோதும், அவை எதிர்பார்த்தளவு வெற்றியைக் கொடுத்திருக்கவில்லை.

கூட்டணி உள்ளிட்ட கட்சிகளும், சிவில் மற்றும் மத அமைப்புக்களும் இதில் அங்கம் வகித்திருந்தன. இவ்வாறு கட்சிகளை ஒன்றிணைக்கும் சிவில் சமூகத்தின்







விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப், அனந்தி சசிதரனின் கட்சி, சிறிகாந்தாவின் தமிழ் மக்கள் கட்சி தரப்புகள் இணைந்து கடந்த பொதுத் தேர்தலில் கூட்டணியை உருவாக்கியிருந்தன.

முயற்சிகளும் வெற்றியைக் கொடுத்திருக்கவில்லை.

இதுபோன்ற பின்னணியிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டாலும் பரந்துபட்ட கூட்

நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதால், தமிழ்த் தரப்பினர் தமக்கு இடையிலான ஒற்றுமையை வெளிப்படுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடன் பேரம்பேசும் சக்தியாகத் தம்மை நிலைநிறுத்த வேண்டியது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது என்பதுதான் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் விருப்பமாக இருக்கின்றது.

திருப்பதால் தமிழ் அரசியல்வாதிகள் விடயத்தில் மக்கள் தெரிவு எவ்வாறு இருக்கப் போகின்றது என்ற விடயமும் பார்க்கப்பட வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களைத் தவறவிட்டிருந்தது என்ற விமர்சனம்

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பாரிய கூட்டணியொன்றை அமைக்க வேண்டும் என்றதொரு கருத்தாடல் காணப்படுகிறது. இது பற்றிய பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் சில நாட்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தமிழ்க் கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் அரசியலைப் பொறுத்தவரையில் எந்தவொரு கட்சியும் தனித்துநின்று அதிக இடங்களைப் பெற்றுக் கொள்வது சாத்தியம் இல்லையென்பதால், கூட்டணி அமைக்க வேண்டிய தேவை அங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்குக் காணப்படுகிறது. இவ்வாறான நிலைமையில் வடக்கு, கிழக்கில் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ பலம் பொருந்திய தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்படுகிறது.

எனவே, எதிர்வரும் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு தவிர்க்க முடியாத வகையில் நிச்சயமாக இருக்கத்தான் போகின்றது.

கடந்த காலங்களிலும் தேர்தல்கள் நெருங்கி வந்த காலப்பகுதிகளில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்த பலமான கூட்டணி குறித்த பேச்



இருந்தபோதும் இந்தக் கூட்டணி எதிர்பார்த்தளவு வெற்றியைப் பெற்றிருக்கவில்லை.

இவ்வாறான நிலையிலேயே விக்னேஸ்வரன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவதற்கான விருப்பத்தைத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. இருந்தபோதும் தமிழரசுக் கட்சி இதற்கு சாதகமான நிலைப்பாட்டை வெளிக்காட்டியிருக்கவில்லையென்றே செய்திகள் வெளியாகியுள்ளன.

இவையெல்லாம் ஒரு

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மீண்டும் இணைவதற்கு சில தரப்புகள் எண்ணம்; எனினும் தமிழரசுக் கட்சியிடமிருந்து சாதகமான வெளிப்பாடு இன்னுமில்லை!

இன்னமும் காணப்படுகிறது.

குறிப்பாக அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் காப்பாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்றைய அரசுக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்கியதாகவும், ஒவ்வொரு முறை அரசுக்கு ஆதரவு வழங்கும்போதும் ஏதாவது ஒரு விடயத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்திருந்தால் பலவற்றை சாதித்திருக்க முடியும் என்பதும் பலருடைய கருத்தாகும்.

இது போல பல்வேறு சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களில் தவறவிடப்பட்டுள்ளன. இந்த

**கடந்தகாலத் தேர்தல்களில் அரசியல் தோழமை பலனளிக்காத நிலையில், இம்முறையாவது ஓரணியில் களமிறங்குவதற்கு தமிழ் அரசியல் பிரமுகர்கள் பலர் விருப்பம்!**





சுக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இறுதியில் அவை யாவும் செயல்வடிவம் பெற்றதைக் காண முடியதில்லை.

இந்த நிலையில் புதிய வருடத்தின் ஆரம்பப் பகுதியில் நடைபெறலாம் என ஊகிக்கப்படும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு கூட்டணி அமைப்பது பற்றிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஆரம்பத்தில் அங்கம் வகித்த அனைத்துக் கட்சிகளையும் மீண்டும் இணைத்துக் கொண்டு பாரிய கூட்டணியொன்று அமைக்கப்படவிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இருந்தபோதும் அவ்வாறானதொரு கூட்டணி குறித்து இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லையென தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இருந்தபோதும் அரசியல் கட்சிகளின் கூட்டணி விவகாரம் தொடர்பில் கலந்துரையாட எதிர்வரும் சில நாட்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மட்டக்களப்பில் கூடவுள்ளது. இக்கூட்டத்தில் கூட்டணி அமைப்பது, யார் யாரைப் பங்காளிக் கட்சிகளாக இணைப்பது உள்ளிட்ட விடயங்கள் பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், தற்போதைய நிலையில் மாவை சேனாதிராஜாவைத் தலைவராகக் கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் செயற்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

"தமிழ்த் தரப்புகளுக்குள் பிரிவினை இருப்பதால்தான் பெரும்பான்மை அரசுகளால் எம்மை ஏமாற்ற முடிந்தது. நமக்குள் ஒற்றுமை இருக்கின்றது என்பதைக் கண்டால் அவர்களின் அணுகுமுறையில் மாற்றம் இருக்கும் என நம்புகின்றோம். இப்போதும் தமிழ்த் தரப்பில் சிலர்தான் தனித்துப் போக வேண்டும் எனக் கூறுகின்றார்கள்" என்று தெரிவித்துள்ளார் விக்னேஸ்வரன்.

"ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளை இயன்றவரை ஒன்றிணைத்துச் செயற்படவே நாம் முனைகின்றோம். மாவை சேனாதிராஜாவின் தலைமையை ஏற்றுக் கொள்ளத் நான் தயார்" என்ற கருத்தையும் விக்னேஸ்வரன் முன்வைத்துள்ளார்.

"இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள சுயநலவாதிகளே தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு எதிராகச் செயற்படுகின்றனர்" என்ற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்துள்ளார்.

புறமிருக்க, கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து பாரிய கூட்டணியொன்றை அமைப்பதற்கான முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தமிழர்களின் கோரிக்கைகள் பலவற்றை முன்நிறுத்தி இடம்பெற்ற பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான கவனயீர்ப்புப் போராட்டத்தின் பின்னணியில் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான முனைப்புக்களை சிவில் அமைப்புகள் ஆரம்பித்திருந்தன.



இந்தப் பேரணியின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு 'தமிழ்த் தேசிய பேரவை' என்ற பெயரில் பலமான கூட்டணியொன்றை அமைப்பது பற்றிய ஆரம்ப கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன. இதில் இணைந்து கொள்வதற்கு 10 அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்திருந்தன. ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் தேசிய

**தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படாவிடின், தமிழினத்துக்கு பலமே இல்லாமல் போய்விடுமென்பதே வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஆதங்கம்!**

டணியொன்று தொடர்பில் தமிழ்க் கட்சிகள் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்ட வேண்டும் என்ற

நாட்டில் தற்பொழுது காணப்படும் அரசியல் கட்டமைப்புக்கு அமைய வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக உருவாக முடியாவிட்டாலும், தென்னிலங்கையில் அதிகார தரப்புக்கு அழுத்தங்களைக் கொடுக்கக் கூடிய ஆற்றலைக் கொண்ட சக்தியாக உருவாவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

மறுபக்கத்தில், மாற்றத்துக்கான கோரிக்கை மக்கள் மத்தியில் எழுந்

நிலையில், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையொன்றை இலங்கையில் சர்வதேசம் எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில், மீண்டும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அரசியல் சூழ்நிலையில் தமிழ்த் தரப்பினர் தமக்கிடையிலான சுயலாப அரசியல் நிகழ்ச்சிநிரல்களைக் கைவிட்டு தமிழ் மக்களின் விடிவுக்காக பேரம் பேசும் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும்.

**அரசியல் கட்சிகளின் கூட்டணி விவகாரம் தொடர்பில் கலந்துரையாட எதிர்வரும் சில நாட்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மட்டக்களப்பில் கூடவுள்ளது. தேர்தல் கூட்டணி அமைப்பது, யார் யாரைப் பங்காளிக் கட்சிகளாக இணைப்பது உள்ளிட்ட விடயங்கள் இக்கூட்டத்தில் பேசப்படலாமென எதிர்பார்ப்பு!**



- மலையகச் சிறுவர்களின் போஷாக்கு குறைபாட்டினை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார காரணிகளையும், விளைவுகளையும் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆழமாகப் புரிந்து கொண்டதாக இல்லை....
- சிறுவர்களிடையே நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தும் போஷாக்குக் குறைபாடு, தொடர்ச்சியாக அவர்கள் வளர்ந்ததும் அவர்களின் வேலை கொள்திறனில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.....



## அபாயகரமான நிலையை எட்டியுள்ள

# மலையக சிறுவர்களின் போஷாக்குக் குறைபாடு

விண்மணி

மலையகக் குழந்தைகளிடையே போஷாக்குக் குறைபாடு அபாயகரமான நிலையை எட்டியுள்ளதென சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சில சர்வதேச நிறுவனங்களும் அரசு சாரா நிறுவனங்களும் அவ்வப்போது உலருணவு வழங்குதல் போன்ற தற்காலிக நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற போதும், இதனை ஒரு அவசர அத்தியாவசிய பிரச்சினையாகக் கருதி முழு பெருந்தோட்டத்துறை தழுவியதாக முறையான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படாதது வேதனையைத் தருவதாக உள்ளது.

மலையகச் சிறுவர்கள் போஷாக்குக் குறைபாட்டினால் துன்புற்று வருகிறார்கள் என பொதுவாக பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்ற போதும், இக்குறைபாட்டினை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார காரணிகளையும், இது தொடர்பிலான மோசமான விளைவுகளையும் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆழமாகப் புரிந்து கொண்டதாக இல்லை. போஷாக்குக் குறைபாடு மிக அபாயகரமானதாக கருதப்படுவது ஏனெனில் அது சிறுவர்களின் உடல் நிலையைப் பாதித்து, அவர்களை நோயுறச் செய்து அவர்களின் இறப்பு வீதத்தை அதிகரிக்கிறது.

சிறுவர்களின் வளர்ச்சிக்கு அதிகளவிலான புரதமும் சத்துணவுகளும் அவசியமாகும். இவ்வாறான நிறையுணவை கொள்முதல் செய்யும் திறன் இன்றைய பொருளாதார நெருக்கடியில் மலையக பெற்றோரிடம் இல்லாதிருக்கின்றது. அதே நேரம் சிறுவர்கள் எளிதில் தொற்று நோய்க்குள்ளாகக் கூடியவர்கள். போஷாக்குக் குறைபாடுடைய சிறுவர்கள் உடல் உள ரீதியாக ஆக்கவளம் குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் வயதுக்கேற்ற நிறையும் உயரமும் இல்லாதிருக்கின்றார்கள் அது மட்டுமல்லாது இவர்களின் உடம்பின் ஒரு பகுதி



அல்லது சில அவயங்கள் பூரணமாக வளர்ச்சியுறாத நிலை காணப்படுகின்றது.

சிறுவர்களிடையே நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தும் போஷாக்குக் குறைபாடு, தொடர்ச்சியாக அவர்கள் வளர்ந்ததும் அவர்களின் வேலை கொள்திறனில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே போஷாக்குக் குறைபாடு அதிகளவில் காணப்படுவதாகவும், முன்பள்ளிக் குழந்தைகளில் பெண் குழந்தைகளே அதிகளவு போஷாக்குக் குறைபாடுடையவர்களாக இருக்கிறார்கள் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### போஷாக்குக் குறைபாட்டை தோற்றுவிக்கும் காரணிகள்

தாய்மார்கள் கர்ப்ப காலத்திலும் குழந்தை பேற்றுக்குப் பின்னும் ஓய்வின்றி உழைத்தல், குடும்பத்தில் அதிகளவான குழந்தைகள் குடும்ப



உறுப்பினர்கள் இருத்தல், குழந்தைகளின் பிறப்பு வரிசை, சிறிய குடியிருப்புக்களில் வசித்தல், போதுமான மாத வருமானம் இன்மை, மோசமான சுகாதார வசதிகள் தனி நபர் சுகாதாரம், மோசமான சமூகப் பொருளாதார நிலை, கல்வியறிவற்ற பெற்றோர்கள் ஆகிய இக்காரணிகளே சிறுவர்களிடையே போஷாக்குக் குறைபாட்டை தோற்றுவிக்கும் பிரதான காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன. இது காலம் காலமாக தொடர்ந்து வரும் காரணிகளாக கணிக்கப்பட்ட போதும் அவை அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இன்றைய பொருளாதார நெருக்கடி மலையக சிறுவர்களின் போஷாக்கு குறைப்பாட்டை அதிகரிக்க செய்துள்ளன. இது தோட்டப்புற மக்களை, அத்தோடு பெருந்தோட்டங்களில் பணிபுரியும் பெற்றோர்களின் பிள்ளைகளில் தாக்கத்தை செலுத்தியுள்ளன.

### மலசலகூட பாவனை

பெருந்தோட்டத்துறையில் முன்னரைப் போல் அல்லாது ஒப்பீட்டளவில் அதிகளவானோர் மலசலகூடப் பாவனைக்கு பழகியுள்ளார்கள். எனினும் வெளியிடங்களைப் பயன்படுத்துவதும் இல்லாமல் இல்லை. இதன் காரணமாக பெருந்தோட்டப் பிரதேசங்களின் மண் குடற்புழு முட்டைகளினால் மாசுபடுத்தப்பட்டிருக்கின்றது. இம் முட்டைகள் தொற்றும் பருவத்தில் மாசடைந்த மண், நீர், உணவுப் பொருட்கள் ஆகியவற்றைக் கையாளும் போது, இந்நுண்ணங்கிகள் உடலுட் புகுந்து நோயை ஏற்படுத்துகின்றன. இத் தொற்றும் போஷாக்குக் குறைபாடும் தொடர்ச்சியாக உடற் சுகவீனத்தை ஏற்படுத்தி ஊட்டச்சத்தை சீரழிக்கின்றது என்ற உண்மையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மலசலகூடங்களைப் பயன்படுத்தும் குழந்தைகளை விட பயன்படுத்தாத குழந்தைகள் அதிகளவு போஷாக்குக் குறைபாடுடையவர்களாகக் காணப்படுவதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

### பாதுகாப்பற்ற குடிநீர்

பெருந்தோட்டங்களில் குழாய் நீர் வசதியுள்ள போதும், எல்லோரும் சுத்தமான குடிநீரைப் பெறுகின்றார்கள் என்பதற்கு உத்தரவாதம் இல்லாதுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு மலசலம் கழிப்பதற்கு வெளியிடங்களைப் பயன்படுத்துவதும் இதற்கோர் காரணமாகும்.

பாதுகாப்பற்ற நீர் வயிற்றுப் போக்கு தொடர்பான நோய்களை ஏற்படுத்தி போஷாக்குக் குறைபாட்டினை ஏற்படுத்துகின்றது.

### குறைந்த வயதில் திருமணம்

பெண் பிள்ளைகள் உரிய வயதுக்கு முன்பே திருமணம் முடித்து குழந்தை பெற்றுக் கொள்வதும் போஷாக்குக் குறைபாட்டுக்கு ஒரு காரணமாகின்றது. கல்வியறிவற்ற பெரும்பாலான இளம் பெண்கள் உடல் உள ரீதியாக தாய்மைக்குத் தயாராக இருப்பதில்லை. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் நிறை குறைவானர்களாகப் பிறப்பதற்கு பெரும்பாலும் வாய்ப்பு உள்ளது. இந்நிலைமையும் போஷாக்கு குறைபாட்டை தோற்றுவிக்கின்றது.

பெற்றோர்கள் இருவரும் தொழில் புரிவதன் காரணமாக தாய்க்கு உணவு தயாரிக்கவும், குழந்தைகளுக்கு உணவூட்டவும் முடியாத நிலை இதுவும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

### மருத்துவ வசதிகள்

போதுமான தகுதிவாய்ந்த ஆளணியினர் இன்மை மற்றும் வசதிகள் இன்மையினால் குழந்தைகளின் நோய்களை நீக்கி அவர்களை ஆரோக்கியமானவர்களாக்குவதற்கும், அதனூடாக போஷாக்குக் குறைபாட்டை நீக்குவதற்கான பணியை தோட்ட மருத்துவமனைகளால் நிறைவாகச் செய்ய முடியாதுள்ளது.

பெருந்தோட்டத்துறையைப் பொறுத்தளவில் சமூகப் பொருளாதார ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் ஏனைய சமூகப் பகுதியினரிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருப்பது அவர்களின் பின்னடைவுக்கு காரணமென சமூகவியலாளர்கள் கருதுகின்றார்கள்.

இன்றும் மலையகச் சமூகம் கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் பின்தங்கியே இருப்பதுடன், இறப்பு வீதமும் இங்கே அதிகரித்தே காணப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் குழந்தைகளின் இறப்பு வீதமும், நிறை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதமும் மலையகத்திலேயே அதிகரித்துக் காணப்படுகின்றது.

கனிமச் சத்துள்ள உணவுப் பொருட்களை குழந்தைகளுக்குப் பெற்றிக் கொடுத்தல், போதுமான காலத்துக்கு குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுதல், சுத்தமான குடிநீர், சுகாதாரப் பழக்க வழக்கங்கள், குறைந்த வயதில் திருமணம் முடிப்பதை நிறுத்துதல் ஆகியன இந்நிலையை மாற்றியமைக்கும் என கருதுகிறோம்.

இவற்றைக் கடைப்பிடிப்பதற்கு பொதுச் சுகாதார வசதிகள் அதிகரிக்கப்படவும் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவும் வேண்டும். இவற்றின் மூலமாகவெல்லாம் இப்பிரச்சினையின் ஆழத்தையும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் அடிப்படைக் காரணிகளையும் புரிந்து கொண்டால்தான் மலையகக் குழந்தைகளிடையே போஷாக்குக் குறைபாட்டினை நீக்குவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

---

# பிலேக்வோட்டர் செல்லும் பாதை; 15 வருடங்களாக புனரமைக்கப்படவில்லை...

ஹற்றன் விசேட நிருபர்

அம்பகமுவ பிரதேச சபைக்கு சொந்தமான கினிகத்தேனை பகதுலவ பிலேக்வோட்டர் தோட்டத்திற்கு செல்லும் பாதை கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக குண்டும் குழியுமாக காணப்படுவதோடு வீதியில் பாரிய கற்கள் தோன்றி நடந்து கூட செல்ல முடியாத அவல நிலையில் காணப்படுவதாக தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



கினிகத்தேனை நாவலபிட்டி பிரதான பாதையை இணைக்கும் குறித்த தோட்டத்திற்கு செல்லும் சுமார் இரண்டரை கிலோமீற்றர் தூரம் கொண்ட பிரதான பாதையினை இந்த பிரதேசத்தில் வாழும் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றனர். இந்த வீதியினூடாகவே பிலேக்வோட்டர் தமிழ் வித்தியாலயம், மத்திய மாகாண நெசவுக் கைத்தொழில் நிலையம், அலங்கார மீன் உற்பத்தி நிலையம்,பிலேக்வோட்டர் மேல் கீழ் பிரிவு போன்றன காணப்படுகின்றன.நாளாந்தம் சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், தொழில்புரியும் ஊழியர்கள் அனைவரும் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதியை பயன்படுத்தும் முச்சக்கரவண்டி சாரதிகள் நாளாந்தம் பயணிப்பதற்கு இடர்படுவதாகவும் தங்களுடைய வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதாகவும் இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆட்டோ சாரதிகள் முகம் கொடுப்பதாகவும் கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதியை பழுது பார்ப்பதற்கு செலவிடுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.





வீதி சீரின்மை காரணமாக கூலிக்கு அமர்த்தப்படும் வாகனங்கள் அதிக பணம் அறிவிடுவதாகவும் இதனால் சாதாரண மக்கள் பொருட்களை கொண்டு செல்வதற்கும் பயணிப்பதற்கும் பெரும் தொகையான பணத்தை வழங்குவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

சிறிது மழை பெய்தாலும் வீதியில் உள்ள குழிகளில் தண்ணீர் நிறைந்து வழிவதாகவும் பிலேக்வோட்டர் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பது குறைவடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிக மழையின் போது வீதி நீரில் மூழ்குவதனால் அடிக்கடி பாடசாலைக்கு விடுமுறை வழங்கி பிறிதொரு நாளில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதாகவும் இதனால் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் அவசர நோயாளியை கூட கொண்டு போக முடியாத நிலை காணப்படுவதாகவும். இவ்வாறு ஒரு நோயாளி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது வழியில் மரணமடைந்துள்ளதாகவும் கர்ப்பிணித் தாய் ஒருவர் வாகனத்தில் செல்லும் போது வீதியிலேயே குழந்தை பிரசவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் காலங்களில் மக்கள் பிரதிநிதிகள் வந்து இந்த வீதியினை சீர் செய்வதாக தெரிவித்து வாக்குகளை பெற்று செல்வதாகவும் அதன் பின்னர் இவ்வாறான பாதை காணப்படுவதையும் மறந்து விடுகின்றனர்.




# சென்னையில் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் ஒன்பதாம் ஆண்டு மாநாடு

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு GOTO GLOBAL ORGANISATION OF TAMIL ORIGIN



கடந்த எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு 2023 ஆண்டு ஜனவரி 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற உள்ளது.

## ஜனவரி 6, 7 ஆம் திகதிகளில் கோலாகலமாக நடைபெறும்; இலங்கை உட்பட பல்வேறு நாடுகளிலிருந்தும் பிரமுகர்கள் பங்கேற்பு

அந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் தமிழ் பாரம்பரிய கலை, கலாசார, உணவு, உடை போன்ற நிகழ்வுகள் மக்களை விட்டு மறந்து விடாமல் இருக்கவும், தமிழ் பேச்சு மொழி சிதறாமல் இருக்கவும் பாடுபடும் நோக்கத்துடன் இந்நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள சட்டமன்ற, பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள், மாநில மற்றும் மத்திய அமைச்சர்கள், துணைசபாநாயகர்கள், துணைவேந்தர்கள், மேயர்கள், சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

"தமிழன் தொழில் வழங்குபவனாக இருக்க வேண்டும். வேலை தேடுபவனாக இருக்கக் கூடாது என்ற கூற்றுக்கு இணங்க இந்நிகழ்வை நடத்தி வருகிறோம்.'வளரும் தமிழகம்' என்ற கண்காட்சி மூலம் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை புலம்பெயர்ந்த தமிழர்களிடம் சந்தைப்படுத்தி, தொழில் முன்னேற்றத்தை உருவாக்கவும் பல்வேறு நாடுகளில் உள்ள அரசு வர்த்தக ஆணையங்களுடன் இணக்கமாக செயல்பட்டு தொழில் வாய்ப்புகளை பெறவும் தொழில் வாய்ப்புகளை தேடுவோருக்கு இந்த நிகழ்வு பேருதவியாக இருக்கும்" என்று உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், எடிசன் திரை விருது குழுத் தலைவருமான செல்வகுமார் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக மலேசிய நாட்டின் முதல் பெண் இணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி, பாராளுமன்ற உறுப்பினர் Y.B. கேசவன், மனிதவள மேம்பாட்டு துறை முன்னாள் அமைச்சர் டத்தோ ஸ்ரீ சரவணன் மற்றும் இலங்கையிலிருந்து வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும் ஓய்வு பெற்ற நீதியரசரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன், உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வீரகேசரி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வட அமெரிக்கா தமிழ்ச் சங்கத் தலைவர் பாலசுவாமிநாதன் மற்றும் டொக்டர் விஜய் ஜானகிராமன் சம்பந்தம், மொரீசியசிலிருந்து வினய் நாராயணன் போன்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

நிகழ்வின் இறுதியாக தென் இந்திய திரைத் துறையினர் கலந்து கொள்ளும் 15 ஆம் ஆண்டு எடிசன் திரை விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற உள்ளது. இந்நிகழ்விற்கு உலகத் தமிழ் தலைவர்களை வரவேற்கவும், கௌரவிக்கவும், தயாராக இருப்பதாக உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், எடிசன் திரை விருது குழு தலைவருமான செல்வகுமார் தெரிவித்தார்.

**பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்**
கட்டுநாயக்க



பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா கற்கைக்காக பொறியியல் விஞ்ஞான விசேட பயிலுநர்களை உள்வாங்கல் - 2023 குழு

**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை**
கல்வி அமைச்சு
திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் கல்விப் பிரிவு

- மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2022/12/16 ஆம் திகதிய 2311 கொண்ட வர்த்தமானி அல்லது www.iet.edu.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.
- எமது இணையதளத்தில் இருந்து குறித்த விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் (Download) செய்ய முடியும்.
- விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2023 ஜனவரி 17

NAITA

தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைதொழில் பயிற்சி அதிகாரசபை
இலக்கம் 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய.

**2023 RDB சகிதம் நம்பிக்கையுடன் முன்னோக்கி!**

RDB



**திரு. சுமேத எதிரிசூரிய**
**பொது முகாமையாளர்/**
**பிரதம நிறைவேற்று அதிகாரி (பதில்)**

நாட்டின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது 37 வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் நிதி சேவைகளை வழங்கி நாட்டின் அபிவிருத்திக்கு சிறந்த பங்களிப்பை வழங்கிவருகிறது.

கடந்த ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட கொவிட் பாதிப்புக்கு மத்தியிலும் RDB வங்கி தனது வாடிக்கையாளர்களின் சிரமங்களுக்கு செவிமடுத்து வாரி வழங்கிய சலுகைப் பொதிகளின் மூலம் வாடிக்கையாளர்களுடன் இருந்த தொடர்புகள் மென்மேலும் வளர்ச்சியடைந்துள்ளன அதுபோலவே 2023ஆம் ஆண்டில் பிரதேச அபிவிருத்தி வங்கியினால் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி RDB வங்கியின் முகாமைத்துவம் இவ்வாறு கருத்து தெரிவிக்கிறது.

'2023ம் ஆண்டில் RDB வங்கி சேவைகளின் தரத்தினை மென்மேலும் அதிகரித்து வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு Digital வங்கி சேவை வசதிகள் பலவற்றை நகரத்தில் போலவே கிராமிய மக்களுக்கும் வழங்குவதற்கு சகல திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. அச் சேவை பொதி பற்றி எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதற்கு RDB வங்கி நடவடிக்கையெடுக்கும்

பிரதேச அபிவிருத்தி வங்கியாக நாம் 272 கிளைகள் ஊடாக பொது மக்களுக்கு நம்பிக்கையான நிதி சேவையை வழங்குகின்றது என்பது நீங்கள் யாவரும் அறிந்த விடயம். அதுபோலவே மகளிர் தொழில் முயற்சிகளை வலுவூட்டுதல், சிறிய மத்திய அளவான வியாபாரங்களுக்கு நிதி சேவை வழங்குவதன் மூலம் நாட்டின் அபிவிருந்திக்கு பங்களிப்பை வழங்குதல் போன்றவற்றை முதல் வேலையாக நிறைவேற்றுகின்ற RDB வங்கி அபிவிருத்தி வங்கியாக கவர்ச்சியான நிதி சேவைகள் பலவற்றை வழங்குகின்றது.

இந்த சகல சேவைகளுடன் (2023 ஜனவரி) 02ம் திகதி கிட்டிய RDB வங்கி கிளைக்கு வருகைதந்து உங்களது புத்தாண்டு கொடுக்கல் வங்கல்களை இனிதே நிறைவேற்றிக் கொள்வதற்கு எமது வாடிக்கையாளர்கள் சகலரையும் கௌரவமாக அழைப்பதற்கு இந்த வாய்ப்பை பயன்படுத்துகிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

2023
සුබ නව වසරක් වේවා !
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் !
Happy New Year !

දිවයිනේ ප්‍රමුඛතම රාජ්‍ය සංවර්ධන බැංකුව | நாட்டின் முன்னோடி அரச அபிவிருத்தி வங்கி | The Premier State Owned Development Bank in Sri Lanka.

www.rdb.lk
HOTLINE 0112 425 262

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

2023 ஜனவரி மாதம் 02 ம் திகதி RDB வங்கிக்கு வருகைதரும் உங்களது மங்களகரமான கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ள நேர்வரிகளும் நேரில் வரிகளும்

**2023ஆம் ஆண்டு பிறந்திருக்கிறது. 2022இல் உலகநாடுகள் சந்தித்த நெருக்கடிகள் வேதனைகள் இப்புதிய ஆண்டிலாவது தீருமா ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று ஏதாவது ஒரு மூலையிலிருந்து தென்படுகிறதா என்று தேடிப்பார்க்க வேண்டியிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கணக்கீடுகளின் படி 2022இல் உலகப்பொருளாதார வளர்ச்சியானது 3.2 சதவீதமாக இருந்துள்ளது. இந்த வளர்ச்சியானது 2023இல் 2.7 சதவீதமாகக் குறைவடையும் என்றும் இவ்வளர்ச்சியானது 2 சதவீதத்தைவிடக் குறைவடைவதற்கான சாத்தியக்கூறுகள் 25 சதவீதமாக உள்ளதென்றும் IMF கூறுகிறது.**

இதுவரை நடந்ததெல்லாம் வெறும் டெய்லர் தான் மெயின் பிக்சர் இனிமேல் தான வர இருக்கிறதென்று பயமுறுத்துகிறது IMF. உலகப் பொருளாதாரமானது மூன்று பலம்பொருந்திய நிகழ்வுகளால் ஏற்பட்டுள்ள சவால்களைத் தற்போது எதிர்கொண்டுள்ளது. முதலாவது உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பும் அதன் காரணமாக உணவு மற்றும் எரிபொருள் விநியோக சங்கிலியில் (supply chain) ஏற்பட்டுள்ள முறிவுகளும் அதனால் உருவாகியுள்ள உலக உணவுப் பொருள் விலை அதிகரிப்பும் தட்டுப்பாடுகளும். இரண்டாவது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் பணவீக்க அழுத்தங்கள் காரணமாக வாழ்க்கைச் செலவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள். மூன்றாவதாக உலகின் முக்கிய உற்பத்திப்பொருளாதாரமாகிய சீனாவின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மெதுவடைவு (slowdown). இவை மூன்றும் இணைந்து உலக மக்களின் வாழ்க்கையில் சவால்களை உருவாக்கியுள்ளன. 2023இலும் இச்சவால்கள் தொடர்வதோடு நிலைமைகள் இதைவிட மோசமடையக் கூடும் என்பதே IMF இன் அச்சமாக உள்ளது. 2023இல் உலகப்பொருளாதாரத்தின் மூன்றில் ஒருபகுதி பொருளாதார சுருக்கத்தை எதிர்கொள்ளும் அதேவேளை உலகின் மூன்று பிரதான பொருளாதாரங்களாகிய ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனா ஆகியன பொருளாதார வளர்ச்சியின்றி தேக்க நிலையில் காணப்படும். அதனால் உலகப் பொருளாதாரம் 2023இல் பொருளாதாரப் பின்னடைவைச் (recession) சந்திக்கும் எனவும் IMF எச்சரிக்கிறது. இதற்கு முக்கிய மூலகாரணியாக அமைவது முடிவின்றித் தொடரும் ரஷ்ய ஆக்கிரமிப்பு என்று கூறப்படுகிறது. இதனால் உலகின் முக்கிய உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கட்டமைப்பு கணிசமான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. ஒருபுறம் ரஷ்ய ஏற்றுமதிகள் மீதான மேற்குலகின் ஏற்றுமதித்தடைகள் மறுபுறம் அத்தடைகளுக்கு எதிராக ரஷ்யா எடுத்துவரும் எதிர் நடவடிக்கைகள், உலகப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை வெகுவாகப் பாதித்திருக்கின்றன. ரஷ்யாவின் எரிவாயு விநியோகத் தடைகள் காரணமாக இம்முறை தற்போது எதிர்நோக்கிவரும் குளிர்காலத்தைச் சமாளிக்க தேவையான எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதில் ஐரோப்பிய நாடுகள் கடுமையான சிக்கல்களை எதிர்கொள்கின்றன. ஐரோப்பாவில் 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எரிபொருள் விலைகள் நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. உக்ரைனில் இருந்து உணவுப்பொருள் ஏற்றுமதிகள் தடைப்பட்டுள்ள காரணத்தினால் ஆபிரிக்க நாடுகள் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் அதேவேளை உலக உணவுப்பொருள் விலைகள் சடுதியான அதிகரிப்பைச் சந்தித்துள்ளன. இவை இரண்டும் இணைந்து உலகில் பணவீக்க அதிகரிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளன. ஆகவே கடுமையான எரிபொருள் நெருக்கடி சடுதியாக அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தடைகள் ஆகிய சவால்களை நாடுகள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இப்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி மிகவும் தீவிரமானது. ஏனெனில் தீவிரமான பணவீக்கமும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் ஏற்பட்டுள்ள அதேவேளை பொருளாதாரப் பின்னடைவும் ஏற்பட்டுள்ளது. இதனால் வேலைவாய்ப்பகள் இழக்கப்பட்டு வேலையின்மை அதிகரித்துச் செல்கிறது. இவ்வாறு பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் அதேவேளை வேலையின்மையும் அதிகரிக்கும் நிலைமையினை தேக்க வீக்கம் (stagflation) என்று பொருளியலில் அழைப்பார்கள். ஒருபுறம் விலைவாசிகள் அதிகரித்துச் செல்லும், பொருளாதாரத்தின் சுருக்கம் அல்லது தேக்கநிலைகாரணமாக மக்களின் வருமானங்கள் குறையும் அல்லது மாறாதிருக்கும். இந்நிலையில் மக்களால் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழ்க்கைத் தரம் குறையும் போசாக்குக் குறைபாடு, நோய்கள், பசி பட்டினி போன்ற சமூக அவலங்களைச் சந்திக்க நேரிடும். அதிகரித்துச் செல்லும் பணவீக்க நிலைமையைக் கட்டுப்படுத்த நாடுகளின் மத்திய வங்கிகள் தமது வழமையான கட்டுப்பாட்டுக் கருவியாகிய வட்டிவீதங்களை அதிகரிப்பார்கள். வட்டிவீத அதிகரிப்பு மக்களின் கொள்னவு சக்தியை மேலும் குறைவடையச் செய்யும் அதேவேளை தனியார் முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்வார்கள். இதனால் பொருளாதாரம் மேலும் அதல பாதாளத்தில் விழும். இலங்கையில் நாம் இந்த நிலைமையினை மிகவும் தெளிவாக அவதானிக்கலாம். பொருளாதாரம் மிதவும் தீவிரமாக வீழ்ச்சியடைந்து செல்கிறது. 2022ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் பொருளாதாரம் முறையே 1.6%. 8.4 % 11.8% என சடுதியான வீழ்ச்சியைச் சந்தித்தது. இதே காலப்பகுதியில் உத்தியோகபூர்வ ரீதியில் அறிவிக்கப்பட்ட பணவீக்கம் 66 சதவீதத்திற்கு மேல் இருந்தது. பணவீக்க அதிகரிப்பைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி வட்டிவீதங்களை அதிகரித்தது. இது தற்போது நிதிச் சந்தையில் தீவிரமான நெருக்குவாரங்களை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் கொள்வனவு ஆற்றல் வெகுவாகக் குறைந்து போயுள்ள நிலையில் அரசாங்கம் நேர்வரிகளையும் நேரில் வரிகளையும் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு உயர்த்தியுள்ளது. மக்களின் வருமானங்கள் குறைந்து போயுள்ள அல்லது மாறாதுள்ள நிலையில் விலைமட்ட அதிகரிப்பு காரணமாக அவர்களின் கொள்வனவு சக்தி சடுதியாக வீழ்ச்சியடைந்து பட்டினியும் போசாக்கின்மையும் அதிகரித்துள்ள நிலையில் வரி அதிகரிப்புகள் மற்றுமொரு இடியாக மக்களைத் தாக்கும். இப்போது மற்றுமொரு பக்கத்தில் இருந்து வரும் இன்னொரு சம்மட்டி அடியாக மக்கள் வங்கிகளில் இருந்து ஏற்கெனவே பெற்றுள்ள கடன்களுக்கான வட்டி வீதங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன. இலங்கையின் நடுத்தர மற்றும் கீழ்மட்ட மக்களைப் பொறுத்தமட்டில் பெரும்பாலும் கடனாளிகளாகவே உள்ளனர். இப்போது இந்த வட்டிவீத அதிகரிப்பை அவர்கள் எவ்வாறு செலுத்தப்போகின்றனர்? இதுவும் போதாது என்று மீண்டும் ஒரு தடவை மின்சாரக் கட்டணத்தை 60 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் அல்லது நீண்டகால மின்வெட்டுக்குத் தயாராகுமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது. இலங்கைப்பொருளாதாரம் இப்போதைக்கு மீட்சி பெறமாட்டாது என்பதையே இவை அத்தனையும் காட்டுகின்றன.

**இப்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி மிகவும் தீவிரமானது.**




**இலங்கையின் நடுத்தர மற்றும் கீழ்மட்ட மக்கள் பெரும்பாலும் கடனாளிகளாகவே உள்ளனர்.**

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# உக்ரைன்–ரஷ்யப் போரும் சமாதானத்துக்கான வாய்ப்புகளும்?

**போரின் உச்சமான பேரழிவை உக்ரைன் எதிர்கொள்வதாக தெரிகிறது. 29.12.2022 அன்று நடைபெற்ற ரஷ்யாவின் பாரிய குறூஸ் ஏவுகணைத் தாக்குதலில் கீவ் நகர் சிதைவுகளைச் சந்தித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேநேரம் உக்ரைனும்–ரஷ்யாவும் பேச்சுவார்த்தை பற்றிய உரை யாடலையும் வெளிப்படுத்தி வருகின்றன. சமாதான உரையாடலும் போருக்கான தயாரிப்புகளும் பரஸ்பரம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இரு தரப்பினது தாக்குதலுக்கான திட்டமிடலும் ஆயுததளபாடங்களின் திரட்டலும் எதிர்காலப் போருக்கான தயாரிப்புக்க ளாகவே தெரிகிறது. குளிர் காலத் தாக்குதலை திட்டமிடும் இரு தரப்பும் அதற்கான முனைப்புக்களை உருவாக்கி வருகின்றன. இக்கட்டுரையும் ரஷ்ய–உக்ரைன் போரும் சமாதானமும் பற்றிய உரையாடலின் முக்கியத்துவத்தை தேடுவதாக அமையவுள்ளது.**

ரஷ்யாவின் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட குறூஸ் ஏவுகணைகள் ஈரானியத் தயாரிப்பு எனவும் ஆளில்லாத விமானங்களதும் தாக்குதல்களை உக்ரைனால் எதிர்கொள்ள முடியாதுள்ளதாகவும் அவையும் ஈரானின் தயாரிப்பென்றும் மேற்குலக ஊடகங்களும் புலனாய்வு தளங்களும் செய்தி வெளியிட்டுவருகின்றன. பெருமளவுக்கு ஈரானியத் தயாரிப்பிலேயே உக்ரைன் போரை ரஷ்யா நிகழ்த்துவதாகவும் ரஷ்ய ஆயுததளபாடங்கள் பாரிய போர்க்கருவிகள் என்றுமே இராணுவ ஆய்வுகள் உரைக்கின்றன. கீவ் மீதான தாக்குதலில் ஏவப்பட்ட எழுபத்தைந்துக்கு மேற்பட்ட ஏவுகணைகளில் ஆறு மட்டுமே உக்ரைனால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு 54-69 ஏவுகணைகளை தமது விமானப் படைப்பிரிவு தாக்கி அழித்துள்ளதாக தெரிவித்துள்ளது. அதே நேரம் முடிந்த வருடத்தில் ரஷ்யா நடத்திய பாரிய தாக்குதல் இதுவென உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது. இது மேற்குலகத்திடம் உக்ரைன் வான்பாதுகாப்பு முறைமையை கோருவதற்கான சூழலை அதிகரித்துள்ளதாகவும் ஏற்கனவே அமெரிக்காவுக்கு உக்ரைன் ஜனாதிபதி விஜயம் செய்த போது பேட்ரியட் வான்பாதுகாப்பு ஏவுகணைகளை கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். ரஷ்யாவின் தாக்குதலை கண்டித்துள்ள வெள்ளைமாளிகை Barbaric போர் என ரஷ்யா நடத்திய தாக்குதலை குறிப்பிட்டுள்ளது.

இத்தாக்குதல் மூலம் உக்ரைனியரின் இயல்பான வாழ்வியலை பாதிப்பதுடன் அவர்களது மனோநிலையை முற்றாகச் சிதைப்பதாகவும் இருளில் புதிய வருடத்தை உக்ரைனியர்கள் எதிர்கொள்ள வைப்பதுடன் உக்ரைனின் உட்கட்டமைப்பை முழுமையாக அழிப்பதுவுமே ரஷ்யாவின் நோக்கம் என இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் போருக்கான மனோநிலையை உக்ரைன் மக்களிடம் இல்லாது செய்வதுடன் பனிக்காலத்தை எதிர்கொள்ள முடியாது திணறடிக்கும் நோக்கத்துடனேயே மின் பிறப்பாக்கிகளையும் இணைப்புக்களையும் இலக்கு வைத்து அழித்துவருகிறது. இது மனிதாபிமானத்திற்கு எதிரான போர் என கீவ் நகரில் வசிக்கும் லீயோன்ட் பாற்குலின் குறிப்பிடுகின்றார். அவர் தனது சொந்த வசிப்பிடத்தை ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலில் இழந்த பின்பு ரஷ்யாவின் தாக்குதலை போர் அல்ல என்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான போர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் இத்தாக்குதலை முன்கூட்டியே ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உக்ரையினுக்கு இறுதி எச்சரிகை செய்ததன் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். ரஷ்யாவின் கோரிக்கையை நிறைவேற்றுங்கள் அல்லது ரஷ்ய இராணுவம் உக்ரைனின் தலைவிதியை தீர்மானிக்கும் என்றார். உக்ரைன் கட்டுப்படுத்தும் பிரதேசங்களை இராணுவ மயவாக்கலிலிருந்து விடுவிப்பது மற்றும் ரஷ்யாவின் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்களை அகற்றுவதும் ரஷ்யா புதிய நிலங்களை அங்கீகரிப்பதும் உட்பட ரஷ்யாவின் நிலைப்பாடு எதிரிகளுக்கு நன்கு தெரியும் என்றார். மோதல் எவ்வளவு காலம் என்பது உக்ரைன் ஆட்சியாளரின் கைகளில் உள்ளது எனவும் உக்ரைன் பின்னால் வோஷிங்டன் உள்ளது என்றும் அமெரிக்காவும் அதன் நேட்டோ நட்பு நாடுகளும் ரஷ்யாவை அழிக்கும் போர்க்களத்தில் வெற்றி கொள்ள முயலுகின்றன எனவும் தெரிவித்தார். மேற்குலகத்தின் கைப்பொம்மையாக உக்ரைன் ஜனாதிபதியின் நடவடிக்கை உக்ரைனின் நெருக்கடிக்கு காரணம் எனவும் ரஷ்யாவை பலவீனப்படுத்துவது அல்லது அழிப்பது என்பது வெளிப்படையானது எனவும் செர்ஜி குறிப்பிட்டார். இந்த மோதலின் மூலம் அமெரிக்கா பொருளாதார ரீதியாகவும் மூலோபாய ரீதியாகவும் அதிக பலனைப் பெற முயலுகிறது. ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்குமான பிணைப்பை உடைத்து ஐரோப்பாவின் அதிகம் சாய்ந்திருக்கும் முக்கிய புவிசார் அரசியல் மூலோபாயத்தை அமெரிக்கா வகுத்துள்ளது என்றும் குற்றம்சாட்டினார்.

இவரது எச்சரிக்கை முன்வைக்கப்பட்ட மறுதினமே பாரிய தாக்குதல் உக்ரைன் மீது நிகழ்த்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய பேட்ரியட் வான்பாதுகாப்பு ஏவுகணையை அமெரிக்காவிடம் உக்ரைன் கோரியதன் பின்பே இத்தகைய உரையாடலும் தாக்குதலும் அரங்கேறியுள்ளன. 7.12.2022 அன்று ரஷ்ய ஜனாதிபதி ஊடகங்களுக்கு முன்பு தெரிவிக்கும் போது உக்ரைனுடன் ரஷ்யா சமாதான பேச்சுக்களை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் மறுதினமே ரஷ்ய வெளியுறவு அமைச்சரின் எச்சரிக்கை அமைந்திருந்தது. ஆனால் உக்ரைன் ஜனாதிபதியும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் தொலைபேசி உரையாடலின் போது உக்ரைன் ரஷ்யப் போரை முடிபுக்கு கொண்டுவர சமாதானப் பேச்சுக்கு இந்தியா உதவ வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார். ஜி20 அமைப்பின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றிருக்கும் இந்தியப் பிரதமர் இத்தகைய சமாதான முயற்சிக்கு உதவ வேண்டும் என ஜெலன்ஸ்கி டுவிட்டரில் பதிவேற்றம் செய்துள்ளார். இந்தியப் பிரதமர் அலுவலகம் அது பற்றி எந்த உரையாடலையும் வெளிப்படுத்தாத போதும் இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக தெரிவதாக அறிக்கையொன்று வெளிப்படுத்தியுள்ளது. இரு போர்த்தரப்பையும் கையாளும் திறன் இந்தியாவுக்கே உண்டு எனவும் சமாதான நகர்வை இந்தியா மேற்கொள்ள வேண்டும் எனவும் உலக நாடுகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதே நேரம் ரஷ்ய ஜனாதிபதியுடன் இந்தியப் பிரதமர் சமாதான பேச்சுக்கள் பற்றி பலதடவை உரையாடியுள்ளமையும் கவனத்திற்குரியதாகும். தற்போது எழுந்துள்ள பிரதான கேள்வி ஏன் ஜெலன்ஸ்கி ரஷ்யாவுடன் பேசுவதற்கு முயலுகின்றார். அல்லது அத்தகைய நகர்வு போலியான உரையாடல் மட்டும் தானா என்பதாகும்.

ஒன்று, வரவிருக்கும் குளிர்காலத்தில் ரஷ்யாவின் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்ற சந்தேகம் உக்ரைன் தரப்பிடம் மட்டுமல்ல மேற்குலகத்திடமே அதிகமுண்டு. அவ்வகைத் தாக்குதலை உக்ரைன் எதிர்கொள்வது கடினமென்பது பிரதான விடயமாக அமைய வாய்ப்புள்ளது. இது ரஷ்ய இராணுவத்திற்கும் அபாயமானதாக அமைந்தாலும் தற்போது ரஷ்யா தனது தாக்குதலை மாற்றியுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக ஆளில்லாத விமானங்கள் மூலமும் ஏவுகணைகள் மூலமுமே ரஷ்யா தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறது. நேரடித் தாக்குதலையும் விட இது அதிக பயனுள்ளதாக ரஷ்ய இராணுவத் தரப்பு கருதுகிறது.

இரண்டு, அமெரிக்காவின் பேட்ரியட் வான்பாதுகாப்பு ஏவுகணைகளின் வருகை தாமதமாவதுடன் அதற்கான பயிற்சியும் பயன்பாட்டுக்கான திறனும் கட்டமைக்கப்பட குறிப்பிட்ட காலம் உக்ரைனுக்கு தேவையாக உள்ளது. அது மட்டுமன்றி பேட்ரியட் வான்பாதுகாப்பு ஏவுகணையின் முழுமையான திறன் கொண்ட தயாரிப்பினை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்குமா என்ற சந்தேகமும் உக்ரைனுக்கு உண்டு. இதற்கு வலுவான காரணங்களை குறிப்பிட முடியும். ஏற்கனவே அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் வழங்கிய ஆயுதங்களால் ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலையோ ஆளில்லாத விமானங்களின் தாக்குதலையோ தடுக்க முடியவில்லை என குறிப்பிடப்படுவது கவனத்திற்குரியதாகும்.

மூன்று, அமெரிக்க அதிகாரக் கட்டமைப்பில் குடியரசுக் கட்சி பெரும்பான்மையை அடையுமாயின் உக்ரையினுக்கான நிதி மற்றும் ஆயுததளபாட உதவிக்கான வாய்ப்பு குறைந்து போகும் நிலை ஏற்படக் கூடியதாக உள்ளது. அதனைக் கையாளவே ஜெலன்ஸ்கி அமெரிக்க காங்கிரஸில் உரையாற்றினாலும் அது குடியரசுக் கட்சியினரிடம் அதிக வரவேற்பை பெறவில்லை என்றே தெரியவருகிறது. ஏற்கனவே ஐரோப்பா உக்ரைனை கைவிட்டதாவே தெரிகிறது. ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் அதற்கு காரணமாகவுள்ளது. ஐரோப்பிய ரஷ்ய விரிசல் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே முரண்பாடான நிலையைத் தோற்றுவித்துள்ளது. அதனால் எழுந்துள்ள நெருக்கடியை உக்ரைன் கையாள முனைவதாகவே தெரிகிறது.

எனவே உக்ரையின் ரஷ்ய போர் முடிபுக்கு வருவதற்கான நகர்வுகள் காணப்பட்டாலும் ரஷ்யாவைப் பொறுத்தவரை தனது இலக்கை அடைய முயலும் என்பதை அதன் தாக்குதல்கள் உணர்த்துகின்றன. ஏறக்குறைய ஒரு மில்லியன் மக்கள் உக்ரைனை விட்டு வெளியேறியுள்ளனர். அனைவரும் ஐரோப்பா நோக்கியே படையெடுத்துள்ளனர். இது ஐரோப்பாவை அதிகம் பாதித்துள்ளது. உக்ரைன் அகதிகள் ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு அதிகளவில் நகர்ந்து வருகின்றனர். இது அந்த நாடுகளின் சுதேசிகளிடம் அதிக அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதுடன் அரசாங்கங்கள் அகதிகளை பாரமரிப்பதில் திணறி வருகின்றன. இது ஐரோப்பாவில் பாரிய நெருக்கடியை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்றே உணரப்படுகிறது. ஆனால் அமெரிக்காவின் ஜோ பைடன் அரசாங்கம் தொடர்ந்து உக்ரைன் போரை நீடிக்க முயல்வதுடன் அனைத்து சுமையையும் ஐரோப்பாவுக்கு கொடுக்க முயலுகிறது. ஐரோப்பாவின் நெருக்கடி மீளவும் ஒரு உலகளாவிய போரை கட்டமைக்க முயலும் எனக்கருதுகிறது. ஆனால் உலகம் முரண்பாடுகளையும் மோதல்களையும் பகைமையையும் அரசியல் முகாமை செய்யும் வலுவை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. இது ஒரு உலகளாவிய அரசியல் முகாமையுகமாக மாறிவருகிறது. இதன் பிந்திய வடிவமே ஜெலன்ஸ்கி மோடி தொலைபேசி உரையாடலாகும்.






# இளமைக் காலத்தை மட்டுமல்ல கனவையும் தொலைத்தவர்கள்

ஏதோ கேட்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் கேட்க முடியவில்லை. இந்த லண்டன் வாழ்க்கையில் என் மனதிற்குள் கொடுமையாக நின்று நர்த்தனம் போடும் இந்த நினைவுகளை யாரிடமாவது பகிர்ந்து கொள்ளாவிடில் தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது.

வெளியே நடமாட முடியவில்லை அவ்வளவு குளிர். எங்கே போவதானாலும் உடல் முழுவதையும் மூடி ஒரு அங்கி. அதுவும் முரட்டுத் தனமான துணிவகை போல எதுவோ ஒன்று. அதிலும் அழகிய நரிவால் போல புசு புசுவென்ற பட்டிகளை இணைத்தும் சில உட்புறத்தில் அதேபோன்ற ஆட்டு ரோமங்களாலான பட்டைகளை இணைத்துமுள்ளார்கள். எவ்வளவுதான் பகட்டான ஆடைகளை அணிந்தாலும், அதை யாரும் பார்க்காதவாறு பொத்திக்கட்டி மூடினால்தான் வெளியே தலை காட்ட முடியும்.



எமது ஊரில் பெண்களை நினைத்துப் பார்க்கிறேன். தன்னால் பார்க்க முடியாத தனது முதுகை தன் பின்னால் இருப்பவர்களாவது பார்க்கட்டுமே என்று பெரிய வட்டமாக திறந்து விட்டு அதிலும் அழகிய பூ வேலைப்பாடுகளை செய்து அசத்தும் அருமையான மனோபாவம். இன்னும் சிலர் கைகளைக் கூட தோள்பட்டையில் திறந்து காற்றாட திரிவதை எண்ணிப்பார்த்தால் இந்த ஊரின் பெண்கள் மிகவும் பாவமாகத் தெரிகிறார்கள். பின்னே ஆண்கள் மட்டுமென்ன அவர்களின் கிழிந்த காற்சட்டைகளை அரைக்கும் கீழே இசைத்து அணிந்தாலும், அதையும் மூடித்தான் ஆக வேண்டும்.

கிளிநொச்சியில் பெரும் காற்றடித்ததில் பின்வளவில் மாமரமும் முன் வளவில் தென்னை மரமும் வேருடன் பாறிவிட்டதாக மகள் தொலைபேசியில் பேசினாள். நல்ல வேளையாக எமது மரங்களை கொப்புக் கழித்து வைத்திருந்தேன். இங்கே பெரும்மழையும் பெய்கிறது என்றாள். சென்ற வாரம் என் எழுத்தாளரான நண்பர் ஒருவர் மனம் வருந்திப்பேசினார்.

“ஒரு வெள்ளாமை நிலம் கமார் வெடித்து பயிர்களும் கருகிவிட்டது மற்றவையும் காய்ந்து போகிறது.” என்று. இந்த வாரம் அவருடைய மனமும் பயிரும் குளிர்ந்திருக்கும்.

மனித வாழ்க்கையில் பணம் எவ்வளவு பெரிய இடத்தைப் பிடித்திருக்கிறது. அந்தப்பணத்திற்காக தன் மழலை பேசும் குழந்தையைத் துறந்து அந்தப்பருவத்தில் குழந்தையுடன் சல்லாபிக்கும் சாக்கில் மனைவியை முத்தமிடும் அந்த குறும்பான தருணங்களையும் மறந்து ஒருவன் இந்தக் குளிரில் கொடுங்கியவாறே யாரோ ஒருவருடைய வீட்டின் மராமத்து வேலைகளில் ஈடுபட்டிருக்கிறான். அங்கிருந்தே தன் ஆசை மனைவியைப்பற்றியும் மகவைப் பற்றியும் எண்ணி மாய்கிறான். அவர்களது நல்வாழ்வுக்காக தான் பணம் அனுப்ப முடிகிறதை எண்ணி மனதிற்குள் பெருமைப்படவும் செய்கிறான். இதே போல தன் தம்பி தங்கைகளுக்காக. அவர்களது படிப்புக்காக. தாம் எதிர்காலத்தில் வாழப்போகும்(இங்கு வந்து அவன் வாழுவதாவது) வீட்டுக்காக எனப் பல காரணங்களுக்காக உழைத்து மாயும் அநேகரை நான் பார்க்கிறேன்.

என் மனதில் அந்த நேரம் எனது தாய்நாட்டின் பாடசாலை மாணவர்களை கெடுக்க படையெடுத்து நிற்கும் போதைப் பொருட்களின் அணிவகுப்பையும், அதனால் பாழாகும் இளைஞர்களையும் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அரை மைல் தூரமே உள்ள பாடசாலைக்குச் செல்ல பல லட்சம் ரூபாய்கள் செலவில் மோட்டார் சைக்கிள் வாங்கி வைத்திருக்கும் மாணவர்களையும் பரீட்சையின் பெறுபேறுகளைத் தொலைத்தால் மீண்டும் அந்தப் பரீட்சைக்காக படிக்காமல் தெருப்பொறுக்கிகளாக சுற்றும் இளைஞர்களையும் காண முடிகிறது. “தம்பி மறுபடி படிக்கலாமே” என்றால்,

“இல்லை நான் வெளியில போப்போறன். அண்ணை எடுக்கிறன் எண்டு சொல்லியிருக்கிறார்” என்பது பதிலாக வருகிறது. அநேக இளைஞர்கள் இந்தக் கனவில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே வாழ்கின்ற தாய் தந்தையரையும் இந்தக்கனவு தொற்றிக் கொண்டிருப்பதுதான் பெரிய அநியாயம். எனது உறவுக்காரப் பையனொருவன் கடுமையான யுத்தம் நடந்த போது வெளியே சென்றவன். இப்போது ஒரு வெளிநாட்டில் சொந்தமாக ஹோட்டல் வைத்து நடத்துகிறான். அத்தோடு கூடவே பகுதி நேர வேலைகளையும் செய்து கொள்வான். இன்றைய நிலையில் அவன் தனது தம்பியர் இருவரையும் தங்கையின் கணவனையும் வெவ்வேறு நாடுகளுக்கு எடுத்துவிட்டான். இன்னும் சில நாட்களில் தாயும் தம்மோடு வந்துவிடுவாள் என்று பெருமையாகச் சொன்னான். ஆனால் அவனுக்குள்ள ஒரே மகனை இயலுமானவரை குண்டனாக வளர்த்திருக்கிறான். இன்னும் அவனுக்கு படிப்பும் ஏறவில்லை என்றான். இதெல்லாம் எதற்கு? அவனுக்கே இருமுறை மாரடைப்பு வந்து மயிரிழையில் உயிர்தப்பினேன் என்றபோது, ஆக ஐம்பது வயதை எட்டாத அவனை நினைத்து எனக்கு அனுதாபப் படத்தான் முடிந்தது.

இங்கே நாம் காணும் காட்சிகளில் எந்த வருத்தமும் இல்லை. ஏனெனில் உழைப்பவர் யாராக இருந்தாலும், அந்த உழைப்பில் குளிர் காய்பவர்கள் இங்கேயும் இருக்கத்தான் செய்கிறார்கள். வீடுகளில் இருப்பது மட்டுமன்றி கேளிக்கைகளில் பணத்தை செலவிடுவதில் எந்த தயக்கமும் இல்லை. காலையில் பனிவிழும் பொழுதுகளில் அவர்கள் உழைக்கப் போவதையும், அவர்களை அனுப்பிவிட்டு நாம் சாவகாசமாக படுத்து தூங்குவதையும் வழக்கமாக கொண்டிருக்கிறோம். அதைவிட செய்வதற்கும் எதுவுமில்லை. நமது நாட்டில் உள்ளது போல பக்கத்து வீட்டுக்குப்போய் அரட்டை அடிப்பது கூட இங்கில்லை. வீட்டிலிருக்கும் அத்தனை பொருட்களின் இயக்கமும் மின் சாரமாகவே தெரிகிறது.

இங்கேவந்துதான்உழைக்கப்போகிறோம் பணம் சம்பாதிக்கப் போகிறோம் என்பவர்களின் கவனத்துக்கு. இங்கே ஒரு பணம் காய்க்கும் மரமும் கிடையாது. வேலையைப் பெறுவதிலும் பலத்த போட்டி நடக்கிறது. உறவுகள் பகைகள், போட்டிகள் என அனைத்தும் தொலைபேசிகளின் வாயிலாகவே நடக்கிறது. முன்னமே வந்து இடங்கொண்டோர் பின் வருபவர்களுக்கு உதவ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதுவும் தனக்கு மிஞ்சித்தான் தருமம் செய்ய முடிகிறது. தனக்கு வேலை மிகுதியாகும் போதுதான் உதவிக்கு ஆள் கேட்க வேண்டும். ஒரு வேலையை செய்யும் போது தனக்குள்ள முழுத் திறமையையும் செலுத்தி உழைத்தால்தான் தன்னை தக்க வைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. இப்போது குனிந்து ஒரு துரும்பைத்தானும் அசைக்கத் தெரியாத, முடியாத படிப்பையும் தொடர விரும்பாத எமது நாட்டு இளையவர்கள் அண்ணை அழைக்கிறார். மாமா அழைக்கிறார் என்று இங்கே வந்தால் என்னவாகும்.

ஆண்கள் பாவம். அவர்கள் சுமப்பது பெரும் சுமை. பத்துமாதம் கருவைச் சுமப்பவள் பத்தாவது மாதம் இறக்கி வைத்து விடுவாள். ஆனால் ஆணுக்கு அது ஆயுட்காலச்சுமை. இந்தச் சுமைகளுடன்தான் அவன் நாட்டைவிட்டும் வெளியேறினான். இதில் வேறு காரணங்களும் இருக்கலாம். அந்தக் காரணிகளும் இன்று பணத்துடன் ஒன்றிவிட்டது.

வெறுமனே குழந்தைகள் மனைவி என்றில்லாமல் தாய் சகோதர சகோதரிகள் என அது விரிவடைந்து அவனுடைய வாழ்க்கையின் இளமைக்காலத்தை மட்டுமல்ல அவனுடைய கனவுகளையும் சுருக்கி பணம் என்ற அளவிற்குள் போட்டிருக்கிறது. இங்கேயும் பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள் உண்டு. அவர்களும் உணவு, பிள்ளைகளின் கல்வி என்று செலவுக்காக கால்கடுக்க வர்த்தக நிலையங்களில் வதைபடுகிறார்கள். “அவைக்கென்ன வெளிநாட்டுக்காசு ஆடுகினம்” என்று நானும் சொன்னதுண்டு. நேரிலே பார்த்த போது நெஞ்சம் துணுக்குறுகிறது. அதிலும் இந்த பரிதாபத்துக்குரியவர்களின் உழைப்பு நமது நாட்டில் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதை நினைத்தால், இந்தக்குளிரையும் மீறி வயிறெரிகிறது.







கொட்டாஞ்சேனை சத்ய சாய் பாபா மத்திய நிலையத்துக்கு இங்கிலாந்தில் இருந்து வருகைதந்த ஓம் சரவணபவ சுவாமிகள் கடந்த வியாழக்கிழமை புதுச்செட்டித் தெரு சத்திய சாய்பாபா மத்திய நிலையத்திற்கு வருகை தந்திருந்தார். சுவாமிகளை பிரதம அறங்காவலரும் தலைவருமான எஸ். என். உதயநாயகன் தலைமையில் நிர்வாக, முகாமைத்துவ குழுவினர் ஆரத்தி காண்பித்து வரவேற்று அழைத்துச் செல்வதையும், நிலையத்திற்கு சமூகம் தந்த பக்தர்களுக்கு அருளாசி வழங்குவதையும், தொடர்ந்து பாபாவுக்கு பஞ்சதீபம் காண்பிக்கப்படுவதையும் சுவாமிக்கு ஆலய அறங்காவலர்கள் நினைவுச்சின்னம் வழங்குவதையும், கலந்து கோண்ட பக்தர்களையும் காணலாம்.

## சிலாவத்துறை பாடசாலை வரலாற்று நூல்







சிலாவத்துறை பாடசாலை வரலாற்று நூல் அண்மையில் சிலாவத்துறை பாடசாலை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்த நூலின் முதல் பிரதியை கலைத்தென்றல் கவிஞர் ஹாமித் எம். சுஹைப், நூலாசிரியரும் ஆய்வாளருமான எஸ். எம். அன்ஸாரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும், இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களையும் படத்தில் காணலாம்.

# ஹாதியா கல்வி நிலையம்

## முஸ்லிம் பெண்களின் உயர் கல்விக்கான ஒரு முன்னோடி நிறுவனம்



குருணாகல் மாவட்டத்தில் குளியாபிடிய தேர்தல் தொகுதியில் குரீகொடுவ என்னும் கிராமத்தில் அமைந்துள்ள ஹாதியாக் கல்வி நிலையம் இலங்கையில் முஸ்லிம் பெண்களுக்கான உயர் கல்வியை வழங்குவதில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. நீண்டகாலமாக குறித்த பிரதேசத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பகுதி நேர அரபுக் கல்லூரியாகத் இது செயற்பட்டு வந்த போதிலும் 2006ம் ஆண்டு முதல் பெண்களுக்கான முழு நேரக் கல்வி நிறுவனமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது. தற்போது மாணவிகள் உள்ளக விடுதியில் தங்கி கல்வி கற்று வருகின்றனர்.

முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் அரபுக் கல்லூரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஹாதியாக் கல்வி நிலையத்திலிருந்து, கடந்த பதினாறு வருடங்களில், நாட்டின் பல பாகங்களில் இருந்தும், 296 பேர் கற்கையை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர். அவர்களில் நூற்றுத்தொன்னூற்று மூன்று (193) பேர் இலங்கையின் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் பட்டப்படிப்பைத் தொடருவதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். ஹாதியாவின் பட்டதாரிகள், கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளிலும் தஃவா மற்றும் சமூக சேவைப் பணிகளிலும் இந்நாட்டில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கலைத் திட்டம்

பன்முக முஸ்லிம் பெண் ஆளுமையை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள ஹாதியா கல்வி நிலையத்தின் கலைத் திட்டம் ஆறு பகுதிகளை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கரை (4.5) வருடங்களுக்கான இக்கலைத் திட்டம் நூற்று இருபது (120) கிரடிட்களைக் கொண்டது.

### கற்கைகள் :

1. மொழிக் கற்கைகள் : அரபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ்.
2. ஷரீஆத் துறை : இஸ்லாமிய சட்டவியல் (அல்பிக்ஹ் மற்றும் தஃவா ஆகிய பகுதிகளுக்கு கூடுதல் அழுத்தத்துடன் ஏனைய இஸ்லாமியத் துறைக் கற்கைகளையும் உள்ளடக்கியது.
3. குடும்பவியல் கற்கைகள் : குடும்பக் கலைகள், குடும்ப உளவளத்துணை.
4. உயர் தரக் கலைப் பிரிவு : அரபு, இஸ்லாமிய நாகரீகம், புவியியல், தமிழ், தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களில் அரபுப் பாடத்துடன் ஏனைய இரண்டு பாடங்களில் தெரிவு வழங்கப்படுகின்றது.
5. வாழ்க்கைக் கலைகள் : ஆன்மீகம், ஒழுக்கவியல், கிராஅத், சமையல், வீட்டுத் தோட்டம், திட்டமிடல், முகாமைத்துவம்.
6. தொழிற் கலைகள் : ஆடைவடிவமைப்பு, முன்பள்ளி, மொழிபெயர்ப்பு, தகவல்தொழிநுட்பம், ஊடகவியல், ஒலி ஒளியாக்கம் புகைப்படவியல் எதிர்காலங்களில், விரைவில் ஆரம்பம் செய்யப்படவுள்ள ஹாதியாவின் வெளிவாரிக் கற்கைகள் பிரிவின் ஊடாக ஹாதியாவின் உள்ளக மாணவிகளுடன் வெளி மாணவிகளுக்கான கற்கை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அவற்றுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் கலைகளுடன் கணக்கியல், மொழிக் கற்கைகள் போன்ற பல்வேறு தொழில்சார் கற்கை நெறிகள் வழங்கப்படவுள்ளன.

விருப்பத் தெரிவின் அடிப்படையில் உள்ளக மாணவிகளும் அவற்றுள் பங்குபற்றுவதற்கான வாய்ப்பளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இலங்கை தொடர்பான கற்கைப் பகுதிகளும் எதிர்காலத்தில் கலைத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளன. குறிப்பாக இலங்கையின் வரலாறு, இலங்கையின் மதங்கள், இலங்கையின் சட்டம் போன்றவற்றைக் குறிப்படலாம்.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் உபைதுல்லாஹ், சைபுல்லாஹ் சகோதரர்கள்

இம்மாதம் செவ்வாய் (03.01.2023) இரவு 8.15 மணியளவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் அதிதிகளாக கலாபூஷணம் உபைதுல்லாஹ் மஹ்தூம், கலாபூஷணம் சைபுல்லாஹ் மஹ்தூம் சகோதரர்கள் கலந்து கொள்கிறார்கள்.





முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட கலைஞரான காலஞ்சென்ற மஹ்தூம் ஏ.காதரின் புதல்வர்களான இவர்கள் இருவரும் தம் தந்தையின் வழிகாட்டலில் முஸ்லிம் சேவைக்கு தம் இளம் பராயம் தொட்டு பாரிய பங்களிப்புகள் வழங்கியுள்ளார்கள்.

நாடறிந்த கலைஞர்களான காரி உபைதுல்லாஹ் மஹ்தூம், காரி சைபுல்லாஹ் மஹ்தூம் சகோதர்களின் வானொலிப் பங்களிப்புகள், அன்று ஒலிபரப்பான ஜனரஞ்சக நிகழ்ச்சியான "இஸ்லாமிய சமய பாடசாலை" நிகழ்ச்சியில் தம் இளம் பருவத்தில் பங்குபற்றியதன் மூலமாக தொடங்கியது. பின்நாட்களில், முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான ரமழான் இரவு நேர விசேட நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பான "திருகுர்ஆன் ஓதல்" சிறப்பு நிகழ்ச்சிக்கு இனிமை நிறைந்த தம் குரல் வளத்தால், சிறப்பு செய்ததோடு பல்வேறு சன்மார்க்க நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்கள்.

காரிகளான இவர்கள் சர்வதேச ரீதியாக நடைபெற்ற பல்வேறு திருகுர்ஆன் மனனப் போட்டிகளிலும் பங்கேற்று, சிறந்த காரிகளாக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறாகள்.

முஸ்லிம் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட கலைஞர்களான இவர்கள், முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட பாடகர்களுமாவார்கள்.

தொலைகாட்சி நிகழ்ச்சிகளிலும் இவர்களது பங்களிப்புகள் நிறைய உள்ளன.

இவர்கள். காலஞ்சென்றவர்களான முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் இஸட்.எல்.எம். முஹ்மத், மூத்த ஒலிபரப்பாளர் ரஷீத் எம்.ஹபீல் ஆகியோர் தங்கள் கலைப்பயணத்துக்கு துணையாக நின்றதை நன்றியுணர்வோடு அடிக்கடி நினைவுகூர்ந்து மகிழ்வார்கள்.

தமிழ்மொழியில் மட்டுமல்லாது அரபு, இந்தி போன்ற மொழிகளிலும் பாடுவதில் வல்லவர்களக திகழ்கிறார்கள்.

அனைத்து இன இரசிகர்களினதும் பாராட்டைப் பெற்ற இவர்கள், தங்கள் பிரபலத்துக்கு முஸ்லிம் சேவையே தூபமிட்டதாக குறிப்பிடுகிறார்கள்.

இவர்கள் பிரபல பாடகர் கலைக்கமலின் மூத்த சகோதரருமாவார்கள்.

இவர்களின் அனுபவங்களை சுமந்து வரும் பாரம்பரியம் நிகழ்ச்சியை,எம். எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## புத்தாண்டே வருக

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்.
ஏறாவூர்

புதுப் பொழிவுடன்
புத்தாண்டே வருக
புத்தொளி வீசிடும்
பூமியைத் தருக
பூக்களின் சோலையாய்
பூத்தே நிறைக
பூச்செண்டு கொண்டே
பூலோகத்தை வரைக

இனமதம் அகற்றி
இன்பத்தைத் தருக
இயலாதவருக்குக் கொடுத்திடும்
இருப்பவர்கள் நிறைக
இருட்டினில் வாழ்ந்திட்ட
இயலாமை குறைக
இல்லமும் நாடும்
இனிதே வாழ்க

பாதை மாற்றிடும்
போதை ஒழிக
பாரினில் என்றும்
பாசம் நிறைக
பச்சை வயல்கள்
பரந்து விரிக
பஞ்சம் விலகிட
புத்தாண்டே வருக

சீரழியும் வாழ்வை
சீராக்கித் தருக
சித்தம் குளிரவே
சினம் மறைக
சிகரம் தொட்டிடும்
சிறுசுகள் உயர
சிரிப்புடன் புத்தாண்டே
சிறப்பில் நிறைக..!




## புதிதாய் ஒரு ஆண்டு...

நுஸ்ரத் மஹ்ரூப்ர், மாதம்பை

நேற்றைய பொழுது
இன்றைய பொழுதுபோல் இருந்ததில்லை...
இன்றைய பொழுது நாளைய
பொழுது போல் இருப்பதுமில்லை...

சந்திரனும் சூரியனும் மாறி மாறி
வந்துதித்து மறைந்து போகுது...
பொழுதுகளும் நாழிகைகளும்
கழிந்துதான் போகுது...

மீண்டும் வரமாட்டேன் என
சென்று விடும் வருடமும்...
வந்துவிட்டேன் புதிதாய் உன்னிடம்
என வந்து விடும் புது வருடமும்...
மாறி மாறி உன்னிடம்
வந்துதான் போகுது.....

நேற்றுப் போல் இன்றும்
இன்று போல் நாளையும்
இங்கே இருந்துவிட்டால்...
புதிய வருடங்களால்
புதுமைகள் படைத்திட முடியாது.....

போன பொழுதுகள்
போய்விட்டன...
விடியும் பொழுதுகள்
உனதாகட்டும்...

உள்ளங்கையளவு இதயத்திடம்
மலையளவு பாரம் சுமக்க
தயார் நிலையில்
இருக்கச் சொல்லி வை...
உலகம் உன்னைச் சிதைத்தாலும்
உளி எடுத்து உன்னை செதுக்கி விடு...
பிறந்த புது வருடம்
பழைய வருடமாவதற்குள்
இமயம் தொடுவேன் என
அதே இதயத்திடம்
சத்தியப் பிரமாணம் செய்...

எழு... நட....ஓடு.....
அதோ உன் இலக்கு....
புது வருடம் புஷ்பங்கள்
தூவட்டும் உனக்கு.....

## வருக புதுவருடம்

இணுவில் வாகீசன்

வருக புது வருடம் இன்முகம் காட்டியே
அருள்க வரம் கரும்பாய் இனிக்கவே
தருக நல் வாழ்வு பெருக பயிர்வளம்
வருக குருவாய் அருள்வாய்உயிர்க்கு

பழையன கழிதலும் புதியன புகுதல்
பழைய வாழ்விலும் புதிதாய் வந்தன
பழையன கழிந்து புதியனவேண்டாம்
பழைய பண்பாட்டு வாழ்வு வேண்டும்

புத்துயிர் வருடம் புத்தொளி தரட்டும்
தரணியில் வாழ்வு புதிதாய் மலரவே
மலரும் வருடம் நறுமணம் வீசி
வீசிடும் தென்றல் மகிழ்வு தரட்டும்

நன்மைகள் செய்து நலன்கள் பேணி
நன்றிகள் கூறி இனியது செய்வோம்
நன்னெறி சொல்லும் பாடம் படித்து
நன்றே வாழ்வோம் நல்லுலகில்

## புது வருடம்

மஜினா
உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி.




பழையன கழிக்க
புதியன புகுத்த
புதியதோர் ஆண்டில்
புது வாழ்வு தொடங்க

பகைமைகள் மறக்க
பந்தங்கள் சிறக்க
உறவுகள் பெருக்க
உவப்புடன் வாழ

உள்ளங்கள் மகிழ
உதடுகள் சிரிக்க
எண்ணமே வாழ்வாய்
எதிர்காலம் அமைய

அன்பை விதைக்க
ஆற்றலை வளர்க்க
பண்பை பரப்ப
பாசத்துடன் வாழ

இல்லம் செழிக்க
இன்புற்று வாழ
இருபத்தி மூன்றே
இனிதாக வருக..!

கவலைகள் கலைந்திட
கனவுகள் ஜெயித்திட
உணர்வுகள் உயிர் பெற
உதித்திடு புத்தாண்டே..!

## புதுத்தெம்பைத் தருக

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்

நிர்க்கதியும் நிந்தனையும்
நில்லாமல் ஓடிட
துர்க்குணமும் துன்பியலும்
தூரமாய் விலகிட

சௌஜன்யமும் சௌபாக்கியமும்
செகத்தில் நிலைத்திட
தப்பெண்ணமும் தப்பபிப்பிராயமும்
தரணியில் தகர்ந்திட

ஐக்கியமும் சௌக்கியமும்
ஐயமின்றி திளைத்திட
பொய்க்குணமும் போலிமுகமும்
பொசுங்கிப் போயிட

பொருளாதாரம் புது அவதாரமாய்
பொங்கி எழுந்திட
கருவான உருவான குழந்தையும்
காத்திரமாய் பிறந்திட

ஐயமும் அயோக்கியமும்
அவனியில் நீங்கிட
உள்ளகமும் வெளியகமும்
உண்மையாய் துலங்கிட

புரிந்துணர்வும் புதுப்பொலிவும்
பூரிப்பாய் புலர்ந்திட
புதுப்புனலும் பூம்புனலும்
புதுவடிவம் பெற்றிட

சமாதானமும் சகவாழ்வும்
சமகாலத்தில் சங்கமிக்க

சஞ்சலமும் சங்கடமும்
சத்தமின்றி சரிந்திட

வசந்தமும் வாகையும்
வாசலில் வந்தமர
திண்டாட்டமும் மன்றாட்டமும்
கொண்டாட்டமாய் ஜெயித்திட

நாடும் நகரமும் நன்றாய் செழித்திட
உள்ளமும் இல்லமும் மகிழ்வில் ஓங்கிட
புத்தாண்டே வருக
புதுத்தெம்பைத் தருக



## புத்தாண்டு

அருளானந்தம்
பிரகாஷ்
கந்தப்பளை

விலைவாசியை
உயர்த்தி வேதனை
பல தந்து சோதனை
படுத்தி எங்களை
வரிசையில்
காத்திருக்க வைத்த
(2022)டே! உனக்கு நன்றி

வருடம் ஒரு முறை
பிறக்கின்றாய்
உன்னை கொண்டாட நாங்கள்
தவறியதில்லை
பிறக்கின்ற புதிய
ஆண்டில் எங்கள்
வேதனைகளை
சாதனையாக்கிட
(2023)றே! வருக.....

## விடிந்தது இன்று

கலாபூஷணம்
கல்லொளுவை
பாரிஸ்

புத்தாண்டு பிறந்ததின்று
புதுமையெல்லாம் பொழிகவென்று
இத்தரையில் மாந்தரெல்லாம்
இன்பமுடன் வாழ்கவென்று!

வளமையெங்கும் நிறைகவென்று
வறுமையது மறைகவென்று
விளைவு எங்கும் பெருக வென்று
விடிந்ததின்று புத்தாண்டு!

முன்னேற்றப் பாதையிலே
முனைந்து நின்றாய் ஏற்றமுண்டு
எந்நாளும் துன்பமில்லை
என்றியம்ப வந்ததின்று!

தீண்டாமை ஒழிகவென்று
தீதெல்லாம் ஒழிகவென்று
வேண்டுவன கிடைக்கவென்று
விடிந்ததின்று புத்தாண்டு!

சாதி மத பேதமற்ற
சமதர்ம சமுதாயம்
மேதினியில் மலர்கவென்று
விடிந்ததின்று புத்தாண்டு!




## ஏன் சிதைத்தாய் என்னை

மு.சு.நஜீம்
கிண்ணியா

அறிமுகம் செய்தாய் அன்பாக
அறிவு முகாமிட முன் ஏன்
சிதைத்தாய் என்னை?

பிழை திருத்தம் செய்தாய்
பிழைகள் திருந்திட முன்
ஏன் சிதைத்தாய் என்னை?

மொழிகள் பல கற்பித்தாய்
முறையாக எனக்கு மொழிகள்
முளையிட முன்
ஏன் சிதைத்தாய் என்னை?

என் அழகைப் பார்த்து
ஆனந்தமடைந்தாய் என் அழகு
நிலைக்க முன்
ஏன் சிதைத்தாய் என்னை?

பாராட்டுக்கள் பல செய்தாய்
பாராட்டுக்களால் பாரினை ஆளமுன்
ஏன் சிதைத்தாய் என்னை?

கலைகள் பல கற்றுத் தந்தாய்
கலைகள் என் வாழ்வில்
கலைகட்ட முன்
ஏன் சிதைத்தாய் என்னை?

கோலம் காட்டி காலம் கழித்தாய்
காலம் கனியமும் கனவாகி
ஏன் சிதைத்தாய் என்னை?

கவிதைகள் பல எழுதச் செய்தாய்
கவிதைகள் கவியரங்கில்
அரங்கேறமுன் ஏன் சிதைத்தாய் என்னை?

உன் கவலைகள் பல முன்
வைத்தாய் கவலைகள் கலைந்து
போகமுன் ஏன் சிதைத்தாய் என்னை?

கண்ணில் ஒரு வலி இருந்தால்
கனவுகள் வருவதில்லை என
உரைத்து வலிகளைத் தந்து
ஏன் சிதைத்தாய் என்னை?

நான் உன்னை சிகரத்தில் வைத்து
அழகு பார்க்க நினைத்தேன் சிகரம்
சிறக்க முன் ஏன் சிதைத்தாய் என்னை?

## புதிய ஆண்டில்

வன்னிக்கவி லக்சன் (தண்டுவான்)

இல்லங்களில் இன்பம் பொங்கட்டும்
பண்பு, அன்பு புடைத்தெழட்டும்

உற்சாகம், உத்வேகம் உள்ளத்தில் உதிக்கட்டும்
வெண்மை, உண்மை உள்ளத்தில் உறையட்டும்

வறுமையின் வாட்டம் தணியட்டும்
நாட்டின் பொருளாதாரம் தழைக்கட்டும்

விடாமுயற்சி, தொடர் பயிற்சி ஜெயிக்கட்டும்
ஆன்மா, ஆத்மா அமைதி பெறட்டும்

வீரம், விவேகம் விளையட்டும்
சமத்துவம், சகோதரத்துவம் சர்வத்து வமாகட்டும்

புதிய ஆண்டில் மனிதம் புதுமைகள் படைக்கட்டும்

## ஒரு துளி ஈரம்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

என்னிடம் இருந்து
என்ன வேண்டும்
என்றாலும்
எடுத்துக் கொள்ளுங்கள்
என் முட்களை
அதிகரியுங்கள்
என் பூக்களைக்
கவர்ந்து செல்லுங்கள்
என் பூமியைக்

கொத்துங்கள்
என் பாதையைச்
சிதிலமாக்குங்கள்
என் உழைப்பை
உறிஞ்சுங்கள்
என் மொட்டுக்களை
நீங்கள் சூடி
தமனி எடுங்கள்
நான் பொறுமையோடு

போகிறேன்
பூமியின்
தொலைவில்
ஒளிப்புள்ளி தேடி
வானத்தை
நோக்கி
ஒரு வால்வெள்ளி தேடி
வானம் பூமி
யாவும்

வார்த்தவனிடம்
ஒரு துளி ஈரம்
ஒரு துளி நிழல்
வரமாகப் பெறும்
வசமாக
நிழலாகும்
நம்பிக்கையில்
என் பயணம்
தொடரியில்...

# சுவிஸ் அரசாங்கத்துடன் கைகோர்க்கும் பவர்

இலங்கையில் விருந்தோம்பல் கல்வித் துறையை மேம்படுத்தும் நோக்கில், ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின், சுவிஸ் ஹொஸ்பிட்டாலிட்டி அன்ட் மனேஜ்மன்ட் அகடமி (SHMA), அபிவிருத்தி மற்றும் ஒன்றிணைவுக்கான சுவிஸ் முகவர் (SDC) அமைப்புடன் அண்மையில் அரச மற்றும் தனியார் துறை பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது.




பவர் நிறுவனம் பரந்தளவு வியாபார ஈடுபாடுகளைக் கொண்டுள்ளது.

உத்தியோக பூர்வ உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு 2022 டிசம்பர் 8 ஆம் திகதி கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், பவர் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரெல்ஃவ் ப்லாசர் மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சுவிஸ் தூதுவர் கலாநிதி. டி. ஃபர்க்லர் ஆகியோர் உடன்படிக்கையை பரிமாறிக் கொண்டனர்.

தொற்றுப் பரவல் உச்ச கட்டத்தில் காணப்பட்ட காலப்பகுதியில் நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன், பவர் மற்றும் SDC இன் பெருமளவு பங்கேற்பை பதிவு செய்திருந்தது. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகள் ஸ்தம்பித்திருந்த கால கட்டத்தில், திறன் படைத்தவர்களின் புலம்பெயர்வுடன், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த RIESCO நிகழ்ச்சி தொடர்பில் ரொல்ஃவ் ப்லாசர் அறிந்து கொண்டதுடன், அதிகரித்துச் செல்லும் திறன் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான உடனடியானதும் பிரயோக ரீதியானதுமான தீர்வாக இனங்கண்டிருந்தார்.

கடந்த ஆண்டில், பவர் நிறுவனத்தின் அதிகாரிகள், சுவிஸ் தூதுவருடன் சந்திப்பை முன்னெடுத்ததுடன், கல்விசார் நிலைப்பாட்டில் SHMA மற்றும் பல்வேறு தீர்வுகளை அறிமுகம் செய்திருந்தனர். இந்த ஆண்டின் முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்த மேலதிக கலந்துரையாடல்களின் பிரகாரம், SDC உடன் கைகோர்த்து செயலாற்றுவதை பவர் பரிந்துரைத்திருந்ததுடன், அதனூடாக நாட்டினுள் RIESCO நிகழ்ச்சியை முன்னெடுக்கத் தீர்மானித்தது.

# சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் அசட்லைன் பைனான்ஸின் 'தேசத்துக்கு சக்தி'

வங்கியல்லாத நிதி நிறுவனங்களில் முன்னணியாளராகத் திகழும் அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மத்தியில் நிதி பற்றிய அறிவை ஏற்படுத்தும் நோக்கில் 'தேசத்துக்கு சக்தி' எனும் பெயரில் காலத்துக்கு ஏற்ற சமூக கூட்டுப்பொறுப்புத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. தென் மாகாணத்தைச் சேர்ந்த 100ற்கும் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் இந்தத் திட்டத்தில் பங்கெடுத்திருந்ததுடன், முதலாவது தொடர் மாத்தறை, கம்புறுகமவில் நடைபெற்றது.



இந்த செலயமர்வில் விரிவுரையாளராக சிரேஷ்ட பட்டய கணக்காளரும், ஆசிய பசுபிக் நிதி மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவரும், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தேசிய பயிற்சி ஆலோசகருமான சமிந்த குமாரசிறி கலந்துகொண்டார். பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பதால், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் வலுவான வலையமைப்பை வளர்ப்பது மற்றும் உறுதிசெய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

நிதி தொடர்பான அறிவு மற்றும் முகாமைத்துவம், தொழிற்சாலையின் சிறந்த நடைமுறைகள், வினைத்திறனை அதிகரிக்க தொழில்நுட்பத்தின் பயன்பாடு, புதிய வர்த்தக வாய்ப்புக்களை அணுகுதல், உற்பத்திகளுக்குப் புதிய வர்த்தக நாமங்களை உருவாக்குவதன் முக்கியத்துவம், வினைத்திறனான பயன்பாடு, முகாமைத்துவம் மற்றும் கடன் வசதிகளைப் பேணல் போன்ற விடயங்கள் குறித்து இந்நிகழ்ச்சியில் குமாரசிறி உரையாற்றினார்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தற்போதைய பொருளாதாரப் பின்னணியில் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் குறித்து திரு. குமாரசிறியுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பம் மிகவும் ஊடாடும் கேள்வி பதில் அமர்வின் போது வழங்கப்பட்டது.

# வளர்ச்சித் திட்டங்களை அறிவிக்கும் SMB ஃபைனான்ஸ்

இலங்கை மத்திய வங்கியினால் அண்மையில் நிதி வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிலையில், SMB Finance PLC இன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை, தமது லட்சிய வளர்ச்சி திட்டங்களை அறிவித்தனர்.

SMB ஃபைனான்ஸ் பிஎல்சியின் தலைவர் ரவி விஜேரத்ன, SMB க்கு உரிமம் வழங்கப்படுவது, இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்சத் தேவைகளை விட அதிகமான முக்கிய மூலதனத்தைக் கொண்ட நிறுவனத்தின் வலுவான இருப்புநிலைக் குறிப்பை பிரதிபலிக்கிறது என்று கூறினார்.

நிதி வணிக உரிமத்தைப் பெறுவதற்கு முன்பு, சிக்கலில் உள்ள நிதி நிறுவனத்தின் அடையாளம் காணப்பட்ட வைப்பாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் துறையின் மத்திய வங்கியின் ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கு SMB உதவியது. SMB Finance PLC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுல் விஜேசிங்க, நிறுவனம் இப்போது அனைத்து முக்கிய மாகாணங்களையும் உள்ளடக்கிய புதிய கிளைகளைத் திறக்கும் திட்டத்துடன், வளர்ச்சி மூலோபாயத்தை மேற்கொள்ளும் என்று கூறினார். அதே நேரத்தில், நாட்டின் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனத் துறையை இலக்காகக் கொண்டு பல புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்த SMB Finance திட்டமிட்டுள்ளது.



கடந்த மூன்று நிதியாண்டுகளில், SMB ஃபைனான்ஸ் அதன் சொத்துக்களின் எண்ணிக்கையை 300%க்கும் மேல் அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சி விவேகமான கடன் வழங்கும் நடைமுறைகள் மூலமாகவும், அதே காலகட்டத்தில் பங்குதாரர் மூலதனத்தில் 200% வளர்ச்சியின் விளைவாகவும் அடையப்பட்டது.

ஒவ்வொரு தொழிற்துறையின் நிதித் தேவைகளையும் துல்லியமாக மதிப்பீடு செய்வதன் மூலம் புதுமையான தொழில்துறை சார்ந்த மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் SMB ஃபைனான்ஸ் தனது SME வாடிக்கையாளர் தளத்தை தொடர்ந்து விரிவுபடுத்த எதிர்பார்க்கிறது என்று விஜேசிங்க மேலும் கூறினார்.

# வரவேற்பறைக்குப் புதுப் பொலிவைக் கொடுக்கும் Samsung Neo QLED 8K TV




Samsung ஆனது அதன் Neo QLED 8K TV களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக இல்லங்களில் நவீன பாணியில் நேர்த்தியான மற்றும் வாழ்க்கைத் தரத்தினை அடுத்த கட்டத்திற்கு இலகுவாக இட்டுச் செல்லப் போகிறது.

நீங்கள் இன்று வரை அனுபவித்திராத பொழுதுபோக்குகளை வழங்கும் நோக்கோடு, அற்புதமான வடிவமைப்பு மற்றும் அதிநவீன அம்சங்களின் சேர்வைகளோடு, அவற்றை எதனோடும் ஒப்பிடமுடியாத வகைளில் இவ்வகை TV தயாரிக்கப்பட்டுள்ளது.

Neo QLED 8K TV ஆனது மெல்லிய மற்றும் பளபளப்பான தோற்றத்தோடு தனிச் சிறப்புப் பண்பியல்பைக் கொண்டதாக இப்போது கிடைக்கப்பெறுகிறது. அதன் தனித்துவமான வடிவமைப்பானது, இந்த TV யில் வரக்கூடிய காட்சிகளாவன நீங்கள் தரை மீது மிதப்பது போன்ற தோற்றப்பாட்டினை உங்களுக்கும் உங்கள் விருந்தினர்களுக்கும் மகிழ்ச்சி நிறைந்த திகைப்பை உண்டாகும் விதமாக அள்ளி வழங்கப் போகிறது!

Samsung ன் அண்மை வெளியீடான Neo QLED 8K TV கள் Quantum Matrix Technology Pro வுடன் கிடைக்கப் பெறுகிறது, இது Quantum Mini LED களால் இயக்கப்படுகிறது. சாதாரண LED யின் 1/40 வது அளவுடன், Quantum Mini LED ஆனது சிறந்த வர்ணங்களோடு கூடிய பிரகாசம் மற்றும் அதன் வேளுறும் தன்மை குறைக்கப்பட்டும் கரியநிறம் அதிகரிக்கப்பட்டும் தற்போது கிடைக்கப்பெறுகிறது. Shape Adoptive Light Control ஆனது காட்சிகளில் தென்படக்கூடிய பல்வேறு பொருட்களைத் துல்லியமாக பகுப்பாய்வு செய்து, அதற்கேற்ப ஒளி வெளிப்பாட்டினைக் கட்டுப்படுத்துகிறது இதன் மூலமாக தடையற்ற காட்சி அனுபவத்தை வழங்குகிறது.

அண்மை வெளியீடான Neo QLED 8K TV களில் BuiltIn IoT Hub ஆனது பொருத்தப்பட்டிருக்கிறது,

# இலங்கையில் உறைய வைக்கப்பட்ட கிறிஸ்பி சிக்கன் முன்னோடிகளாக திகழும் நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ்

அண்மைய மாதங்களில் பெருமளவான வளர்ச்சியை இறைச்சி உற்பத்தியாளர் பதிவு செய்திருந்தது. உற்பத்தி மற்றும் விநியோகத் தொடர் ஆற்றல்களில் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டிருந்ததுடன், சர்வதேச சந்தைகளில் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பிலும் தனது வெற்றிகரமான ஏற்றுமதி தந்திரோபாயத்தில் உள்வாங்கியுள்ளது.

ஆரோக்கியமான தேசத்துக்கான போஷாக்கான இறைச்சி வகைகளை வழங்குவதில் கீர்த்தி நாமத்தைக் கொண்டுள்ள, இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தியில் முன்னோடிகளாகத் திகழும் நியு அந்தனீஸ் பார்ம்ஸ் (பிரைவட்) லிமிடெட், உறைய வைக்கப்பட்ட கிறிஸ்பி சிக்கன் சந்தையில் தனது பிரசன்னத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக தனது விநியோக தந்திரோபாயத்தை விரிவாக்கம் செய்து, இந்தப் பிரிவில் தனது நிலையை மேலும் உறுதி செய்துள்ளது.



கிறிஸ்பீஸ் எனும் வர்த்தக நாமத்தின் கீழ் சந்தைப்படுத்தப்படுவதுடன், தங்கப் பழுப்பு நிறத்திலான இந்த சிற்றுணவு, ஹரித சிக்கன் தரச் சான்றிதழின் கீழ் பசுமையாகவும், பாதுகாப்பாகவும் உற்பத்தி செய்யப்பட்டு, போஷாக்கு நிறைந்ததாகவும், அன்ரிபயோடிக் அற்றதாகவும் அமைந்துள்ளது.

நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "பாவனையாளர்கள் உடனடியாக தயாரித்துக் கொள்ளக்கூடிய தரமான சிற்றுணவை நுகர்வது நோக்கி தம்மை மாற்றி வரும் நிலையில், உறைய வைக்கப்பட்ட இறைச்சி வகைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது." என்றார். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், நேர்த்தியான நிலைப்பாட்டை நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் கொண்டுள்ளது.

உள்நாட்டைப் பொறுத்தமட்டில், 2022 என்பது, நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் நிறுவனத்துக்கு பல முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் சாதனைகளை ஏற்படுத்தியிருந்தது. தளம்பல்களுடனான தொழிற்துறை சூழ்நிலைகளில் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்திருந்தது. பத்தரமுல்லயில் அதிகளவு இடவசதிகளுடன், நவீன இறைச்சி சுப்பர் மார்க்கெட்டான அந்தனீஸ் மீட்லரியை திறந்திருந்தது. இது விரைவில் விற்பனைத் தொடராக வளர்ச்சியடையும்.

# SLIM Brand Excellence விருதுகளில் இரு தங்கங்களை வென்றுள்ள அலரிக்ஸ் ஐஸ்கிறீம்




அலரிக்ஸ் ஐஸ்கிறீம் SLIM Brand Excellence விருதுகள் நிகழ்வில் ஆண்டின் மிகச் சிறந்த திருப்புமுனை வர்த்தக நாமம் மற்றும் ஆண்டின் மிகச்சிறந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை உள்ளூர் வர்த்தகநாமம் ஆகிய இரண்டு தங்க விருதுகளை வென்றுள்ளது.

ஒரு வர்த்தகநாமம் மற்றும் தயாரிப்பு புதுப்பித்தலுக்குப் பிறகு, கட்டுப்படியான விலையில் கிடைக்கின்ற ஐஸ்கிறீம்களின் புதுமையான தயாரிப்பு வரிசையைக் காண்பிப்பதில் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தனர்.

பொருளாதாரம் மற்றும் வழங்கல் அழுத்தங்களில் இருந்து தப்பிப்பிழைப்பதற்கு போராடிக்கொண்டிருந்த வணிகத்தை புதுப்பிப்பதில் இது பல சவால்களை எதிர்கொண்டது. குறிப்பாக, தொற்றுநோய் நிலைமையின்போது உறைந்த தின்பண்டங்கள் நுகரப்படாமல் இருந்த ஒரு காலகட்டத்தில், ஏங்க வைக்கும் தயாரிப்பு மற்றும் வெற்றிகரமான சந்தைப்படுத்தல் உத்தியின் மூலம் இதயங்களை வெல்ல அலரிக்ஸ் ஆல் முடிந்தது.

இந்த வெற்றி குறித்து கருத்து தெரிவித்த Alerics Dairyநிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான நுவான் டி சில்வா, அசல் சுவையான தயாரிப்பு வகைகள், உலகத் தரம் மற்றும் கட்டுபடியான விலைகள் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, நாடு முழுவதும் உள்ள நுகர்வோரின் இதயங்களில் அலரிக்ஸை மீண்டும் கொண்டு வருவதில் ஊழியர்களின் குடும்பத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தை பாராட்டினார்.

# நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட 6,000 குடும்பங்களை மேம்படுத்தும் Coca-Cola

CocaCola அறக்கட்டளையானது (TCCF) பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 6,000 இலங்கைக் குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுகளை வழங்கும் 'Say We Care' முயற்சியின் மூலம் நாடுமுழுவதும் அத்தியாவசிய பொதிகளை வழங்கும் திட்டத்திற்கு நிதியளிக்க முன்வந்துள்ளது.




இந்த முன்முயற்சியில் நாடுமுழுவதுமுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அதிக பாதிப்புக்குள்ளான சில சமூகங்களுக்கு அண்ணளவாக நிவாரணப் பொதிகளை இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் வகையில் விநியோகிக்கவுள்ளோம்.

கம்பஹா, களுத்துறை, கொழும்பு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, மொனராகலை மற்றும் நுவரெலியா ஆகிய ஒன்பது மாவட்டங்களில் இத்தகைய பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உள்ளன.

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள தன்னார்வ சமூக சேவைகள் அமைப்பு மற்றும் ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள பல்வேறு உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயற்பாட்டாளர் சேவாலங்கா அறக்கட்டளையின் உதவியுடன் இந்த குடும்பங்கள் அனைத்தும் திரையிடல் செயல்முறையின் மூலம் அடையாளம் காணப்பட்டன.

பொருளாதார நெருக்கடியானது நாடுமுழுவதுமுள்ள பல நகர்ப்புற, புறநகர் மற்றும் கிராமப்புற குறைந்த மற்றும் நடுத்தர வருமான குடும்பங்களை மோசமாக பாதித்துள்ளது. இத்தகைய பின்னணியில், 2022 செப்டம்பரில், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் உலக உணவுத் திட்டம் (WFP) ஆகியவற்றின் அறிக்கையானது, இலங்கையில் மதிப்பிடப்பட்ட 6.3 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாகக் கூறுகிறது. போதுமான உயிர்காக்கும் உதவி மற்றும் வாழ்வாதார உதவி வழங்கப்படாவிட்டால் நிலைமை மோசமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கையில் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சமூக பாதுகாப்பு விழிப்புணர்வு அமர்வுகள்

இலங்கையில் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான வலுவான நடவடிக்கைகளின் தேவை அதிகரித்து வரும் நிலையில், கிராமப் புறங்களில் உள்ள சமூகங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களை சென்றடையவும் பல செயலாக்கங்கள் உள்ளன. இந்த செயலாக்கங்கள் பல்வேறு வடிவங்களை எடுத்து, பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவு, விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டுதலை வழங்குகின்றன.



தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரசபையின் (NCPA) கூற்றுப்படி, 2021 ஆம் ஆண்டில் கொடுமை மற்றும் புறக்கணிப்பு முதல் பாலியல் வன்முறை வரையிலான 11,000க்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன. சமூகத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலம் பின்தங்கிய சமூகங்களில் உள்ள குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

குழந்தைகளுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனமான லீட்ஸ் மற்றும் ஹொங்கொங்கை தலைமையகமாக கொண்ட QI குழுமத்தின் சமூக முயற்சியான ரிதம் [RYTHM] அறவாரியம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டமான சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வு முன்முயற்சி, குழந்தைகளுக்கு வெளிப்படும் அபாயத்தைக் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தை துஷ்பிரயோகம். இலங்கையின் வடக்கில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவை வழங்குவதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# குப்பிலாம்பு



நாட்டில் எது நடந்தாலும் பாதிக்கப்படுவதில் முதலிடம் மலைநாட்டுத் தமிழனுக்குத்தானே? காலத்துக்குக் காலம் வகைவகையான சண்டமாருதம், சகஜமாகிவிட்டது.

அயர்ந்து தூங்கும் தனது நான்கு குழந்தைகளையும் கவலையோடு பார்த்தாள் அஞ்சலை. அவளது மகள் தர்ஷி நித்திரையில் சுருண்டு கிடந்தாள். விலகிப்போன அவளது பாவாடையை சரிசெய்தவளின் கண்கள் சுவரோரமாக மடிந்து தூங்கும் சின்னராசு மீது பட்டது. அவன் ஏதோ முனங்கும் சத்தம் கேட்டது. அரவமற்ற அந்த வேளையில் “அம்மா எனக்கும் “போன்" வாங்கித்தாங்க. இப்ப அதுலதான் பாடம் சொல்லித்தாராங்க”. சன்னமாக ஒலிக்கும் குரல். ஏக்கத்தின் குரல்! முணுமுணுப்பு ஓயாமல், அவனுக்கு மூச்சு இரைத்தது.

சின்னராசுவின் கனவு மெய்ப்படுமா? கனவுதானே நனவாகும் நாள் எப்போது? கொரோனா தொற்று நோயால் பாடசாலைகளை மூடிய நிலையில் மூடியும் மூடாமலும் நடக்கும் இப்படித்தான். “இந்த சூம் கிளாசுகள்”.

சூ.... மந்திரக்காளியாகி விட்டது. உபந்நியாசங்கள். கானல் நீராகுமா கல்விப்பயிர்?

டச் போனும், கையுமாக வசதியான குழந்தைகள் மரங்களில் பரண் அமைத்து படிக்கும் சௌகரியமும் வாய்ப்பும் ஏழைக்குழந்தைகளின் வயிற்றில் பாலையா வார்க்கும்? வயிற்றுப் பசியை போக்க வழியில்லாமல் திண்டாடும் ஏழைகள், கனக்கும் நெஞ்சுடனும், பனிக்கும் கண்களுடனும் படும் கவலைக்கு அளவேது?

“விளக்கேற்றுவதற்கு வழியின்றி” லாம்பெண்ணை, லாம்பெண்ணை என்று ஊரே ஓலமிட்டு தவிக்கும்போது கால்வயிறு, அரைவயிறு என்று காலத்தையோட்டும் ஜீவன்களுக்கு படிப்பும், “ஐபோனும்” என்ன வேண்டிக்கிடக்கின்றது.

அஞ்சலையின் மனசு ரணகளமாகித் தவிக்கின்றது. காலையில் எழுந்தவுடன் அவள் கணவன் ராக்கனுக்கு இரண்டில் ஒன்றை பதிலாக கூறித்தானாக வேண்டும். “நீ இனியும் சாக்குப்போக்கு சொல்லாத, இல்லாட்டி நடக்கிறது வேறு" ராக்கன் வால் முனியென அவளை வெரட்டியிருந்தான்.

நாவுலையிலிருந்து வீடு திரும்பும் வழியில் சந்திக்கடையில் ரொட்டி சுட மாவும் தேங்காயும் வாங்கியபோது அன்றைய நாட்கூலி தீர்ந்துவிட்டது. அதற்குப் பின்னரும் வீட்டிற்கு நடையை கட்டாது, தயங்கித் தயங்கி நிற்கும் அஞ்சலையைப் பார்த்து கடை முதலாளி “கடனுக்குத்தான் பின்னி நிற்கிறாள் என்று" யூகித்து “என்ன அஞ்சலை வேற சாமான்கள் சல்லி இல்லாமல் தரமுடியாது. டவுன்ல எங்கேயும் சாமான்கள் இல்லை. கடையை மூடப்போறேன்”. முதலாளியின் அபாய அறிவிப்பு “இல்லங்க முதலாளி, கொஞ்சம் லாம்பெண்ணை தந்தீங்கன்னா, அதற்கு நாளைக்கு சல்லி தந்திடுறேன்".

ஹா, ஹா, பதிலுக்கு முதலாளியின் சிரிப்பு அட்டகாசம். வெடிச்சிரிப்பு. “அட என்ன புள்ள விளையாடிறீயா? பார்த்தாய்தானே? விடிய விடிய சனம் போலின்ல நிற்குது. நீ என்னன்னா..., கடைமுதலாளி ஒவ்வொரு பலகையாக இழுத்து கடையை மூடத்தொடங்கினான்.

இனியும் கடையில் நிற்பதால் பலனில்லை, என்று எட்டி நடந்தாள் அஞ்சலை.

தொங்க வீட்டு பார்வதியின் வாசலில் நின்று “அக்கா, அக்கா குப்பிலாம்புக்கு மட்டும் கொஞ்சம் லாம்பெண்ணை தாங்க. நாளைக்கு தந்திடுறன்”. கெஞ்சாத குறையாக இழையும் குரல். பார்வதி இளகிய மனம் கொண்டவள். அஞ்சலை “தட்டு கட்டு கேட்கும் போதெல்லாம் பாவம் புள்ளகுட்டி காரியென்று” இல்லையென்று சொல்லாமல் கொடுத்து உதவுவாள். உதவி பெறும் அஞ்சலையும் நாணயம் தவற மாட்டாள். அப்படி ஒரு பாசப்பிணைப்பு'.

புரிந்துணர்வுடன் செயற்பட்டால் இந்த உலகில் எத்தனையோ பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துவிடும் அல்லவா!

“சேனை முதலாளி வேலையாட்களுக்கு நாளைக்கு ஆளுக்கு அரைபோத்தல் தாறேன் என்று சொல்லியிருக்கிறார். கட்டாயம் கொண்டு வந்து தாறேன்". தாமதிக்காமல் நடந்தால் அஞ்சலை.

காய்ந்த திரியுடன் நாவரண்டு கிடந்த அஞ்சலையின் “குப்பிலாம்பின் தாகம் தீராதுவிட்டாலும், ஆடி அசைந்து, கண் சிமிட்டி எரியத்தொடங்கியது. “ஏழைக்கு ஏழை தானே உதவணும், பயப்படாத புள்ள. முத்துமாரியம்மன் துணையிருப்பா. அந்த மகமாயி மாரி நம்மள கைவிடமாட்டா”. பார்வதியின் வாக்கு தேவவாக்காக அஞ்சலையின் நெஞ்சில் நிலைத்தது.

அஞ்சலைக்கு சிக்கனம் கைவந்த கலை. தேங்காய் சம்பலும், ரொட்டியையும் சரிபாதியாக பிரித்து, பிள்ளைகளுக்கு வழங்கி, மீதம் உள்ள ரொட்டியை தானும் பிச்சுபோட்டுக் கொண்டு மீதம் இருந்த ஒரு ரொட்டி ராக்கனுக்காக மூடிவைக்கப்பட்டது.

விடியாத வாழ்வு போல இரவு நீண்டது. இருளைப் போர்த்துக்கொண்ட லயங்கள் நித்திரையின்றி விழித்துக்கிடந்தன.

அஞ்சலை தூக்கமின்றி விழித்துக்கிடந்தாள். பொழுது நிம்மதியின்றி விடியலை நோக்கி விழிபூத்து நின்றது.

ராக்கனுக்கு சில நாட்களில் அவ்வப்போது திடீரென சுடலை ஞானம் பிறக்கும். தோட்டங்களில் அவ்வப்போது நிகழும் சாவு வீடுகளுக்கு சென்று வரும் போது பலவாறு சிந்தனை செய்வான்.

பிட்டகந்த தோட்டத்திலுள்ள அவனது தூரத்து உறவினர் ஒருவரின் சாவு வீடு அது. சவத்தை வீட்டிலிருந்து எடுத்து, முச்சந்தியில் “பாடமாத்தியில்” தலைமாத்தி இதுவரை வீட்டைப் பார்த்து வந்த சவத்தை மயானத்தை நோக்கி தலைமாட்டை திருப்பும் வண்ணம் பெட்டியை தலைமாத்தி தூக்கிச்சென்றார்கள். சவத்தை அடக்கும் போது சூரியன் மலைகளில் பதுங்க இருள் கௌவிக்கொள்ள ஆரம்பித்தது.

இழவு வீட்டில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படும் சுடலை ஞானம் ராக்கனுக்கும் தோன்றி அது மறைந்து இருள்போல், மனதை மூடி மறைத்துக்கொண்டது. “சவத்தை அடக்கிய” பின்னர் பால் தெளித்து, மண்ணைக் குவித்து, சோறு கறி படைத்து தானியங்களைப் பரப்பி மூன்றாம் குழி மூடினார்கள்.

நல்ல வேளை இது தேர்தல் காலமல்ல. இல்லாவிட்டால் தொழிற்சங்க, அரசியல் பிரமுகர்களின் அஞ்சலி உரைகள் போட்டிபோட்டுக் கொண்டு ஒலிக்கும்.

“போனால் போகட்டும் போடா” இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவன் யாராடா" என்று அடித்தொண்டையில் கனைத்தவாறு அடுத்து என்ன? என்று சிந்தனையோடு வந்தான் ராக்கன்.

படித்தவர், படிக்காதவர் என்று பாராமல் படித்தவன், பொதுவாக, எல்லோருக்குமே எழுதி வைத்த பாடல் இது. கண்ணதாசனுக்கும் “சட்டி சுட்டதடா” என்று பட்டினத்தார் எழுதிவைத்தது விதிவிலக்காகுமா?

ராக்கனுக்கு குடிக்க வேணும். “இன்றைக்கு கட்டாயம் குடிக்க வேணும்” என்ற வெறி தலைக்கேறியது. குதிரைப் பந்தயம் பிடிக்கும் “பெட்டிங் சென்டர்" பக்கம் கால்கள் விரைந்தன. அங்கும் அவனது குடி சகாக்கள் எவரையும் காணவில்லை.

குதிரை ரேஸ் மட்டுமல்ல, நாய் ரேஸ் என்று கூட பந்தயம் கட்டுகின்றார்கள்.

எந்த “ஜொக்கி” இன்னைக்கு வின்பண்ணுவான் என்று ஆருட ஆராய்ச்சி செய்து, தலைக்கு பந்தயம் கட்டும் விளையாட்டு! பொழுது போவதே தெரியாது. விபரீத விளையாட்டு. ஆனால் நாளும் பொழுதும் இழக்கும் பணம் என்றோ ஒரு நாள் வட்டியும் முதலுமாக கைக்கு வந்து சேரும். அன்று நண்பர்களுக்கும் வாங்கிக்கொடுத்து தானும் “போதும் போதுமென்னும்” என்ற அளவுக்கு “கட்டைக்கு தண்ணி” போட்டுக்கொள்வான்.

ஆங்கில எழுத்து தெரியாதவர்கள் கூட “பெட்டிங் சென்டர்களில் ரேஸ் குதிரைகளின் விபரங்களை ஆதியோடு அந்தமாகவும் “ஜொக்கிகளின்” மேதாவிலாசங்களையும் ஆங்கிலத்தல் அள்ளி வீசும் போது “டிக்ஸனரி” தலைபுரண்டு தள்ளாட வேண்டும்.

“எப்படியும் இன்று குடித்தேயாகவேண்டு”மென்ற எண்ணம் வெறியாக தலைக்கேறி நிற்க வெறுங்கையோடு தான் வீடு திரும்ப வேண்டும் என்ற சலிப்பு துக்கமாக மாற தயங்கியபடி தேநீர் கடைப்பக்கம் நடையை கட்டினான் ராக்கன். இன்று 'வெறுங்கையோடுதான் வீடு திரும்பவேண்டும் என்று ஆசையை புதைத்துக் கொண்டு நிராசையோடு வீட்டை நோக்கி நடந்தவனுக்கு" ராக்கண்ணா அவசரம் போல இருக்கு இன்னைக்கு வாசி ஏதும் இல்லப்போல. வாங்க ஒரு டீ குடிச்சிட்டு போவோம்". வாஞ்சையுடனான அற்புத அழைப்பு. யாரை மடக்கலாமென்று வலை விரித்து கண்ணிவைத்து நிற்கும் சப்ஏஜன்ட் ஜபாரின் மோகனக்குரல். காற்றினிலே வரும் கீதமாக. ராக்கனின் செவிகளில் குழைந்தது மறுக்கமுடியுமா?

டீக்கடை பென்சில் இருவரும் நெருங்கி அமர்ந்து கொண்டார்கள். டீ வந்தது. “ரெண்டு ரோல்ஸ் கொண்டு வா அப்பா” சப் ஏஜண்ட் ஆடர் செய்தான்.

“ராக்கன், ஏன் இப்படி கஷ்டப்படுற? இங்கு கஷ்டப்படும் எத்தனையோ பெண்கள் அஞ்சு காசு அவங்க செலவில்லாம “பொரீனுக்கு" ஏத்தி விளக்கேத்தி வச்சிருக்கேன்.

ஓம்மனுசி அஞ்சல ரொம்ப கஷ்டப்படுது. நீ மட்டும் சரின்னு ஒரு வார்த்த சொல்லு. மத்ததெல்லாம் நா கவனிச்சிக்கிறேன். இப்ப நீ பதில் சொல்ல வேணாம். நல்லா யோசிச்சிப் பார்த்து உன் முடிவ கூறு. இந்தா புடி"சப் ஏஜண்ட் உறுவிய பச்சைத்தாள் பளபளத்தது. மனசை மயக்கும் மயில்தாள்!

ராக்கன் மனதில் பசுமை பூத்துக் குலுங்கியது. சப் தொடர்ந்தான் “நீ என்னா? மத்தவங்க மாதிரி குடிச்சுப்புட்டு குழப்பமா பண்ணுற? மேலும் ஒரு படி உயர்த்தி விட்ட வார்த்தைகள், “ஏதோ மேலுவலிக்கி குடிக்கிற", மனசுக்கு ஒத்தடம் கொடுக்கும் ஆறுதல் வரிகளை அள்ளி அள்ளி வீசினான் சப்ஏஜண்ட்.

ராக்கனின் மனசை கட்டி இழுத்து அணைத்தது, ஆயிரம் ரூபா நோட்டு. வெறுங்கையோடு நின்றவனுக்கு செய்த மாயா ஜால வித்தை.

ராக்கனின் ஒன்று விட்ட சகோதரன் கேசவன், ஓட்டு லயத்தில் வாழ்ந்த அவன் மனைவி ஜானகியை சவுதிக்கு அனுப்பி கடன்களை அடைத்து, பத்துப் பேர்ச் காணியை வாங்கி, புது வீடு கட்டி, ஆடு மாடு என வாங்கி குடும்பமே தலையெடுத்துவிட்டது.

மலையகத்தில் இருநூறு வருட குடியேற்றத்தில் நாலாவது தலைமுறை கண்ட முன்னேற்றம். லயத்து வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி. பிள்ளைகள் பட்டணம் போய் படித்து வருகிறார்கள். அவர்கள் ஆளும் “பேக்குமாக” நடந்துவரும் அழகே தனி.

காலையிலேயே முச்சந்திக்குச் சென்று தபால்காரனின் வரவுக்கு வாடி நின்று, மனைவி அனுப்பும் “செக்”கை பொறுமையின்றி “கமிசனுக்கு” மாற்றி, குடித்து கும்மாளம் போட்டு புள்ளைக்குட்டிகளுக்கும் நல்ல உணவை வாங்கிக்கொடுக்காம ஓசிப்பயிறுக்கும், கருவாட்டு சொதிக்கும் லயம் லயமாச்சுற்றி வாழ்க்கையை அழித்துக்கொண்டிருக்கும் பிரகிருதிகளுக்கு, கேசவன் பின்பற்றி நடக்கக்கூடிய முன்மாதிரி வழிநடப்பவர்கள்தான் எத்தனை பேர்?

மனிதருடைய வாழ்க்கைச்சக்கரம் தான் எப்படி எப்படியெல்லாமோ மாறிச் சுழல்கின்றது. ஒருவருக்கு தென்றல். மற்றவருக்கு அதே காற்று புழுதிப்புயலாக மாறி சீரழிக்கின்றது. ஏன் இப்படி? இது தான் காலச்சக்கரம் சுழற்றும் வாழ்க்கையோட்டமா? புரியாத புதிர்.

மூக்கனும் இப்படித்தான். தனது குடும்பத்தையும் முன்னுக்கு கொண்டுவரவேண்டும் என நினைத்து, யார் யாரையோ பிடித்து தன் மனைவி ரஞ்சிதத்தை கட்டுநாயக்காவில் பொரீனுக்கு ஏத்தி விட்டு, நிம்மதி பெருமூச்சை விட்டு இந்தா “டெலிபோன் கோல் வரும். “செக்” வரும் என்று காத்திருந்தவனுக்கு, பேரதிர்ச்சி காத்திருந்தது.

நட்ட நடு நிசியில் அநாதையாக வந்திறங்கிய ரஞ்சிதத்தை விசாரித்ததில் அவளுக்கு அங்கு நடந்த விபரீதத்தை விளக்க வார்த்தைகள் இல்லை. கன்னத்தில் சூடு போட்ட தழும்பு. பச்சை மரத்தில் ஆணி அறைந்ததுபோல் உடம்பில் தென்படும் ஊசிகள். நினைத்தும் பார்க்க முடியவில்லை. நெஞ்சம் பதறுகின்றது.

வீட்டுக்காரர் “பொஸ்” வயோதிபன், எனினும் அவன் எந்தநேரமும் தொல்லை கொடுத்தப்படியே தனது இச்சைக்கு இசையும்படி “பாலியல் தொல்லை" கொடுத்தவனாக இருந்தான். அவனுடைய மகனும் அத்துமீறி சேட்டைகள் செய்வது சகஜமாகிவிட்டது. இதைப்பற்றியெல்லாம் வீட்டு எஜமானியிடம் சொல்லி முறையிட்டால் அவள், இதனை ஒரு பொருட்டாக கண்டுகொள்வதில்லை.

ஆத்திரப்பட்டு கண் கலங்கி அழுத ரஞ்சிதம் கையில் சூடுபோட்டு, ஆணி அடித்து “ஏன் இங்கு வந்தாய்? உன்னை பெரும் பணம் கொடுத்து நாங்கள் வாங்கியது நட்டம் என்று இருட்டறைக்குள் தள்ளி அடைத்துவிட்டார்கள். தள்ளிவிட்ட போது, காலில் காயமும் ஏற்பட்டது. பின்னர் அவளே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டாள் என்று அப்பட்டமாக பொய் கூறினார்கள்.

இந்த அநியாயத்தையும், அட்டுழியத்தையும் அறிந்த பக்கத்துவீட்டு வேலைக்கார பெண்மணி குடாமெனிக்கேயின் உதவியோடு ரஞ்சிதம் தத்தளித்து தடுமாறி தாய்நாட்டுக்கு வந்து சேர்ந்ததே தனிச்சோகக் கதையாகும்.

இந்த இடைக்காலத்தில் “ஏஜண்டுக்கும்", 'எம்பசிக்கும்” நடையாய் நடந்து, ஆளாய்ப் பறந்து அழுது முறையிட்ட மூக்கனின் துயரை எவரும் பெரிதாய் கண்டுகொள்ளவில்லை.

“இதெல்லாம் சர்வசாதாரணம்”, “சகஜம் என்பது போல்” கவலைப்படாதீங்க, புதுசா நல்ல ஒரு வீட்டுக்கு போட்டுத் தாறேன். இந்த “கேசில்" எனக்கு பெரும் நட்டம். கெட்ட பேர் வேறு, என்று கையை பிசைந்ததோடு வேண்டா வெறுப்பாக தான் கொடுத்த “அட்வான்ஸ்சையும்” கேட்காமல் கேட்டான் “சப்ஏஜண்ட்” ஜபார். இப்படி பல அபத்தங்கள் ராக்கனின் காதுக்கு எட்டாமலில்லை.

“உலகம் பல விதம். இதெல்லாம் சகஜம்” என்பது அவனது தர்க்கமும், தர்மமும் ஆகி, சொகுசு வாழ்க்கையை மோகித்து நின்றது.

மனசுக்குள்ளே பூவா, தலையா போட்டுப் பார்த்ததில் தலையே வெற்றி கண்டது.

'சப்ஏஜண்ட்டின்" உபசரிப்பில் சிறைப்பட்ட ராக்கனுக்கு அன்று “கோடை மழை”. வழியில் சந்தித்த நண்பர்களுக்கெல்லாம் வாங்கிக் கொடுத்து, தானும் மூக்கு முட்ட குடித்து தள்ளாடியபடியே வீடு வந்து சேர்ந்தான்.

“இப்படி குடிச்சிப்புட்டு தலைத்தெறிக்க வாறியே? உனக்கு இது நல்லா இருக்கா? புள்ளைகலெல்லாம் கொலபட்டினியா கெடக்குது. நீயும் ஒரு தகப்பனா? புள்ளைகள் கொப்பி இல்லாம பள்ளிக்கூடத்துக்கு போகல்ல." அஞ்சலையின் இந்த வசைச்சொற்களை ராக்கன் காதில்போட்டுக்கொள்வதே இல்லை.

இவைகளை கேட்டுக்கேட்டு மனசும் மரத்துத் தான் போய்விட்டது போல.

இது நடந்து இரண்டொரு மாதங்கள் ஓடிவிட்டன.

திடீரென ஒரு நாள் “சப்ஏஜண்ட்” ஜபார் காம்பரா வாசலில் நெளிந்தான். அவனை கடைத்தெருவில் சந்தித்த போதெல்லாம் “இந்த கிழமை கூட்டி வாரேன். வார கிழமை கூட்டி வாரேன். அஞ்சலைக்கு மேலுக்கு சரியில்லை” என்று தவணைபோட்டு வாய்தா எடுத்தவனுக்கு தர்மசங்கடமாகி விட்டது.

“சப்ஏஜண்ட்" ஜபார் ஆள் பிடிக்கும் கலையில் கை தேர்ந்தவன். நரைதிரை கண்ட நாரிகளைக் கூட, நவநாகரிக நங்கையர்களாக்கி, தலை மாத்தி, பேர் மாத்தி, உரு கொடுத்து, உயிர் கொடுத்து சவுதி, ஜோர்தான், கட்டார் என்று பறக்கச்செய்வதில் அவனுக்கு நிகர் அவனே தான்.

இப்படி அலாவுதீனின் அற்புத விளக்கை கையில் வைத்துள்ள ஜபாரினால் வாழ்வு பெற்றவர்கள் அவனை வாழ்வளித்த தெய்வமாக வாழ்த்தத் தவறுவதில்லை.

பிள்ளைகளை விட்டு விட்டு, எப்படி "பொரீன்" போவது? என்று மறுப்பு சொல்லி வந்த அஞ்சலையின் மனசை ஆசை வார்த்தைக் காட்டி, எப்படியும் மடக்கிவிடலாம். என்ற நம்பிக்கையோடு நாட்களை நகர்த்திக்கொண்டிருந்த ராக்கனுக்கு, ஜபாரின் பிரசன்னம் கலக்கத்தையும், பதற்றத்தையும் தர ஒரு கணம் தடுமாறிப் போனான்.

எனினும் தன்னை சுதாகரித்துக்கொண்டு வெளியே வந்த ராக்கன் “சப் ஏஜண்ட்” டை கெஞ்சா குறையாக ஏதேதோ சமாதானம் சொல்லி அனுப்பிவைத்தான். இந்த தொடர் கதைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென முடிவுசெய்து இரண்டில் ஒன்று என எண்ணிக்கொண்டான்.

நன்மையும் தீமையும் கலந்ததுதானே உலகம்! ரஞ்சிதத்துக்கு, நரகமான உலகம் ஜானகிக்கு சொர்க்கமாக அமைந்தது.

வாழ்க்கையில் பலருக்கு ஏற்படும் சந்தர்ப்பங்கள் நன்மையாகவும், வேறு சிலருக்கு இது தீமையாகவும் அமைகின்றது. இதுதான் உலக நியதியா?

சவுதிக்குப் போய் உழைத்து காணி வாங்கி வீடு கட்டி பிள்ளைகளை படிக்கவைத்து உயர்ந்தவர்கள் ஒரு பக்கம். பெண்கள் கஷ்டப்பட்டு உழைத்தனுப்பும் பணத்தை குடித்தழித்து, கும்மாளம் போட்டு சீரழிப்பவர்கள் மறுபக்கம்.

மறுநாள் காலை. ராக்கனுக்கு வீடு கட்டும் மேசன் ஒருவனுக்கு சீமெந்து குழைத்துக் கொடுக்கும் வேலை கிடைத்தது. வரும் வழியில் “சப்ஏஜண்ட்” டிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.


அன்று “ஏஜண்ட்" மிகவும் கடுகடுப்புடனும், கோபத்துடனும் நடந்துகொண்டதுடன் சட்டையை பிடித்திழுத்து கன்னத்தில் அறைந்தும் விட்டான். தனக்கு நேர்ந்த அவமானத்தால் ராக்கன் கதிகலங்கிப் போனான். இந்த சம்பவம் ராக்கனின் மனதில் பெரும் வெறுப்பையும் அவமானத்தையும் ஏற்படுத்தியது.

“பொரீனுக்கு" பெண்களை அனுப்பாத பல குடும்பங்கள் கணவனும், மனைவியும் உழைத்து, பிள்ளைகளை படிக்கவைத்து நல்ல முறையில் வாழ்வதை அவன் கண்டிருக்கிறான். தானும் குடிப்பழக்கத்தை விட்டு குடும்பத்தோடு ஒழுங்காக நடந்தாலென்ன? அவன் மனதில் சிந்தனைப்பொறி உதித்தது.

(17 பக்கம் பார்க்க)

கலாபூஷணம் மாத்தளை
பெ.வடிவேலன்...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 51



திரு/திருமதி.செல்வி ....................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ....................................................
....................................................
....................................................

.............................. ..............................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 48**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 51

**இடமிருந்து வலம்**

*01. நிர்வாகச் செயற்பாடு ஊடான ஆதிக்கம்*
*05. திறப்பு*
*07.போர்*
*08. தடுப்பிலிருந்து வெளியேறும் கட்டுப்பாடற்ற நிலை*
*09. ஆண், பெண் இருவரிடையேயும் ஏற்படும் அன்பு (குழம்பியுள்ளது)*
*10. விடியற் பொழுது (குழம்பியுள்ளது)*
*12. நில உடமைப் பட்டியல்*
*14. யானைக்கு இது உண்டு*
*17. தண்ணீரில் மட்டுமல்ல தரையிலும் வாழும் உயிரினம்*
*18. ஆற்றுநீரைத் தேக்கி அல்லது தடுத்து வைத்திருப்பது*
*19. அம்பு எய்வதற்குப் பயன்படுவது.*
*20. பெண்கள் கையில் அணிவது (குழம்பியுள்ளது)*
*22. முற்காலத்தில் பெண்கள் இதனைக் காலில் அணிவது வழக்கம்.*
*23. சிறையில் தடுத்து வைத்திருப்பவர்.*

**மேலிருந்து கீழ்**

*01. வானத்திலிருந்து எழுவதாகக் கூறப்படும் குரல்*
*02. சந்திரன்*
*03. மழைக்காலத்தை இப்படியும் சொல்வர்.*
*04. வகை (குழம்பியுள்ளது)*
*05. அனுகூலம்*
*06. பொருளின் பெறுமதிக் குறியீடு*
*11. வழமையிலிருந்து மாறுபட்டதாக இருப்பது*
*12. மயில் ஆடும்போது அழகு கொடுப்பது*
*13. மகள்*
*15. அன்பு அல்லது உறவால் ஏற்படும் நெருங்கிய தொடர்பு*
*16. மூத்த சகோதரி குழம்பிவிட்டாள்.*
*17. வயதான பெண்ணை இப்படியும் அழைப்பர்.*
*21. நெருப்பில்லாமல் இது வராது*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 50

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 01. சிரஞ்சீவி | 05. பாதி | 08. தரணி |
| 10. வள்ளல் | 11. வேகம் | 12. கமம் |
| 14. கிலி | 15. மோகம் | 16. அமைதி |
| 18. சுரம் | 19. பேன் | 21. மாயம் |
| 22. எறும்பு | 07. வாவி | |

**மேலிருந்தது கீழ்**

| | | |
|---|---|---|
| 01. சிவாஜி | 02. ரவி | 03. சீதளம் |
| 04. விரல் | 06. திண்ணம் | 09. வணிகம் |
| 10. கள் | 11. வேலி | 13. மகப்பேறு |
| 14. கிலேசம் | 15. மோதிரம் | 16. அம்மா |
| 17. சுமை | 20. என் | |

## பரிசு பெறுவோர் விபரம்

| முதல் பரிசு (ரூ 500/) | இரண்டாம் பரிசு (ரூ 350/) | மூன்றாம் பரிசு (ரூ 150/) |
|---|---|---|
| **எஸ்.எச்.எம்.ஜிப்ரி**<br>155/32, மொஹிடீன் மஸ்ஜித் வீதி,<br>மருதானை | **ஏ. சந்தியாகோ,**<br>34/12, செமினறிவத்தை,<br>தென்னக்கும்புற, கண்டி | **எம்.வி.எப். பர்வீன் மரிக்கார்,**<br>71, மரிக்கார் வீதி,<br>களுத்துறை |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 50

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ. அத்தாஸ்,** *மாத்தறை*
**2. வி. பாலேந்திரா** *வெள்ளவத்தை*
**3. என்.கே. வேணி** *பலாங்கொடை*
**4. சின்னையா செல்வராஜ்** *கொழும்பு 11*
**5. எப்.ஆர்.ஏ. ஷகூர்** *மடவளை பஸார்*
**6. எஸ். செல்வராஜ்** *பதுளை*
**7. வேலாயுதம் ராஜேந்திரன்** *காரைதீவு*
**8. ஏ.எல்.ஏ. அஸீஸ்** *தெஹிவளை*
**9. சி. அருந்ததி,** *பதுளை*
**10. ஏ.எல். கலில்** *இறக்காமம்*

## குப்பிலாம்பு... (16ஆம் பக்கத் தொடர்)

இவர்கள் வசித்த தோட்டத்து லயங்கள் மாறி சேரியாகிவிட்ட அந்தப்பகுதிக்கு திடீரென முதுகில் பொதிகளை சுமந்து கொண்டு பல கழுதைகள் வந்து சேர்ந்தன.

கழுதைகளை ஓட்டி வந்தவர்கள் சில நிமிடங்களுக்குள்ளாகவே குடிசைகளை அமைத்து குடியமர்ந்து விட்டார்கள். பாம் பாட்டுதல் குறி சொல்லுதல், நரிக்கொம்பு, பாசி விற்றல் என்பன இவர்களது தொழிலாகின. ஆண்கள் பச்சை குத்தி, பெண்கள் குறி சொல்லுதலையே முக்கிய தொழிலாக மேற்கொண்டனர்.

சில வருடங்களுக்கு திடீரென இந்த குப்பத்து நாடகங்கள் அவ்வப்போது அரங்கேறும்.

தாம் குடிசையமைத்துள்ள ஊரையும், அயலிலுள்ள ஊர்களையும் சுற்றி வலம் வந்து கிடைக்கும் பணத்தில் வாழும் இவர்கள் எப்போது குடிசைகளை அகற்றிக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள் என்று தெரியாமல் மறைந்துபோய்விடுவார்கள்.

ராக்கன் திரும்பி வரும்போது ஒரு குறத்தி "வாங்க சாமி, வாங்க" என்று மயில் இறகால் அவனது முகத்தைத் தடவி, இவனைக் கேளாமலே "இப்பவும் ஐயாவுக்கு மனசில ஒரு பெரிய குழப்பம் இருக்கு. அது நடந்தா நல்லதா? கெட்டதா? என்று ஐயா முடிவெடுக்க முடியாம தடுமாறிக்கிட்டு இருக்கீங்க". ஐயா, பெஞ்சாதி பேச்சை கேட்காம ஒங்க விருப்பப்படி நடந்தா ஒரு உசுரு ஐயோன்னு போகப்போகுது, "ஐயோன்னு போகப்போகுது" விடியக்காலையிலே ஒங்க வீட்டு வாசல்ல வந்த குடுகுடுப்பகாரன் குறி சொல்லியிருப்பானே! கேட்கலியா? குடுகுடுப்பைக்காரன் குரலில் முடித்தாள் குறத்தி.

"நீங்க தொட்டு தாலி கட்டின உங்க பெஞ்சாதிய தூரம் தொலைக்கு மட்டும் அனுப்பாதீங்க. ஆபத்து நிச்சயம். இது சத்தியம்".

ராக்கனின் குடிபோதை எங்கே பறந்தது? எப்படி பறந்தது? என்று அவனுக்குத் தெரியவில்லை. இதென்ன!

"நம்ம வீட்டு விசயம் எப்படி இவளுக்குத் தெரிஞ்சுது. சட்டைப் பையைத் தடவி கிடைத்த சில்லறைகளை" அவளிடம் கொடுத்த அவன் "ஏ பொண்ணு வேறு என்னா?" என்று இரைந்து கேட்டான். அவன் மனதில் கலக்கம்.

"சாமி அவ்வளவுதான் ஆத்தா குறியில சொல்லிச்சு. இருட்டுப்படப்போகுது. இருட்ட முன்னுக்கு நா வீடு போய் சேரனும். இருட்டிப் போனாலோ, இரவுல எங்கேயோ தங்கி போனாலோ என் மச்சான் என்ன ஏத்துக்கிற மாட்டான்". குறத்தியின் குரல் எடுப்பாக ஒலித்தது.

அந்தி சாயும் வேளையில் இருளோடு இருளாக அவள் மறைந்து போனாள்.

ராக்கனுக்கு 'அலவாங்கால்" தலையில் அடித்தது போலிருந்தது.

ஒரு இரவு தங்காமல், தாமதிக்காமல் குடிசைக்கு ஓடிப் போகும் குறத்தி.

தான் குடித்து வெறித்து கும்மாளம் போட்டு வசதியாக வாழ்வதற்காக இரண்டு, மூன்று வருடங்களுக்கு கடல் கடந்து முன்பின் தெரியாத வீடுகளுக்கு, மனிதர்களிடம் அனுப்பி வைக்கும் அவலம்.

"ஒரு உசுறு ஐயோன்னு போப்போகுது" "அஞ்சலைக்கு ஏதாவது நடந்துவிட்டால், பிள்ளைகளுடையதும், தன்னுடயதும் கதி என்ன?

வீடு வந்து சேர்ந்த ராக்கன் திண்ணையில் விரித்திருந்த பாயில் படுத்துக்கொண்டான். அவனுக்கு தூக்கம் வரவில்லை. யோசித்துப் பார்த்தான். குறத்தியின் குறி, குடுகுடுப்பைக் காரன் விடியற்காலை வீட்டிற்கு முன் வந்தானா? இது பிரமையா? உண்மையா? நெஞ்சம் பதறியது. "ரெண்டு வருஷ கொன்ட்ராக்ட் தானே உங்க பொஞ்சாதிக்கி, இதுல என்ன பெருசா யோசிக்க இருக்கு? எட்டு பத்து வருஷமென சனம் அங்கேயே குடியா கெடக்குது" சப் எடுத்தெறிந்து பேசிய ஏளன வார்த்தைகள் ராக்கனுக்கு நாக்கை புடுங்கிக்கிட்டு சாகலாம் என்பது போல இருந்தது. சீ... வெட்கக்கேடு.

திண்ணையில் அரவம் கேட்ட அஞ்சலை "ஏய் மச்சான், இந்தா சோறும், கறியும் இருக்கு. சாப்பிட்டுவிட்டு தூங்கு" என்றாள். வேணாம் புள்ள. பசிக்கல்ல, நீங்க தாழ்ப்பா போட்டுக்கிட்டு தூங்குங்க. புரண்டு படுத்தான் ராக்கன். வழமையாக அவன் குடித்துவிட்டு வந்தால் இப்படித்தான் சாப்பிடாம வெறும் வயிற்றோடு படுத்து விடுவான். இன்றும் அப்படியே. படுக்கையில் கிடந்த அஞ்சலையின் மனதில் ஆயிரமாயிரம் கேள்விகள் எழுந்து மடிந்தன.

ராக்கன் அஞ்சலைக்கு விடுத்த காலக்கெடு இன்று பொழுது விடியும் வரை மட்டும் தான்! விடிந்தவுடன் ராக்கனுக்கு அவள் தன் முடிவை கூறித்தானாக வேண்டும்.

"சப்ஏஜண்ட்" ஜபார் நானாவுடன் 'பாஸ்போட்" எடுக்க செல்வதா? இல்லையா? என்பதை கூறித்தானாக வேண்டும்.

அவள் தன்னுள்ளே நடுநடுங்கி கூனிக்குறுகிக்கொண்டாள். படம் பிடித்து "பாஸ்போட்" எடுத்து "மெடிக்கல்" போட்டு அவள் புறப்படத் தான் வேண்டும். ராக்கனின் ஆக்ஞையை தட்ட முடியுமா? என்ன. நோன்புகாலம் நெருங்கிக்கொண்டிருப்பதால் "ஹவுஸ்மேடுகளுக்கு" கிராக்கி அதிகம். ஒரு வார காலத்தில் எல்லாவற்றையும் முடித்துத் தருவதாக "சப்ஏஜண்சி" உத்தரவாதம் அளித்திருந்தான். ராக்கனின் எதிர்ப்பார்ப்பு..

குழந்தைகளை விட்டு பிரிவது எப்படி? ஆயிரம் கவலைகள் அவளை சூழ்ந்து கொண்டன.

சூரிய கதிர்கள் எட்டிப்பார்க்கும் அதிகாலைப் பொழுது. அஞ்சலை கண்களை கசக்கிக்கொண்டு அடுப்பை பற்றவைத்து "பிளேன்டியை" ஊத்தத் தயாரானாள்.

திண்ணையில் படுத்திருந்த ராக்கன் நெட்டியை முறித்து உள்ளே வந்தான்.

அஞ்சலையின் நெஞ்சில் ஒரே படபடப்பு. ராக்கன் காலையிலேயே 'பாஸ்போட்" பல்லவியை தொடருவானா? என்ற பயம். என்ன நடக்கப்போகுது? நெஞ்சம் படபடத்தது.

ஈ.ர அடுப்பு புகைந்தது. "ஏ புள்ள, இன்னைக்கு "பாஸ்போட்" எடுக்க போகவேண்டாம். நா இனிமே "கசிப்பு" குடிக்கமாட்டேன். சூதாடவும் போகமாட்டேன். தினம் தினம் கிடைக்கிற கூலி பணத்த அந்திக்கு கொண்டு வந்து தந்திடுறேன். நீயும் நானும் உழைக்கிற காசு நா குடிக்காட்டி நம்ம செலவுக்கு போதும். நம்ம நாலு பிள்ளைகளையும் படிக்க வச்சி, ஆளாக்கிவிட்டா போதும். சத்தியமா இனி நான் குடிக்கமாட்டேன். நாலு புள்ள சத்தியமா இனி நா குடிக்கமாட்டேன். நீயும் வெளிநாடு போகவேண்டாம்". புகைந்த அடுப்பு மெல்ல, பற்றி எரியத்தொடங்கியது. இதென்ன? "ராக்கன் உண்மையாகத்தானா சொல்கிறான்?

அஞ்சலையின் முகத்தில் ஒளி பரவத்தொடங்கியது. ஆயிரம் தாமரைகள் அவள் அகத்தில் மலர்ந்தன.

ராக்கனுக்கு என்ன நடந்தது? ஏன் திடீரென இப்படி? நாளும் பொழுதும் தன்னை நெருக்கி, பயமுறுத்திய ராக்கனா இப்படிச் சொல்கிறான். புரியாமல் தவித்தாள்.

அஞ்சலை ஆச்சரியத்துடன் உண்மையாகத் தானா சொல்லுற? சொல்லு மச்சான். "உண்மையாகத் தானா சொல்லுற?" அஞ்சலையின் குரல் கெஞ்சியது. "ஆமா புள்ள. சத்தியமா சொல்லுறேன். புள்ளைகளை உசிப்பி ஸ்கூலுக்கு போகச்சொல்லு. பக்கத்து நாட்டுல புதுசா ரோடு போடுறாங்க. கை வேலைக்கு நெறைய ஆள் எடுக்கிறாங்க. நா புறப்படுறேன். வெளிநாட்டு கன்றாவிய மறந்திடு". ஆவி பறக்கும் "பிளேன்டி" அவனுக்கு தேவாமிர்தமாக இனித்தது.

அஞ்சலை ராக்கனின் கால்களை பற்றிக் கொண்டு விசித்து விசித்து அழுதாள். அழுகாத புள்ள அழுகாத. அவளை அணைத்து தேற்றினான் ராக்கன். நேற்று மாலை அவள் ஏற்றிவைத்த குப்பிலாம்பு மெலிதாக எரிந்து கொண்டிருந்தது.

பொழுது புலரும் வேளை.

குப்பிலாம்பு தரும் திரு ஒளியே என்றாலும், இருளைப் போக்கி அந்தகாரத்தை அகற்றினால் அதுவும் அகல்விளக்குத் தானே? அன்று இரவு சேரியில் உள்ள கசிப்பு தவறணை "பின்னை இட்ட தீயென" பற்றி எரிகின்றது. இது யார் வைத்த தீ . சுட்டெரிக்கும் தீயும் ஒளி தானே.

அந்தச் சுடரும் ஞானச் சுடர் அல்லலா?

## ஆயிரம் கோடி ரூபாவை...

(04ஆம் பக்கத் தொடர்)

இருந்தபோதும், இத்தருணத்தில், எதிர்க்கட்சிகள் கோருவது போல் அமைச்சர் பதவிகளை வழங்குவதற்கோ, தேர்தலை நடத்துவதற்கோ முன்னுரிமை கொடுக்கக் கூடாது. இந்த நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட இலக்கை வைத்திருக்க வேண்டும். தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதே அந்த இலக்காக அமைய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கை அடைவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு தழுவிய ரீதியில் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு உறுதியளித்துள்ளார். எனவே ஜனாதிபதிக்கு நாம் அனைவரும் முழு ஆதரவை வழங்க வேண்டும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்ட பிறகு, தேர்தல் அல்லது பிற விஷயங்களைப் பற்றி சிந்திக்கலாம் என்பது அவருடைய நிலைப்பாடாக இருக்கின்றது.

இந்த நிலையில், தேர்தலைக் கோரும் எதிர்க்கட்சியினர் நாட்டின் முன்னிலையில் காணப்படும் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கப் போகின்றனர் என்பதை வெளிப்படுத்த வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வினை வழங்குமாக இருந்தால் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றனர். இருந்தபோதும் வெறுமனே தமது மக்கள் பலத்தினை பரீட்சித்துப் பார்க்கும் அளவுகோலாக மாத்திரம் பயன்படுத்துவதற்கு இத்தேர்தலை நடத்துவது தேவையா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்கிறார்கள் நாட்டின் இன்றைய நிலைமையை புரிந்து கொண்டுள்ள பொருளாதார நிபுணர்கள்.

## தேர்தலை எதிர்கொள்ள...

(08ஆம் பக்கத் தொடர்)

கடந்த காலங்களில், அனைத்து முன்னாள் அரசுகளும் குறைந்த விலையில் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு செல்லவில்லை. அதனால்தான் அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் மின்சாரச் சட்டம் கொண்டு வரப்பட்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதும் நிறைவேற்றப்பட்டு சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வேலைத்திட்டம் வகுக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்க்கமான மற்றும் சவாலான முடிவுகளை எடுத்து செயற்படுகின்றார். எமக்கு எத்தகைய அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், நாட்டின் சார்பாக ஜனாதிபதி எடுத்துள்ள நிலைப்பாட்டில் நாங்கள் திருப்தியடைவதுடன் அவருக்கு எமது பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

**கே: உள்ளூராட்சித் தேர்தலைத் தவிர, பொதுத்தேர்தலையும் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிவருகின்றன. உங்கள் பதில் என்ன?**

பதில்: எங்களுக்கு மக்கள் வழங்கிய ஆணை இன்னமும் உள்ளது. 2020 பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவிலிருந்து 156 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதுவே எங்களின் ஆணை, அதன்படியே தற்போது செயற்படுகின்றோம். எதிர்க்கட்சியினருக்கு ஆணை இல்லை. அதனால்தான் ஜனநாயக விரோதமான முறையில் போராட்டங்களை உருவாக்கி நாட்டை அராஜகமான முறையில் மாற்ற முயல்கின்றனர்.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொடர்ந்து தாமதமாகி வருவதாகத் தெரிகிறது. எப்போது கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

பதில்: சர்வதேச நாணய நிதியம் இந்தியா மற்றும் சீனாவுடன் கலந்துரையாடி வருவதாக ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்தார். அந்தக் கலந்துரையாடல்கள் முடிவடைந்தவுடன், பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுக்கு அவற்றுக்கான முன்னேற்றம் குறித்து விளக்கமளிக்கப்படும்.

**கே: பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு தரப்பில் ஏதேனும் திட்டம் உள்ளதா?**

பதில்: குறைந்த வருமானம் பெறும் பிரிவினர் மற்றும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடியின் முக்கிய சிக்கலைத் தீர்த்த பிறகு, இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.


### இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

#### விலைமனுக் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழக அச்சகம், மத்திய புத்தக விநியோகப் பிரிவு, மற்றும் கொழும்பு பிராந்திய நிலையத்தின் புத்தக விநியோகப் பிரிவிற்கு வாடகை அடிப்படையில் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களை பணிக்கமர்த்துவதற்கான விலைமனு கோரல்.

1. இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது (OUSL) [illegible]
2. [illegible] 2023 ஜனவரி மாதம் 02 ஆம் திகதி முதல் 2023 ஜனவரி 23 ஆம் திகதி வரையில் வேலை நாட்களில் மணி 0900 முதல் மணி 1500 வரையிலான [illegible]
3. [illegible] "இலங்கை திறந்த பல்கலைக்கழக அச்சகம், மத்திய புத்தக விநியோகப் பிரிவு, மற்றும் கொழும்பு பிராந்திய நிலையத்தின் புத்தக விநியோகப் பிரிவிற்கு வாடகை அடிப்படையில் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களை பணிக்கமர்த்தல்" [illegible]
4. [illegible]
5. [illegible]

[illegible]
2023.01.01



இலங்கை தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2022.12.29 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 4984 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,814,779.00 — ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 2 9 7 7 5 5

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1439 — ரூ. 2,254,780.00 — வெற்றி இலக்கங்கள் 2 4 3 2 4 2 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,741,152.00

Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 293 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,696,845.20 — வெற்றி இலக்கங்கள் 25 43 35 59

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1332 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 289,377,866/- — S 15 — 08 16 71 78 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3226 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,461,818.80 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 47 51 61 77

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1014 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 140,006,949.20 — ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 11 18 54 80



### துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### இலங்கை, மட்டக்களப்பு விமான நிலையத்தில் விமானமோட்டல் பயிற்சி நிறுவனத்தை ஸ்தாபித்தல்

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு (EOI)

இலங்கையில் விமானமோட்டிகளைப் பயிற்றுவித்தல் மற்றும் ஏனைய விமான சேவை சார்ந்த தொழில்சார் விடயங்கள், நோக்கு மற்றும் விமான சேவை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக இலங்கை மட்டக்களப்பு விமான நிலையத்தை தளமாகக் கொண்டு ஓர் விமானமோட்டல் பயிற்சி நிலையத்தை அமைத்தல் மற்றும் இயக்குவதற்கு ஆர்வமுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச தரப்புகளிடமிருந்து ஆ. வெளிப்படுத்தல் அழைப்பு விடுக்கப்படுகிறது.

உத்தேச விண்ணப்பதாரி (விண்ணப்பதாரிகள்) இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் (CAASL) இணையதளம் (https://www.caa.lk/en/public-notices-en/procurement-of-goods-and-services2) இல் பிரசுரிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளை திருப்திகரமாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

30 வருட காலத்திற்கு வர்த்தக விதிகளில், குத்தகை அடிப்படையில் விமானமோட்டல் பயிற்சி நிறுவனத்தினை அமைப்பதற்காக வழங்குவதற்கு காணி தேவைப்படுகின்றது.

விண்ணப்பதாரரின் சொந்தச் செலவில் விமானங்களை நிறுத்திவைத்தல், மற்றும் பயிற்சியளிப்பதற்கான வசதிகள், நிறுத்துமிடங்கள், கட்டுப்பாடில்லாத வாகன வழிகள் உள்ளடங்கலாக CAASL மேம்படுத்தல் தரத்தில் குறிப்பிடுமாறு சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO) உடன் தேவைப்படும் வசதிகளை வழங்குவதற்கு விண்ணப்பதாரி (விண்ணப்பதாரிகள்) விரும்புதல் வேண்டும்.

CAASL இலிருந்து தேவைப்படும் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அனுமதிகளால் பெற்றுக்கொள்வதுடன் மேற்படி செயற்பாட்டிற்காக CAASL மேம்படுத்தல் தரத்தின் பிரகாரம் விமானம் ஓட்டல் பயிற்சி நிறுவன செயற்பாடுகள் செயற்படல் வேண்டும்.

ஆர்வமுள்ள தரப்பினர் கொழும்பு 1, சைத்திய வீதி, இல. 19, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சமரசக் கமிட்டி, தலைவருக்கு முகவரியிடப்பட்ட ஓர் பொறியிடப்பட்ட கடித உறையை 2023 பெப்ரவரி 15ம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்பு ஆர்வவெளிப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர்வவெளிப்பாடுகளை உள்ளடக்கிய கடித உறையின் வலது கைப்பக்க மூலையில் "இலங்கை மட்டக்களப்பு விமான நிலையத்தில் விமானமோட்டல் பயிற்சி நிலையத்தை ஸ்தாபித்தல்" என்று குறிப்பிடல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சமரசக் கமிட்டி**
**துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01,**
**இலங்கை.**
01.01.2023



### மோட்டார் கப்பல் "SAI ARAMBH" ஐ பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்தல்

கொழும்பில் நடைபெறும் அதன் நியாதிக்கத்தை நிர்வகிக்கும் செயற்பாட்டில் இலங்கை குடியரசின் மேல் நீதிமன்ற கட்டளையின் விளைவாகவும் 01/2020 என்ற Rem இலக்க நீதிமன்ற நடவடிக்கையின் விளைவாகவும் M.V. "SAI ARAMBH" (IMO No.: 9115456, Type - General Cargo, GRT/NRT – 5,582/2.791) ஆனது அதனது தற்போதுள்ள நிலையில்/நிலபரத்தில் எவ்வித பாரபந்தங்களற்ற நிலையில் 2023.01.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு இலங்கை கொழும்பு-12, ஹல்ஸ்ப்டோர்ப் வீதியிலமைந்துள்ள கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற 04 ஆம் இலக்க நீதிமன்ற வளாகத்தில் கொழும்பு மேல் நீதிமன்ற மார்ஷலினால் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(தற்போது கிடைக்கக்கூடிய விபரக்குறிப்புக்கள் மற்றும் தகவல் ஆகியன துல்லியமானவையென உத்தரவாதம் வழங்க இயலாது).

விற்பனையின் மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் மற்றும்/அல்லது கப்பலை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளுக்காக தயவு செய்து கீழேயுள்ள இணையதளத்தை பார்வையிடவும் அல்லது பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**மேல்நீதிமன்ற மார்ஷல்,**
**வணிகக் கப்பற்துறை செயலகம், 1 ஆம் மாடி,**
**பிரிஸ்டல் கட்டிடம், 43-89, யோர்க் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி: +9411 2441429/ + 9411 2435127**
**தொலைநகல்: +9411 2435160**
**இணையதளம் - www.dgshipping.gov.lk**
**மின்னஞ்சல்: - dmsmos@sltnet.lk**



LITRO GAS

### TENDER FOR THE SALE OF SCRAP LPG CYLINDERS AND OTHER METAL WASTE AT LITRO GAS LANKA LTD – MABIMA

**Tender No. LGLL/CYLSCRAP/062/LOCAL/2022**

Litro Gas Lanka Limited invites sealed offers in respect of the sale of the below mentioned scrap Metals at Litro Gas Lanka Limited, Mabima:

1. Scrapp LPG cylinders
2. Metal Parts
3. Carbon Steel Gear Box Housing
4. Other Metal Waste

The Tenderer shall furnish as part of its bid, a Bid Security in the form of a Bank Guarantee from a recognized commercial bank registered in Sri Lanka.

Value of the bid security is LKR 525,000.00

The Tender document can be obtained from the address mentioned below on the payment of a non-refundable fee of LKR 3,500.00 by cash or Bank Draft on any working day (Mon-Fri) between 9.30 am – 3.00 pm from 04th January 2023 up to 18th January 2023.

The duly Completed Tender Documents should be deposited in the Tender Box at the 03rd Floor of the Litro Gas Lanka Ltd Head Office, No 267, Union Place, Colombo 02 on or before 3.00 pm on 18th January 2023. Opening of bids will be conducted at the 4th Floor auditorium of the above premises soon after closing the bid.

The Chairman
Department Procurement Committee
Litro Gas Lanka Limited
267, Union Place, Colombo 02
T.P. - 011 2 581131
Fax - 011-2327698




## நான்கு வார குறும் பத்தி எழுத்துத் தொடர்

பொங்கும் பூம்புனலாய் புத்தாண்டு பிறந்திருக்கும் இச்சமயத்தில் கடந்தாண்டு இறுதிப் பொழுதுகளில் தமிழகத் தலைநகர் சென்னையில் சில நாட்களைக் கழித்த பொழுது கண்ட, கேட்டவற்றைச் சின்னச் சின்னச் செய்திகளாக வாரமஞ்சரி வாசகர்களுக்கு நான்கே வாரங்கள் வழங்கும் உத்தேசம்.




முதலில் செவியுறப்போவது உலகப்புகழ், ஒப்பாரும் மிக்காரும் இல்லா நமது அன்பு அறிவிப்பாளர் தம்பி, அருமை அப்துல் ஹமீத் பற்றிய அலை ஓசை.

டிசம்பர் 18 ஞாயிறு பொழுது. புகழுக்குரிய கலைவாணர் அரங்கில் நிகழ்வுள்ள ஓர் அபூர்வ வைபவத்திற்கான அழைப்பேடு இப்படிப் பேசியது.

★ "வானலைகளில் வழிப் போக்கன்"

★ ஊடகத் துறையில் அரை நூற்றாண்டைக் கடந்த அன்பு அறிவிப்பளார் பீ.எச். அப்துல் ஹமீத் வரலாறு பேசும் நூல் வெளியீட்டு வைபவம்.

★ தேனிசை மழையுடன்!

★ வெளியிடுபவர் பத்மஸ்ரீ கமலஹாசன் முதல் பிரதி பெறுபவர் பத்மபூஷன் பி. சுசீலா. நூல் வாழ்த்துரை சாகித்திய விருதாளர், நாடாளுமன்ற உறுப்பினர், சு. வெங்கடேசன்.

★ "GATES OPEN at 5 p.m. Programme start at 5.30 p.m "

தமிழ்மணிகளைத் தடுமாறச் செய்தது ஆங்கிலம். "கதவுகள் 5 மணிக்குத் திறக்கும். நிகழ்வுகள் 5.30க்கு ஆரம்பிக்கும்" எனத் தமிழ் நூல் வெளியீடொன்றுக்கு அறிவிப்புச் செய்யாமல் இப்படி ஆங்கிலத்தில் அறிவிப்பு இருந்தது அதிசய ஆச்சர்யம். எவ்வாறாயினும், விழா நாயகன் அப்துல் ஹமீத் குற்றவாளியாகார். அவர் தனது தனித்துவமான தமிழ் அறிவிப்புக்களில் ஓரிடத்திலேனும் ஆங்கிலம் நுழையவிடாத பேர் வழி! இது அவர் அறியாத ஒரு வழு.

சரி போகட்டும் விழாவோ வெகு ஜோர் தமிழ்கத்தில் அவரின் செல்வாக்கை எடுத்துரைத்தது தன் அனுபவங்களை இரண்டு மூன்று ஆண்டு முயற்சியில் நூலுருவில் பதித்து தமிழ் வானொலி ரசிகர்கள் எந்நெந்த நாடுகளில் புகலிடம் கொண்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் சுமந்து எடுத்துச் சென்று வைபவங்கள் நடத்துகிறார். தோன்றாத் துணைகளாக அவரது ஆயிரமாயிரம் ரசிகர்களின் ஒத்துழைப்பு.

கடைசியாக இலண்டன் மாநகரில் நடந்ததற்குப் பிறகு தமிழகத் தலைநகரில் ஓஹோ! இனி நடக்க வேண்டியது இந்தப் புத்தாண்டில் அவர் பிறந்தகத்தில் தான். ஆவலோடு காத்திருக்கிறது இந்த மூத்த பேனை சிறப்புப் பிரதி பெற்று மகிழ! வாழும் பொழுதே!

## வாழும் பொழுதே எழுத்தாளர் நூல்கள் நாட்டுடைமை!

கலைஞர் முத்துவேல் கருணாநிதியின் உதிரம் ஸ்டாலினின் தலைமையில் நடக்கும் தமிழக ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட குழுவினர் புழுதி கோட்டினாலும் என் பேனைக்குப் புனுகு வாசனையே கமகமக்கிறது. நான் சார்ந்துள்ள கலை இலக்கியத் துறையில் நாளும் பொழுதும் நல்லதே நடக்கிறது. திடுதிப்பென்று இப்படியொரு செய்தி செவிகளில் "வரலாற்று ஆய்வாளர் **செ. திவா**ன் நூல்கள் நாட்டுடமை ஆக்கப் படுகின்றன. பொற்கிழியாக இலட்சங்கள் பதினைந்து.

அட! வாழும் பொழுதே எழுத்தாளர் நூல்கள் நாட்டுடைமையா? பொற்கிழியா?

இந்த "செ. திவான்" என்பார் இலங்கை இலக்கிய வட்டம் அறியாத பெயர்!150 நூல்கள் எழுதியிருக்கிறார். எந்த நூல் எவர் பார்வைக்கு இங்கே கிடைத்தது. 18 அகவை வாலிபப் பருவத்திலேயே கரம் பிடித்து ஆய்வுக் களம் இறங்கியவர், **"வைகோ"** என்ற **கோபால் சாமி**, பழம்பெரும் அரசியல்வாதியின் அத்தியந்த சிஷ்யனாகி கட்சி ஊழியம் புரிந்தவாறே நல்ல நல்ல ஆய்வுகளைச் செய்து நூல் வடிவில் கொண்டு வந்து, இன்று உயிருடன் இருக்கும் காலத்திலேயே முதல்வர் ஸ்டாலின் திட்டத்தால் நாட்டுடமை ஆக்கப்படுகின்ற பாக்கியம். சில நாற்களின் தலைப்புகள் இப்படி:

★ தக்கலை ஞானமா மேதை பீர்முகம்மது (ரஹ்) சரித்திரமும், ஞானப்பாடல்களும்

★ விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்

★ திருகுர்ஆன் : தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்

★ வரலாற்றின் வெளிச்சத்தில் மாமன்னர் ஔரங்கஜேப்

★ வீரத்தலைவர் வ.உ.சி


★ மாவீரர் மருதநாயகம் கான்சாகிப்

★ பழம்பாடல்களில் பாண்டியரின் புதிய சரிதை,

★ சுதந்திரப்போரில் முஸ்லிம்கள்...

★ விடுதலைப்போரில் தீவிரவாதம்

★ ம(னி)த ஒற்றுமை



இந்த வகையில், நானறிய இரு முஸ்லிம் எழுத்தாளர்கள் தங்கள் வாழ்நாள் பொழுதிலேயே படைப்புக்கள் நாட்டுடமை ஆவதைக் கண்டுகளிப்புற்றுள்ளனர். முதலாமவர் கலைஞர் கருணாநிதி காலத்தில் **மணவை முஸ்தஃபா.** இப்பொழுது தனயன் காலத்தில் **செ. திவான்.** நம் நாட்டிலும், இப்படியொரு நடைமுறை வரப் பிரார்த்திப்போமா?

## அரசியல்வாதியின் அறிவார்ந்த நூல்

அவர், நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சமூகச் செயற்பாட்டாளர். பேராசிரியர், கலாநிதி, தமிழக வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் இருபத்தைந்து ஆண்டுகள் பணி, நல்ல மேடைப் பேச்சாளர் நல் எழுத்தாளர். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும், மனித நேய மக்கள் கட்சியின் செயலாளராகவும், தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினராக இரண்டாவது தடவையாகவும் செயலாற்றிக் கொண்டிருக்கிற நிலையில், கடந்தாண்டு இறுதிப் பொழுதுகளில் கடுமழை, குளிர் காற்றுக்கு மத்தியில் கொழும்பு வந்து தனது நூலொன்றின் வெளியீட்டு வைபவத்தை நடத்தி விட்ட சேதி சென்னையிலிருந்த எனக்குக் கிடைத்தது. ஆனால் அங்குள்ளோர் அறிந்திருந்தார்களில்லை; தமிழக ஊடக சேவை அப்படி!




ஏன் அப்படியொரு நூலை அவர், **எம்.எச். ஜவாஹிருல்லா** எழுதி உள்ளார் என்பதே தெரிந்திருக்கவில்லை!

இது, இட்டுக்கட்டி எழுதும் தகவலாகாது. நன்றாகவே விசாரித்து விட்டு வழங்குவது.

**"நபிகளாரின் சமூக** உறவு என்ற அந்நூல் நபிகளாரின் வரலாற்றைச் சொல்லும் மற்றொன்று அல்ல, அல்லவே அல்ல, சமகாலச் சமூக நிலை குறித்து அவர்தம் கவலையின் வெளிப்பாடே அந்த நூல்.

ஒரு முழுநேர அரசியல்வாதியாக மாறிப்போன ஓர் அறிவு ஜீவியான ஜவாஹிருல்லா இப்படியும் முனைந்து, காலத்தின் கட்டாயமான ஓர் ஆய்வு நூலை அளித்திருக்கிறாரே என்று அதிசயம் அதிசயமாகப் பார்த்து எண்ணி மகிழ வேண்டி இருக்கிறது.

மதுரைப் பேராயர், தமிழக ஆயர் பேரவைத் தலைவர் **அந்தோனி பாப்புசாமி** அடிகளார் பதிவிட்டிருக்கும் ஓர் ஆயிரத்திலொரு வார்த்தை நூலின் தகுதியையும் அத்தியாவசியத்தையும் வெளிச்சமிட்டு விடுகிறது.

## "இந்தப் புத்தகம் சமகாலத் தலைமுறை தலைமுறைகளுக்கு சமூக அறிவியல் பாடம்

ஜனாப் **எம்.எச். ஜவாஹிருல்லா** அரசியல்வாதியாகவும் முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவராகவும் இருப்பதால் தமிழ்நாட்டவர் பெரும்பாலானோர் இந்த நூலை 'கண்டு கொள்ளவேயில்லை' என்பதை என்னால் நேரில் உணர முடிந்தது.

வேண்டவே வேண்டாம் இலங்கைக் கொழும்பில் காலநிலை ஒத்துவராத, காரணத்தால் கொஞ்ச பேராவது 'கண்டு கொண்டதை' முன்னுதாரணமாகக் கொண்டு, "நபிகளாரின் சமூக உறவு" என்பது என்ன என்பதைத் தமிழகத்தார் தெரிய வேண்டும்.

அங்கே, இம்மாத நடுப்பகுதியில் கோலாகலமாக நடைபெறவுள்ள புத்தகக் கண்காட்சியைப் பதிப்பாளர் (அடையாளம்" புத்தா நத்தம்) நன்றாகப் பயன்படுத்தலாம்.

மேலும், இலங்கையில் பெரும்பான்மையினரின் தாய்மொழிச் சிங்களத்தில் வெளியிட யாரேனும் ஒரு புரவலர் ஆர்வப் பட வேண்டும்.

**அடுத்தவாரம் வேறு சில....**

# பின்னோக்கிய பார்வையில் 2022

**அருள் சத்தியநாதன்**

பலமுக்கியமான சம்பவங்களுடன் கடந்த ஆண்டு கழிந்திருக்கிறது. இலங்கையிலும் சரி, உலக அரங்கிலும் சரி, சில மகிழ்ச்சிகரமானவை. சில வருத்தத்துக்குரியவை.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த ஆண்டு ஒரு மக்கள் புரட்சியை நிகழ்த்திய ஆண்டு. வெறும் மத, இன வாதங்களும் அவற்றை அண்டிப் பிழைக்கும் அரசியலும் ஒரு நாட்டுக்கு என்ன செய்யும் என்பதற்கு கடந்த ஆண்டு ஒரு நல்ல உதாரணம். ஸ்திரமான சுய பொருளாதாரத்தின் படிப்படியான வளர்ச்சியை கைக் கொள்ளாமலே தேசிய செல்வத்தை வீணடித்ததன், கடன் வாங்கியே காலத்தைக் கடத்தியதன், ஆற்றில் போகுது தண்ணீர் அண்ணன் குடி, தம்பி குடி என்பதாக அரசியல்வாதிகளும் அரசு அதிகாரிகளும் போட்டி போட்டுக் கொண்டு திருவிளையாடல்களில் ஈடுபட்டதன், விளைவுகளை மட்டுமல்ல, சிறுபான்மை குடிகளையும் அவர்களின் நலன் மற்றும் உரிமைகளையும் கண்டு கொள்ளாமல் விட்ட ஒரு அரசை எங்கே கொண்டு நிறுத்தும் என்பதையும் முதல் தடவையாக மக்கள் பார்த்தது கடந்த ஆண்டில்.



மிரிஹானையில் நடைபெற்ற ஒரு மக்கள் போராட்டத்தை வேறு விதமாக திசை திருப்ப முற்பட்டதன் விளைவாக அது காலி முகத்திடல் 'அரசியல்' போராட்டமாக மாறியது. காட்டுத் தீயாக சகல தரத்து மக்களையும் அது பீடித்து, 'அரகலய' பூமிக்கு அவர்களை கொண்டு சேர்க்கவும், செய்தது. இப்படி ஒரு மக்கள் நிகழ்வு இலங்கையில் முன்னெப்பொழுதும் நடந்ததில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஜூலை 13ம் திகதி வெளியேறினார். மே மாதம் 12ம் திகதி பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாக ஜூலை 13ஆம் திகதியே பதவியேற்கிறார். அதே ஜூலை 20ம் திகதி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெற்று ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க, மறுநாள் 21ம் திகதி ஜனாதிபதியாக சத்தியபிரமாணம் செய்து கொள்கிறார்.

இதேபோன்ற ஒரு அரசியல் நிகழ்வை 1994 அரசியலிலும் கண்டோம்.

1992ம் ஆண்டு, ஜே.வி.பி ஆயுத கிளர்ச்சி முடிவுக்கு வந்த காலக்கட்டத்தில், லண்டனில் தங்கியிருந்த சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பினார். அம்மா ஸ்ரீமாவுக்கு வயதாகிவிடவே சந்திரிகா அரசியலுக்கு வர வேண்டிய சூழல். 1993 மேல்மாகாண சபைத் தேர்தலில் அரசியலுக்கு வர வேண்டிய சூழல். 1993 மேல்மாகாண முதல்வரானார். முதல்வராக 1993மே 21ம் திகதி பதவியேற்கும் அவர், 1994 ஒகஸ்டில் பதவி துறக்கிறார். காரணம் 1994 பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு கம்பஹா மாவட்டத்தில் நான்கு லட்சத்து 64 ஆயிரம் விருப்புவாக்குகள் பெற்று முதல் தடவையாக பாராளுமன்ற உறுப்பினராகிறார். அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும், பிரதமராகவும் வீற்றிருப்பதும் கொஞ்ச காலம்தான். 1994 ஒகஸ்ட் 19ம் திகதி பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்கும் அவர் அதே ஆண்டு நவம்பர் 12ம்திகதி இராஜிநாமா செய்கிறார். அடுத்துவரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் பதவியை இராஜிநாமா செய்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றி என்பது சந்திரிகாவுக்கு செங்கம்பள விரிப்பாகத்தான் இருந்தது. 1992இல் சந்திரிகா குறுகிய காலத்தில் ஜனாதிபதியானதைப் போலவே ரணில் விக்கிரமசிங்கவும் திடீரென, சில மாதங்களில், உச்சத்தை அடைந்தார்.

அரகலயவும், ரணில் விக்கிரசிங்க ஜனாதிபதியானதும், கோட்டாபய ராஜபக்ச பதவியைத் துறந்ததும் கடந்த ஆண்டின் நட்சத்திர நிகழ்வுகள். எந்தவொரு சோதிடராலும் முன் கூட்டியே கணிக்கத்தவறிய சம்பவங்கள்!

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பு இன்னொரு முக்கிய சம்பவமும் நிகழ்ந்தது. மே மாதம் ஒன்பதாம்



திகதி தான் பதவிவிலகப் போவதாக மஹிந்த ராஜபக்ச கூறவே, அலரி மாளிகையில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. மொட்டு கட்சி ஆதரவாளர்கள் அக்கூட்டத்துக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்திருந்தனர். உணர்வுகளை தூண்டும் வகையிலும் அரகலயவுக்கு எதிராக கருத்துகள் வெளியிடப்பட்டதாகவும் தகவல். கூட்டம் நிறைவடைந்த பின்னர் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் காலிமுகத் திடலுக்கு வந்து போராட்டக்காரர்களைத் தாக்கினர்.

இச் சம்பவம் மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தியது. அலரிமாளிகை கூட்டத்துக்கு வந்திருந்தவர்களின் பஸ்கள் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஆத்திரமடைந்தவர்கள் அவற்றுக்கு தீயிட்டு கொளுத்தினர். பேரவாவியில் பஸ்களை தள்ளிவிட்டனர். ஊர்களுக்கு திரும்பிச் சென்ற பஸ்களை ஆங்காங்கே வழிமறித்த ஆர்ப்பாட்ட ஆதரவாளர்கள் வாகனங்களுக்கு தீயிட்டனர். பஸ்களில் பயணித்தவர்களை நையப்புடைத்தனர்.

இது மேலும் வன்முறை வடிவெடுத்தது. அன்றிரவு முழுவதும் ஆளும் கட்சி அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், ஆதரவாளர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஜே.வி.பி கிளர்ச்சிகளின்போது இவ்வாறு முக்கியஸ்தர்கள் வீடுகள் தீக்கிரையானதோடு டீ.ஏ ராஜபக்சவின் சிலை கீழே தள்ளி நொருக்கப்பட்டது.

பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவின் ஃபிளவர் வீதி (115வது ஒழுங்கை) ஜூலை 9ம் திகதி இரவு தீக்கிரையானது. எதிர்க்கட்சியை சேர்ந்த ஒருவரின் வீடு தீக்கிரையானது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்திய ஒரு சம்பவம். ஏனெனில், அவரது ஐம்பதாண்டு அரசியல் வாழ்வில் அவர் மீது பெரிதாக எந்தக் குற்றச்சாட்டும் கிடையாது.

கடந்த ஆண்டில் நடைபெற்ற அடுக்கடுக்கான அரசியல் நிகழ்வுகளில் ஜூலை 13ம் திகதி முதன்மை பெறுகிறது. முன்னாள் ஜனாதிபதி தன்மனைவியுடன் இராணுவஜெட் விமானத்தில் மாலைதீவுக்கு தப்பிச் சென்றார்.

இத்தனை அல்லோலகல்லோலத்தின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜூலை 20ம் திகதி பாராளுமன்ற வாக்கெடுப்பில் வெற்றிபெற்று 21ம் திகதி எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்றார். மூத்த அரசியல்வாதியும், பிலிப் குணவர்தனவின் மகனும், மக்கள் ஐக்கிய முன்னணி (மஹாஜன எக்சத் பெரமுன) கட்சியின் தலைவருமான தினேஷ் குணவர்தன ஜூலை 22ம் திகதி பிரதமராகப் பதவி ஏற்றார்.

கடந்த வருடத்தின் எல்லா அரசியல் திருப்பங்களுக்கும் காலி முகத்திடல் மக்கள் போராட்டமே காரணமானது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் பரபரப்பாக பேசப்பட்ட நபர் டயனா கமகே. கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தன் கட்சியையும் சின்னத்தையும் தந்தவர். பதிலாக, தேசிய பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றம் வந்தவர். பின்னர் பொது ஜனபெரமுனையில் தன்னை இணைத்துக் கொண்டார். தற்போது சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர். பிரிட்டிஷ் பிரஜை என்பதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்கும் தகுதியற்றவர் என்ற நீதிமன்ற வழக்குக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பவர்.

கஞ்சாவை ஏற்றுமதிப் பயிராக வளர்க்க வேண்டும், மதுபானசாலைகளை 24 மணித்தியாலமும் திறந்து வைத்திருக்க வேண்டும்; கொழும்பிலும் முக்கிய நகரங்களிலும் இரவு வாழ்க்கை ஆரம்பிக்கப்பட வேண்டும்; தாய்லாந்தின் 'பட்டாயா' போன்ற முறை இங்கும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தன் கருத்துகளை அச்சமின்றி பேசி வருபவர். சுற்றுலாப் பயணிகளின் விருப்பத் தெரிவாக இலங்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றால் இவை அனைத்தும் நடைமுறைக்கு வர வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர். தீப்பொறி பேச்சாளர் என்ற வகையில் கடந்த வரும் அதிகம் கவனம் பெற்றவர்.

கடுமையான விலை அதிகரிப்பு காரணமாக மதுபான விற்பனை கடந்த வருடம் பிற்பகுதியில் 30சதவீதத்தால் வீழ்ச்சி கண்டது. டிசம்பர் மாத மதுவிற்பனை குறைந்து காணப்பட்டது. அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்பட்டிருந்தாலும் நீர், மின்சார கட்டண அதிகரிப்பு, ஜி.எஸ்.டி. அதிகரிப்பு போன்றவற்றால் மக்கள் விழி பிதுங்கிப் போன நிலையில் கடந்த வருடம் முடிவடைந்திருக்கிறது. புத்தாண்டு மகிழ்ச்சியைத் தராது என்ற உணர்வை 2022 தந்திருக்கிறது. 2023இல் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படலாம்; பாராளுமன்ற தேர்தலுக்கான வாய்ப்பும் அமையலாம் என்ற எதிர்பார்ப்புகளையும் கடந்த ஆண்டு விதைத்திருக்கிறது.

இந்த ஆண்டில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அடிப்படைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இங்கே, சிங்களத் தரப்பு இதை எவ்வாறு கையாலும் என்பதைவிட தமிழ்த்தரப்பு எவ்வாறு கையாளப் போகிறது என்பதே முக்கியமானது.



ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆண் பொலிசார் பெண் பொலிசாரை நடத்தும் விதம் பெரிதாக பேசப்பட்டது. ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அரசு அதிகாரிகளே அதற்கு துணைபோவதாகவும் ஒரு பெரும் சர்ச்சை வெடித்தது.

பெருந்தோட்ட காணி உரிமையை கம்பனிகளிடமிருந்து விடுவித்து அரசு பொறுப்பேற்க, வேண்டும் எனவும் பெருந்தோட்ட வீடமைப்பு, விவசாயத்துக்கு காணி வழங்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் கூறியிருந்தமை மலையக அரசியல் கவனிப்பு பெற்றிருந்தது.

கோடீஸ்வரர் ஷாப்டரின் மரணம் கொலையா தற்கொலையாக என்ற மர்மம் நீடிக்கும் நிலையில் 2022 விடைபெற்றிருக்கிறது.



பாலி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் பின்னர் பல்கலைக்கழகம் மூடப்பட்டு பிக்குமார் டிசம்பரில் வெளியேற்றப்பட்டனர். பௌத்த மத ஏற்பாடுகளில் மறுசீரமைப்பு அல்லது சீர்த்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றது.

தெளிவத்தை ஜோசப்பின் மரணம் (2022.10.25) பேரிழப்பாக அமைந்தது.


தமிழ் நாட்டுக்கு செல்வோமானால், பெருமளவு மழை வீழ்ச்சியை ஆண்டு முழுவதும் தமிழகம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. டிசம்பர்14ம் திகதி முதல்வர் ஸ்டாலினின் மகன் உதயநிதி விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றார். ஸ்டாலினுக்குப் பின் தி.மு.கவின் தலைவர் இவரே என அடையாளம் காட்டப்பட்டிருப்பதாகவே இதைப் பார்க்க வேண்டும்.

நவம்பர் 11ம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றிருந்த ஆறுபேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டிருந்தது. நீண்ட கால சட்டப் போராட்டம் இவ்வாறு முடிவுக்கு வந்தது.

கடந்த டிசம்பர் 1ம் திகதி ஜி20 அமைப்பின் தலைமைத்துவத்தை இந்தியா ஏற்றது.

இரண்டு பில்லியன் இலங்கை ரூபா பெறுமதி கொண்ட அரிசி, அவசிய மருந்துப் பொருட்கள், பால்மா என்பனவற்றின் முதல் தொகுதியை மே 21ம் திகதி சென்னை துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலமாக கொழும்புக்கு தமிழக அரசு அனுப்பிவைத்தது.

பொன்னியின் செல்வன் திரைப்படம் செப்டம்பர் 30ம் திகதி உலகெங்கும் வெளியிடப்பட்டு 500 கோடி இந்திய ரூபாவுக்கு அதிகமாக வசூலித்து சாதனை படைத்தது. கட்டாயம் பார்த்தேயாக வேண்டும் என்ற மாயைக்கு மக்களை ஆழ்த்தியதன் மூலம் இச்சாதனை நிலைநாட்டப்பட்டது. **(தொடரும்)**




# வாரபலன்

01.01.2023 - 01.07.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

உங்கள் ராசிக்கு 2,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். வாக்கு, தனம், குடும்பம், வாழ்க்கை துணை ஆகிய இடங்களை குறிக்கும் இடத்திற்கு அதிபதியான அவர், தொழில் ஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். எதிர்பார்த்தபடியே தொழிலில் லாபம் கிடைக்கும். பண நெருக்கடி அகலும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் தற்போது துரிதமாக நடைபெறும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கவில்லையே என்று கவலை அகலும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. பணிபுரிபவர்களுக்கு பாராட்டு கிடைக்கும். வாழ்க்கை துணைக்கு உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

## ரிஷபம்

மார்கழி 15ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 6ம் இடத்திற்கு அதிபதியானவர் சுக்கிரன், அவர் பாக்கியஸ்தானத்துக்கு வரும் போது எதிர்பார்ப்புகள் ஓரளவு நிறைவேறும். எதிரிகள் விலகுவர். லாபம் திருப்தி தரும். புதியவர்களின் தொடர்பால் பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொள்வீர்கள். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள முடிவெடுப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் வரலாம். மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பர். குடும்பத்தின் சுபகாரிய பேச்சுக்கள் முடிவுக்கு வரும்.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், மார்கழி 15ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். 12க்கு அதிபதியான சுக்கிரன் 8ல் சஞ்சரிக்கும் போது விபரீத ராஜயோகம் செயல்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். புதிய வாகனம் வாங்கிப் பயணிக்கும் எண்ணம் கைகூடும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாட்டிலிருந்து ஒரு சில அழைப்புகள் வரலாம். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும்.

## கடகம்

உங்கள் ராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். அவர் சப்தமஸ்தானத்திற்கு வருவது நன்மைதான். அங்குள்ள சனியோடு சுக்கிரன் சேர்வதால் குடும்பத்தில் சில காரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வரலாம். புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். இதுவரை முடிவெடுக்க முடியாத சில பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தாய் வழி ஆதரவு உண்டு ஆன்மீகப் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 3,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். அவர் மகரத்தில் உள்ள சனியோடு இணைந்து சஞ்சரிக்கும் போது உடன்பிறப்புகள் உதவி கிடைக்கும். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். கடன் சுமையின் காரணமாக மூடிக் கிடந்த தொழிலை ஏற்று நடத்த முன் வருவீர்கள். நினைத்த இலக்கை அடைய வழி பிறக்கும்.

## கன்னி

உங்கள் ராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். அவர் 5ம் இடத்தில் சஞ்சரிக்கும் போது பிள்ளைகள் வழியில் சுபச் செய்திகள் வந்து சேரும். படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கும் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். வெளிநாடு சென்று படிக்க வேண்டும் என்று விரும்பியவர்களுக்கு அதற்கான முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

## துலாம்

உங்கள் ராசிக்கு 8ம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்திற்கு வரும் சுக்கிரனால் ஒரு சில நல்ல வாய்ப்புகள் வரலாம். சுகஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிப்பதால் ஆரோக்கிய தொல்லை அகலும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு நீங்கள் செய்யும் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் கைநழுவிச் சென்றாலும் வேறு வழியில் ஆதாயம் கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். பெண் பிள்ளைகளின் கல்யாண சீர்வரிசை பொருட்களை வாங்குவீர்கள்.

## விருச்சிகம்

உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். களத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கை துணை வழியே நல்ல தகவல்கள் கிடைக்கும். குறிப்பாக அவர்கள் உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் ஏற்பாடு செய்திருந்தால் அது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். அனுகூலமான விரயங்கள் உண்டு. அரைகுறையாக நின்ற காரியங்கள் செவ்வனே முடியும். நண்பர்கள் வழியில் மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து கடமையை முடித்துக் கொடுப்பார். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகம், தொழில் ரீதியான அழைப்புகள் வரலாம்.

## விருச்சிகம்

உங்கள் ராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். 11க்கு அதிபதி 2ல் வரும் இந்த நேரம் பெரிய அளவில் பொருளாதாரம் வளர்ச்சி ஏற்படும். உங்கள் தொழில் வெற்றி நடைபோடும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். 6க்கு அதிபதியாகவும் விளங்குவதால் பெயரளவில் விரயங்கள் ஏற்படும். அதை சுப விரயங்களாக மாற்றிக் கொள்வது நல்லது. பணி புரிபவர்களுக்கு சம்பள உயர்வு, பதவி உயர்வு காரணமாக குடும்பத்தை விட்டு பிரிந்து சென்று நீண்ட தூரங்களில் பணிபுரிய வேண்டியது இருக்கும். வெளிநாட்டு முயற்சி அனுகூலம் தரும். இளைய சகோதரரோடு இணக்கம் ஏற்படும். தொழில் வணிகம் சார்ந்த முயற்சிகளுக்கு மாற்று இனத்தவர் உறுதுணையாக இருப்பார்.

## மகரம்

உங்கள் ராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். பூர்வ புண்ணிய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து மோதல்கள் அகலும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் இணக்கமாக நடந்து கொள்வர். கேட்ட சலுகைகளும் சம்பள உயர்வும் கிடைக்கும். படித்து முடித்த பிள்ளைகளின் வேலைகளுக்காக செய்த முயற்சிகள் கூடும்.

## கும்பம்

உங்கள் ராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். சுகஸ்தானம் மற்றும் பாகிஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் விரயஸ்தானத்திற்கு வரும் பொழுது குடும்பம் முன்னேற்றம் கருதி செலவிடும் சூழ்நிலை ஏற்படும். கல்யாண சீர்வரிசை பொருட்கள் வாங்குவதிலும் குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதிலும் கவனம் செலுத்துவீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள். தாய் வழி ஆதரவு உண்டு. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பிலும் கவனம் செலுத்துவீர்கள்.

## மீனம்

உங்கள் ராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மார்கழி 15 ஆம் திகதி (30/12/2022) மகர ராசியில் சஞ்சரித்துள்ளார். அவர் 11ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப்புக்களுக்கு வேலை கிடைத்து அதன் மூலம் வருமானம் வரலாம். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள். வருங்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பணி ஓய்வு பெற்ற பிறகும் கூட நீங்கள் பணிபுரியும் வாய்ப்பு உண்டு.

# சுனாமியில் மாண்ட மருதமுனை மீண்டெழுந்து சாதித்த வரலாறு

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட சுனாமி அனர்த்தின் 18 வருட நினைவு நாள் கடந்த 26ஆம் திகதியாகும். கடலிலிருந்து 120 மீற்றருக்குள் குடியிருந்து மயிரிழையில் உயிர் தப்பி அனைத்தையும் இழந்து முழுமையாகப் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளன் என்ற வகையில் மருதமுனை பிரதேச அழிவுகளையும், அதன் சரியான தகவல்களையும் தருவது இளைய தலைமுறைக்கு மிகவும் அவசியமானதாகும்.

உலகத்தில் ஒவ்வொரு வினாடியும் எங்கோ ஒரு மூலையில் அனர்த்தம் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இதில் எத்தனையோ உயிர்கள், உடமைகள், சொத்துக்கள் அழிந்து போகின்றன. இயற்கை அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமையும் பாரிய இழப்புக்களுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. அந்தவகையில் இலங்கையில் 2004.12.26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் பாரிய உயிரிழப்புகளையும், சொத்து அழிவுகளையும் ஏற்படுத்தியது.

வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவம் சுனாமி. இதை நேரடியாக அனுபவித்தவர்களும் இதில் அள்ளுண்டு போனவர்களும், அழிந்தவர்களும் பெரும் வரலாற்றைக் கொண்டவர்கள். இன்றுவரை நெஞ்சைவிட்டகலாத நினைவுச் சின்னம் சுனாமி அனர்த்தம். கணவனை இழந்த மனைவி. மனைவியை இழந்த கணவன், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர் காதலனை இழந்த காதலி,காதலியை இழந்த காதலன் என பல வகைப்படுத்தலில் எத்தனையோ உறவுகள் பிரிந்தன, அழிந்தன. கோடிக்கணக்கான சொத்துக்களையும் பலர் இழந்தனர். இவை மீளப்பெறமுடியாத அழிவுகளாகும்.

இந்த வகையில் பெரும் அழிவுக்குள்ளான மருதமுனையை அடையாளப்படுத்துவது பொருத்தமாகும்.

### மருதமுனையின் அமைவிடம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தெற்கே அம்பாறை மாவட்டம் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கல்முனை பிரதேச செயலகப்பிரிவில் கல்முனை, மட்டக்களப்பு வீதியில் 390வது மைல் கல்லிலும் கல்முனைக்கு வடக்கே 2.3 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது. மருதமுனையின் வடக்கே பெரியநீலாவணையும், தெற்கே பாண்டிருப்புக் கிராமமும், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலும்,மேற்கே வயல் நிலங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன. மருதமுனையின் மொத்த நிலப்பரப்பளவு நான்கு சதுர கிலோ மீற்றராகும். மருதமுனையின் நிலப்பிரப்பில் பெரும் பகுதிப் பிரதேசம் இந்த சுனாமி அனர்த்தத்தில் பாதிப்புக்குள்ளானதாகும்.

மருதமுனைப் பிரதேசம் என்பது மருதமுனை, பெரியநீலாவணை தமிழ்பிரிவு,பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு, அக்பர் கிராமம்,பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய மக்கள் வாழும் பிரதேசமாகும்.இங்கு(2004ஆம் ஆண்டில்)4739 குடும்பங்களைச் சேர்ந்த 17393 பேர் வாழ்ந்து வந்தனர். இவர்களில் 50.8 வீதத்தினர் ஆண்களும், 49.2வீதத்தினர் பெண்களுமாவர்.

### உயிரிழப்புக்கள்

2004.12.26ஆம் திகதி ஏற்பட்ட இந்த அனர்த்தத்தில் 922 பேர் உயிரிழந்தனர். இதில் 286 ஆண்களும், 636 பெண்களும் அடங்குவர். மொத்த உயிரிழப்பில் 68.9 வீதத்தினர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் 351பேர் காயமடைந்தனர். 48 பெண்கள் விதவைகளானார்கள், 18 சிறுவர்கள் அனாதைகளானார்கள். மருதமுனையில் வாழ்ந்து வந்த 4739 குடும்பங்களில் 2996 குடும்பங்கள் இந்த சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டன.

இந்தக் குடும்பங்களின் 11086 உறுப்பினர்கள் தங்களது வாழ்விடங்களை இழந்து அகதிகளாக பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர்.

இவர்களில் 5660 பேர் ஆண்களும், 5426 பேர் பெண்களுமாவர். இக்குடும்பங்களில் 936 குடும்பங்கள் கடல் வாயில் இருந்து 200 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்து வந்தவர்களாவர். மக்கள் தஞ்சம் புகுந்த பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டதால் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தவர்கள் அரசாங்கத்தினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் உதவியுடன் தற்காலிக கொட்டில்கள், கூடாரங்கள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.



### அழிந்த வாழிடங்கள்

மருதமுனையில் 4816 வீடுகள் இருந்தன. இந்த வீடுகளில் 2750 வீடுகள் சுனாமி அனர்த்தத்தில் சேதமடைந்தன. இவற்றில் 1359 வீடுகள் முழுமையாகவும், 1391 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தன. இவ்வீடுகளில் 403 வீடுகள் கடல்வாயில் இருந்து 101,200 மீற்றர் எல்லைக்குட்பட்டவையாகும்.இதில் 381 வீடுகள் முழுமையாகவும், 22 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தன. கடல் வாயில் இருந்து 200 மீற்றருக்கு அப்பால் உள்ள நிலப்பரப்பில் 1877 வீடுகள் சேதமடைந்தன. அவற்றுள் 508 வீடுகள் முழுமையாகவும் 1369 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தன. இதில் 2047 குடும்பங்கள் வசித்து வந்தன. இக் குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளிலும், அகதி முகாம்களிலும் வாழ்ந்து வந்தன.

### அகதி முகாம்கள்

சுனாமியின் பின்னர் மருதமுனைப் பிரதேசத்தில் 28 அகதி முகாம்கள் அமைக்கப்பட்டு 601 குடும்பங்கள் தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்டன.

இக்குடும்பங்களில் 2097 பேர் அடங்கியிருந்தனர். இவர்களில் 797 ஆண்களும், 687 பெண்களும், 613 சிறுவர்களும் இருந்தனர். இவர்களின் வாழ்விடங்களில் வீடுகளை அமைப்பதில் பெரும் சிக்கல்களும் தோன்றின. இக் குடும்பங்களில் 341 குடும்பங்கள் கடலோடு தொடர்புடைய மீன்பிடித் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டவை. இவர்கள் கடல் பிரதேசத்திலேயே வீடுகளை அமைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

### மருதமுனை பாடசாலைகள்

மருதமுனையில் அப்போது ஐந்து பாடசாலைகள் இருந்தன. அல்மனார் மத்திய கல்லூரி,ஷம்ஸ் மத்திய கல்லூரி, புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயம், அல்ஹம்றா வித்தியாலயம், அல்மினன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே அவை. இப்பாடசாலைகளில் 4541 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். இவர்களில் 2380ஆண்களும், 2161 பெண்களுமாவர்.

அன்றைய தினம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் 1554 மாணவர்களைக் கொண்டிருந்த ஷம்ஸ் மத்திய கல்லூரி முற்றாகச் சேதமடைந்தது. இங்கு இருந்த கட்டடங்களில் 14 கட்டடங்கள் முற்றாக அழிந்தன. அதேபோன்று பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயமும் முழுமையாகச் சேதமடைந்தது. இதனால் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது. பின்னர் பல சிரமங்களுக்கு மத்தியில் வேறுகட்டடங்களில் தற்காலிகமாக பாடசாலைகள் நடாத்தப்பட்டன. சுனாமியில் 200 மாணவர்கள் உயிரிழந்தனர். இதில் 66 ஆண்களும், 134 பெண்களும் அடங்குவர். மூன்று ஆசிரியர்களும் உயிரிழந்தனர்.

### வைத்தியசாலை

கடல் வாயில் இருந்து 200மீற்றருக்குள் அமைந்திருந்த சுற்றையற்கூறு வைத்தியசாலை முற்றாக அழிந்தது. இதன் சேதம் 29.72 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டது. அழிந்த வைத்தியசாலையை உயிர்ப்பிக்க முடியாத நிலையில் மக்களின் சுகாதார சேவையை கருத்தில் கொண்டு உடனடியாக மருதமுனை மக்கள் மண்டபத்தில் குறைந்த வளங்களோடு தற்காலிகமாக இயங்கவைக்கப்பட்டு மக்களுக்கான மருத்துவ சேவை நடைபெற்றது.

### நெசவுக் கைத்தொழில்

இலங்கையில் கைத்தறி உற்பத்திக்குப் பெயர் பெற்ற கிராமம் மருதமுனையாகும். இங்கு பல நூறு வருடங்களாக கைத்தறி ஆடைகளை உற்பத்தி செய்து வருகின்றனர். இக் கிராமத்தின் ஜீவனோபாயத் தொழிலாக நெசவுக்கைத் தொழிலே இருந்து வந்தது. அப்போது 1084 குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வந்தன. இதில் 366 குடும்பங்கள் நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தும் 768நெசவுக்கைதறிகளையும், அதனோடு கூடிய உபகரணங்களையும் இழந்தனர். இந்த இழப்பின் மதிப்பீடு 6.82 மில்லியன்களாகும்.

### மீன்பிடித் தொழில்

இந்தக் கிராமத்தில் 341 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தன. இவர்கள் அனைவரும் மரபு முறை சார்ந்த கரையோர மீன்பிடி முறையைப் பின்பற்றுகின்றவர்கள். இந்த மீனவர்களுக்காக அரசாங்கத்தால் 25 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த அனர்த்தத்தில் இந்த வீட்டுத்திட்டமும் இவர்கள் பயன்படுத்திய 13 பெரிய கரைவலைத் தோணிகளும், 19 சிறிய ரகத் தோணிகளும், வலைகளும் மற்றும் உபகரணங்களும் அழிந்தன. இவற்றின் பெறுமதி 11.88 மில்லியன்களாகும். இவற்றுடன் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 113 பேர் உயிரிழந்தனர். இதே போன்று விவசாயம், சிறு கைத்தொழில், வர்த்தக நிலையங்கள், உள்ளிட்ட 1515 தொழிற்றுறைகளும் அழிந்ததோடு அத்துறை சார்ந்த பலர் உயிரிழந்தனர்.

### அரச உத்தியோகத்தர்கள்

அரச உத்தியோகத்தர்களில் ஏழு பேர் உயிரிழந்தனர். 387 பேர் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துமுகாம்களில் வாழ்ந்தனர். இவர்களில் பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 39 அரச தொழிற்றுறையினர் பாதிக்கப்பட்டனர்.

### அழிந்த வாகனங்கள்

மக்களின் பாவனையில் இருந்த 1938 துவிச்சக்கரவண்டிகள், 78 மோட்டார் சைக்கிள்கள், 8 இருசக்கர உழவு இயந்திரம், ஒரு உழவு இயந்திரம், 17 முச்சக்கர வண்டிகள், 08 கார்கள், 05 வேன்கள், 04 லொறிகள் உள்ளிட்ட 123 வாகனங்கள் சேதமடைந்தன. இவற்றின் இழப்பீட்டுப் பெறுமதி 25.77மில்லியன்களாகும்.

### மருதமுனைக்கு ஏற்பட்ட சேதம்;

மொத்தமாக 2165.14 மில்லியன் இழப்பு ஏற்பட்டது.

இதில் அழிந்த வீடுகள், உடமைகள்,வாகனங்கள், பொது இடங்கள், தொழில் முயற்சிகள், விவசாயம்,வளர்ப்பு விலங்குகள் என்பன அடங்குகின்றன. இவ்வாறு பெரும்பாதிப்புக்குள்ளான மருதமுனையை கட்டியெழுப்புவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

### மீள்எழுச்சியின் பிதா ஏ.எச்.எம்.அன்சார்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு காணிகளைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. மருதமுனை பிரதேசத்தில் காணிகள் இல்லை. இதனால் மருதமுனையின் மேற்குப் புறத்தில் இருந்த வயல் நிலங்களையே நாட வேண்டியிருந்தது. அப்போது பிரதேச செயலாளராக இருந்த மருதமுனையைச் சேர்ந்த ஏ.எச்.எம்.அன்சாரின்(தற்பொது கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்) அயராத முயற்சியினால் மருதமுனையின் மீள்எழுச்சி முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் அவரது பதிவிக்காலத்தில் மருதமுனை மேட்டு வட்டை விவசாய நிலம் 33 ஏக்கர் சுவீகரிக்கப்பட்டது. அந்தக்காணியில் 65 மீற்றர் வீட்டுத்திட்டம் என்ற பெயரில் அரச நிதியில் 186 வீடுகள் நிருமாணிக்கத் திட்டமிட்டு 168 வீடுகள் நிருமாணிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டு மக்களின் நிதி உதவியுடன் பிரஞ்சிட்டி என்ற பெயரில் 179 வீடுகளைக் கொண்ட வீட்டுத் திட்டம், அரச சார்பற்ற நிறுவன நிதியில் 50 வீடுகளைக் கொண்ட மஸ்ஜிதுல் இஸ்லாம் நகர் (நளீர் புரம்)வீட்டுத்திட்டம்.98 வீடுகளைக் கொண்ட இஸ்லாமிக் றிலீப் மாடி வீட்டுத்திட்டம் என்பனவற்றையும் அதேபோன்று எஹட் நிறுவனத்தினால் 500க்கு மேற்பட்ட வீடுகளில், மேலும் உதிரிகளாக அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் வீடுகள் நிர்மாணிப்பதற்கும் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் தனது காத்திரமான பங்களிப்பைச் செய்திருந்தார். அதுமாத்திரமன்றி ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை வைத்தியசாலை மற்றும் ஏனைய கட்டங்கள் அமைப்பதற்கும் ஏ.எச்.எம்.அன்சாரின் பங்களிப்பு அதிகம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று தனிநபர்களின் சுயதொழில் ஊக்குவிப்புக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளைப் பொற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

### வழங்கப்படாத வீடுகள்

சுனாமி அனர்த்தம் இடம் பெற்று 15 வருடங்கள் பூர்த்தியடைந்த நிலையில் 65 மீற்றர் வீட்டுத்திட்டத்தில் பாதிக்கப்பட்டு இனங்காணப்பட்ட 109 பேருக்கு வீடுகள் வழங்கப்பட்டன. எஞ்சிய 69 வீடுகள் வீடற்ற வறிய குடும்பங்களுக்கு வழங்கவென மாவட்டச் செயலாளரால் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை அந்த வீடுகள் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. சுனாமியில் மாண்டவர்கள் போக மீண்டவர்கள் தன்னம்பிக்கையால் இன்று தலைநிமிர்ந்து நிற்பது பெரும் வரலாறாகும். மீண்டும் சுனாமி வராமல் இருக்க இறைவனைப் பிரார்த்திப்போம்.

கலாபூஷணம்
பி.எம்.எம்.ஏ.காதர்...

# புத்தாண்டு ராசி பலன்கள் 2023



தமிழ் நாட்டின்
பிரபல ஜோதிட நிபுணர்
ஸ்ரீமதி பாரதி ஸ்ரீதர்

**தமிழகத்தின் ஸ்ரீ சங்கரா தொலைக்காட்சியில் தினமும் காலை 6.45க்கு சுபதினம் ராசி பலன்கள் மற்றும் மெகா TVயில் தினமும் பகல் 12.45க்கு பெண்கள்.com சுபகிரகம் என்பனவற்றையும் பல்வேறு You tube Channelsகளில் ஜோதிட பலன்களை வழங்குபவரும், சக்தி விகடனில் ஆன்மிகத் தொடரை எழுதுபவருமான தமிழகத்தின் பிரபல ஜோதிட நிபுணர்**

**ஸ்ரீமதி பாரதி ஸ்ரீதர்**

**புதுவருட ராசி பலன்களை வழங்குகின்றார்.**

புத்தாண்டின் கிரக நிலைகளைப் பார்க்கும் போது உலாவரும் நவகிரகங்களும் சார பலத்தின் அடிப்படையில் உலகத்திலிருக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் நல்ல பலன்கள் கிடைக்கும் வழியில் அமைந்திருக்கிறது. புத்தாண்டு உபய நில லக்னமான கன்னியா லக்னத்தில் பிறக்கிறது. லக்னாதிபதி புதன் சுக ஸ்தானத்தில் குரு வீட்டில் சஞ்சாரம் பெற்றிருக்கிறார். மேஷ ராசி அஸ்வினி நட்சத்திரத்தில் ஆண்டு பிறக்கிறது. ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் ராசியைப் பார்ப்பதும் ஐந்தாம் இடத்தில் சுக்கிரன் சனி கிரக கூட்டணி அமைந்து இருப்பதும் மிக நல்ல யோக அமைப்பாகும்.

## மேஷம்

*(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)* கிரகநிலை ராசியில் ராகு தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் கேது பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன், சனி விரய ஸ்தானத்தில் குரு என கிரகநிலை இருக்கிறது.செவ்வாயை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு வீடு மனை வாங்கும் யோகம் உண்டாகும். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி உங்கள் திறமையை வெளிக்கொண்டு வருவீர்கள். உங்களின் திறமையை அனைவரும் பாராட்டுவார்கள். நீங்கள் செய்யும் வேலையில் புதிய நுட்பங்களை பயன்படுத்தி அதன்மூலம் பாராட்டுகளை பெறுவீர்கள்.

உடல்நலனில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். முடிவுகள் தெளிவாக இருக்கும். செய்யும் செயலில் வேகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சந்தான பாக்கியம் இந்த வருடம் கண்டிப்பாக கிடைக்கும்.

உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் சாதகமான போக்கு காணப்படும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. உடன் பணி புரிபவர்கள் உங்களுக்கு அதிக ஒத்துழைப்பு கொடுப்பார்கள். மேலதிகாரிகளும் உங்களுக்கு சாதகமாகவே நடந்து கொள்வார்கள்.

தொழிலில் மேன்மை உண்டாகும். தனலாபம் உயரவும் வாய்ப்புண்டு. வியாபாரிகள் கணிசமான லாபம் பெற இயலும். மகசூல், கொடுக்கல் வாங்கல் போன்றவற்றில் குறை உண்டாகாது. அதிகச் செலவுக்கு இடமுண்டு. ஆனால் அதனை சாமர்த்தியமாக சமாளிக்க வழி உண்டாகும்.

## ரிஷபம்

*(கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருக சிரீஷம் 1, 2 பாதங்கள்)* கிரகநிலை ராசியில் செவ்வாய் (வ) ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன், சனி லாப ஸ்தானத்தில் குரு விரய ஸ்தானத்தில் என கிரக நிலை இருக்கிறது.

சுக்கிரனை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு புதிய முயற்சிகள் எதிர்பார்த்தபடி நடக்கும். கவலை வேண்டாம். கற்றறிந்த மேலோர் கவுரவிக்கப்படுவர். தாயாரின் நலத்தில் கவனம் செலுத்த வேண்டிய நிலை உண்டாகும். பொதுவாக எவ்வளவு தான் சங்கடங்கள் ஏற்படுமானாலும் உங்கள் அந்தஸ்துக்கும் குந்தகம் ஏற்படாது. எந்தச்சங்கடங்களையும் சமாளிக்கும் ஆற்றலுக்கும் பஞ்சமிராது. பணக்கஷ்டம் உருவாக இடமில்லை. ஆனால், சிலர் விஷயத்தில் மனக்கஷ்டம் உருவாக இடமுண்டு. எனவே கவனமுடன் பேசுவது அவசியம்.

திடீர் பொருள் வரவுக்கு வாய்ப்புண்டு. தெய்வபலம் சிறப்பாக இருப்பதால் எல்லாமே சீராக அமைய வாய்ப்புண்டு.

பிள்ளைகள் நலனில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உத்தியோகஸ்தர்களுக்கு பணி நிரந்தரம் கிடைக்கவும் இடமுண்டு. வேலை இல்லாதோருக்கு அதற்கான வேளை கனிந்து வரும். திடீர் பொருள் வரவுக்கும் வாய்ப்புண்டு. அதே போல் திடீர் செலவுக்கும் இடமுண்டு.

வியாபாரிகளுக்கு அலைச்சல் தவிர்க்க முடியாமல் போகலாம். நல்ல லாபம் பெறுவதற்கு அரும்பாடுபட வேண்டியிருக்கும். இதனால் அதிருப்தி ஏற்படலாம். கவலை வேண்டாம். உங்களின் விடா முயற்சியால் நீங்கள் உங்கள் வெற்றியை அடைவீர்கள். புதிய வாடிக்கையாளர்களும் கிடைப்பார்கள். இதனால் உங்கள் தொழில் விரிவடையும்.

## மிதுனம்

*(மிருக சிரீஷம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்)* கிரகநிலை பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் கேது சப்தம ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் சுக்கிரன், சனி தொழில் ஸ்தானத்தில் குரு லாப ஸ்தானத்தில் ராகு விரைய ஸ்தானத்தில் செவ்வாய் (வ) என கிரகநிலை இருக்கிறது. புதனை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு நன்மையும் தீமையும் கலந்தவாறு நடக்கவே வாய்ப்புண்டு. குறிப்பாக நன்மைகளில் திடீர் பொருள் வரவுக்கு இடமுண்டு. தீமைகளில் நண்பர் ஒருவர் விரோதி ஆகலாம். பொதுவாக சுபிட்சம் உண்டு. தொழில் சிறப்படையும், நிலபுலன்கள் விஷயத்தில் ஆதாயம் காணலாம். தெய்வ பலம் நல்லவிதமாக அமைந்துள்ள இந்த நேரத்தில் தெய்வப்பணி, தருமப்பணி போன்ற சத்காரியங்களில் ஈடுபட்டு மனம் மகிழ வாய்ப்புண்டு. குடும்பத்தில் சந்தோஷமான சூழல் இருக்கும். உறவினர்கள் வருகையும் இருக்கும். சுப காரியங்கள் நன்றாக நடக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு. பிள்ளைகள் உங்கள் சொல்படி நடந்து கொள்வார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டாகலாம். மேலதிகாரிகளின் உள்ளம் குளிர நடந்து கொண்டால் தீமை குறையும். உழைப்பாளிகளுக்கு உரிய கவுரவம் கிட்டும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் வரும். விவசாயிகளுக்கு உற்சாக நிலை உண்டு. உபத்திரவம் ஏதும் உண்டாகாது. தொழிலில் மேன்மை உண்டாகும். தொழிலாளர்களுக்கும் ஆதாயமான சூழ்நிலை உருவாகும். விவசாயிகளுக்கு மகசூல் மகிழ்ச்சி தரும்.

அரசியல்வாதிகள் அவசரப்படாமல் நடந்து கொள்வது நல்லது. வேண்டிய நண்பர் ஒருவர் மனஸ்தாபத்துக்கு உள்ளாக நேரலாம். பெருந்தன்மையோடு நடந்து கொண்டு அந்தப்பிரச்சினையைச் சமாளிக்க வேண்டியது அவசியம்.

## கடகம்

*(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)* கிரகநிலை சுக ஸ்தானத்தில் கேது ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) சப்தம ஸ்தானத்தில் சுக்கிரன், சனி பாக்கிய ஸ்தானத்தில் குரு தொழில் கர்ம ஜீவன ஸ்தானத்தில் ராகு லாப ஸ்தானத்தில் செவ்வாய் (வ) என கிரகநிலை இருக்கிறது.சந்திரனை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு குடும்ப சுபிட்சம், மக்கள் நலம், தாம்பத்திய உறவு எல்லாமே நலமாக இருக்கும்.

உங்களுடைய அந்தஸ்தும் சிறப்பாக இருக்கத் தடை இருக்காது. உங்கள் முயற்சிகளை எப்போதும் நேர்வழியில் செலுத்துங்கள். குறுக்கு வழியில் பிரவேசிக்காதீர்கள். குடும்ப நலம் சீராக இருக்கும்.

மனக்கிலேசம், உடல் நலம் பாதிப்பு, பண விரயம் போன்ற சங்கடங்கள் ஏற்படவும் ஓர் அமைப்பு முனைந்து நிற்பதால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. தெய்வப்பணி, தருமப்பணி போன்ற நற்காரியங்கள் நலம் தரும்.

உத்தியோகஸ்தர்களுக்கு ஏதேனும் ஒரு குறை உண்டாகலாம். எனினும் அன்றாட பணிகள் சரிவர நடக்கும். அளவான வருமானம் வர தடை இருக்காது. முன்விரோதம் காரணமாக சிக்கல் ஏற்படலாம். அதையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். வியாபாரிகளுக்கு சிறிதளவு பாதிப்பு ஏற்படலாம். விவசாயிகளுக்கு வீண் பிரச்சினை ஒன்று உருவாகலாம். காவல், ராணுவம் போன்ற துறைகளில் உள்ளோர் மிக்க பொறுப்புடன் பணியாற்றி நற்பெயரைக் காத்துக் கொள்வது அவசியம்.

அரசியல்வாதிகள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரத் தூண்டப்படுவார்கள்.

## சிம்மம்

*(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)* கிரகநிலை தைரிய வீர்ய ஸ்தானத்தில் கேது பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன், சனி அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் குரு பாக்கிய ஸ்தானத்தில் ராகு தொழில் கர்ம ஜீவன ஸ்தானத்தில் செவ்வாய் (வ) என கிரகநிலை இருக்கிறது. சூரியனை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு புதுமுயற்சிகளில் ஈடுபடும் வாய்ப்பு கிடைக்கும்.

வழக்குகளில் வெற்றி முகம் காண்பதற்குரிய சூழ்நிலையும் கனிந்து வரும். பொருளாதார சுபிட்சம் உண்டு. திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். தாம்பத்திய சுகம் நல்ல விதமாக அமையும். எதிர்பாராத பொருள் வரவுக்கும் இடமுண்டு. உங்களுடைய அன்றாடப் பணிகள் சிறப்பாக நடைபெறும். புதிய முயற்சிகளை தேவையறிந்து செய்யவும். உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். தந்தை நலனில் கவனம் செலுத்த வேண்டியும் வரலாம். பயணத் தைத் தவிர்ப்பது நல்லது.

உத்தியோகஸ்தர்களுக்குப் பிரச்சினை உருவாக வாய்ப்பில்லை. ஆனால் எதிர்பார்த்த முன்னேற்றம் சிறிது தாமதத்திற்குப் பிறகு கிடைக்கும். பெரிய நிறுவன நிர்வாகிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நல்லிணக்கம் உண்டாகி ஸ்தாபன வளர்ச்சி இருக்கும்.

## கன்னி

*(உத்திரம் 2, 3, 4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதங்கள்)* கிரகநிலை தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது சுக ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சுக்கிரன், சனி சப்தம ஸ்தானத்தில் குரு அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் ராகு பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் (வ) என கிரகநிலை இருக்கிறது.

புதனை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு பலவிதமான சங்கடங்கள் வந்தாலும் மனோதிடத்துடன் அணுகி வெற்றி காண்பீர்கள். மனச்சங்கடங்களைச் சமாளித்து விடுவீர்கள்.

என்றாலும், பெரியோர்களின் நல்லாசியை விரும்பிப் பெறுங்கள். குடும்ப நலம், தாம்பத்திய வாழ்க்கை சீராக இருக்கும். உங்களுக்கு ஏற்படும் பல கஷ்டங்கள் பலமிழந்து போக வாய்ப்புண்டு. எனினும் சான்றோரை சந்தித்து வாருங்கள். உடல் நலனைப் பார்த்துக் கொள்ளுங்கள். கணவன் மனைவி உறவு கெட இடமில்லை. துன்பங்களைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய உத்தரவு கிடைக்க வாய்ப்புண்டு. உத்தரவைப் பெற பொறுமை காப்பது அவசியம். பொருளாதாரச் சங்கடம் உருவாகாது.

அன்றாடப் பணிகளில் குந்தகம் விளையாது. வியாபாரிகளுக்கு நல்ல லாபம் வருவதற்கான அமைப்பு உண்டு. நல்லோர் நேசமும், சாதுக்களின் தரிசனமும் கிடைக்கும். விவசாயிகளுக்கு மகிழ்ச்சி உண்டு. நில புலன்களில் எந்த விதமான வில்லங்கமும் உருவாக இடமில்லை. மெத்தப் படித்த மேலோர் சமூகத்தில் உரிய மரியாதையுடன் நடத்தப்படுவதோடு, கணிசமான பொருளும் பெறும்.

## துலாம்

*(சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள்)* கிரகநிலை ராசியில் கேது தைரிய வீர்ய ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) சுக ஸ்தானத்தில் சுக்கிரன், சனி ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு சப்தம ஸ்தானத்தில் ராகு அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் செவ்வாய் (வ) என கிரகநிலை இருக்கிறது.சுக்கிரனை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு குடும்ப நலம் சீராக இருக்கும். சங்கடங்களைச் சமாளிக்கக்கூடிய துணிவு பிறக்கும். பொருளாதார நிலையில் கெடுதல் ஏற்படாமலும் காப்பாற்றப்படுவீர்கள்.

இந்த நற்பலன்கள் ஏற்படுவது உறுதி. இதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அலைச்சலும் தவிர்க்க முடியாமல் போகும். உடல்நலம் பாதிக்கப்பட இடமுண்டு, கவனம் தேவை. உறவினர்கள் மூலம் ஏதேனும் தொல்லை உண்டாகலாம். அதையும் சமாளித்து விடுவீர்கள், கவலை வேண்டாம். பணச்சங்கடம் வராமல் இருக்க வாய்ப்புண்டு. பெரியோர்களின் நல்லாசியை விரும்பிப் பெறுங்கள். தெய்வப்பணி, தருமப்பணிகளில் ஈடுபட்டு வந்தால் கவலை குறையும்.

உத்தியோகத்தில் தெம்பும், தைரியமும் அதிகம் ஏற்படும். இயந்திரப் பணியில் ஈடுபட்டுள்ளோர் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. காவல், ராணுவம் போன்ற துறைகளில் உள்ளோருக்குக் குறை உண்டாகாது. நன்மையும், தீமையும் கலந்தவாறு நடக்கும். வியாபாரிகளுக்கு அளவான லாபம் உண்டு. அலைச்சல் தவிர்க்க முடியாமல் போகலாம்.

## விருச்சிகம்

*(விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)* கிரகநிலை தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) தைரிய வீர்ய ஸ்தானத்தில் சுக்கிரன், சனி பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு ரண ருண ரோக ஸ்தானத்தில் ராகு சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் (வ) விரைய ஸ்தானத்தில் கேது என கிரகநிலை இருக்கிறது.செவ்வாயை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு பல நன்மைகள் விளையக்கூடிய நேரம் இது. தகுதி வாய்ந்தவர்கள் பாராட்டப்படுவார்கள். உங்களுடைய ஆதாயமான நிலைக்கு அடிகோலும் விதமாக சில காரியங்கள் நடக்கும். புதிய சகவாசத்தை புறக்கணியுங்கள், செல்வாக்கு அதிகமாகும். செல்வம் சேரும். பழைய பாக்கி வசூலாகும். குடும்பத்தில் திருமணம், மகப்பேறு போன்ற பாக்கியங்கள் ஏற்படலாம். பதவி உயர்வு கிட்டும். உடல் நலனை கவனிக்கவும். குடும்பநலம், தாம்பத்திய சுகம் எல்லாம் சீராக அமையும். வெளிப்படையாகவும் உண்மையாகவும் நடந்து கொண்டால் நலம் பெருகும். தப்பித் தவறியும் தவறான செய்கைக்கு இடம் கொடுத்தால் இழிநிலை உண்டாகும். கடன் தொல்லை இருக்குமாதலால் சமாதானமுறையில் பேசி சமாளிக்க வேண்டியது அவசியம்.

உத்தியோகஸ்தர்களுக்கு முன்விரோதம் காரணமாக ஒரு சச்சரவு உண்டாகலாம். அதை பொறுமையுடன் சமாளித்தால் வெற்றி நிச்சயம். விரும்பிய பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். கவலை வேண்டாம். முதலாளி தொழிலாளி உறவு அன்புடன் விளங்கும். வியாபாரிகள் இரட்டிப்பு லாபம் காணவும் வாய்ப்புண்டு. வில்லங்கம் ஏதும் உருவாகாது.

## தனுசு

*(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்)* கிரகநிலை ராசியில் சூரியன், புதன்(வ) தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன், சனி சுக ஸ்தானத்தில் குரு பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் ராகு ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் (வ) லாப ஸ்தானத்தில் கேது என கிரகநிலை இருக்கிறது.குருவை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு பொருளாதார நிலையில் எந்த சிக்கலும் வராது.

அன்றாடப் பணிகள் நிறைவேறும். ஆனால், அதற்காக அதிகப்படியாக உழைக்க வேண்டியிருக்கும். பெரியோர்களது நல்லாசியைப் பெற்று வாருங்கள். தருமப்பணிகளில் ஈடுபட்டு வாருங்கள். உங்களுடைய வாழ்வில் உன்னத நிலை அடையக் கூடிய சந்தர்ப்பங்கள் கனிந்து வரும். உங்கள் சொல்லுக்கு மதிப்பு உண்டாகும். பணம் சேரும். பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டி வரலாம். அதனால் பயன் உண்டாகவும் வாய்ப்புண்டு. குடும்ப சுபிட்சம் சீராக இருக்கும். செல்வ நிலை, குடும்ப சுபிட்சம், தாம்பத்திய மகிழ்ச்சி எல்லாம் சீராக இருக்கும். கணவன் மனைவியரிடையே கருத்து வேற்றுமை எழ இடம் தராதீர்கள். பிள்ளைகளை சற்று கவனமுடன் கண்காணிப்பது அவசியம்.

உத்தியோகஸ்தர்களை மேலதிகாரிகள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விஷயம் குறித்துக் கண்டிக்க நேரலாம். நண்பர்களில் நல்லவர்களை இனம் கண்டு பழகினால் தொல்லை இல்லை. காவல், ராணுவம் போன்ற துறைகளில் உள்ளோர் மிகுந்த எச்சரிக்கையுடன் கடமையாற்ற வேண்டியிருக்கும். வியாபாரிகளுக்கு அளவான லாபம் தடைபடாது. விவசாயிகளுக்குப் பிரச்சினை ஏதும் உருவாகாது. உபத்திரவம் அவ்வளவாக இருக்காது.

## மகரம்

*(உத்திராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 பாதங்கள்)* கிரகநிலை ராசியில் சுக்கிரன், சனி தைரிய வீர்ய ஸ்தானத்தில் குரு சுக ஸ்தானத்தில் ராகு பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் செவ்வாய் (வ) தொழில் கர்ம ஜீவன ஸ்தானத்தில் கேது விரைய ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) என கிரகநிலை இருக்கிறது.சனியை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு உங்களுடைய கவுரவத்திற்கு ஊறு நேராது. அன்றாடப் பணிகளில் தொய்வு உண்டாகாது. கடுமையாக உழைக்க வேண்டி வரும். அதனால் பயனும் உண்டாகும். நண்பர்களிடமோ, தொழில் சம்பந்தப்பட்ட வகையிலோ, வியாபார ரீதியாகவோ யாரிடமும் தகராறு வரும்படி நடந்து கொள்ளாதீர்கள். உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். பொருளாதார நிலை பாதிக்கப்படாது. கணவன் மனைவி உறவு களிப்புடன் விளங்கும். உறவினர்களால் ஏற்படும் தொல்லைகளில் ஒரு கட்டுப்பாடு இருக்க இடமுண்டு. பொதுவாக நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. குறிப்பாக புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டிய இடத்தில் அப்படி நடந்து கொள்ள முடியாதபடி நிலைமை உருவாகலாம், எச்சரிக்கை.

உத்தியோகத்தில் மேன்மையுண்டாகும். பணக் கஷ்டம் இருக்காது. முதலாளி தொழிலாளி உறவு பாதிக்கப்படாமல் காப்பதில் இரு சாராருக்குமே பொறுப்புள்ள – நேரம் இது. உத்தியோக மேன்மையுண்டு. பதவி உயர்வு கிடைக்கும். தேவையான இடமாற்றம் கிடைக்கவும் வாய்ப்புண்டு.

தொழிலில் அபிவிருத்திகள் படிப்படியாக ஏற்படும்.

## கும்பம்

*(அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்)* கிரகநிலை தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு தைரிய வீர்ய ஸ்தானத்தில் ராகு சுக ஸ்தானத்தில் செவ்வாய் (வ) பாக்கிய ஸ்தானத்தில் கேது லாப ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) விரைய ஸ்தானத்தில் சுக்கிரன், சனி என கிரக நிலை இருக்கிறது.

சனியை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு பொதுவாக தீமைகள் இருக்குமானாலும் பாதிப்பு பெரிதாக இருக்காது. சில நன்மைகள் சிறப்பாக உண்டாக வாய்ப்புண்டு. பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. உடல் நலம் பாதிக்கப்படலாம். குடும்ப நலம் பாதிக்காமல் இருக்க வாய்ப்புகள் அதிகம். நன்மைகளும் உண்டு; தீமைகளும் உண்டு. ஆனால் நன்மைகள் சற்றுத் தூக்கலாகவே நடக்க வாய்ப்புண்டு.

பொருளாதார நிலையில் சரிவு ஏற்படாது. உடல் நலனை கவனித்துக் கொள்ளுங்கள். குடும்ப நலம் சீராக இருக்கும். உங்களுடைய கவுரவம் பாதிக்கப்படாமல் இருக்க இடமுண்டு. நல்லோர் ஆசியை விரும்பிப் பெறுங்கள். அன்றாடப் பணிகளுக்கு இடையூறு இருக்காது. ஏற்படும் கஷ்டங்கள் சற்று மட்டுப்பட வாய்ப்புண்டு. பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். உங்களுடைய சவுகரியமான வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும்.

உத்தியோகத்தில் கெடுபிடி இருக்கலாம். மேலதிகாரிகளின் குறிப்பறிந்து நடந்து கொண்டால் தொல்லை இல்லை. காவல், ராணுவம் போன்ற துறைகளில் உள்ளோர் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். அவசியமிருந்தாலன்றி பயணத்தை மேற்கொள்ள வேண்டாம். நன்மைகள் மிகுதியாக நடக்க வாய்ப்புண்டு. அவ்வப்போது சில தொல்லைகள் தவிர்க்க முடியாமற் போகும். வியாபாரிகளுக்கு அளவான லாபம் வரும்.

## மீனம்

*(பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)* கிரகநிலை ராசியில் குரு தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகு தைரிய வீர்ய ஸ்தானத்தில் செவ்வாய் (வ) அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் கேது தொழில் ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ) லாப ஸ்தானத்தில் சுக்கிரன், சனி என கிரகநிலை இருக்கிறது.குருவை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு காதல் விவகாரங்களில் தீவிரம் ஏற்படுமானாலும் அதனைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. குடும்ப நலம் பாதிக்கப்படாது. சில நன்மைகள் உண்டாகும். பொதுவாக அந்தஸ்துக்கு ஊறு நேராது. முயற்சிகளில் வெற்றி வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடந்து கொள்வார்கள்.

படிப்பில் அதிக ஈடுபாடு காட்டுவது உங்கள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். அன்றாடப் பணிகள் சரிவர நடக்கத் தடையில்லை. பொருளாதார நிலையில் சரிவும் உண்டு; சமாளிக்கக்கூடிய நிலையும் உண்டு. பல அரிய காரியங்களைச் செய்து பயனடையக்கூடிய வாய்ப்பும் உண்டு.

உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரை இருந்து வந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். இதனால் வேலைச் சூழல் நிம்மதியானதாக அமையும். சம்பள உயர்வு அல்லது பதவி உயர்வு உங்களின் மனதிற்கு மகிழ்ச்சி தரக்கூடிய வகையில் இருக்கும். சக தொழிளாலர்களின் ஆதரவு உங்களை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லும்.

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777 438169 கண்டி தலதா மாளிகைக்கு 20 மீற்றர் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணி கள் நிதமும் நடமாடும் வி யாபாரஸ்தலம், 180 சதுர அடி கடை அறை நீண்டகால குத்தகை உடன்படுக்கைக்கு அல்லது விற்பனைக்கு 8 10 மில்லியனுக்கு இடையிலான தொகைக்கு 0777 282147. 079956

## வேலைவாய்ப்பு

### 313 வெற்றிடங்கள் அச்சடித்தல்

புறக்கோட்டையில் அச்சடிக்கும் தாள் விற்பனைக்கு தேர்ச்சியுள்ள/ தேர்ச்சியற்ற ஊழியர் தேவை . தாள் கையாளுதல், கணக்கிடலில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத் தக்கது. தங்குமிட வசதி இல்லை. 0777 313478. 080434

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கிருளப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் Complex இல் உள்ள ஒரு சிறிய குடும்பம் வசிக்கும் வீடொன்றில் தங்கி வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் ஊழியர் ஒருவர்' தேவை. மேலதிக தொடர்புகளுக்கு. 0777 313478. 080430

புதிய வீட்டில் வீட்டு வேலைக்கு நேர்மையான மற்றும் சுறுசுறுப்பான 25 50 வயதிற்கிடைப்பட்ட பெண் தேவை. கூடுதல் சம்பளம் உணவு பானங்கள் மற்றும் முழுமையான தங்குமிட வசதிகள். 011 2144002, 077 1132903 கொட்டாவ. 080549




### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

ஓடுகள் காட்சியறை மற்றும் களஞ்சிய சாலைக்கு கொழும்பில் வசிக்கும் தொழிலாளர் தேவை. மேலதிக விபரங்களுக்காக. 011 5863076, 0716 390068, 077 9614195 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 080462

## பொது

### 429 புத்தகங்கள், சஞ்சிகைகள்

உங்களது மூன்றாம் கண்ணை திறவுங்கள் உங்களுக்குள் இருக்கும் புதையலை தேடிக் கொள்ளுங்கள் சாலிய சமரவிக்கிரமவின் புதிய தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட 2 புத்தகங்கள் தபால் கட்டணத்துடன் ரூ. 350. 0777 797614. 080398

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

கடவத்த நகரத்திற்கு அண்மையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான தங்குமிட வசதியுண்டு மாதம் 7000/ 10.000 இற்கு இடைப்பட்டது. 076 2303375. 080572

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

பிட்டகோட்டே ஆனந்த பாலிகா மாவத்தையில் வெற்றுக் காணி 18.1 பேர்ச் தூய உறுதி, வசதிகளுடனான சூழல். தொடர்பு 0778800243. 079406

முகத்துவாரம், கொழும்பு 15, வீடு விற்பனைக்கு. whats App No. +64272993 376. 080311

ஹோமாகம வெலிபில்லேவ 292 பஸ் பாதைக்கு 500m தூர த்தி ல் 16.5 பேர்ச் விற்பனைக்கு. 20 அடி பிரவேச பாதை. 070 2733246, 070 2733256. 080458

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கடவத்த நகரில் அதிவேக வீதிக்கு மிக அருகில் 15 பேர்ச் சிறந்த காணி விற்பனைக்கு. 078 7100224. 079840

### 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

வரக்காபொல ஐந்து ஏக்கர் தோட்டத்தில் 2 1/2 ஏக்கர் இறப்பர் வருமானத்தை பெற்றுக் கொண்டு தோட்டத்தை பார்த்துக் கொள்வதற்கு விரும்பும் தம்பதி தேவை. தொடர்புகள் 0715872281. 079811

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளை நெதிமால 2 அறைகளுடனான மேல்மாடியில் முழுமையான வீடு 2 குளியலறைகள். 077 0163152, 072 2995984. 080034

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

## மணமகள்

கௌரவமான கண்டி முஸ்லிம் பெற்றோர் தமது 31 வயது 5'6" மெலிந்த வெந்நிறமான சட்டத்துறை பட்டதாரியான ஒரே மகளுக்கு பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள சோனக துணைவரைத் தேடுகின்றனர். சட்டத்தரணி, அரசாங்க ஊழியர், அரச/ தனியார் துறை யில் ஓர் பட்டதாரி வரவேற்கப்படுகின்றனர். மின்னஞ்சல் mailmfmmhd @yahoo.com தொலைபேசி: 07 78 67 23 50, 0 8 1 2410285 B192169



தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

Sri Lanka's No1 Supplier of Pipeline Materials
Rs. 1,600/= upwards




ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
# 301 OLD MOOR STREET, COLOMBO 12 011-739 7777 alliedint@eureka.lk www.allied.lk

KALAM MANPOWER
RECRUTING FOR OUR COLOMBO OFFICE AT MARADANA, COL-10
LOCAL STAFF
• SECRETARY
• OFFICE ASSISTANT
• OFFICE GIRL
SALARY NEGOTIABLE
ENGLISH LANGUAGE & COMPUTERS A MUST
Wish you happy new year 2023
0788 419 167, 0788 745 138
SEND YOUR CV & RELEVANT DOCTS TO
http://kalammanpower.yolasite.com kalammanpower2892@gmail.com, abukalam2892@gmail.com
NO-79-1/- (05), DEANS ROAD, SUPER MARKET, 2ND FLOOR COLOMBO-10, SRI LANKA.

1 YEAR
20W SOLAR INDOOR BULB WITH TORCH
Rs. 13,500
0777 806 542
SOLARX

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
rpwe;j ngWNgWfSf;fhf - tpsk;guk; nra;jpLtPh;
முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

MONTESSORI DESKS, CHAIRS
Rs. 10,000/- New Price Rs. 8,800/-
Next to Pizza Hut At PILIYANDALA
Tel : 0775 972 868 / 0112 613 578
www.montessorifurnitures.com | Email : simplex@slt.lk

Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

தெஹிவளை
2 அலகுகளைக் கொண்ட வீடு விற்பனைக்கு
தொடர்பு:
0772 984 677, 0703 345 399

Sunday Observer adz தினகரன் வாரமஞ்சரி
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| රු. 500/- (Except Thinakaran Varamanjari) | රු. 700/- (Except Thinakaran Varamanjari) | රු. 850/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# படித்ததும் பகர்வதும் 125



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

மற்றுமொரு புத்தாண்டு இன்று பிறந்துள்ளது. ஒரு வருடம் கழிவதும் புது வருடம் பிறப்பதும் வருடாந்தம் நடைபெறுகின்ற நிகழ்வாக இருந்தாலும், புது வருடத்தை கொண்டாடுவதில் சாதி, சமய, மொழி, நாடு வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் ஒருமித்து செயல்படுவதைக் காணலாம். ஒரு சிலர் இதற்கு விதிவிலக்காகவும் இருக்கின்றனர் என்பதும் நிதர்சனம்.




புது வருடம் பிறக்கும் போது, முடிந்த வருடத்தில் நடைபெற்ற சம்பவங்கள், விடயங்கள், வெற்றி தோல்விகள், சாதக பாதகங்கள் அனைத்தும், அனைவருக்கும் படிப்பினைகளாக அமைய வேண்டியது அவசியம். ஒவ்வொரு புதுவருட பிறப்பின் போதும் இவை பற்றி பரவலாக, அதிகமாக பேசப்பட்டாலும் நடைமுறையில் அவற்றில் எத்தனை வீதம் சீர்திருத்தி சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன என்பது கேள்விக் குறிதான்.

நமது நாட்டில் கடந்த சில வருடங்கள் சோதனைகள் மிக்கவையாகவே இருந்தன என்பதை எவராலும் மறுக்க முடியாது. கொரோனாவின் தாக்கம் முதல் அரசியல், பொருளாதார பிரச்சினைகள் வரை எண்ணற்ற சோதனைகளை நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், பிரச்சினைகள், சோதனைகள், வேதனைகள் எனப் பலவற்றை அனுபவித்து, தமது எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகி, எதிர்காலம் பற்றிய நம்பிக்கை அற்றவர்களாக காணப்படுகின்றனர்.

இத்தகைய விடயங்கள் எந்த அளவில் ஏற்பட்டாலும், அவற்றினால் சோர்ந்து போய் விடாது, மனம் தளர்ந்து விடாது அவற்றை தைரியமாகவும், தன்னம்பிக்கையோடும், துணிவோடும் சந்தித்து, அவற்றை சவால்களாக ஏற்று, சாதிக்க துணிய வேண்டும். இறை நம்பிக்கையோடும், உள உறுதியோடும் செயல்படும் போது இவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ள முடியும். எனவே தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் விட்டுக் கொடுக்காது புதிய உற்சாகத்தோடு புதிய உத்வேகத்தோடு புத்தாண்டை சந்திக்க திட உறுதி பூண வேண்டும்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைள், போதைப் பொருட்களின் துரிதமான பரவல், வறுமையின் வாட்டல், தொழில் முயற்சிகளில் தளர்வு, வருமானத்தில் வீழ்ச்சி, செலவுகளில் அதீத அதிகரிப்பு போன்ற பல விடயங்கள் பிறக்கும் புத்தாண்டில் ஆரம்பத்திலேயே நாம் சந்திக்கும் பெரும் சவால்களாக இருக்கின்றன. இவற்றை இறை நம்பிக்கையோடு, சரியான திட்டங்களோடு, ஒற்றுமையான செயற்பாடுகளோடு, நேரிய சிந்தனைகளோடு, வெற்றி கொள்ள உறுதி கொண்டு செயல்படுவதே இப் புத்தாண்டின் முதல் பிரகடனமாக இருத்தல் வேண்டும்.

பிறந்துள்ள புத்தாண்டு நலமும், வளமும், மகிழ்வும், சிறப்பும் நிறைந்த நல்லாண்டாக அமைய அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

## நெஞ்சுக்கு நீதி

புத்தாண்டொன்று புதிதாய் இன்று பிறந்தது
உத்வேகம் உள்ளத்தில் நிரம்பியே வழியுது
சத்தான வாழ்வுதனை உலகமே வேண்டுது
புத்தியாய் உழைப்பதை வெற்றியும் நாடுது

## நூலகத்துக்கு ஒரு நூல்

### இலங்கையில் முஸ்லிம் கல்வி, ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்

இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக திகழ்பவர் காலஞ்சென்ற ஷாபி மரிக்கார் அவர்கள். இலங்கை முஸ்லிம்களின் கல்விசார் வளர்ச்சியில் அதிக பங்களிப்பு செய்துள்ளவர். அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்ததோடு அதன் தவிசாளராக தான் இறக்கும் வரை பணியாற்றி அதன் செயற்பாடுகளின் அச்சாணியாக திகழ்ந்தவர்.



கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் அதிபராக மிக நீண்ட காலம் பணியாற்றி அதன் இன்றைய வளர்ச்சிக்கும் அத்திவாரம் இட்டவராக ஷாபி மரிக்கார் திகழ்கிறார். காலஞ்சென்ற ஷாபிமரிக்கார் பற்றிய மிகச் சிறப்பான ஆய்வு நூலாக 'இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்' என்ற நூல் திகழ்கிறது.

நாடறிந்த அறிஞர் ஏ. எம். நஹியா இவ் ஆய்வு நூலை எழுதியுள்ளார். நஹியா ஆ. சதாசிவம், க.கைலாசபதி, பொன். பூலோகசிங்கம், க. குலரத்தினம், ப. சந்திரசேகரம் போன்ற பேராசிரியர்கள் பலரின் அரவணைப்பில் ஊக்கம் பெற்றுச் செயற்படும் கல்விமான். பேராசிரியர் கா. சிவத்தம்பியுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர்.

புனர் வாழ்வுப் பணிப்பாளர் நாயகம், மீனவர் வீடமைப்பு மற்றும் மீனவர் நலன் பணிப்பாளர் நாயகம், நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர், பொது நிர்வாக அமைச்சின் எல்லை நிர்ணயத் தேசியக்குழு, மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் எல்லை நிர்ணயத் தேசியக்குழு என்பவற்றின் உறுப்பினர் என பல உயர் பதவிகளை அலங்கரித்தவர். அரச சேவைகள் ஆணைக்குழு அங்கத்தவராகவும் இருமுறைகள் தொடர்ச்சியாகப் பதவி வகித்தவர். தமிழ் விவகாரத் துணைப் பணிப்பாளராகவிருந்து அவர் ஆற்றிய பணிகளின் மகிமையை தமிழுலகு நன்கறியும். தற்போது தகவலறியும் ஆணைக்குழுவின் ஒரே சிறுபான்மை உறுப்பினர்.

கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட முதல் முஸ்லிம் என்ற பெருமையையும் பெற்றவர்.

அதன் முஸ்லிம் மஜ்லிஸின் உப தலைவராகவும் அவர் செயற்பட்டிருக்கிறார். இவ்வாறு பல்துறை ஆளுமை மிக்கவராக திகழும் நஹியாவின் சிறப்பான ஆய்வின் மூலம் ஷாபி மரிக்கார் பற்றியும் அவரது கல்வி சிந்தனை பங்களிப்பு பற்றியும் சுமார் 400 பக்கங்களில் இந்நூல் வெளிவந்துள்ளது.

2019 செப்டம்பர் 16ஆம் திகதி நிகழ்ந்த இலங்கை அரசின் 'தேசிய சாகித்திய விருது' வழங்கல் விழாவில் இந்நூல் 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த "சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு" என்ற வகுதியில் தேசிய சாகித்திய விருதைப் பெற்றுள்ளது.

அவசியமான படங்கள், ஆய்வுக் குறிப்புக்கள், அவசியமான பின்னிணைப்பு என சிறப்பாக அமைந்துள்ள இந்நூல் ஷாபி மரிக்காரின் கல்விப் பங்களிப்பை மட்டுமன்றி, இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றை அறிய விரும்பும் கல்வியியல் மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பயனுள்ள உசாத்துணையாக அமையும். மிகக் கனதியான இவ் ஆய்வு நூல் தமிழ் வாசகர்களை கொண்ட எல்லா நூலகங்களிலும், குறிப்பாக பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், கல்லூரிகளின் நூலகங்களில் கட்டாயமாக இருக்க வேண்டிய ஒரு நூலாகும்.

நூல்: இலங்கையில் முஸ்லிம் கல்வி, ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும், ஆசிரியர்: ஏ. எம். நஹியா, முதற்பதிப்பு: 2018, பக்கங்கள்: 400, விலை: ரூபா 950/=, வெளியீடு: அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு தொடர்புகளுக்கு: 0777530072.

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### பதினெண்கீழ்க்கணக்கு நீதி நூல்கள்...!

01. திருக்குறள்
02. நாலடியார்
03. நான்மணிக்கடிகை
04. இன்னா நாற்பது
05. இனியவை நாற்பது
06. கார் நாற்பது
07. களவழி நாற்பது
08. ஐந்திணை ஐம்பது
09. திணைமொழி ஐம்பது
10. ஐந்திணை எழுபது
11. திணைமாலை நூற்றைம்பது
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி
18. இன்னிலை

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்



### ஜெய்சங்கரின் சமயோசிதம்!

நடிகர் ஜெய்சங்கர் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த காலமது. ஜெய்சங்கர் நடித்த ஒரு நாடகத்தைப் பார்க்க அப்போதைய 'சூப்பர் ஸ்டார்' எம்.ஜி.ஆர் வந்திருந்தார். அவரை எப்படியும் கவர்ந்து விட வேண்டும் என்று ஜெய்சங்கர் ஆவலுடன் காத்திருந்தார்.

அன்று நடித்துக் கொண்டிருந்த நாடகத்தில் ஜெய்சங்கருக்கு ராஜா வேஷம்.

ஒரு வசனத்தை பேசிவிட்டு சிம்மாசனத்தில் அமர வேண்டும் என்பது காட்சி. ஆனால் அந்த சிம்மாசனத்தில் ஒரு கால் உடைந்து இருந்தது. இதை கவனிக்காத ஜெய்சங்கர், நாடக காட்சிப்படி அதில் சென்று அமர்ந்தார். சிம்மாசனத்தின் கால் உடைந்திருந்ததனால் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார்.

அதனைக் கண்டு அரங்கத்திலிருந்த அனைவரும் சிரித்தனர்.சட்டென்று தன்னை சுதாரித்துக் கொண்ட ஜெய்சங்கர் சமயோசிதமாக அவையை பார்த்து இப்படி சொன்னார், "என்னை எப்படியாவது வீழ்த்திவிட வேண்டுமென்று எதிரிகள் செய்யும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. இதனைக் கண்டு நான் அஞ்சிவிட மாட்டேன்". என்றார் கம்பீரமாக.

அதனைக் கேட்டு கைதட்டுகளால் அரங்கமே அதிர்ந்தது. அதில் முதல் கைதட்டல் எம்.ஜி.ஆர். உடையதாகத்தான் இருந்தது.

## பேசும் கவிதை

### புத்தாண்டு!

உயிர் தாங்கும் உன்
உடலை விரும்பு,
நல் உணவைச் சேர்,
பிறக்கும்
நல் ஆரோக்கியப் புத்தாண்டு !

வளர்த்திடு,
நேர்மறை எண்ணம்
பிறக்கும்
தன் நம்பிக்கைப் புத்தாண்டு !

சண்டைக்குப் பின்
ஒரு சாரியேனும் சொல்லிடு
பிறக்கும்,
புதுக் காதல் புத்தாண்டு !
கோபம் தாண்டு
பொறாமை தாண்டு
தடைகள் தாண்டு

ஆசைகள் தாண்டு
வெறுப்பைத் தாண்டு
பயத்தைத் தாண்டு
பொய்களைத் தாண்டு
பிறக்கும்
பெரு மகிழ்ச்சிப் புத்"தாண்டு" !

**- நா முரளிதரன்**

## நெஞ்சோடு நெஞ்சம்




**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

---



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 33

மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தி. ஞானசேகரன்

# பிரபஞ்ச யதார்த்தவாதத்தை முன்வைத்தவர் மு. தளையசிங்கம்



"மு. தளையசிங்கம் பிரபஞ்ச யதார்த்தவாதம் என்ற கொள்கையை முன்வைத்தார். முற்போக்கு இலக்கியத்துக்கு எதிராக காத்திரமான விமர்சனக் கருத்துக்களை முன்வைத்தவர் இவரே. முற்போக்கு இலக்கியத்தின் சித்தாந்த தளமான மார்க்ஸிய தத்துவத்தையே இவர் விமர்சனத்துக்கு உட்படுத்தினார். மு. தளையசிங்கம் மார்க்ஸியத்தை ஒரு தத்துவார்த்த சமயவழி நின்று விமர்சித்தார். மார்க்ஸியத்தின் சில பகுதிகளை ஏற்றுக் கொண்டு அதற்கு அப்பால் செல்ல வேண்டும் என்பதே இவரது கருத்தாகும்.

'மார்க்ஸியத்தை மறுக்கும் தெளிவற்ற கலைஞர்களும் சிந்தனையாளர்களும் முதலில் அதை உணர்ந்து ஒப்புக் கொண்டால்தான் அவர்களின் மறுப்பு வெறும் மறுப்பாகவே நின்றுவிடாமல் இன்று சரித்திரம் காட்டிநிற்கும் புதிய தருணத்தை இனம் கண்டு பயன்படுத்தி மார்க்ஸியத்தையும் மீறி வளரும் வெற்றியாக மாறுவதற்கு வழிபிறக்கும். அதாவது அந்த உண்மையை ஒப்புக் கொண்டால்தான் அந்த உண்மையின் அடுத்த பக்கத்தையும் உணரலாம்" என்று தளையசிங்கம் எழுதியுள்ளார். மேலைத்தேய மார்க்ஸிய எதிர்ப்புச் சிந்தனையாளர்களின் கருத்துக்களையும் அரவிந்தர் போன்றவர்கள் பிரதிபலித்த இந்திய ஆன்மிகவாதத்தையும் ஒன்றிணைத்ததே இவரது கொள்கையாகும். அவர் தமது இலக்கியக் கோட்பாடு பற்றி எழுதுகையில் 'இனி வரவேண்டிய கோட்பாட்டை 'பிரபஞ்ச யதார்த்தம்" என்று கூறலாம். விஞ்ஞானமும் ஆன்மிக ஞானமும், வாழ்க்கை ஆகியவற்றுக்கிடையே பேதம் இருக்காது. வாழ்க்கையே கலையாகும். கலையை அழிக்கும், கலை இலக்கியத்தை அழிக்கும், இலக்கியம் இவையே இனித் தோன்றப் போகின்றன. அதுவே மெய்யுள் என்பது இவரது கலை இலக்கியம் பற்றிய கருத்துக்களின் சாரமாகும்" என சி.மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம்.ஏ.நுஃமான், ஆகியோர் எழுதிய இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிக் கிராமமான புங்குடுதீவின் 9ஆம் வட்டாரத்தில் முருகேசு மாரிமுத்து (சின்னத்தங்கம்) ஆகியோருக்கு மூத்த மகனாக 20.10.1935இல் பிறந்தவர் தளையசிங்கம். தந்தையார் இரத்தினபுரியில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டு வந்தவர். தளையசிங்கம், ஆரம்பக்கல்வியை ஊரிலுள்ள ஸ்ரீசண்முகநாத வித்தியாசாலையில் கற்றார். இடைநிலை உயர் கல்வியை இரத்தினபுரியின் புனித அலோசியஸ் புனித லூக்ஸ் கல்லூரியில் இணைந்து கற்கலானார். 1957ஆம் ஆண்டு பேராதனைப் பகல்கலைக்கழகத்தில் பொருளியல், புவியியல் பாடங்களைப் பயின்ற இவருக்கு இலக்கியத்தில் அதிக நாட்டம் ஏற்பட்டது. 1958_1959ஆம் ஆண்டுக்குரிய 'இளங்கதிர்' தமிழ்ச்சங்க இதழின் ஆசிரியராக இருந்து செயற்பட்டார். 1957/60 ஆண்டுகளில் படிப்பு முடிந்து பீ.ஏ.பட்டதாரியாக வெளியேறினார். இவரது முதற் சிறுகதையாகிய 'தியாகம்' சுதந்திரன் ஏட்டில் 1957இல் வெளியானது. 1962ஆம் ஆண்டு 'கலைச்செல்வி' சஞ்சிகை நடத்திய நாவல் போட்டிக்கு தனிவீடு என்ற நாவலை அனுப்பி வைத்தார். அந்த நாவலுக்கு முதற்பரிசு கிடைத்தது.

இரத்தினபுரியில், தான் படித்த கல்லூரியிலேயே தளையசிங்கம் , 1961/1966 காலப்பகுதியில் முதலில் ஆசிரியப்பணி புரிந்தார். இரத்தினபுரியில் இருக்கும்போது அங்கு செயற்பட்ட புத்திஜீவிகள் சங்கம் என்ற அமைப்பில் இவரும் தம்பியார் மு. பொன்னம்பலமும் இணைந்து கொண்டனர். அந்த அமைப்பின் அங்கத்தவர்களில் அநேகமானோர் இடதுசாரிகளாயிருந்தனர். அங்கு அரசியல், இலக்கியம் முதலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. சிங்கள, முஸ்லிம் இலக்கிய ஆர்வலர்கள் இந்த அமைப்பில் அதிகம்பேர் இருந்தமையால் தளையசிங்கத்துக்கு சிங்கள இலக்கியங்கள் பற்றி அறியவும், மார்க்ஸியக் கருத்துக்களை அறியவும் கூடியதாயிருந்தது. 1963ஆம் ஆண்டில் தமது 28வது வயதில் 'தினகரன்| பத்திரிகையில் "விமர்சக விக்கிரகங்கள்" எனுந் தொடரானது மு.த.வால் எழுதப்பட்டு வெளியானபோது பலரின் சர்ச்சைகளுக்கு இடமளித்தது. மீண்டும் முற்போக்கு இலக்கியம் என்னுந் தலைப்பில் 'கலைச் செல்வி'யில் (1962 டிசம்பர், 1963 சனவரி, 1963 பெப்ரவரி) எழுதிய கட்டுரையும் பெரும் சர்ச்சைப் புயலைக் கிளப்பியிருந்தது. இக்கட்டுரை பின்னர் நூலாக வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது. 1961/1964 ஆண்டுகள் காலப் பகுதியில் தளையசிங்கம் புதுயுகம் பிறக்கிறது சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்ற அதிகமான கதைகளை எழுதியிருந்தார். 26.01.1964 முதல் 17.01.1965 வரையுள்ள காலப்பகுதியில் கண்டியிலிருந்து நாகலிங்கம் என்பவர் வெளியிட்டுக் கொண்டிருந்த வாரப் பத்திரிகையான 'செய்தி' யில் 33 வாரங்களாக 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதினார்.

மு.த.வின் வாழ்க்கையில் 1966ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. அவரது வாழ்வியலின் முழுமையை நிறைத்துக் கொள்ளக்கூடியதான ஆன்மீக தரிசனமும், வழிகாட்டலும் பகவான் ஸ்ரீ நந்தகோபாலகிரியை இரத்தினபுரியில் சந்தித்ததன் மூலம் பெற்றுக்கொண்டார். இச்சந்திப்பில் கிடைத்ததும் நிகழ்ந்ததுமான ஞான அனுபவங்கள் அவரது புதிய செல்நெறிக்கான பயணத்தைத் தொடக்கி வைத்தன. பூரண யோகம் பற்றிய பகவான் அரவிந்தரின் கொள்கைகள் போதனைகள் ஆகியவற்றை தமது ஞானகுருவின் மூலம் அனுபவிக்கப்பெற்றார். அவற்றைத் தமது வாழ்க்கையில் பரீட்சித்துப் பார்க்கவும் முயன்றார். குருவினால் தீட்சை கொடுக்கப்பட்ட பின் அவரது தீட்சாநாமம் "விநாயகதாஸ்" என்பதாகும்.

புதிய ஞான அனுபவங்கள் கிடைத்த பின்னர், 1961இல் அவரது சொந்தவூரான புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார். அதன்பின்னர் அவரது பல்திறப்பட்ட பணிகள் விரிவாக்கம் பெற்றன.

மு.தளையசிங்கம் எழுதிய அவரது இலட்சிய வேட்கையை வெளிப்படுத்தும் போர்ப்பறை நூலானது 1970ஆம் ஆண்டு டிசம்பரில் வெளிவந்தது. அந்நூலுக்கு இலங்கை அரசின் சாகித்ய மண்டலப் பரிசும் கிடைத்தது. தான் உயிருடன் இருக்கையில் தனது எழுத்துக்கு அரச அங்கீகாரம் கிடைத்ததைக் காணக்கூடிய ஒரேயொரு சந்தர்ப்பத்தை மு.த. பெற்றுக்கொண்டார்.







1972ஆம் ஆண்டில் மு.த எழுத்துத்துறையில் தீவிரமாக ஈடுபட்டார். போர்ப்பறையில் கூறிய தத்துவ நோக்குகளை நிலையான தளத்தில் இடுவதற்கான முயற்சிகளை எடுத்தார். இதன் விளைவாக கருத்து முதல்வாதம், பொருள் முதல்வாதம் இரண்டின் குறைபாடுகளையும் எடுத்துக்காட்டி இவையிரண்டிற்கும் போர்ப்பறையின் தொடச்சியாக மெய்யுள் நூலினை எழுதிமுடித்தார். மெய் முதல்வாதத்தை (சர்வோதயத்தை) அறிமுகப்படுத்தினார். புதிய இலக்கிய வடிவமாக மெய்யுள் உருவாக்கப்பட்டது.

1971இன் நடுப்பகுதியில் மீண்டும் தாம் முன்பு அனுஷ்டித்து வந்த புதிய முறையிலான விரதங்களைத் தீவிரப்படுத்தம் முயற்சியில் மு.தவும் அவரது சீடர்களும் ஈடுபடலாயினர். அதன்படி புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில் ஆலய நன்னீர்க் கிணறுகளில் தாழ்த்தப்பட்டவர்கள் தண்ணீர் எடுக்க அனுமதிகோரி சில வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து ஊர்வலங்களும் பிரசாரங்களும் இடம்பெற்றன. மு.த. அவற்றை முன்னின்று நடைமுறைப்படுத்தினார். கடைசியாக ஒரு வெள்ளிக்கிழமை இவரும் இவரது மாணவரான வில்வரத்தினமும் காளிகோயிலில் சத்தியாக்கிரகம் இருந்தபோது முன்னேற்பாட்டின்படி பொலிசாரின் குண்டாந்தடிப் பிரயோகத்திற்கு ஆளாயினர். கைது செய்யப்பட்டு ஒரு கிழமை சிறையில் அடைக்கப்பட்டனர். ஒரு வெள்ளிக்கிழமையன்று தாக்குதலுக்கு உள்ளாகி கைது செய்யப்பட்ட மு.தவும், சு.வி.யும் மறு வெள்ளிக்கிழமையன்று விடுவிக்கப்பட்டு வெளியே வந்தனர். இதைக் கேள்விப்பட்டு தீவகப் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் உடனடியாக விரைந்துவந்து உள்ளூர் நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களைக் கூட்டி கூட்டமொன்றில் ஆலோசித்ததன் பிரகாரம் கண்ணகி அம்மன் கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளும் வாய்ப்பு சைவமக்களுக்கு உடனடியாகக் கிடைத்தது. சற்றுக் காலதாமதமாகி அதே உரிமை தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கும் கிட்டியது.

இந்த உரிமையினைப் பெறுவதற்கு மு.தவும் சீடர்களும் நடத்திய போராட்டங்களும் எதிர்கொண்ட துன்பங்களும் காலத்தால் அழிக்க முடியாதவை.

பின்னர் கோயில் உண்டியலை உடைத்துத் திருடியதாக மு.த.வின்மேல் குற்றம் சாட்டப்பட்டது. விசாரணையின் போது ஊரிலுள்ள பிரமுகர் சிலரும் சமூக சேவையாளர் சிலரும் பொய்ச்சாட்சி கூறியிருந்தனர். பொலிஸ் அதிகாரியினால் தாக்கப்பட்ட நிலையில் மீண்டும் தளைய சிங்கம் கடுமையாக உடல்ரீதியாகப் பாதிக்கப்பட்டார்.

இரண்டு மாதங்கள் கடுமையாக நோயுற்றிருந்தார் 1973ஆம் ஆண்டு ஏப்ரல் இரண்டாம் திகதியன்று அவரது இறப்பு நிகழ்ந்தது. 38ஆவது வயது நிறைவடைய முன்னர் இது நிகழ்ந்தது. பதினாறு ஆண்டுகால இலக்கியப் பணியும் பன்னிரண்டு ஆண்டுகால ஆசிரியப் பணியும் ஏழாண்டுகால சமூகப் பணியும் ஓய்வு கண்டது. காலம் குரூரமாக ஒரு சிந்தனையாளரைக் கவர்ந்து கொண்டது.

**(உசாத்துணை: கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு எழுதிய தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள்)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 44

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | | 04 |
| 05 | | 06 | 07 | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| | 14 | 15 | | 16 | 17 |
| 18 | 19 | | 20 | | 21 |
| 22 | | 23 | 24 | 25 | |

பெயர் ..............................................
வகுப்பு ..............................................
தொலைபேசி இல ..............................................
பாடசாலை பெயர் ..............................................
வதிவிட முகவரி ..............................................
..............................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) உலகெங்கும் மில்லியன்கணக்கான மனித உயிரிழப்புகளையும், பொருளாதார வீழ்ச்சியையும் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்த வைரஸ் நுண்ணுயிரியின் குடும்பப் பெயர் இது.
(6) வானம், ஆகாயம், விண் ஆகிய ஒத்தபொருள் சொற்களுக்கு நிகரான மற்றொரு சொல்.
(10) நாம் வாழும் உலகம்.
(12) நாம் செய்கை பண்ணுகின்ற பயிர்களுக்குள் வளர்கின்ற தேவையற்ற சிறு தாவரங்களைக் குறிக்கும் சொல். இவற்றைப் பிடுங்கி அழித்தால்தான் எமது பயிர்கள் செழிப்பாக வளரும். (தலைகீழான சொல்)
(14) மாணவர்களாகிய உங்களின் அறிவுக்கண் திறப்பவர் இவர். (தலைகீழான சொல்)
(16) கடற்கரையோரம் மணல்தரையில் வளர்கின்ற மரம். இலைகளில் முட்களும், பிரதான தண்டு பகுதியில் மிண்டி வேர்களும் கொண்ட தாவரம்.
(18) குளத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்காக சுற்றிவர அமைக்கப்படுவது. (தலைகீழான சொல்)
(23) உலகம், தரணி, புவி, பூமி, அகிலம் ஆகிய ஒத்தசொற்கள் போன்று இதுவும் மற்றொரு சொல்.

**மேலிருந்து கீழ்**

(1) ஆடு, மாடு, மான் போன்ற மேலும் சில மிருகங்களின் விசேடமான உடலுறுப்பு.
(3) பரீட்சையின் போது உங்களிடமிருந்து விடையைப் பெறுவதற்காக கேட்கப்படுவது. (தலைகீழான சொல்)
(4) சமாதானப் பறவையாகக் கொள்ளப்படும் பறவை. (தலைகீழான சொல்)
(7) பலாப்பழத்தின் உள்ளீடைக் குறிக்கும் மரபுச்சொல்.
(8) தண்ணீர் அருந்தி விட்டால் தணிந்து விடும். (தலைகீழான சொல்)
(11) மலையிலிருந்து பாய்ந்தோடி வந்து, நதியாக உருவெடுப்பது. (தலைகீழான சொல்)
(17) மனத்துணிச்சல் இல்லாத பயந்த சுபாவம் உள்ளவரைக் குறிக்கும் பொதுப்பாற் சொல். (தலைகீழான சொல்)
(18) நரம்பிசைக் கருவிகளில் மிகப்பழைமையானது இது. (தலைகீழான சொல்)
(20) எலியின் வசிப்பிடம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 43

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. நத்தார் 08. மைனா 10. கறி 12. ஆழி
14. கரு 17. வாவி 19. முகில் 22. கடுகு

**மேலிருந்து கீழ்**

01. நன்றி 03. மாதா 05. கனா 08. ஆமை
11. கருவாடு 16. வால் 17. கவி 20. கிவி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 42

### பாராட்டு பெறுவோர்

**1. மாஹி முஸாதிக்**
தரம் 02, ஒக்ஸ்போர்ட் கொலேஜ்,
இல. 366, நாங்கல்ல, துல்ஹிரிய.

**2. எம்.எஸ். சையாப்**
தரம் 06, அல் அஸர் பாடசாலை,
இல. D, 123/4, பள்ளிபோருவ, ஹெம்மாதகம.

**3. ஏ.சி.எப். இக்ரா**
தரம் 06D, கொ/ கய்ரியா மு.ம.க,
இல. 258/21, டாம் வீதி, கொழும்பு - 12.

**4. எச். பாத்திமா சீனஸ்**
தரம் 04, அல் ஹிக்மா மகா வித்தியாலயம்,
பாடசாலை வீதி, கந்துவேவ, நொச்சியாகம.

**5. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, மேமா/மது/ரஹ்மானிய்யா, ம.வி.,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.


**6. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, கண்டி.

**7. எம்.என்.எப். நிப்லா**
உயர் தரம், மதீனா தேசிய பாடசாலை,
இல. 273, பொல்கஹயாய, நாரம்மல.

**8. ப. பிரணவிக்கா**
தரம் 06, மட்/ புனித சிசிலியா பெண்கள் கல்லூரி,
இல. 45/1, கனகசபா ஒழுங்கை, மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 44
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



### குறளமுதம் :

**நட்பாராய்தல்: மருவுக மாசற்றார் கேண்மையொன்
றீத்தும ஒருவுக ஒப்பிலார்**

***தெளிவுரை :***
குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ள வேண்டும், ஒத்த பண்பை இல்லாதவறுடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.



**எச்.எம். சயின்**
தரம் 01, அல் ஹிக்மா மகா வித்தியாலயம், நொச்சியாகம



**எச்.எப். சீனஸ்**
தரம் 04, அல் ஹிக்மா மகா வித்தியாலயம், நொச்சியாகம.



**எம்.ஆர்.எம். ஆஸிம்**
தரம் 03A, களு/சாஹிரா ஆரம்ப பாடசாலை, தர்கா நகர்.




# இவ்வார மழலை





மொஹமட் இஜாஸ் /பாத்திமா சாரா,
கொழும்பு

## ஈழத்தின் முதல் தேசாதிபதி வில்லியம் கொப்பல்லாவ

வில்லியம் கொப்பல்லாவ இலங்கையின் இறுதி ஆளுநரும் முதல் தேசாதிபதியுமாவார். இவர் 1897.07.17ஆம் திகதி மாத்தளையில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மாத்தளையிலும் உயர் கல்வியை கண்டி தர்மராஜ கல்லூரியிலும் பயின்று சட்டத்தரணியானார்.

இலங்கையின் முதல் பிரித்தானிய ஆளுநரான ஹேர் பிடரிக் நோர்த் தொடக்கம் இறுதியான ஆங்கில ஆளுநர் சோல்பரிப் பிரபு வரை 31 ஆளுநர்கள் இலங்கையை ஆட்சி செய்துள்ளனர்.



இவர்களில் றொபட் பிறௌன்றிக் ஆளுநராக இருந்த காலத்திலேயே, கண்டி இராஜதானியை ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனிடமிருந்து 1815இல் ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

இலங்கையரான முதல் ஆளுநர் சேர் ஒலிவர் குணதிலக்க ஆவார். இவர் 1962ஆம் ஆண்டு விலகிய பின்னர் வில்லியம் கொப்பல்லாவ அதே ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் முன்னர் கண்டி மாநகர சபையிலும் கொழும்பு மாநகர சபையிலும் ஆணையாளராக கடமையாற்றியுள்ளார். முன்னர் 1958இல் சீன மக்கள் குடியரசிலும் 1961இல் ஐக்கிய அமெரிக்காவிலும் இலங்கையின் தூதுவராக சிறப்பாக பணிபுரிந்தார்.

1970ஆம் ஆண்டில் இலங்கையில் நடந்த பொதுத் தேர்தலில் அதிக பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவர் உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றார்.

இவரது ஆட்சி காலத்திலே தான் இலங்கை குடியரசானது. அக் குடியரசு யாப்பை கொல்வின் ஆர்.டி. சில்வா தயாரித்தார். இதன்படி இலங்கை 1972.02.22ஆம் திகதி குடியரசாகியதுடன் பிரித்தானிய ஆட்சியில் இருந்து முழுமையாக விடுதலை பெற்றது.

வில்லியம் கொபல்லாவ இந்த குடியரசு யாப்பின் படி இலங்கையின் முதல் தேசாதிபதியானார். இவர் சுமார் 5 வருடங்களும் 8 மாதங்கள் தேசாதிபதியாக பதவி வகித்தார்.

1978.02.04ஆம் திகதி இலங்கையின் யாப்பு மேலும் திருத்தியமைக்கப்பட்டது. "இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு" என அதற்கு பெயர் வழங்கப்பட்டது. இதன் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜயவர்தன அவர்கள் பதவி ஏற்றார். இந்த யாப்பை சட்ட அறிஞர் கே.எம். சொக்சி அவர்கள் தயாரித்தார்.

வில்லியம் கொபல்லாவ அவர்கள் அமைதியானவர். பிறர் நலன்களில் அக்கறை கொண்டவர். எல்லாக் கட்சியினர்களுடனும் சமமாக பழகுவார். தன்னை சந்திக்க வருபவர்களுடன் அன்பாக பழகி உபசரிப்பார். இவர் 1981.01.31ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

**என். மொஹமட் லாபீர்,**
**பதுளை**

## வாரம் ஒரு பெரியார்

# தமிழறிஞர், வரலாற்று ஆய்வாளர் வி.கனகசபைப்பிள்ளை

*வி.கனகசபைபிள்ளை தமிழறிஞர். ஆங்கில மொழியிலும் சிறப்பான அறிவு பெற்றிருந்த அவர் தமிழ், தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு ஆகியவற்றை ஆராய்ந்து அவை தொடர்பில் ஆங்கிலத்தில் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். கனகசபைப் பிள்ளை அறிமுகப்படுத்திய "கஜபாகு காலம் காட்டி" முறைமை வரலாற்றாய்வாளரால் சங்ககால தமிழக வேந்தர்களின் ஆட்சி ஆண்டுகளை வரிசைப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட ஆய்வுமுறை ஆகும். இவர் ஆங்கிலத்தில் எழுதிய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் (The Tamils 1800 Years Ago) என்னும் நூல் புகழ் பெற்றது.*

*இவரது தந்தையார் இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில், மல்லாகம் என்னும் ஊரைச் சேர்ந்த விசுவநாதபிள்ளை என்ற தமிழ் தொண்டர் ஆவார். தந்தை விசுவநாதபிள்ளை அக்காலத்தில் சென்னை கோமளேசுவரன் பேட்டையில் தங்கியிருந்து வின்சுலோ தொகுத்த ஆங்கிலத் தமிழ் அகராதிப் பணிக்கு உதவி புரிந்தவர். கனகசபை கோமளேசுவரன் பேட்டையில் பிறந்து வளர்ந்தார். மிகவும் இளம் வயதிலேயே சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். இதனால் இவர் 'boy graduate' என செல்லமாக அழைக்கப்பட்டார். அப்பல்கலைக்கழகத்திலேயே, சிறிது காலம் தமிழ் மொழி பெயர்ப்பாளராக பணிபுரிந்தார். பிறகு, அஞ்சல் துறையில் கண்காணிப்பாளராக சேர்ந்து பணிபுரிந்து, உயர் அதிகாரி ஆனார். சட்டப் படிப்பை முடித்து மதுரையில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார்.*



*அஞ்சலகத் துறையில் பணியாற்றிய போது, பல்வேறு ஊர்களுக்கு மாற்றல் பெற்றார். எந்த ஊருக்குச் சென்றாலும், அப்பகுதிகளில் காணப்படும், பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைச் சேகரித்து வைத்திருந்ததுடன், அவற்றைப் படித்து ஆய்வுகளும் செய்து வந்தார். தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை கொண்ட கனகசபைப் பிள்ளை முதலில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றை காப்பியங்களை ஆராய்ந்தார். அவ்வாய்வுகளைக் கட்டுரைகளாக 1895 முதல் 1901 வரை ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதினார். இதனால் தமிழர் வரலாறு, தமிழ் இலக்கியம் போன்ற துறைகளில், அவருக்கு ஆழ்ந்த அறிவு மேலோங்கி இருந்தது. ஓலைச் சுவடிகளைத் தொகுக்கவும், ஏட்டுச் சுவடியைத் தாளில் எடுத்தெழுதவும், தன்னுடன் உதவியாளர் ஒருவரை வைத்துக் கொண்டார். ஆனால், அவர் எழுதிய நூல்கள் எதையும் பதிப்பிக்க விரும்பவில்லை. அவர் 20 ஆண்டுகள் தொகுத்து வைத்திருந்த பத்துப்பாட்டு, புறநானூறு, இன்னும் பிற ஏராளமான தமிழ் நூல்கள் அனைத்தையும், தமிழ்தாத்தா உ. வே. சாமிநாத அய்யருக்கு, அவ்வப்போது வழங்கினார்.*

*தமிழின் பெருமையைப் பிற மொழியினரும் அறிந்து கொள்ளும்படி தனது ஆய்வுகளைக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் ஆங்கிலத்தில் எழுதினார். அவ்வாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல்களில் களவழி நாற்பது, கலிங்கத்துப் பரணி, விக்கிரம சோழன் உலா குறிப்பிடத்தக்கனவாகும். சென்னையில் இருந்து வெளிவந்த “மதராஸ் ரிவியூ” என்னும் ஆங்கில இதழொன்றில் தமிழர் வரலாறு பற்றி தொடர்ச்சியாக இவர் எழுதிய கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் (The Tamils 1800 Years Ago) என்னும் தலைப்பில் ஆங்கில நூலாக வெளிவந்தது. இதன் மூலம், தமிழ் வரலாறு குறித்து, முதன் முதலில் முறையான கால வரலாற்று ஆய்வை நிகழ்த்தியவர் என்ற பெருமையைக் கனகசபைப்பிள்ளை பெறுகிறார். கா. அப்பாத்துரையார் இந்நூலை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்னும் பெயரில் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார். பிற்காலத்தில், உ. வே. சாமிநாதையரின் பதிப்பு முயற்சிகளுக்கு உதவுவதற்காகத் தன்னிடம் இருந்த பழம் தமிழ் நூல் ஏடுகளைச் சாமிநாதையருக்குக் கொடுத்து*


## வருக புத்தாண்டே...!

வருக வருக புத்தாண்டே
வளங்கள் நிறைந்த புத்தாண்டாய்
தருக தருக புத்தாண்டே
தனமும் குணமும் தந்திடவா!

ஒருமைப் பாட்டில் உயர்ந்திடவா
ஒன்றே நிலமென உணர்ந்திடவா
பெருமை மிக்க இலங்கையராய்
பேரும் புகழும் பெற்றிடவா!
சத்தியம், சாந்தம் நிலைத்திடவா
சமத்துவம் எங்கும் நிலவிடவா
இத்தரை மாந்தர் என்றென்றும்
இன்புற்று மகிழ்ந்திட வா வா!

**அஸ்மா பாரிஸ்,**
**மள்வானை**

## Golden Blood?



உலகின் மிக அரிதான இரத்த வகை 'RH–Null Blood'. இதனை 'Golden Blood' என்றும் அழைப்பர். இது கடந்த 50 ஆண்டுகளில் 43 பேரில் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது.

## அறிந்து கொள்வோம்

* ஆந்தைகளால் சத்தம் இல்லாமல் பறக்க முடியும்.
* மிருகங்களில் சிம்பன்சி எனப்படும் மனிதக் குரங்குகளே மிகவும் அறிவுள்ளவை
* முதலையால் கண்களை திறந்து வைத்துக்கொண்டு தூங்க முடியும்.
* தேனியின் வாழ்நாள் 30 நாட்களே. 7 தேனீக்கள் சேர்ந்து அதன் வாழ்நாள் முழுவதும் 1 தே. கரண்டி அளவு தேனை மட்டுமே சேகரிக்க முடியும்.

## காண்டா மிருகம்

*உலகிலேயே சிறிய இனவகைக் காண்டா மிருகத்தை 'Sumatran Rhinoceros' என்று அழைப்பர். இது மலேசியா, மியன்மார், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுவதோடு அழிந்து வரும் பிராணியாகவும் கருதப்படுகிறது.*



## எவரெஸ்ட் சிகரம்



உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்திற்கு 1865ஆம் ஆண்டில் தான் அப்பெயர் வந்தது. அதற்கு முன்பு சிகரம் 15 என்ற பெயரில் தான் இது அழைக்கப்பட்டது. எவரெஸ்ட் சிகரம் வருடத்திற்கு 4 மி. மீற்றர் அளவு வளரும்.

# விளையாட்டு



## விடைபெற்றார் பீலே

என் டோ ஸ் அரன்டெஸ் டு நசி மென்டோ என்ற பெயரை யாருக்கும் தெரியாமல் இருக்கலாம், ஆனால் பீலேவை தெரியாதவர் யாரும் இருக்க முடியாது. அந்த நீண்ட பெயர் பீலேவாக மாறியது எப்படி என்று தெரியாது. பீலே என்பதற்கு மொழி ரீதியாக அர்த்தம் இல்லாதபோதும் பீலே என்றால் அது பீலே தான்.

1940 ஒக்டோபர் 23ஆம் திகதி பிறந்த பீலே, கால்பந்துக்காக கல்வியை கைவிட்டவர். 11 வயதில் கால்பந்து பயிற்சியை முறையாக ஆரம்பித்த பீலே 15 வயதிலேயே அதாவது 1956இல் சான்டோஸ் கால்பந்து கழகத்திற்காக தொழில்முறை கால் பந்தில் ஆட ஆரம்பித்தார்.

1958 உலகக் கிண்ணத்தில் தனது 17 வயதில் களமிறங்கிய பீலே மொத்தம் ஆறு கோல்களை பெற்று அந்த உலகக் கிண்ணத்தை பிரேசில் வெல்ல உதவினார். 1962 மற்றும் 1970 உலகக் கிண்ணங்களையும் பிரேசில் வெல்ல பீலேவின் பங்கு பெரியது. பந்தை வேகமாக கடத்திச் செல்வது, பந்தைப் பெறுவதில் சமநிலை தவறாத திடமான ஆட்டம், தன்னை நோக்கி வரும் பந்தை பாய்ந்து கட்டுப்படுத்தும் அலாதித் திறமை எல்லாவற்றையும் சேர்த்து பெறப்படும் அபார கோல்கள் பார்க்க அழகாக இருக்கும்.

பீலே ஆடிய கால்பந்து போட்டிகளின் எண்ணிக்கை 1,363. அதில் அவர் 1,281 கோல்களை பெற்றிருக்கிறார். 92 சர்வதேச போட்டிகளில் 77 கோல்களை பெற்றார். மூன்று முறை உலகக் கிண்ணத்தை வென்ற ஒரே வீரரும் அவர்தான்.

கால்பந்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் அவர் ஓயவில்லை. இசை அமைத்தார், தன்னைப் பற்றி புத்தகம் எழுதினார், ஏன்! பிரேசிலின் விளையாட்டுத்துறை அமைச்சராகக் கூட அவர் இருந்தார்.

அண்மைக் காலமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த 82 வயது பீலேவின் மரணம் என்றும் ஒரு யுகத்தின் மறைவாகவே இருக்கப்போகிறது.

## 2023 எப்படி...?

ஆசிய கிண்ணத்தில் இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிர்பாராத வெற்றி, ஆசிய வலைப் பந்தில் இலங்கை மகளிர் அணிக்கு எதிர் பார்த்த வெற்றி, கால்பந்தில் இலங்கைக்கு மேலும் பின்னடைவுகள், தடகளத்தில் ஒரு சில பதக்கங்கள் என்று 2022 இலங்கையில் விளையாட்டு ஏற்றத்தாழ்வுடன் முடிந்தது.

2023ஆம் ஆண்டு பிறந்திருக்கிறது. கொரோனா தொற்றின் தடயங்கள் முடிந்திருப்பதால் இந்த ஆண்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு பஞ்சமில்லாமல் இருக்கும். அடுத்த ஓர் ஆண்டில் இலங்கை விளையாட்டு எப்படி இருக்கப் போகிறது என்று பார்ப்போம்,



### கிரிக்கெட்



2022ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கெட்டுக்கு நீண்ட காலத்துக்குப் பின் மகிழ்ச்சி தரும் விடயமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த ஆசிய கிண்ணத்தில் சம்பியனானது. இது இலங்கை கிரிக்கெட்டின் ஒரு திருப்பம் என்று பொதுவாகக் கணிக்கப்பட்டது.

ஆனால் இதற்கு அடுத்து அவுஸ்திரேலியாவில் நடந்த டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை நம்பிக்கையை சிதறடித்ததோடு மாத்திரமல்ல தனுஷ்க குணதிலக்க மீதான பாலியல் புகார் உட்பட பல ஒழுக்கப் பிரச்சினைகளையும் இழுத்துக் கொண்டே நாடு திரும்பியது.

எனவே, 2023 ஆம் ஆண்டு கிரிக்கெட்டுக்கு அப்பால் இலங்கை அணி மற்றும் வீரர்களின் நடத்தை பற்றியும் பெரிதாக அவதானம் செலுத்த வேண்டி இருக்கிறது. குணதிலக்கவின் பாலியல் தொடர்பான வழக்கு அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் வரும் ஜனவரி 12 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. அவர் குற்றவாளியா? நிரபராதியா? என்று தெரிந்துகொள்ள காலம் எடுக்கும். எனவே அவரது கிரிக்கெட் எதிர்காலம் பற்றி இப்போதைக்கு உறுதியாக ஒன்றும் கூற முடியாது.

மற்றது சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்னவுக்கு ஒழுக்க மீறலுக்காக ஓர் ஆண்டு ஒத்திவைக்கப்பட்ட தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர் இந்த ஆண்டில் கிரிக்கெட்டில் திறமையை வளர்த்துக் கொள்வது மாத்திரமன்றி நடத்தை பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

2023 என்பது உலகக் கிண்ணத்தின் ஆண்டு. வரும் ஒக்டோபர், நவம்பரில் இந்தியாவில் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவுள்ளது. இதற்கு முழுமையாகத் தயாராவது தான் இந்த ஆண்டின் முழு வேலை.

அதாவது இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு இன்னும் நேரடித் தகுதி கூட பெறவில்லை. எட்டு அணிகளே நேரடித் தகுதி பெறும் என்ற நிலையில் ஏற்கனவே ஏழு அணிகள் தகுதியை உறுதி செய்துள்ளன. இருக்கும் ஓர் இடத்திற்கு மேற்கிந்திய தீவுகள் மற்றும் இலங்கை இடையே போட்டி இருக்கிறது.

இதற்கு இலங்கை அணி வரும் நவம்பரில் நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் குறைந்தது இரண்டில் வெற்றி பெறுவது கட்டாயம். இல்லாவிட்டால் தகுதிச் சுற்றில் ஆட வேண்டி ஏற்படும்.

டெஸ்ட் போட்டிகளிலும் இலங்கை அணி அரிதாக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு ஆட வாய்ப்பு ஒன்று கிட்டி இருக்கிறது. டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி இப்போது 3 ஆவது இடத்தில் இருந்தபோதும் வரும் மார்ச்சில் இலங்கை அணி நியூசிலாந்துடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடுகிறது. அதில் சிறந்த பெறுபேறை பெற்றால் இறுதிப் போட்டிக்கு முன்னேறலாம்.

டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி வரும் ஜூன் மாதம் ஓவலில் நடைபெறுகிறது. இதற்கு அவுஸ்திரேலியா கிட்டத்தட்ட தகுதி பெற்ற நிலையில் இரண்டாவது இடத்திற்கு இந்தியா, தென்னாபிரிக்காவுடனேயே இலங்கை போட்டியிட்டு வருகிறது.

தவிர, ஒருநாள் போட்டிகளாக ஆசிய கிண்ணத் தொடர் இந்த ஆண்டு பாகிஸ்தானில் நடத்த திட்டமிட்டிருக்கிறது. எனினும் இதில் இந்தியாவின் வருகை பற்றிய நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் கயிறிழுப்பு நீடித்து வருகிறது.

டி20 போட்டிகளைப் பொறுத்தவரை இந்த ஆண்டு சர்வதேச போட்டிகளை விடவும் ஐ.பி.எல், லங்கா பிரீமியர் லீக் போன்ற லீக் போட்டிகளுக்குத் தான் அவதானம் அதிகமாக இருக்கும். போதாக்குறைக்கு வரும் ஜூனில் இலங்கை கிரிக்கெட் சபை டி20 லீக் போட்டித் தொடர் ஒன்றையும் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.

### 2023 ஆசிய கிண்ணம் செப்டெம்பர்

பாகிஸ்தானில் நடக்கும் போட்டியில் நடப்புச் சம்பியனாக இருக்கும் இலங்கை அந்த கௌரவத்தை காத்துக்கொள்ள போராடவுள்ளது.

### ஒருநாள் உலகக் கிண்ணம் ஒக்டோபர்–நவம்பர்

ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி அண்டை நாடான இந்தியாவில் நடைபெறவுள்ளது.

### போட்டி அட்டவணை

#### இலங்கை எதிர் இந்தியா (சுற்றுப்பயணம்) ஜனவரி

இந்த ஆண்டை ஆரம்பிக்கும் வகையில் இலங்கை அணி மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் இந்தியாவை எதிர்த்தாடுகிறது.

#### இலங்கை எதிர் ஆப்கானிஸ்தான் (உள்நாடு) பெப்ரவரி

நவம்பரில் இலங்கை வந்து மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடிய ஆப்கான் மீண்டும் இலங்கை வந்து மேலும் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

#### இலங்கை எதிர் நியூசிலாந்து (சுற்றுப்பயணம்) பெப்ரவரி–மார்ச்

ஒரு நீண்ட தொடருக்காக சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை இரண்டு டெஸ்ட், மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20இல் நியூசிலாந்தை எதிர்த்தாடும்.

#### இலங்கை எதிர் அயர்லாந்து (உள்நாடு) ஏப்ரல்

வரலாற்றில் முதல் முறையாக இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அயர்லாந்து இலங்கைக்கு எதிராக ஒரு டெஸ்ட் மற்றும் இரு ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

#### இலங்கை எதிர் பாகிஸ்தான் (உள்நாடு) ஜூலை

இரண்டு மாதம் இடைவெளியை எடுத்துக்கொள்ளும் இலங்கை அணி சொந்த மண்ணில் பாகிஸ்தானுக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடும்.

### கால்பந்து



இலங்கை கால்பந்து நாளுக்கு நாள் பின்னடைவை சந்திப்பது கடந்த ஆண்டு போட்டிகளைப் பார்த்தாலே தெரிகிறது. 2022இல் ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டிகளில் இலங்கை உஸ்பகிஸ்தான், தாய்லாந்து மற்றும் மாலைதீவு அணிகளை சந்தித்தது. அந்த அனைத்துப் போட்டிகளிலும் தோல்வி தான் மிச்சம்.

உலகக் கால்பந்து தரவரிசையில் இலங்கை கடைசி இடத்திற்கு நான்கு இடங்கள் முன்னால் 207 ஆவது இடத்தில் இருக்கிறது. கடந்த ஆண்டில் எந்த மாற்றமும் இன்றி அதே இடத்தில் நீடித்தது. இந்த ஆண்டு முன்னேறாவிட்டாலும் இன்னும் பின்தள்ளப்படாமல் இருந்தாலேயே பெரிய செய்தி.

இந்த நிலையில் இந்த ஆண்டு கால்பந்து மைதானத்தை விடவும் வெளியிலேயே போட்டி சூடு பிடித்திருக்கிறது. இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்தை தேர்வு செய்யும் தேர்தல் வரும் ஜனவரி 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்குப் பின்னராவது இலங்கை கால்பந்துக்கு விடிவு கிடைக்குமா என்று நம்பிக்கையோடு பார்த்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

### தடகளம்

2023 ஆம் ஆண்டு இலங்கை 13 சர்வதேச தடகளப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. எனவே, இந்த ஆண்டு இலங்கை வீரர்களுக்கு பதக்கம் வெல்வதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிடலாம்.

இதில் ஆசியாவின் வேகமான வீரர் என்ற பெருமைக்குரிய யுபுன் அபேகோன் இந்த ஆண்டிலும் தனது திறமையை காட்டலாம். ஈட்டி எறிதலில் சுமேத ரணசிங்க மற்றும் நீளம் பாய்தலில் தனுஷ்க சதருவன் நம்பிக்கை தருகின்றனர்.

இதில் குறிப்பாக ஆசிய விளையாட்டுப் போட்டி வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபரில்சீனாவின்ஹுவான்சூவில்நடைபெறவிருப்பதோடு, அதற்கு முன்னதாக ஆசிய தடகள சம்பியன்சிப் போட்டி ஜூலையில் தாய்லாந்தில் நடைபெறும். இதில் இலங்கை ஒருசில பதக்கங்களை வெல்லும் என்று பெரிதாக நம்பிக்கை உள்ளது.

என்றாலும் வரும் ஓகஸ்டில் ஹங்கேரியில் நடைபெறும் உலக தடகள சம்பியன்சிப் போட்டியில் இலங்கை ஒரு பதக்கத்தை வென்றாலும் பெரிய விடயம்.

கனிஷ்ட பிரிவில் பசிந்து மல்ஷான் (800மீ), ஹிரூஷ ஹேஷான் (நீளம் பாய்தல்), ருமேஷ் தரங்க (ஈட்டி எறிதல்) மற்றும் மதுஷன் ஹேரத் (முப்பாய்ச்சல்) ஆகியோர் திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இதன்படி கனிஷ்ட பிரிவில் ஐந்து தடகள வீரர்கள் மற்றும் இளையோர் மட்டத்தில் ஐந்து தடகள வீரர்கள் மீது பதக்க எதிர்பார்ப்பு உள்ளது.

18 வயதுக்கு உட்பட்ட ஆசிய தடகளப் போட்டி வரும் ஒக்டோபரில் குவைட்டில் நடைபெறவிருப்பதோடு, தொடர்ந்து 18 வயதுக்கு உட்பட்ட ஆசிய இளையோர் சம்பியன்சிப் போட்டி ஏப்ரலில் உஸ்பகிஸ்தானிலும், 20 வயதுக்கு உட்பட்ட ஆசிய சம்பியன்சிப் போட்டி ஜூனில் கொரியாவிலும் நடைபெறவுள்ளன.




### வலைப்பந்து

கிரிக்கெட்டுக்கு அடுத்து 2023 ஆம் ஆண்டில் வலைப்பந்தில் இலங்கை அதிக எதிர்பார்ப்பை வைத்திருக்க முடியும். கடந்த ஆண்டு ஆசிய சம்பியனான இலங்கை வலைப்பந்து அணி இந்த ஆண்டில் உலகக் கிண்ண வலைப்பந்துப் போட்டியில் பங்கேற்கிறது.



உலகக் கிண்ணத்தில் பங்கேற்க இலங்கை அணி வரும் ஜூலை மாதம் தென்னாபிரிக்கா பயணிக்கிறது. உலகத் தரவரிசையில் 16 ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை இம்முறை உலகக் கிண்ணத்தில் சற்று எதிர்பார்ப்பை வைத்திருக்கலாம்.

மறுபுறம் ஆசிய கனிஷ்ட வலைப்பந்து சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை கனிஷ்ட வலைப்பந்து அணி வரும் ஜூன் மாதம் தென் கொரியா பயணிக்கும். சிரேஷ்ட அணியை பின்பற்றி கனிஷ்ட அணியும் திறமையை வெளிப்படுத்துவது எதிர்காலத்துக்கு உகந்ததாகும்.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




Hirunika
Pix by: Shan Rupassara

# நிலத்திலும் மீன் பிடிக்கலாம்!





நுரையீரல் மீன் விசித்திரமானது. இன்றிருக்கும் எந்த விலங்குடனும் ஒப்பிட முடியாது. வரலாற்றுக்கு முந்திய விலங்கு என்றும் இதனை அழைப்பார்கள். கிட்டத்தட்ட 400 மில்லியன் ஆண்டுகளாக அது தனது உடல் அமைப்பில் எந்த பரிணாம மாற்றமும் இன்றி இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்வார்கள். இதனால் இந்த மீனை உயிர்வாழும் புதை படிவம் என்றும் அழைக்கிறார்கள்.

பார்க்க விலாங்கு மீன் போலத் தெரியும் நுரையீரல் மீன் நன்னீரில் வாழும் ஒரு மீன் இனம். இந்த மீன் இங்கெல்லாம் கிடைக்காது. ஆபிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய பிராந்தியங்களிலேயே இருக்கும். எனவே இதன் அதிசய வாழ்க்கை எமக்கு மேலும் அதிசயமாகவே இருக்கும்.

ஆபிரிக்காவில் இருக்கும் பெரிய குளம், குட்டைகளும் கூட கோடை காலத்தில் வறண்டு சொட்டுத் தண்ணீர் இல்லாமல் போய்விடும். அப்போது நுரையீரல் மீன் என்ன செய்யும் தெரியுமா? நீரில் சுவாசிப்பதற்கு பதில் தரையில் இருக்கும் விலங்குகள் போல் நேராக காற்றை சுவாசிக்கும்.

அடுத்தது, நீரில்லாமல் தரையில் வாழ முடியாது, எனவே குளத்தில் நீர் வற்ற ஆரம்பிக்கும்போது அது மண்ணுக்குள் புதைந்துக்கொள்ளும். உடலைச் சுற்றி ஒரு திரவத்தை சுரக்கச் செய்து ஒரு பாது காப்பான அமைப்பை உருவாக்கும். பின்னர் உடலின் இயக்கத்தை முற்றிலுமாக நிறுத்தி ஆழ்ந்த உறக்க நிலைக்குச் சென்றுவிடும்.

அதாவது குளம் இருந்த தடயமே இல்லாமல் மண் உலர்ந்து போனாலும் அந்த மண்ணுக்கு அடியில் எந்த உணவும் இல்லாமல் இந்த மீனால் உயிர் பிழைக்க முடியும். அடுத்த மழைக்காலம் தொடங்கி மீண்டும் குளம், குட்டை உருவாகும் வரை அந்த மீன்கள் ஆழ்ந்த உறக்க நிலையில் உயிரை காத்துக்கொள்ளும். இவ்வாறு நுரையீரல் மீனால் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் மண்ணுக்குள் புதையுண்டு உயிரை காத்துக் கொள்ள முடியும்.

ஆபிரிக்க மக்கள் மண்ணை தோண்டி இந்த மீன்களை பிடித்து உட்கொள்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் அதன் சுவை பிடிக்காது.

## அடிமை வர்த்தகர்களுக்காக இன்றும் பணம் செலுத்திய பிரிட்டன் மக்கள்



பிரிட்டிஷ் பேரரசில் அடிமை வர்த்தகம் கொடிகட்டி பறந்த காலம் ஒன்று உண்டு. 1640 மற்றும் 1807ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பிரிட்டன் தனது அமெரிக்காஸ் மற்றும் கரீபியன் காலனிகளுக்கு ஆபிரிக்காவில் இருந்து 3.1 மில்லியன் அடிமைகளை கடல் வழியாக அழைத்துச் சென்றிருக்கிறது. இந்த பயங்கரப் பயணத்தில் உயிர் பிழைத்து அடிமையாகச் சென்றவர்கள் 2.7 மில்லியன் பேர்.

எப்படி இருந்தபோதும் 1833ஆம் ஆண்டு பிரிட்டனில் அடிமை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி அடிமைகளை வைத்திருக்கும் உரிமையாளர்களுக்கு அவர்களை விடுவிப்பதற்கு இழப்பீடாக நிதி ஒதுக்கப்பட்டது.

அந்த நிதி அப்போது பிரிட்டிஷ் மொத்த பட்ஜட்டில் 40 வீதமான தொகையாகும். இதற்காக பிரிட்டிஷ் அரசு கடன் வாங்கிய தொகை பெரும் எண்ணிக்கை. இந்தக் கடன் முழுமையாக கொடுத்து முடிக்கப்பட்டது 2015 ஆம் ஆண்டில்தான். அதாவது தெரிந்தோ, தெரியாமலோ பிரிட்டன் மக்கள் இன்று வரையில் அடிமை வர்த்தகத்தை ஒழிப்பதற்கு பணம் கொடுத்திருக்கிறார்கள் என்பதே உண்மை.

# போர்... போர்... போர்...

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



உலகின் பதியப்பட்ட வரலாறு ஆரம்பித்து 3500 ஆண்டுகள் கடந்திருக்கிறது. உலகில் அமைதி நிலவிய காலம் என்று கணித்துப் பாத்தால் அது 268 ஆண்டுகள் மாத்திரம்தான் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அதாவது பதிவான உலக வரலாற்றில் 8 வீதமான காலம்தான் அமைதி நீடித்திருக்கிறது.

இதன்படி பார்த்தால் ஒட்டுமொத்த வரலாற்றிலும் போரினால் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 150 பில்லியனில் இருந்து ஒரு பில்லியன் வரை இருக்கும். அதிலும் இருபதாம் நூற்றாண்டில் குறைந்தது 108 மில்லியன் மக்கள் போரினால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இது தவிர போரினால் ஏற்படும் பாதிப்புகள் சொல்லிலடங்காது. குறிப்பாக ஆண்கள் தமது மனைவிமார்களிடம் இருந்து பிரிக்கப்படுவதால் பிறப்பு விகிதம் குறைகிறது. இரண்டாம் உலகப் போரில் பிறப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் மக்கள் தொகையில் 20 மில்லியன் மக்கள் குறைந்திருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது.

போர் என்றால் இரண்டாம் உலகப் போர் பற்றி குறிப்பாகச் சொல்ல வேண்டும். ஜெர்மனியின் ட்ரஸ்டனில் இரண்டு நாட்கள் இடம்பெற்ற குண்டு வீச்சுகளில் 135,000 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டார்கள். ஒரு வாரத்தின் பின் ஜெர்மனியின் பொசைம் நகரில் 22 நிமிடங்களில் 17,800 பேர் கொல்லப்பட்டார்கள். ரஷ்யாவின் லெனின்கிரேட்டில் மூன்று ஆண்டுகள் நீடித்த போரில் அந்த நகரின் மக்கள் தொகை 600,000 ஆக குறைந்தது. அங்கு போருக்கு முன் 2.5 மில்லியன் மக்கள் வாழ்ந்தார்கள். ஒரு மில்லியன் பேர் வெளியேற்றப்பட்டார்கள், 100,000 பேர் சோவியட் படையில் சேர்க்கப்பட்டார்கள், 800,000 மக்கள் கொல்லப்பட்டார்கள்.



கடந்த காலங்களை ஏன் பார்க்க வேண்டும் வெளிநாட்டு கொள்கைகளின் சபை மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி இப்போது கூட உலகில் 27 போர்கள் இடம்பெற்று வருகின்றன. பெரிதாகப் பேசப்படும் உக்ரைன் போர் தொடக்கம் அதிகம் அவதானம் செலுத்தப்படாத எத்தியோப்பிய மோதல் வரை அந்த யுத்தங்களில் உயிர்கள் கொல்லப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் எப்போதும் இல்லாத அளவில் மோதல்கள் அதிகரித்து வருவதாக ஐ.நா எச்சரிக்கிறது. போதாக் குறைக்கு ரஷ்யா மற்றும் வட கொரியாவின் அணு ஆயுத மிரட்டல்கள் உலகை மேலும் ஆபத்துக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இப்போது உலகில் வாழும் 2 பில்லியன் மக்கள் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயே உள்ளனர். இது உலக மக்கள் தொகையில் கால்பங்காகும். கடந்த ஆண்டில் 84 மில்லியன் மக்கள் போரினால் இடம்பெயர்ந்திருப்பதோடு இந்த ஆண்டில் குறைந்தது 274 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன.

தற்போது இடம்பெறும் போர்களிலேயே மிக நீண்டது மியன்மார் சிவில் யுத்தம் தான். அதற்கு வயது 60 ஆண்டுகள் ஆகிறது. அதாவது முன்னர் பர்மாவாக இருந்த மியன்மார் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது தொடக்கம் நாட்டில் உள்ள சிறுபான்மை குழுக்களுடன் அரசு போரிட்டு வருகிறது.

# பேய்கள், ஆவிகளின் அட்டகாசம்





மக்கள் முதன் முதலில் கதை கூற ஆரம்பித்த நாள் முதல் பேய் கதைகளுக்கு பஞ்சமில்லாமல் கூறி வருகின்றனர். இவ்வகையான விஷயங்களை மாக்பெத் முதல் பைபிள் வரை காண நேரிடலாம். இப்படி நாம் கேட்டு வந்த கதைகள் நமக்குள் ஊறி போய் விட்டது என்று கூட சொல்லலாம்.

குறைந்தது நம் ஆன்மா அளவிலாவது பேய் பிசாசு பற்றிய எண்ணங்கள் பதிந்திருக்கும். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பல விந்தையான நிகழ்வுகளுக்கு விளக்கம் அளிக்கவும் இந்த பேய் பிசாசு விஷயங்கள் கைகொடுக்கிறது.

இதனைப் பற்றிய ஆய்வுகள் பலவற்றை பார்க்கையில், மக்கள் தொகையில் 45% பேர்கள் பேய்கள், ஆவிகள் மற்றும் அமானுஷ்ய சக்திகளின் மீது நம்பிக்கை வைத்துள்ளது தெரிய வந்துள்ளது. பேய்கள் மற்றும் ஆவிகளை சுற்றி நிலவும் வேடிக்கையான கதைகள் மற்றும் நம்பிக்கைகளைப் பற்றி தான் இப்போது பார்க்க போகிறோம்.

ஆவிகள் இரவு நேரத்தில் மிகவும் முனைப்புடன் செயல்படும். அதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுவது வெளிச்சம் குறைவாக இருப்பதே. பேய் போன்ற உருவெளித் தோற்றங்களுக்கு இது மிகவும் தொந்தரவாக இருக்கும்.



இந்த காரணத்திற்காக தான் வீடு அமைதியாக இருக்கும் நேரத்தில் பேய் தொந்தரவுகளை உணர முடிகிறது.

ஆவிகள் பல விதங்களில் வெளிப்படும். அடர்த்தியான வெளிச்சம், இருட்டு நிழல்கள், பனி மூட்டங்கள், விந்தையான தெளிவற்ற உரு போன்றவைகள் இதில் அடக்கம். முழு உடலுடன் அவைகள் வெளிப்படவும் வாய்ப்புகள் உள்ளது. ஆனால் அவை மிகவும் சாத்தியமற்றது.

ஆவிகள் பல விதங்களில் வெளிப்படும். அடர்த்தியான வெளிச்சம், இருட்டு நிழல்கள், பனி மூட்டங்கள், விந்தையான தெளிவற்ற உரு போன்றவைகள் இதில் அடக்கம். முழு உடலுடன் அவைகள் வெளிப்படவும் வாய்ப்புகள் உள்ளது. ஆனால் அவை மிகவும் சாத்தியமற்றது.

பொதுவாக குழந்தைகள் மற்றும் மிருகங்களின் கண்களுக்கு பேய்கள் தெரியுமாம். சில குழந்தைகள் பேய்களை தங்களின் கற்பனை நண்பர்களாக எடுத்துக் கொள்வார்கள்.

மெழுகுவர்த்திச் சுடர் திடீரென நீல நிறத்தில் மாறினாலோ அல்லது எந்தவொரு காற்றுமின்றி திடீரென அணைந்தாலோ, கண்டிப்பாக அங்கே பேய்கள் உள்ளது.

பொதுவாக சில ஆவிகள் உதவும் குணத்தை உடையது. அவை தீய சக்திகளில் இருந்து குடும்பத்தை பாதுகாக்கவும் செய்யும்.

பேய்கள் இருப்பதை அல்பர்ட் ஐன்ஸ்டீன் கூட அறிவியல் ரீதியான அடிப்படையில் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆற்றல் திறனை உருவாக்கவோ அழிக்கவோ முடியாது.

மாறாக அதன் உருவை மட்டுமே மாற்ற முடியும். அப்படியானால் நாம் இறந்த பிறகு நம் ஆற்றல் திறன் என்னவாகும்? ஒரு வேளை, அதுவே பேயாக உரு மாறுமோ?



அல்பர்ட் ஐன்ஸ்டீன் முதலானவர் கிடையாது. மரணத்திற்கு பின்பான வாழ்க்கை என்ற வடிவில் பேய்களைப் பற்றிய கருத்தமைவை பார்க்கையில், நாம் பண்டைய கால எகிப்திய வரலாற்றுக்கு செல்ல வேண்டும்.

அதன் படி, மரணம் என்பது ஒரு உருவத்தில் இருந்து மற்றொரு உருவத்திற்கு செல்லக்கூடிய மாற்றம் மட்டுமே என மக்கள் நம்பினர்.

வெள்ளை மாளிகையில் பல பேய்கள் உள்ளது என நம்பப்படுகிறது.

குறிப்பாக அபிகைல் ஆடம்ஸ் என்ற இறந்து போன பெண், தன் துணிகளை தொங்கவிட்டிருந்த கிழக்கு அறை நோக்கி அடிக்கடி செல்வதை பலர் பார்த்துள்ளனர்.

வுட்ரோ வில்சன் அவர்கள் தலைமைப்பதவியில் இருந்த போது, டோலி மடிசன் புதைக்கப்பட்டிருந்த ரோஜா தோட்டத்தை தோண்டுமாறு தோட்டக்காரர்களை முதலில் வந்துள்ள பெண்மணி கட்டளையிட்டுள்ளார்.

வெளியே வந்த டோலியின் ஆவி, பேய் பயத்தை அந்த தோட்டக்காரர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என கூறப்படுகிறது. இதனால் ஒரு அடி கூட தோண்டாமல் அவர்கள் எல்லாம் தலைத் தெறிக்க ஓடியிருக்கிறார்கள். இந்த தோட்டம் கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளுக்கு பூத்து குவிந்துள்ளது.

ஆபிரகாம் லிங்கன் இறந்த பிறகும் கூட வெள்ளை மாளிகையை விட்டு செல்லவில்லை என ஆவி ஆற்றலுடன் தொடர்பு கொள்ளக் கூடியவர்கள் கூறுகின்றனர். 70 வருட ஆண்டுகளுக்கு மேலாக, லிங்கன் அவர்களை ஒன்று பார்த்திருப்பதாக அல்லது உணர முடிவதாக ப்ரெசிடெண்ட்கள், முதல் பெண்மணிகள், விருந்தாளிகள் மற்றும் வெள்ளை மாளிகையின் உறுப்பினர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக ஃபிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் அவர்களின் நிர்வாகத்தின் போது, உலகப்போரை தொடர்ந்து மிகப்பெரிய பேரழிவை நாடு சந்தித்து வந்த வேளையில், லிங்கனின் ஆவி அடிக்கடி காணப்பட்டது. ஒரு முறை நெதர்லாண்ட் நாட்டின் ராணி, வெள்ளை மாளிகைக்கு விருந்தாளியாக வந்திருந்த போது, ஒரு நாள் இரவு தூங்கி கொண்டிருந்த போது, யாரோ தன் படுக்கையறை கதவை தட்டும் சப்தம் கேட்டு அவர் விழித்திருக்கிறார்.

கதவை திறந்த போது, நீளமான தொப்பியுடன் பாதையில் நின்று கொண்டிருந்த லிங்கனின் உருவத்தை அவர் பார்த்து அதிர்ந்துள்ளார்.

உடனே மயங்கியும் விழுந்துள்ளார். நினைவு திரும்பிய போது தான் கீழே விழுந்து கிடந்ததை உணர்ந்துள்ளார். ஆனால் அந்த ஆவி எதுவும் அங்கே அப்போது இல்லை.

## தினகரனில் வெளியான "அடிமையின் காதலி"

# நாவல் மூலம் ஈழத்தின் முதல் பெண் சரித்திர நாவலாசிரியையான சிவயோகமலர்



தினகரனில் வெளியான "அடிமையின் காதலி" என்ற சரித்திர நாவலின் மூலம் ஈழத்தின் முதல் பெண் சரித்திர நாவலாசிரியையாக சாதனை படைத்த திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்.

(ஈழத்தின் முதல் தமிழ் பெண் சரித்திர நாவலாசிரியையும் ஏழாந் தலைமுறைப்படைப்பாளியுமான அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் அமரத்துவம் அடைந்து 16.01.2023ஆம் திகதியுடன் ஒன்பது ஆண்டுகளாகின்றன. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது)

இலக்கியம் படைத்து புகழ் பெற்ற அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் வடமராட்சி மண்ணின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை மையமாகக் கொண்டுதனதுபடைப்புக்களை ஈழத்தின் இலக்கிய உலகுக்கு அளித்துள்ளார்.




அடிமையின் காதலி எனும் சரித்திர நாவலின் மூலம் ஈழத்தின் முதல் பெண் சரித்திர நாவலாசிரியர் என்ற பெருமையைப் பெற்றவர். இவர் அமரத்துவம் அடைந்து 16ந் திகதியுடன் ஒன்பதாவது ஆண்டுகளாகின்ற போதிலும் அவரது படைப்புக்கள் பற்றி இன்றும் பாராட்டி பேசப் பட்டு வருகின்றது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் குறிப்பாக பெண் எழுத்தாளர்களிறல் தனியான முத்திரை பதித்துள்ளவர் திக்கம் சிவயோகமலர். இவர் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் மேற்கு "திக்கம்" என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்.1950 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை திக்கம் மெதடிஸ் மிஷன் பாடசாலையில் பெற்றுக் கொண்டார்.

இப்பாடசாலை ஐந்தாம் வகுப்பு வரையுமே கொண்டிருந்ததால் ஆறாம் வகுப்பைப் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தர கல்லூரியில் ஆரம்பித்தார்.

பின்னர் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் உயர் கல்வியை மேற் கொண்டார்.

பின்பு பல்கலைக்கழகத்தில் இணைந்து கலைப்பட்டதாரியானார். ஆசிரியத் தொழிலில் பிரவேசித்த இவர் தேர்தல் திணைக்களம், யாழ் மாவட்ட தேசிய வீடமைப்புத் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றி அரச அதிகாரி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். இவரது கணவர் அரச சேவையில் கணக்காளராகக் கடமையாற்றிய நாடறிந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் எஸ்.ஜே. ஜெயக்குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது முதல் சிறுகதை "மகன்; தேடிய வீடு" 1984 ஆம் ஆண்டு சிந்தாமணியில் பிரசுரமாகியது. 1997 ஆம் ஆண்டு தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் பழைய மாணவர் சங்க பிரேஞ்சுக் கிளையினர் நடத்திய பாவலர் தெ.து.துரையப்பா பிள்ளை நினைவு அகில உலகச் சிறுகதைப்போட்டியில் இவரது "பிறந்த மண்" சிறுகதை முதற் பரிசைப் பெற்றுக் கொண்டது.

மோல்டே தமிழ் கலை, கலாசார மன்றம் பத்தாவது வருட நிறைவையொட்டி உலகளாவிய ரீதியில் நடத்திய நாடக எழுத்துப் போட்டியில் இவரது "புலம் பெயரும் பாசங்கள்" நாடகப் பிரதி முதற் பரிசைப் பெற்றுக் கொண்டது.

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் கத்தோலிக்க சாகித்திய தினத்தை முன்னிட்டு ஞானார்த்த பிரதீபவின் அனுசரணையுடன் நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் "பாவத்தின் சுவடுகள்" என்னும் சிறுகதை முதலாவது பரிசைப் பெற்றுக் கொண்டது.

1998 ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளியான பாவத்தின் சுவடுகள் என்னும் இச் சிறுகதை கலாசார சமய அலுவல்கள் அமைச்சினால் அவ்வாண்டுக்கான சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்பட்டு விருதும், பணப் பரிசும் வழங்கப்பட்டது.

"தினகரன் பத்திரிகையும், துரைவி நிறுவனமும் இணைந்து நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவரது "சாமேளம்"சிறுகதை பரிசைப் பெற்றுக் கொண்டது.

இச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற ஒரே பெண் எழுத்தாளர் இவரே என்ற பெருமையும் பெற்றார்.

"சிரித்திரன்" சஞ்சிகை 1990 ஆம் ஆண்டு நடத்திய சித்திரச் சிறுகதைப் போட்டியில் இவரின் "வானம் பொய்க்கவில்லை" என்ற சிறுகதை முதற் பரிசைப்பெற்றுக் கொண்டது.

யாழ் இலக்கிய வட்டமும், ஈழநாடு பத்திரிகையும் 1984 இல் இணைந்து நடத்திய நாவல் போட்டியில் "கல்லுக்குள் ஈரம்" என்னும் இவரது நாவல் பரிசு பெற்றது. இதே கால கட்டத்தில் "முரசொலி பத்திரிகையும், யாழ், இலக்கிய வட்டமும் இணைந்து நடத்திய குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டியில் இவரது "தேட்டம்" குழந்தைக் கவிதைகள் தொகுப்பு பரிசு பெற்றது.

2013 ஆம் ஆண்டு ஹொரணை பிரதேசசபை நடத்திய சரத் சந்திரஜயக் கொடி ஞாபகார்த்த சாகித்திய விழாவையொட்டிய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவரது "மண் வாசம்" சிறுகதை இரண்டாவது பரிசையும் விருதையும் பெற்றுக் கொண்டது.

2000 ஆம் ஆண்டு "கலைமகள்" ஹிதா யாறிஸ்வியைப் பிரதம ஆசிரியராகக் கொண்ட "தடாகம்" சஞ்சிகை அகில இலங்கை ரீதியாக நடத்திய சிறுகதைப் போட்டியில் தற்பரிசைப் பெற்றுக் கொண்டார்.

கண்டி கல்ஹின்ன தமிழ் மன்றத்தின் நூறாவது பிரசுரமான சிரேஷ்ட எழுத்தாளர் சட்டத்தரணி கல்ஹின்ன எஸ். எம் ஹனிபா தொகுத்த மலை ஒளி பல்துறை மலரில் (2001) தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு சிறுகதையாக திக்கம் சிவயோகமலரின் சுயம் சிறுகதை இடம் பெற்றுள்ளது.

இவரது சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர் கதைகள் ஈழநாடு, வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, முரசொலி, ஈழமுரசு, சுடர்ஒளி, தினமுரசு முதலிய பத்திரிகைகளிலும் லண்டன் தமிழ் உலகம், சிரித்திரன், கற்பகம், அருள் ஊற்று, நமதுதூது , ஒளி அரசி சஞ்சிகைகளிலும் நூல் தொகுப்புக்களிலும் பிரசுரமாகின.

ஈழத்தின் தரமான பெண் எழுத்தாளர்களில் ஒருவரான திக்கம் சிவயோகமலரின் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன என்று அமரர் கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) எழுதிய ஈழத்துச் சிறுகதை வரலாறு என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லிகை 43 ஆவது ஆண்டு மலரில் (ஜனவரி 2008) ஈழநாடு பத்திரிகையின் புனைகதைப் பங்களிப்பு என்னும் தலைப்பில் இடம்பெற்ற ஆய்வுக் கட்டுரையில் இவரது நல்ல சிறுகதைகளாக அவள் அகதி இல்லை மயங்குகிறாள் ஒரு மாது, மலர்தாவும் வண்டுகள் ஆகியன வெளிவந்துள்ளன என்று விதந்துரைக்கப்பட்டுள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பதிவில் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் ஏழாந் தலைமுறைப்படைப்பாளியாக முத்திரையிடப்பட்டுள்ளார். மல்லிகை இதழ் தனது 34 ஆவது ஆண்டு மலரில் (ஜனவரி 1999) இவரது படத்தை அட்டைப் படமாகப் பிரசுரித்துக் கௌரவித்தது.

இந்த நாவலாசிரியையின் இலக்கிய முயற்சிகள் பற்றிய ஆய்வு சப்பிரகமுவ பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீட மொழித்துறைப் பட்டதாரி மாணவி செல்வி மீராவினால் மேற் கொள்ளப்பட்டுச் சிறப்புப் பட்டத்துக்கு அங்கிகாரம் பெற்றதுடன்; ஆய்வு நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

தனது குடும்பத்துக்கும் இலக்கிய உலகுக்கும் புகழ் சேர்த்த இச் சரித்திர நாவலாசிரியை தனது 64 ஆவது வயதில் (16.01.2014 இல்) மறைந்தது ஈழத்து இலக்கிய உலகுக்கு துரதிர்ஷ்டமே எனலாம்.

இவர் நாடளாவிய, உலகளாவிய ரீதியில் தனது எழுத்தாற்றலால் பல சாதனைகளைப் புரிந்து ஈழத்து இலக்கியத்துறையில் ஒரு அழியாப் புகழ் பெறும் இடத்தைப் பிடித்திருக்கிறார்.

அவர் தனது கணவரையும் ஒரே மகனான றுக்மாங்கதனையும் விட்டுப் பிரிந்து சென்று விட்டார்.

அமரரது இலக்கிய படைப்புகள் நூலுருப் பெறாமல் இருக்கின்றன. அவை வெளிக்கொண்டு வரப்பட்டால் தான் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் என்ற படைப் பாளியை முழுமையாகக் காணமுடியும்.

இந்த வகையில் அமரரது கணவர் எஸ்.ஜே ஜெயக்குமார் அமரருக்குப் புகழ் தேடிக் கொடுத்த அடிமையின் காதலி சரித்திர நாவலைச் சிறப்பான வகையில் நூலாக வெளியிட்டுள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

ஈழத்தின் முதல் தமிழ்ப்பெண் சரித்திர நாவலாசிரியையின் அடிமையின் காதலி சரித்திர நாவல் என்ற வகையில் பல நூற்றாண்டுகள் கடந்தாலும் இலக்கிய உலகில் கல்வெட்டுப் போன்று இடம்பெறும் என்பது திண்ணம்.

கலைவாணி இரா சுப்பிரமணிய சர்மா...✍
(ஓய்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)

## சாமஸ்ரீ சமூக சேவையாளர் விருது விழாவில்

# ஊடகவியளாளர் உதயகாந்திற்கு "சாமஸ்ரீ தேசமானிய" விருது வழங்கி கௌரவம்!!

அகில இன நல்லுறவு ஒன்றியம் நடாத்தும் சாமஸ்ரீ சமூக சேவையாளர் விருது விழா "வாழும் போதே வாழ்த்துவோம்" எனும் தொனிப்பொருளில் நேற்று மட்டக்களப்பில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

கல்வி, கலை, கலாசார, வர்த்தக, சமூக நலத்துறைகளில் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 88 புத்தி ஜீவிகளுக்கும், சாதனையாளர்களுக்குமான "சாமஸ்ரீ சமூக சேவையாளர்" விருது வழங்கும் விழா (24) சனிக்கிழமை மட்டக்களப்பு ஊறணி ஹிரிபோஜன் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் கலாபூசணம் யு.எல்.எம். ஹனிபா தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கே.கருணாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பல்துறை சாதனையாளர்களுக்கான விருதினை வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக கலாநிதி பொன். நல்லரெத்தினம், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் இ.உதயகுமார் மற்றும் அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரியின் அதிபர் மா.சோமசூரியம் உள்ளிட்டோரும், சிறப்பு அதிதிகளாக காத்தான்குடி தள வைத்தியசாலையின் வைத்தியர் எம்.எஸ்.எம்.ஜாபிர் மற்றும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் கலாநிதி எஸ்.எம்.சதாத், அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்குரிய இணைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்,

இதன்போது பல்துறைசார் சாதனையாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து "சாமஸ்ரீ தேச மானிய" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளுக்கும் இதன்போது நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில், ஊடகத்துறை சார்ந்து செயற்பட்டுவருகின்ற சுயாதீன ஊடகவியளாளர் உதயகுமார் உதயகாந்திற்கு "சாமஸ்ரீ தேசமானிய" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஊடகத் துறையில் 10 வருட அனுபவம் உள்ளவராகவும், மாவட்ட மட்டத்தில் சமூக சேவையாற்றிவரும்

ஐக்கிய மக்கள் சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபக தலைவராகவும், சமாதான நீதவானாகவும், மட்டக்களப்பு மாவட்ட சர்வமத ஒன்றியம், கிழக்கு ஊடக ஒன்றியம் ஆகியவற்றின் ஊடக இணைப்பாளராகவும், இளைஞர் கழகத்தின் ஆலோசகராகவும், கிராம அபிவிருத்தி சங்கத்தில் நீண்டகாலமாக பல முக்கிய பதவிகளை வகித்து சமூகத்திற்காக சேவையாற்றியுள்ளதுடன், இவர்

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் தேசிய ஊடகச் செயலாளராகவும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


















Uva Suren



கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்து எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முஜிபுர் ரஹ்மான், எஸ். எம். மரைக்கார் ஆகியோர் அக்கல்லூரிக்கு பேரூந்து ஒன்றை கையளித்த நிகழ்வின் போது பரத நாட்டியம் இடம் பெற்றது. அதில் அஸீஸா வஸீர் பரத நாட்டியம் ஆடினார். இவர் நடிப்புச் சக்கரவர்த்தி எம். எம். ஏ. லத்தீப்பின் பேத்தி என்பது குறிப்பிடத்தக்கது.





பாத்திமா சிஸா
(22.12.2022 )
மொஹமட் சப்ரான்
பாத்திமா ரிம்ஸானா
(படம்: எம்.நஸார்)

# கிழக்கு மாகாண "ஊடகத்துறை வித்தகர் விருது" பெற்ற ஊடக ஆளுமை இஸ்மாயில் பி மஆரிஃப்



கிழக்கு மாகாண "ஊடகத்துறை வித்தகர் விருது" பெற்றார் ஊடக ஆளுமை மருதமுனை முகம்மது இஸ்மாயில் பஹ்றுல் மஆரிஃப்(இஸ்மாயில் பி மஆரிஃப்) கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய 2021ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழா அண்மையில் திருகோணமலை. விவேகானந்தா கல்லூரியில் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ்.சரண்யாவின் நெறிப்படுத்தலில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யு.ஜி.திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.இதன் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் இவருக்கான விருதை வழங்கி கௌரவித்தார்.



இவர் எல்லோருடனும் சிறந்த நட்பைப் பேணி வருபவர். ஆசிரியராகவும், ஆங்கில மொழியில் புலமை உள்ளவராகவும், ஒலி, ஒளிபரப்பாளராகவும், ஊடக ஆளுமையாகவும், சட்டத்தரணியாகவும், அரசியல்வாதியாகவும்,சமூக சேவையிலும் தன்னை ஆழமாகவும், அகலமாகவும் தடம் பதித்துள்ள ஒரு பல்துறை ஆளுமை மருதமுனை முகம்மது இஸ்மாயில் பஹ்றுல் மஆரிஃப் ஆவார்.



இவர் மருதமுனையைச் சேர்ந்த ஆலியார் முகம்மது இஸ்மாயில், உதுமாலெப்பை ஹஜ்ஜும்மா தம்பதிக்கு மகனாக 1963ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஆறாம் திகதி மருதமுனையில் பிறந்தவர்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி தேசிய பாடசாலை, மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்றவர்.பாடசாலைக் காலத்தில் எல்லாத் துறையிலும் திறமையைக் காட்டியவர் இதனால் பாடசாலை சமூகத்தால் பாராட்டப்பட்டு அடையாளப் படுத்தப்பட்டவர்.

### ஆசிரியர் சேவை

1988ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19ஆம் திகதி ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று பொலன்னறுவை மாவட்டத்தில் பங்குறாண முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்று கடமையாற்றியவர்.அக்காலத்திலேயே தொலைக் கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சி நெறியை கொழும்பு மஹானாம கல்லூரியில் பூர்த்தி செய்தவர்.

அதன் பின்னர் பொலநறுவை மாவட்டத்தில் கல்லெல்ல முஸ்லிம் வித்தியாலயத்தில் கற்பித்தவர்.

(07ஆம் பக்கம் பார்க்க)

பி.எம்.எம்.ஏ.காதர்...
மருதமுனை தினகரன் நிருபர்













# ஏழ்மை ஒழித்த நான் சொன்னது கொஞ்சம் பார்

உண்டு வாழ
நின்று யோசி.
வென்று போகலாம்
நெறி நின்று.
பரந்த உலகில்
விரிந்து கிடக்கிறது.
வாழும் வழி
நிறைந்து தான்.
தேடி எடு நீ
உனக்கொரு வழி.
போட்டி வந்தும்
தடுத்திட முடியாது.
விரும்பி எடுத்த
துறையில் இல்லை
இறுதி வரையும்
தோல்வி ஒன்று.
பசி கிடந்து நீ
இரக்கம் வாங்கி
வாழ்ந்து சாகவோ?
எழுந்து நடந்திடு.
கையிடும் சிறு
துரும்புணவும் வீண்.
துணிந்திட அது
தடுத்திடும் உனை.
உன் வழியினை
நீயன்றி யாரிங்கு
உனக்கு தந்திடலாம்.
குருவானாலும் முடியாது.
நடப்பது நீயானால்
உனை நடத்துவதும்
நீயாக மட்டுமிரு.

வெற்றி நிச்சயம்.
சிந்தனை சொன்னவர்
தாம் தோற்றது காணின்
அந்த சிந்தனை விட்டு
விலகி நீ செல் போதும்.
தோற்றவர் வந்து
உனக்கொரு சிந்தை
தந்து நின்றால் பார்
நீயும் கொஞ்சம் நில்.
பட்ட அனுபவமாக அது
இருக்கலாம். காண்.
இருந்தால் உனக்கொரு
வாழ்வு மீண்டும் மலரும்.
ஏழ்மை தந்தது
இறைவன் இல்லை.
இன்றிலிருந்து இதை
மாற்றிக் காட்டு.
சோர்ந்து போகும்
உன் மனதும் தான்.
இலக்கு இல்லாத உன்
வாழ்வும் கூடியதால்.
சோம்பேறி வந்து உனை
கூடியிருக்க வைத்தது.
கூடாதா நாலு வார்த்தை
பேசி குழப்பிப் போனது.
நொண்டிக் காலானாலும்
ஊன்றி நடந்திட முயன்றிடு.
வீழ்ந்தாலும் நீயிங்கே
எழுந்து நடந்திட முயன்றிடு.
வழிகள் தான் வந்து
பிறந்து நிற்கும் காண்பாய்.

சேர்த்தது சேமிக்கவும்
அதை காத்திடவும் பழகு.
தேவைக்கு எதுவோ
அதை நுகர்ந்தால்
நீர் வற்றாத குளமாக
இருக்கும் உன் வாழ்வு.
பட்டது கொண்டு நானும்
சொன்னது இது பார்.
கேட்டது நீயானாலும்
சொன்னது நான் தான்.
சொன்னபடி சென்று நீ
தோற்றுப் போவதிலும்
நின்று கொஞ்சம் யோசி.
உனக்கு பொருந்துமா கேள்.
கேட்டு விட்டு நீயும்
யோசித்து சிந்தை கொள்.
உனக்கென மாற்றி யதை
புதிய பாதை ஆக்கிக்கொள்
வென்று போகலாம்.
என்னோடு நீயும்
சேர்ந்து போகலாம்.
இருந்தும் தள்ளி நில்.
தொழில் செய்யும் நீ
உன் இரகசியம் பேண்.
தொடர்ந்திட வேண்டும்
இதும் தான் பார் அன்பே!

**அன்புடன் நதுநசி**



**கணவன்:** பொண்டாட்டியை விட பொண்டாட்டியோட புடவைதான் நமக்கு ரொம்ப மரியாதை தருது...

எப்படி?

பீரோவ திறந்தா உடனே கால்ல விழுது!



**ஆசிரியை :** நா இன்னும் ஒரு வருஷத்துல ரிட்டையர்டு ஆக போறேன்பா...

**மாணவன்:** தேம்பி தேம்பி அழுகிறான்

**ஆசிரியை :** அழுவதாப்பா.... நா இன்னும் ஒரு வருஷம் இங்க இருப்பேன்....

**மாணவன்:** அத நெனைச்சாதான் சார் அழுகை வருது எனக்கு...



தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்ஜீஆரின் 35ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வும் தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் 6ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வும் சனிக்கிழமை நடைபெற்றது. கலாபூசணம் எஸ். எச். எம். இதிரீஸின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளிநாட்டவர்கள் நால்வரும் கலந்து கொண்டார்கள்.

*(06ஆம் பக்கத் தொடர்)*

அப்பாடசாலையைத் தொடர்ந்து பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரி, பொலநறுவை திவுலான முஸ்லிம் வித்தியாலயம், அதன் பின்னர் கொழும்பு அல்ஹிதாயா மகா வித்தியாலயம்,கொழும்பு கிரேண்ட்பாஸ் அல்நாசர் கல்லூரி, கொழும்பு அல்ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பித்தவர். ஆற்றல். ஆளுமை,முயற்சி என்பவற்றை நிறைவாகக் கொண்டவர்.

இவர் கற்பித்தல் மூலம் மாணவர்களைக் கவரும் ஆற்றல் கொண்டவராகச் செயற்பட்டு 2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30ஆம் திகதி முப்பது வருட அசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

### அறிவிப்புத்துறை வானொலி

இவர் பொலன்னறுவையில் கற்பிக்கும் போது இலங்கை வானொலிக்கு அறிவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தார்.இவர் 1991ஆம் ஆண்டு கொழும்பு பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றமாகி வந்த தருணத்தில் அறிவிப்பாளர் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகி 1995ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23ஆம் திகதி இலங்கை வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராக இணைந்தார்.

அதன் பின்னர் நாளாந்த அறிவிப்பு,விளம்பர அறிவிப்பு, போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் றமழான் காலத்தில் முஸ்லிம்; சேவையில் ஸஹர், இப்தார் நிகழ்வுகளிலும் அறிவிப்புச் செய்துள்ளார்.அதைத் தொடர்ந்து செய்தி வாசிப்பாளர் நேர்முகத் தேர்வில் தெரிவாகி செய்தி வாசிப்பாளராகவும் இன்று வரை கடமையாற்றுகின்றார்.

### அறிவிப்புத்துறை தொலைக்காட்சி

1996ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரை சுயாதீன தொலைக்காட்சி சேவையில் இணைந்து முதல் தமிழ் செய்தி வாசிப்பாளராகக் கடமையாற்றிய பெருமை இவரையே சாரும். நல்ல குரல் வளம்,சிறந்த தமிழ் உச்சரிப்பு என்பன இவரிடம் இருக்கின்ற நல்ல ஆளுமையாகும்.

### பத்திரிகைத்துறை

இலங்கையில் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுகின்ற கட்டுரையாளர்களில் குறிப்பிடத்தக்கவராக இஸ்மாயில் பி மஆரிஃப்பைக் குறிப்பிடமுடியும்.தமிழ்ச் சொல் வளம்,வாசிக்கத் தூண்டும் எழுத்து நடை,உண்மையான தேடல்.நேர்மையான எழுத்து என்பன இவரது கட்டுரைகளுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.அதிகமான கட்டுரைகள் இலங்கை அரசியலை மையமாகக் கொண்டவை.

இலங்கை அரசியலில் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற அரசில் பிறழ்வுகள் மற்றும் அரசியல் வாதிகளின் கட்சிகள் தாவும், மாறும் படலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.அத்துடன் சர்வதேச அரசியலையும் இவரது கட்டுரைகள் அலசியுள்ளன.

இவரது முதலாவது கட்டுரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன என்ற தலைப்பில் வீரகேசரி பத்திரிகையில் 2000 ஆம் ஆண்டு பிரசுரமாகியுள்ளது. அன்று தொடங்கிய இவரது எழுத்துப் பணி வீரகேசரி,வீரகேசரி வார வெளியீடு, தினகரன்,தினகரன் வாரமஞ்சரி,தினக்குரல்,ஞாயிறு தினக்குரல், நவமணி,சுடர் ஒளி, எங்கள் தேசம்,சங்கமம் ஆகிய பத்திரிகைகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளை இவர் எழுதியுள்ளமை குறிப்படத்தக்கதாகும்.இன்று வரை இவர் தொடராக எழுதிவருகின்றார். பத்திரிகைகளில் இவருக்கு தனி இடம் உண்டு.

### சட்டத்துறை (சட்டத்தரணி)

இவர் ஆசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கின்ற காலத்திலேயே 1995ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டுவரை இலங்கை திறந்த பல்கலைக்கழத்தில் சட்டமானி கற்கையைப் பூர்த்தி செய்து இலங்கை சட்டக் கலூரியில் இணைந்து சட்டத்தரணி கற்கையை நிறைவு செய்து 2002ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தற்பொழுது கொழும்பு நீதவான் நீதிமன்றம்,மேன்முறையீட்டு நீதிமன்றம்,உயர் நீதிமன்றம்,மாவட்ட நீதிமன்றம்,சிவில் நீதிமன்றம்,வர்த்தக மேன் முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் சட்டத்தரணியாகக் கடமையாற்றி வருகின்றார்.

### சமூகசேவை

ஸ்லைசோ என்ற பெயரில் சமூக சேவை அமைப்பொன்றை உருவாக்கி நீண்ட காலமாக மக்களுக்கான சமூக சேவையைச் செய்து வருகிறார்.

சுனாமிக்குப் பின்னரான காலப் பகுதியில் சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்றைய தேவையாக இருந்த அத்தியவசியமான பொருட்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

ஆயிரக்கணக்கானோருக்கு தையல் இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், சமையல் உபகரணங்கள், துணிவகைகள் மற்றும் பண உதவிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஊடகத்துறையில் பணியாற்றிய பல ஊடகவியலாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி பதக்கம் அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவித்த பெருமை இவரையே சாரும். மேலும் பெருந்தொகையான அதிபர்.ஆசிரியர்களுக்கும் பொன்னாடை போர்த்தி பதக்கம் அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவித்த பெருமையும் இவரையே சாரும். அத்தடன் மாணவர்களுக்கான பல பயிற்சிப்பட்டறைகளையும் நடாத்தி மாணவர்களை ஊக்குவித்தள்ளார். அவ்வப்போது கல்வியில் திறமைகாட்டுகின்ற மாணவர்களையும் கௌரவித்துள்ளார்.

### அரசியல்

இஸ்மாயில் பி மஆரிஃப் “சுயாதீன தேசிய முன்னணி” என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து வழி நடாத்தி வந்தார்.

2011ஆம் ஆண்டு கல்முனை மாநகர சபைத்தேர்தலில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்டு சொற்ப வாக்கு வித்தியாசத்தில் உறுப்பினர் பதவி கிடைக்காமல் போனமை குறிப்பிடத்தக்கது.

### விருதுகள்

விருதுகளைத் தேடிச்செல்லாத இவரைத் தேடிவந்த விருதுகள்:அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் விருது 2010, மான்புறும் மருதமுனை விருது 2016, இலங்கை தமிழோசை இணைய வானொலி வருது2017, கிழக்கு மாகாண “ஊடகத்துறை வித்தகர் விருது”2021 என்பனவாகும்.இவரது பணிகள் மென்மேலும் தொடர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

Senthooram
செந்தூரம்



சினி மஞ்சரி

# சுருதி ஹாசன் 'பிளஸ் பாயிண்ட்'



**நான்** உயரமாக இருப்பதை விமர்சனம் செய்தனர்' என நடிகை சுருதி ஹாசன் தெரிவித்துள்ளார். தமிழ், தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக உயர்ந்துள்ள சுருதிஹாசன் தற்போது தெலுங்கில் பிரபாசுடன் சலார், சிரஞ்சீவியுடன் வால்டர் வீரைய்யா மற்றும் பாலகிருஷ்ணா ஜோடியாக ஒரு படத்திலும் நடித்து வருகிறார். தனது உயரம் குறித்து சுருதிஹாசன் அளித்துள்ள பேட்டியில், ''நான் சினிமாவில் நடிக்க ஆரம்பித்த புதிதில் எனது உயரத்தை பார்த்து விமர்சனம் செய்தனர். நீ இவ்வளவு உயரமாக இருக்கிறாயே என்று எல்லோரும் வியப்பாக கேட்பார்கள். உனது உயரம் தான் உனக்கு மைனஸ் என்று கூட சொன்னார்கள். எனக்கும் கொஞ்சம் பயமாக இருந்தது. ஏனென்றால் சினிமா துறையில் உயரமாக இருக்கும் ஹீரோக்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. ஆனால் அதன்பிறகு ஒரு கட்டத்தில் உயரம் என்பது ஒரு பிரச்சினையே அல்ல என்று எனக்கு தெரிந்து விட்டது. இன்னும் சொல்ல போனால் எனக்கு உயரம் தான் 'பிளஸ் பாயிண்ட்' ஆகிவிட்டது. மகேஷ்பாபு, பிரபாஸ் போன்ற ஹீரோக்கள் ஜோடியாக நடிக்க எனக்கு வாய்ப்புகள் வந்ததற்கு காரணமே எனது உயரம் தான். ஆனால் எனக்குள்ளும் சில பலவீனங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதை சரி செய்துகொள்ள அப்போதைக்கு அப்போது முயற்சி செய்து கொண்டே இருக்கிறேன்'' என்றார்.

# அதிர்ஷ்டம் முக்கியம்



**சி**னிமா துறையில் அதிர்ஷ்டம் மிகவும் முக்கியம் என்று நடிகை நிதி அகர்வால் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். தமிழில் 'ஈஸ்வரன், கலக தலைவன்' படங்களில் கதாநாயகியாக நடித்தவர் நிதி அகர்வால். தெலுங்கிலும் பிரபல நடிகையாக இருக்கிறார். சினிமா அனுபவங்கள் குறித்து நிதி அகர்வால் அளித்துள்ள பேட்டியில், ''நான் அதிர்ஷ்டத்தை நம்புகிறேன். அது இல்லை என்றால் யாருக்கும் எதுவும் அமையாது. நேர்மையாக சொல்ல வேண்டும் என்றால் சினிமா துறையில் அதிர்ஷ்டம் மிகவும் முக்கியம். உதாரணத்துக்கு சில கதைகளை பார்க்கும்போது அற்புதமாக இருக்கும். ஆனால் கடைசியாக படம் வேறு மாதிரி வந்துவிடும். பேப்பர் மீது சுமாராக இருப்பவை திரையில் பார்த்தால் பிரம்மாண்டமாக அமைந்து ஆச்சரியப்பட வைக்கும். இதற்குக் காரணம் 90 சதவீதம் அதிர்ஷ்டம் என்று நான் நம்புகிறேன். கதாபாத்திரங்களை பார்த்து பார்த்து தேர்ந்தெடுக்கும் நிலைக்கு நான் வந்து விட்டதாக நினைக்கவில்லை. ஆனால் வித்தியாசமான கதாபாத்திரங்களில் மட்டும் நடிக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன். முக்கியமாக நடனம் தொடர்பான படத்தில் நடிக்க ஆசையாக உள்ளது. இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் நடித்தாலும் எந்த வித்தியாசமும் இல்லை. ஆனால் வியாபார ரீதியாக நிறைய வித்தியாசங்கள் இருக்கும்'' என்றார்.

# தென்னிந்திய கலைஞர்களை புறக்கணிக்கும் மத்திய அரசு; நடிகைகள் குற்றச்சாட்டு

2022 ஆம் ஆண்டு தென்னிந்திய சினிமா இந்தியாவில் மட்டுமின்றி உலகளவில் பாக்ஸ் ஆபிசில் சாதனைபுரிந்த ஆண்டாகும். இந்திய சினிமாவில், குறிப்பாக தென்னிந்திய சினிமாவின் உலகப் பார்வையை மாற்றியுள்ளது. இருப்பினும், சில தென்னிந்திய நடிகர்கள் தென்னிந்திய சினிமாவுக்கு இந்திய அரசாங்கத்தால் உரிய அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்று உணர்கிறார்கள். இது குறித்து நடிகைகள் ஜெயசுதாவும், ஜெயபிரதாவும் தற்போது தங்கள் கவலையை தெரிவித்துள்ளனர். நடிகை ஜெயசுதா நடிகை ஜெயபிரதாவுடன் சமீபத்தில் நந்தமுரி பாலகிருஷ்ணாவின் அன்ஸ்டாப்பபிள் என்ற டாக் ஷோவில் கலந்து கொண்டார். அதில் அவர் திரைப்படத் துறையில் தென்னக கலைஞர்களை மத்திய அரசு அங்கீகரிக்கவில்லை என கூறினார். நடிகை கங்கனா ரனாவத்தை ஒரு உதாரணமாக கூறினார். கங்கனா 10 படங்கள் நடிப்பதற்குள் அவருக்கு எவ்வாறு விருது வழங்கபட்டது. ஆனால் பல தசாப்தங்களாக தொழில் துறையில் பணியாற்றிய நடிகர்களுக்கு அவர்களின் பணிக்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை என கூறினார்.



அவர் கூறும் போது கங்கனா ரனாவத்துக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததில் எனக்கு கவலையில்லை. அவர் ஒரு அற்புதமான நடிகை. இருப்பினும், அவர் 10 படங்கள் நடிப்பதற்குள் அந்த விருதைப் பெற்றார். இங்கு, நாங்கள் பல படங்களில் பணியாற்றிய இன்னும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படவில்லை கின்னஸ் சாதனை படைத்த இயக்குனர் விஜய நிர்மலாவுக்கு கூட இதுபோன்ற பாராட்டு கிடைக்கவில்லை என கூறினார். நடிகை ஜெயபிரதா கூறும் போது நாம் விருதுகளை மரியாதையுடன் பெற வேண்டும். அதைக் கேட்டு வாங்க கூடாது நான் எம்.பி.யாக இருந்தபோது, என்.டி.ஆருக்கு பாரத ரத்னா வழங்கக் கோரிக்கை வைத்தேன். அதை நிறைவேற்ற இன்றுவரை முயற்சி செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்

தென்னிந்திய நடிகர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று பாலகிருஷ்ணா இரு நடிகைகளிடமும் ஒப்புக்கொண்டார். உலகிலேயே அதிக படங்களை இயக்கிய பெண் இயக்குனராக 2002ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் விஜய நிர்மலா இடம் பிடித்தார். கடந்த ஆண்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்திடம் இருந்து கங்கனா ரனாவத் பத்மஸ்ரீ விருதைப் பெற்றபோது, பலர் அவருக்கு விருது வழங்குவதை விமர்சித்தனர். ஆளும் பாஜக ஆதரவாளரான நடிகைக்கு விருது வழங்கப்பட்டது என்று கூறினர். நடிகை ஜெயசுதா ஐந்து நந்தி விருதுகள் மற்றும் ஐந்து பிலிம்பேர் விருதுகள் பெற்றுள்ளார். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, உள்பட பல மொழிகளில் 500க்கும் மேற்பட்ட படங்களில் அடித்து உள்ளார். தமிழில் குல கவுரவம் முதல் நடிகை விஜய் நடிப்பில் வெளிவர இருக்கும் வாரிசு வரை 50க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து உள்ளார்.

# கிரணுக்கு போட்டியாக கவர்ச்சி காட்டும் ஸ்ரேயா



**ந**டிகை ஸ்ரேயா சரண், கவர்ச்சியான புகைப்படத்தை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு, ரசிகர்களை ஏக்கபெருமூச்சு விடவைத்துள்ளார். இந்த போட்டோவிற்கு மலைபோல் லைக்குகள் குவிந்து வருகின்றன. எனக்கு 20 உனக்கு 18 படத்தில் த்ரிஷாவின் தோழியாக நடித்த ஸ்ரேயா. தனது திறமையாலும், அழகாலும், விஜய், ரஜினிகாந்த், தனுஷ், ஜெயம் ரவி உள்ளிட்ட முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்து நடித்தார்.தென்னிந்தியாவில் ரசிகர்களின் ஃபேவரைட் நடிகையாக வலம் வந்த நடிகை ஸ்ரேயா சரண் நடிப்பு மட்டுமல்லாமல் நடனம் கவர்ச்சி என அனைத்திலும் அடித்து தூள் கிளப்பினார். விஜயுடன் அழகிய தமிழ் மகன் படத்திலும், ரஜினிகாந்துடன் சிவாஜி படத்திலும், தனுஷ்டன் குட்டி, திருவிளையாடல் ஆரம்பம் உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். ஜெயம் ரவியுடன் இணைந்து இவர் நடித்த மழை திரைப்படத்திற்கு நல்ல விமர்சனங்கள் வந்த நிலையில், இப்படம் ஸ்ரேயாவுக்கு நல்ல பெயரை பெற்றுத்தந்தது. ஹீரோயினாக நடித்த முதல் படத்திலேயே டீன் ஏஜ் ரசிகர்களை கவரும் வகையில்,கவர்ச்சியில் தாராளம் காட்டி இருந்தார். அதன் அடுத்தடுத்த படங்களில் கமிட்டாகி கொடிகட்டி பறந்த ஸ்ரேயா, ஒரு சில பாடலுக்கு குத்தாட்டம் போட்டு சென்றார். பல திரைப்படங்களில் முன்னணியாக நடித்தப்பிறகும், பட வாய்ப்புகள் கிடைக்காததால் தற்போது கிடைத்த வேடத்தில் நடித்து வருகிறார். தமிழில் கமனம், சண்டக்காரி, நரகாசுரன் ஆகிய திரைப்படங்கள் வெளியீட்டுக்கு தயாராக உள்ளன. மேலும், த்ரிஷ்யம் 2 படம் சமீபத்தில் வெளியானது. கன்னடத்தில் உருவாகி உள்ள காப்ஸா படத்தில் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார் ஸ்ரேயா. இந்த ஆண்டு வெளியான பிரம்மாண்டமான படமான ஆர்ஆர்ஆர் படத்திலும் அஜய் தேவ்கனுக்கு மனைவியாக நடித்திருந்தார்.

திருமணத்திற்குப் பிறகு கணவருடன் செம ரொமான்டிக்கான க்யூட் படங்களையும், கவர்ச்சியில் ரணகளப்படுத்தும் புகைப்படங்களையும் சமூக வலைதளங்களில் வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ள ஸ்ரேயா, கிறிஸ்துமஸ் அதுவுமா, கவர்ச்சி ததும்ப ததும்ப சிவப்பு உடையில் , போதை ஏற்றும் வகையில் போஸ் கொடுத்துள்ளார். இந்த போட்டோ பதிவிட்ட 6 மணி நேரத்திற்குள் 80 ஆயிரம் லைக்குகளை பெற்றுள்ளது.

சமீபத்தில் இவர், உள்ளாடை எதுவும் அணியால், பின்னழகை மொத்தமாக காட்டி பிங்க் நிற சேலையை கையில் பிடித்தபடி போஸ் கொடுத்திருந்தார். இந்த போட்டோவை பார்த்த ரசிகர்கள் படவாய்ப்பு இல்லை என்பதற்காக இப்படியா என்றும், வரவர நீங்கள் கிரணுக்கு போட்டியாக கவர்ச்சி போட்டோவை பதிவிடுகிறீர்கள் அதெல்லாம் நல்லாவா இருக்கு என்று கேட்டனர். ஆனால், இந்த போட்டோ 3 லட்சத்திற்கும் அதிகமான லைக்குகளை பெற்றது.

# மீரா நந்தன் மீது தாக்குதல்




**மீரா** நந்தன் வலைத்தளத்தில் பதிவிட்ட ஒரு வீடியோவில் அணிந்திருந்த குட்டையான உடை சர்ச்சையை கிளப்பியது. இது மீரா நந்தனுக்கு எதிரான இந்த சைபர் தாக்குதல் பரபரப்பை ஏற்படுத்தியது. கதாநாயகிகளுக்கு எதிராக வலைத்தளங்களில் தொடர்ந்து அவதூறு பதிவுகள் மூலம் 'சைபர்' தாக்குதல்கள் நடந்து வருகின்றன. தற்போது இதில் நடிகை மீரா நந்தன் சிக்கி உள்ளார். இவர் தமிழில் வால்மீகி, அய்யனார். சூர்ய நகரம், நேர்முகம், சண்டமாருதம் உள்ளிட்ட படங்களில் நடித்து இருக்கிறார். மலையாளத்தில் முன்னணி நடிகையாக இருக்கிறார். மீரா நந்தன் வலைத்தளத்தில் ஒரு வீடியோவை பகிர்ந்துள்ளார். அந்த வீடியோவில் மீரா நந்தன் அணிந்திருந்த குட்டையான உடை சர்ச்சையை கிளப்பியது. ஆபாசமாக மோசமான உடை அணிந்து இருப்பதாக எதிர்ப்புகள் கிளம்பின. மீரா நந்தனை கடுமையாக அவதூறு செய்து கேவலமான வார்த்தைகளை பதிவு செய்தும் கண்டித்தனர். மீரா நந்தனுக்கு எதிரான இந்த சைபர் தாக்குதல் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கிடையில் மீரா நந்தனுக்கு ஆதரவாகவும் சிலர் கருத்துக்கள் தெரிவித்தனர். என்ன உடை அணிவது என்பது மீரா நந்தன் உரிமை. அவரை விமர்ச்சிக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்று எதிர்ப்பாளர்களுக்கு அவர்கள் பதிலடி கொடுத்தனர்.

# மீண்டும் மீனா



**க**ணவரை இழந்த துக்கத்தில் இருந்து மீண்டுள்ள மீனா தற்போது ஒரு படப்பிடிப்பில் பங்கேற்று உள்ளார். படப்பிடிப்பில் மேக்கப் போட்டுக்கொள்ளும் வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். தமிழ் திரையுலகில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்தவர் மீனா. மலையாளம், தெலுங்கு மொழிகளிலும் அதிக படங்களில் நடித்து இருக்கிறார். ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த், அர்ஜுன் உள்ளிட்ட பிரபல நடிகர்கள் படங்களில் நடித்துள்ளார். திருமணத்துக்கு பிறகு குணசித்திர வேடங்களில் நடித்து வந்தார். இவருக்கு நைனிகா என்ற பெண் குழந்தை உள்ளது. நைனிகாவும் பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்து இருக்கிறார். இந்த நிலையில் மீனாவின் கணவர் வித்யாசாகர், கொரோனா தொற்றால் நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார். கணவர் மறைவுக்கு பிறகு மீனா பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் வீட்டிலேயே முடங்கி இருந்தார். சமீபத்தில் தோழிகளுடன் வெளியூர் சென்று வந்தார்.

இதன் மூலம் கணவரை இழந்த துக்கத்தில் இருந்து மீண்டுள்ள மீனா தற்போது ஒரு படப்பிடிப்பில் பங்கேற்று உள்ளார். படப்பிடிப்பில் மேக்கப் போட்டுக்கொள்ளும் வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதை பார்த்து ரசிகர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.



# குடும்பத்துக்குள் பாரபட்சம், பாகுபாடுகளை கையாளும் விதம்



பெற்றோர் பாரபட்சம் பார்ப்பதை ஏற்றுக்கொள்வது கடினம்தான். அந்த சமயங்களில், உங்களை நீங்களே கவனிக்க மறந்துவிடாதீர்கள். உங்களுக்கு மகிழ்ச்சி தரும் விஷயங்களில் ஈடுபடுங்கள். குடும்பத்துக்குள் அன்பு, அரவணைப்பு, ஆதரவு போன்றவை ஒவ்வொரு உறுப்பினருக்கும் சமமாகக் கொடுக்கப்படும்போது அமைதியும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். இதில் யாரேனும் ஒருவர், தனக்கு பாரபட்சம் பார்க்கப்படுவதாக உணர்ந்தால், மொத்தக் குடும்பத்தின் நிம்மதியும் குறையும். அவ்வாறான சூழ்நிலையை குடும்ப உறுப்பினர்கள் சந்திக்கும்போது, அதை பொறுமையாக கையாள்வது நல்லது. பெற்றோர் உங்களிடம் பாரபட்சம் காட்டுவதாக உணர்ந்தால் அவர்களுடன் மனம் விட்டு பேசுங்கள். பெற்றோர் இருவரும் அமைதியான மனநிலையில் இருக்கும்போது அவர்களை அணுகுங்கள். சமீப காலத்தில் நடந்த சில சம்பவங்களை உதாரணமாகச் சொல்லி, உங்களின் வேதனையைப் புரியவைக்க முயற்சி செய்யுங்கள். குற்றம் சாட்டும் விதமாக பேசாமல், நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை மட்டும் எடுத்துக் கூறுங்கள்.

உங்கள் உணர்வுகளை நிதானமாகக் கூறிய பிறகு, அவர்களின் கருத்துக்களைக் கேளுங்கள். அவர்கள் உங்கள் உடன்பிறப்புகளுக்கு அல்லது குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் ஆதரவாக இருப்பதற்கு உங்களுக்குத் தெரியாத காரணங்கள் இருக்கலாம். அவர்கள் பேசும்போது இடையில் குறுக்கிடவோ அல்லது கத்தவோ செய்யாதீர்கள்.

அவர்கள் கூறும் காரணங்கள் நியாயமற்றதாகத் தோன்றினாலும், உங்களை வருத்தப்படுத்தினாலும், உங்கள் பெற்றோருடன் வாதம் செய்யாமல் அமைதியாக இருங்கள். உணர்ச்சி வசப்படுவதைத் தவிருங்கள். பேசும் விஷயங்கள் உங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாதவகையில்இருந்தால்உரையாடலில் இருந்து விலகிவிடுங்கள். உங்களைப்போலவே, உங்கள் நண்பர்களும் தங்கள் உடன்பிறந்தவர்களுக்கு மட்டும் ஆதரவாக இருக்கும் பெற்றோர்களைக் கொண்டிருக்கலாம். அவர்களுடன் பேசுங்கள். அவர்கள் அந்தச் சூழ்நிலையை எப்படி சமாளிக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். பெற்றோர் பாரபட்சம் பார்ப்பதை ஏற்றுக்கொள்வது கடினம்தான். அந்த சமயங்களில், உங்களை நீங்களே கவனிக்க மறந்துவிடாதீர்கள். உங்களுக்கு மகிழ்ச்சி தரும் விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பெற்றோர் மற்றும் மற்றவர்களிடம் எப்போதும் மரியாதையுடன் இருங்கள். அவர்கள் உங்களுக்கு உதவி செய்யும்போது நன்றி சொல்லுங்கள். எப்போதும் அவர்களைப் புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள். அவர்கள் ஏதாவது சிரமத்தில் இருக்கும்போது உதவி செய்யுங்கள். அப்போது உங்கள் மீது மரியாதை ஏற்படும். அவர்களது செயல்களில் அன்பு அதிகரிக்கும். பாரபட்சமான நிலை மாறும்.

# ஒப்பனை மூலம் வெளிப்படும் ஆளுமை





கண்களுக்கு அடுத்து நாம் கவனம் செலுத்த வேண்டியது முகம்தான். லேசான மேக்கப் மட்டும் இருந்தாலே, முகத்தை அழகாக எடுத்துக் காட்டலாம். குறைவாக ஒப்பனை செய்யும் போது, முகம் பிரகாசமாக மட்டுமின்றி, தன்னம்பிக்கையுடனும் வெளிப்படும். இதில், கவனிக்க வேண்டிய விஷயம், நம் சரும நிறத்திற்கு ஏற்ற பவுண்டேஷனைத் தேர்வு செய்தல். இது முகத்தின் அழகை மெருகூட்டிக் காட்டும். 'ஒப்பனை' என்பது தோற்றத்தை அழகாக எடுத்துக்காட்டுவது மட்டுமல்ல. நீங்கள் விரும்பும் விதத்தில் உங்களை உருவாக்குவதும் தான். நாம் போடும் மேக்கப்பை, நமது ஆளுமையை வெளிப்படுத்தும் கருவியாக மாற்றுவது எவ்வாறு என்பதைப் பற்றி பார்ப்போம்.



### கண்கள்:

கண்கள் மனதின் ஜன்னல்கள். எனவே, கண்களைச் சுற்றி செய்யும் அலங்காரம், நமது மனதின் ஆழத்தில் உள்ள சாயல்களை வெளிப்படுத்தும். பெரும்பாலான இளம்பெண்கள் அணியத் தொடங்கும் முதல் அழகுசாதனப் பொருள் கண் மை (காஜல்). கண்களுக்கு செய்யும் ஒப்பனைக்கு முகத்தை மாற்றும் சக்தி உள்ளது. ஐ லைனர்கள் முதல் ஐ ஷேடோக்கள் வரை, நீங்கள் விரும்பும் அழகான கண் தோற்றத்தை உருவாக்க பல அழகு சாதனங்கள் உள்ளன.

### முகம்:

கண்களுக்கு அடுத்து நாம் கவனம் செலுத்த வேண்டியது முகம்தான். லேசான மேக்கப் மட்டும் இருந்தாலே, முகத்தை அழகாக எடுத்துக் காட்டலாம். குறைவாக ஒப்பனை செய்யும் போது, முகம் பிரகாசமாக மட்டுமின்றி, தன்னம்பிக்கையுடனும் வெளிப்படும். இதில், கவனிக்க வேண்டிய விஷயம், நம் சரும நிறத்திற்கு ஏற்ற பவுண்டேஷனைத் தேர்வு செய்தல். இது முகத்தின் அழகை மெருகூட்டிக் காட்டும்.

### லிப்ஸ்டிக்:

முகத்தில், நாம் உதிர்க்கும் புன்னகையை தன்னம்பிக்கையுடன் வெளியே பிரதிபலிக்க உதட்டை அழகாக வைத்திருப்பது அவசியம். வறட்சியுடனோ, வெடிப்புடனோ உதடு இருந்தால், பல பாதிப்புகள் ஏற்படும். உதட்டை எப்போதும் மென்மையாகவும், ஈரப்பதத்துடனும் வைக்க 'லிப் பாம்' பயன்படுத்தலாம். ஒப்பனைக்கேற்ப லிப்ஸ்டிக் நிறத்தைத் தேர்வு செய்யலாம். சிவப்பு நிற லிப்ஸ்டிக் பயன்படுத்தினால், தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் அழகாய் பிரதிபலிக்க முடியும்.



### நகப்பூச்சு:

நகங்களுக்கு நாம் தேர்ந்தெடுக்கும் நகப்பூச்சு, நம் எண்ணங்களின் பிரதிபலிப்பாக மாறும். சிவப்பு நிறம் பூசும்போது, அது மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்கும். பிறர் மீதான கோபத்தின் வெளிப்பாட்டுக்கு கறுப்பு நிறத்தையும் பயன்படுத்தலாம். மற்ற உணர்ச்சிகளின் வெளிப்பாட்டுக்கு வானவில்லின் பிற நிறங்களைப் பயன்படுத்தலாம். இந்த வண்ணக் குறியீடு, உங்கள் ஆற்றலின் அளவை வெளிப்படுத்தும். அழகு, ஒப்பனை, தோல் பராமரிப்பு மற்றும் சுய பாதுகாப்பு போன்றவை பெண்களுக்கு முக்கியமானவை. 'மேக்கப்' நம் அழகை வெளிக்காட்ட உதவும் ஓர் ஆயுதம். இதனால், பெண்கள் தங்களை சக்தி வாய்ந்தவர்களாக உணர முடியும். இது உங்களின் ஆளுமையை மீட்டெடுப்பதற்கான சிறந்த வழியும் ஆகும்.

# "கலாபூஷணம்", "முது கலைஞர், "நடிப்புச் சக்கரவர்த்தி" என்று பல விருதுகளை வென்ற எம். எம். ஏ. லத்தீப்

நேர்காணல்
எம். வஸீர்...

நடிகவேள் லடீஸ் வீரமணியை தனது ஆசானாக வரித்துக் கொண்ட தலைசிறந்த நடிகரான இவர் நூற்றுக்கணக்கான மேடை, வானொலி, தொலைக்காட்சி நாடகங்களிலும் வீ. பீ. கணேசனின்" நான் உங்கள் தோழன்" இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களிலும்நடித்துள்ளதோடு, நடிப்புடன், பாடல், சிலம்பு ஆகியவற்றிலும் வில்லிசை நிகழ்ச்சிகளிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

தன் குருநாதர் லடீஸ் வீரமணியின் பல வில்லிசை நிகழ்வுகளில் பங்கு பற்றியுள்ளதோடு இஸ்லாமிய பக்தி கீதங்கள் பாடுவதிலும் வல்லவராய் இருந்தார். கலைச் செல்வன் நெறிப்படுத்திய " நான் சக்கரவர்த்தியடா", "தங்கப் பதக்கம்", ஒதெல்லோ போன்ற புகழ் பெற்ற நாடகங்களிலும் இயக்குனர் சுஹைர் ஹமீட், லடீஸ் வீரமணி, கே. செல்வராஜன் போன்றவர்களின் தலைசிறந்த நாடகங்களிலும் நடித்துள்ள இவர் அரச தனியார் நாடக விழாக்களில் பல விருதுகளையும் பாராட்டு பத்திரங்களையும் பெற்று வயது முதிர்ந்த இக் காலப் பகுதியில் ஆன்மீக சேவையில் ஈடுபட்டுள்ளார்.

இதோ எனக்களித்த நேர்காணலில் "நடிப்புச் சக்கரவர்த்தி" பேசுகிறார்...







**கேள்வி: உங்கள் குடும்பம் பற்றி சொல்லுங்கள்?**

சந்தோஷமாக தொடங்கிய எங்களது இல்லற வாழ்வில் சோதனை சூழ்ந்தது. நான் என் மனைவியை இழந்தேன். எனக்ககு இரண்டு ஆண் பிள்ளைகள். எனது மூத்த மகன் கிங் பைஸல், வெளிநாட்டில் சாரதி தொழில் செய்கிறார். இளைய மகன் வஸீர். வெளிநாட்டில் "ஸிப் மெனேஜராக" பணி புரிகிறார். பேரப் பிள்ளைகளுடனும் எனது இரண்டு மருமகள்களுடனும் வாழ்ந்து வருகிறேன்.

எனது மூத்த மருமகள் முனவ்வரா. அவர் அவருடைய தந்தையை கவனிப்பது போல் கண்ணும் கருத்துமாக கவனித்து வருகிறார். எனது இளைய மருமகள் பாத்திமா அவர் எனக்கு மருந்து கொடுப்பதிலும், சாப்பாடு கொடுப்பதிலும் கவனமாக இருப்பார். இறைவன் எனக்கு நிம்மதியான வாழ்வைத் தந்துள்ளான்.

**கேள்வி: உங்கள் பெற்றோர், உடன் பிறப்புக்கள் பற்றி...**

எனது தாயார் பெயர் செய்யதும்மா. எனது தந்தை பெயர் மீரா மொஹிதீன். என் பெற்றோருக்கு நாங்கள் ஒன்பது பேர். அதில் ஆறு பேர் இறையடி சேர்ந்து விட்டார்கள். சம்சுல், பரீதா, நான். எனது இந்த இரண்டு சகோதரிகளும் எனது கலையுலக வாழ்க்கைக்கு

பெரும் அர்ப்பணம் செய்தவர்கள். எனது உடு, துணியிலிருந்து எல்லா உதவிகளையும் செய்தவர்கள்.

**கேள்வி: நீங்கள் எப்படி நாடகத் துறைக்கு வந்தீர்கள்?**

அன்றைய காலகட்டத்தில் 1956 களில் நாங்கள் தெருக்கூத்து நடத்துவோம். அதாவது திருமண வைபங்கள், விசேட தினங்களில் தெருவில் சிலம்பு வித்தையில் ஈடுபடுவோம். அப்படி ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சகோதரர் மஹ்தூம் ஏ. காதர் அவர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு என்னை "பொறுமையின் பொக்கிஷம்" என்ற நாடகத்தில் சிலம்பு சண்டை காட்சியில் நடிக்க வைத்தார். அதனைத் தொடர்ந்து அதிகமான மேடை நாடகங்களில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் நடித்திருக்கிறேன்.



**கேள்வி: இலங்கை வானொலி முஸ்லிம் நாடகங்கள் நடிக்கும் வாய்ப்பு எப்படி கிடைத்தது?**

ஜிப்ரி என்றொரு நண்பர் இருந்தார். அவருக்கு மொஹமட் மாஸ்டர் நல்ல பழக்கம் அவரிடம் என்னை சிபாரிசு செய்து என்னை வானொலி நாடகங்களிலும் நடிக்க வைத்தார்.

**கேள்வி:தொலைக்காட்சி நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பு எப்படி கிடைத்தது?**

சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி மூலம் கிடைத்தது. கலைச் செல்வன் ஹுஸைன் பாருக், மபாஹிர் மௌலானா, பௌசுல் அமீர் போன்ற சிறந்த நாடக எழுத்தாளர்களின் நாடகங்களில் நடித்துள்ளேன்.

**கேள்வி: நீங்கள் நடித்த திரைப்படங்கள் பற்றியும் சொல்லுங்கள்?**

நான் இலங்கைத் தமிழ் திரைப்படங்கள் ஐந்தில் நடித்துள்ளேன். "நான் உங்கள் தோழன்", "நங்கூரம்", "காத்திருப்பேன் உனக்காக", "எங்களில் ஒருவன்", "சர்மிளாவின் இதய ராகம்" "நாடு போற்ற வாழ்க" இத் திரைப்படம் தமிழ், சிங்கள மொழிகளில் தயாரிக்கப்பட்டது. இவ்விரண்டிலும் நான் நடித்தேன். அத்தோடு மூன்று சிங்களத் திரைப்படங்களிலும் நடித்துள்ளேன்.

**கேள்வி: நீங்கள் சிறுவயதில் பாடகராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டீர்கள். ஏன் பாடகராகவில்லை?**

நான் சிறுவயதில் ஆசைப்பட்டது போல் பாடல் பாடக் கூடியவனாகவும் இருந்தேன். எனது குருவான லடீஸ் வீரமணியுடன் இணைந்து வில்லிசைப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தோம். அதில் பக்க பாட்டு பாடியது நான் தான்.

**கேள்வி: நீங்கள் கற்ற வித்தைகளை யாருக்காவது கற்றுக் கொடுத்தீர்களா?**

ஆமாம் ஒருவருக்கு கற்றுக் கொடுத்தேன். என் தந்தையிடம் நான் கற்ற சிலம்பாட்டம், சீன வித்தை என்பவற்றை ஒருவருக்கு கற்றுக் கொடுக்கும் போது மேலும் மூவர் இணைந்து கற்று வந்தார்கள். அவர்கள்ஒருவரையும் இன்று வரை காணவில்லை. அவர்கள் என்னைப் பார்க்க வரவே இல்லை.



**கேள்வி: உங்களுக்கு கிடைத்த பட்டங்கள் பற்றி சொல்ல முடியுமா?**

நாடக உலகில் நான் நடித்து ஆறு வருடகாலத்திற்குப் பிறகு நாடக விழா ஒன்றில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. " சிறுக்கியும் பொறுக்கியும்" திரு கலைச் செல்வன் எழுதியது. அதில் எனக்கு ஒரு சான்றிதழ் கிடைத்தது. அதை நான் கிழித்து எறிந்தேன். அந்த சான்றிதழைத் தந்தவர் அதை ஏன் கிழித்தீர்கள்? என்று கேட்டார். உங்கள் தீர்ப்பில் நியாயம் இல்லை எனக் கூறினேன்.

பின்னர் எனக்கு எத்தனையோ பரிசில்கள் கிடைத்தன. தமிழக முன்னாள் முதல்வர் மறைந்த செல்வி ஜெயலலிதா எனக்கு ஒரு விருது அனுப்பி வைத்தார்.

அதனை இலங்கை எம். ஜி. ஆர் மன்றத் தலைவர் நெய்னார் கொண்டு வந்து தந்தார்.

சொல்லின் செல்வர் ராசதுரை எனக்கு "நடிப்புச் சக்கரவர்த்தி" என்ற பட்டத்தை தந்தார். கிருஷ்ணா கலாலயம் மோஹன் குமார் இரண்டு பரிசுகள் தந்தார். கே. செல்வராஜன் எனக்கு விழா எடுத்து பாராட்டினார்.

**கேள்வி: இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும். பாரம்பரியம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டீர்கள் அது பற்றி..**

சகோதரர் கலாபூஷணம் ஜின்னாஹ் அவர்கள் என்னையும் பாரம்பரியம் நிகழ்ச்சிக்கு அழைத்து கௌரவித்தார். ஜின்னாஹ் செய்வது மகத்தான பணி என்று தான் சொல்வேன்.




## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்





## தொடர்பு படுத்துங்கள்



## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



Select Yes or No.

| | |
|---|---|
| Is this a dog?  | Yes<br>No |
| Is this a fish?  | Yes<br>No |
| Is this a snake?  | Yes<br>No |

## நான் ரொம்ப பிஸி...



# கம்யூனிச நூல்களை ஆர்வமாக வாசித்தாலும் வார பத்திரிகைகளே இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தின

## – கிண்ணியா இளம் கவிஞர் மபாஸ்

இலக்கிய வேட்கையுடன் சிறகு தட்டிப் பறக்கும் இளம் கவிஞர் மபாஸ். எழுத்துலகில் பவனி வரும் இவரது கவிதைகள் சமுகம், வறுமை, போர், சீதனம், இயற்கை என்பவற்றைக் கருப் பொருளாகக் கொண்டமைந்தவை. வாசிப்பின் உத்வேகத்தால் பல்வேறு அறிஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்களின் நூல்களை நேசித்து வாசித்து வருகிறார். இவரது இலக்கிய தாகம் சாதனையாக வளர்ச்சி காண வாழ்த்துகிறேன்.

**● உங்களது பிறப்பிடம்,தாய், தந்தை, கல்வி பற்றி அறியத் தாருங்கள்?**

கிழக்கிலங்கையின் வடகோடியாம் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவை பிறப்பிடமாக கொண்ட நான் ஓய்வுபெற்ற ஆசிரியர் மர்ஹூம் ஒலீது மற்றும் ஹாஜியானி மஃமூதா ஆகியோரின் மூன்றாவது மகனாக பிறந்து,

ஆரம்ப கல்வியை தி/கிண்/ அல் அக்ஸா கல்லூரியிலும், உயர்நிலை கல்வியை தி/ கிண்ணியா மத்திய கல்லூரியிலும் தொடர்ந்தேன்.



**● ஆரம்பத்தில் வாசிப்புப் பழக்கம் எவ்வாறு ஏற்பட்டது..? யாருடைய புத்தகங்களை அதிகம் விரும்பி வாசிப்பீர்கள்..?**

பாடசாலை நூலகம் மற்றும் பொது நூலகம் பாடசாலை விட்டு வந்து போவது பொழுது போக்காக இருந்தது.

வீட்டில் வார பத்திரிகை வாங்கி வருவதன் வழக்கத்தின் காரணமாக இலக்கியசார் பக்கங்களின் மீதான ஈர்ப்பு மேலும் தேடலை அதிகரித்தது.

கம்யூனிச சித்தாந்தங்களின் பால் விளைந்த நூல்களின் மீது அதிக ஈர்ப்புடைதால் கார்ல் மார்க்ஸ் மற்றும் லெனின் போன்றோரின் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டேன்.

ஆனாலும் புரட்சிகளை பற்றிய தெளிவான கொள்கைகளை கொண்டிருப்பதால் யதார்த்தமற்ற விடயங்களும் அதிகம் மாற்றுக் கருத்துக்களையும் இருக்கின்றன.அப்துல் கலாம் பொன்மொழிகள் தேடி படிப்பதில் உற்சாகம் ஏற்படும் மற்றும் அக்னி சிறகுகள் புத்தகம் ரூமி தாகங் கொண்ட மீன் ரூமியின் வைரங்கள்

கலில் ஜிப்ரானின் முறிந்த சிறகுகள் இதை தாண்டி இவர்களது கவிதைகள் மீது அலாதி ப்ரியம் உள்ளது.

**● பாடசாலைக் காலங்களில் போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய அனுபவமுள்ளதா..? சுருக்கமாகக் கூறுங்கள்**

இலக்கியத்தின் மீதான ஆர்வம் பாடசாலை காலங்களில் இருந்தது புறக்கணிக்கப்பட்டு வந்ததன் விளைவாக போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய அனுபவம் இல்லை என்பது மன வேதனை தரக்கூடியதாக இருந்தாலும். என்னுடைய இலக்கியப் பயணத்தை இடை நிறுத்தினேன் பின்னர் பாடசாலையை வாழ்க்கையினை நிறைவுறுத்தி விட்டு இலக்கியம் சார் பயணத்தில் தொடர்ந்தும் பல ஆக்கங்களை வெளியிட்டேன்.

**● இலக்கியத் துறையில் ஈடுபட ஆர்வமூட்டியவர்கள் யார்..?**

குறிப்பிட்டு கூற யாரும் இருக்கவில்லை எனக்குள் ஏற்பட்ட கேள்வி ஆர்வமூட்டியவர்களை தவிர்ந்து உத்வேகமாக எடுத்துக் கொண்ட காரணமாக தாயின் தந்தையான ஓய்வுபெற்ற அதிபர் மர்ஹூம் கயாத்து முஹம்மட் புத்தகங்கள் மீது அலாதி ப்ரியம் கொண்டவராக இருந்ததுடன், அவர் நூல் வெளியீட்டு நிகழ்வுகளுக்குச் சென்று புத்தகங்களை பெறுவதையும் அவற்றை முழுமையாக வாசிப்பதையும் தனது பொழுதுபோக்காக கொண்டிருந்தார். ஆக அவரிடம் இருந்த புத்தகங்களை வாங்கி வாசிப்பதன் மூலம் வாசிப்பின் மீதான நாட்டமும் அதனோடு இணைந்து இலக்கியம் சார் எழுத்துக்களிலும் அதிக ஈடுபாடு இருந்தது. துரதிஷ்டவசம் நான் எழுதிய கவிதைகளை பார்க்கவில்லை என்ற ஏக்கம் கவலையளிக்கிறது.

**● முதலாவது ஆக்கம் பத்திரிகையில் பிரசுரமான போது உங்களது மனநிலை எவ்வாறு காணப்பட்டது..?**

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தினகரன் வார மஞ்சரியில் வெளியிடப்பட்ட "சதிகளை நொந்தவனின் விலை" எனும் கவிதையினூடாக பொதுத்தளங்களில் எனது இலக்கியப் பயணத்தை தொடர்ந்தேன். மிகவும் மகிழ்ச்சியளித்தது. ஆரம்பத்தில் எனது பெயரும் பத்திரிகைகளில் வரவேண்டும் என்று விளையாட்டாக எழுத ஆரம்பித்திருந்த நிலையில் தற்போது என்னுடைய எழுத்துக்கள் நாடு முழுவதும் பத்திரிகை மூலம் செல்வது மகிழ்ச்சியை தருகிறது.

**● பத்திரிகைக்குக் கையெழுத்தில் எழுதுவதற்கும்,தட்டச்சு செய்தனுப்புவதற்குமுள்ள வேறுபாட்டை எவ்வாறு உணர்கிறீர்கள்..?**

முக்கியமாக காலநேரம் செல்வாக்கு செலுத்துவதை கூறலாம். தொழிநுட்ப வளர்ச்சி முன்னைய காலத்தில் கையெழுத்து மூலம் அனுப்புவது போய் சேர மூன்று கிழமை ஆகின்றது, தட்டச்சு செய்து மின்னஞ்சல் மூலம் அனுப்பினால் உடனே செல்கிறது. இவ்வாறான வேறுபாட்டை உணர முடிகிறதுஎனக்கு உண்மையில் பழைய காலத்தின் கையெழுத்து மருகி போகக் கூடாது என்பது வேண்டி நிற்கிறது.

**● நூல் வெளியிடுவது பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன..? எவ்வாறான படைப்பை மக்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறீர்கள்..?**

நிச்சயமாக நூல் வெளியீடு செய்வது என்பது எழுதுபவர்கள் எடுத்து கொள்ள வேண்டிய ஆவணமாகும்.நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் ஈர்த்துக் கொள்ளும் வகையிலும் தேடி பெற்ற ஆசைப்பட வேண்டும்.

**● நூல் வெளியிடும் நோக்கமுள்ளதா..? கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்களும் எழுதுகிறீர்களா..?**

முதலாவது கவிதை நூல் வெளிவரும் சந்தர்ப்பம். நான் இன்னும் முதலாவது கவிதை நூலை வெளியிட எடுத்துக் கொண்ட நாட்கள் காரணங்கள் சூழ்நிலை கூறி சாட்டுகளை சொல்ல முடிகிறது. ஆனாலும் எனது எழுத்து இன்னும் மேலோங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் ஓடிக்கொண்டிருக்கிறது.சிறுகதை மற்றும் கட்டுரை பாடலாக்கம் கூடியளவில் எழுதவில்லை இருப்பினும் 2020 ஆண்டு கொரோனாவின் வீரியம் விண்ணைத் தொட்ட வேளையில் உலக அமைதிக்கான ஓர் பாடலுக்கான வரிகளை எழுதியிருந்த போதிலும் பாடல்காட்சிகள் வெளிவராத காரணத்தினால் இதுவரை அதனை ஆவணப்படுத்த முடியவில்லை.நாவல் எழுதுவதுக்குரிய ஆசை மனதில் ஒருபுறம் ஓடிக்கொண்டிருக்கிறது.



**● வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இக்காலத்தில்,வாசகர்களுக்கு உங்களது ஆலோசனை எவ்வாறு ஊக்கப்படுத்தும் எனக் குறிப்பிடுங்கள்...**

முதலில் எனக்கு நானே கூற வேண்டும் ஊக்கப்படுத்துவதற்கு.

நானும் ஒரு வாசிப்பு சோம்பேறியாக தான் இருக்கிறேன். எதாவது ஒரு விடயத்தை வித்தியாசமாக முயற்சி செய்யும் போது எழுத்துக்கள் உள்ளுக்குள்ள திக்கி திணறி கொண்ட போது என்னை தூக்கவில்லை என்று புத்தகம் ஒவ்வொன்றும் சிரிக்கும்.

உண்மையில் வாசிப்பு அருகி வருவது மனவருத்ததிற்குரிய விடயம் கவலையளிக்கிறது.

ஸ்மார்ட் போன் ஒவ்வொன்றும் புத்தகத்தை கொலை செய்ய வழிவகுக்கிறது. வாசிப்பின் போதை நேரத்தை சரி வரச்செய்யும் வாசிப்பைஉமர் முக்தார் மற்றும் பகத்சிங் சிறை தண்டனையிலும் வாசிப்பை மேற்கொண்டு இருந்தவர்கள் காணப்படுகின்றார்கள், பேரறிஞர் அண்ணா சிகிச்சையை அடுத்த நாளுக்கு மாற்ற சொன்னார்,அம்பேத்கர் உறங்கும் இடத்தை கூட வாசிக்கும் இடமாக கேட்டார் வாசிப்பை பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.

வாழ்க்கை பூரணத்துவம் வாசிப்பின் நேசிப்பை ஒவ்வொருவரின் தீராத காதல் மூலம் உணரமுடியும்.

கிண்ணியா
ஜெனீரா ஹைருல் அமான் ...

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

## மனசால்

முல்லை முஸ்ரிபா



# முயலாடு முன்றில் 03

குழந்தை நேயம் என்பது குழந்தைகள் மீது சொரியப்படும் அன்பு, இரக்கம், கருணை, ஊக்குவிப்பு, நம்பிக்கையூட்டும் பண்புகளைக் கொண்ட உயிர்ப்பான செயல் வடிவம்.

குழந்தை மீதான நேயம் சொரியப்படும் தலையாய இடமாகப் பாடசாலைகள் அமைய வேண்டும். அதனாற்;தான் குழந்தை நேயப் பாடசாலைகள் குறித்து வலியுறுத்தப்படுகிறது.

குழந்தைகளை நேசிக்கும் போது அவர்கள் மற்றவர்களை மற்றவற்றை நேசிப்பார்கள். இந்த நேசம் மனப் பக்குவத்தையும், மகிழ்ச்சியையும் தரும். மகிழ்ச்சியாகக் கற்கவே சிறுவர்கள் விரும்புகிறார்கள் என்பதனால் பாடசாலைக் கவின் நிலை மனதுக்குப் பிடித்ததாக வடிவமைக்கப்படுவது அவசியம்.

சிறார்களின் ஆசிரியத் தாயின் மீதான பற்றுதல் குழந்தை நேயத்தில் தலையிடமாகிறது. ஆசிரியருக்கும் குழந்தைக்குமிடையிலான தொப்புளுறவு நேயம் அன்புதானே.

குழந்தைகளின் இரண்டாவது தாய்மடியாகப் பாடசாலைச்சூழல், வகுப்பறை நாட்டம், ஆசிரியரின் அன்பு மொழியும் வதனம் என்பன அமைகின்றன.

குழந்தைக்கல்வி உளவியல், குழந்தைகளைப் பாடசாலைகளில் நிலைநிறுத்துவதற்கு குழந்தை நேயச் சூழலை அவாவுகின்றனது.

பௌதீகச்சூழலும், மானிடச்சூழலும் குழந்தைக்கு நெருக்கமாகும் போது அவர்களது கற்கும் சூழல் மீதான ஈர்ப்பு விசாலிக்கும். வர்ணங்களூடாகக் கட்டமையும் கட்டிடங்களும், பூந்தோட்டங்களும், விளையாட்டு முற்றங்களும், கைவினைக் களங்களும், செயற்பாட்டறைகளும்;, மொழிக்கூடங்களும், அழகு பெறுமிடங்களாக குழந்தைகளால் நேசிக்கப்படும் நிலை குழந்தைக் கல்வியை அண்மைப்படுத்தும்.

குழந்தைகள் ஆசிரியரிடமிருந்து இயல்பாகக் கற்கிறார்கள். ஆசிரியரின் முகபாவனை, புலனியக்கம், மொழியும்முறை, அங்கஅசைவு, உணர்வுநிலை, நடை, உடை, பாவனை எல்லாமே குழந்தைக்கு ஆசிரியம்தான். அதனால் ஆசிரியர்களே குழந்தை நேயப் பாடசாலையின் தொடக்கப்புள்ளி எனலாம்.



சகபாடிகள் குழந்தை நேயத்தின் உளவியல் சார்படிகள். சம வயதுக்குழு உறவு செப்பமாக அமையுமானால் குழந்தை நேயக்கல்வியும் செப்பமடையும்.

இத்தகைய பண்பட்ட சூழலைப் பாடசாலை முறைமை உள்ளமைக்கும் போது குழந்தைகளின் கற்றல் அழகு பெறும். முயலாடு முன்றில்களாகப் பாடசாலை முற்றங்கள் பிரகாசிக்கும். ஆரம்ப நிலைப் பாடசாலைகள் ஐந்து வயது முதல் பத்து வயது வரையான குழந்தைகளை உள்ளீர்க்கின்றன. இந்தப் புலனியக்கதூல சிந்தனைப் பருவத்தில் குழந்தை உடல், உள விருத்திசார் எண்ணக்கரு நிலை கற்பித்தல் அல்லது கற்றலுக்கான இற்றைப்படுத்தலை கலைத்திட்டம் அவாவுகிறது. பாடப்பனுவல் முதல் பாட ஏற்பாடு வரை முறைமைப்படுத்தப்படுகிறது.

முதன்மை நிலைகள1Oடாக அடிப்படைக் கற்றல் தேர்ச்சிகளை அடைவதற்கான கற்றலொழுங்கு ஏற்படுத்தப்படுகிறது. இதனூடு அடிப்படைத் திறன்களுடைய மாணவச் செல்வங்கள் இடைநிலைக் கல்விக்குத் தயாரிக்கப்படுகிறார்கள் அல்லது உருவாக்கப்படுகிறார்கள்.

குழந்தை நேயமெனும் முயலாடு முன்றிலில் உணர்வும் அன்பும் அழகுமிக்க காட்சிகளை காணுதல் இன்பமே.

குழந்தை ஆளுமை மேம்பாட்டு நோக்கிலான குழந்தை நேயப்பாடசாலை முறைமை எந்தளவு சாத்தியமாகி நிற்கிறது என்கிற கேள்வி எழுந்;து கொண்டேயிருக்கிறது. கல்வியின் இலக்குகளை நோக்கிய இக் கட்டமைப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

பின்லாந்தின் கல்வி முறை இன்று உலகளவில் போற்றப்படுகிறது. செயற்பாங்கான கற்றல் சூழலூடாக தேசத்தின் இலக்குகளை அடைதற் பொருட்டு குழந்தைநேய மையக் கற்றலொழுங்கு அக்கல்வி முறைமையின் வெற்றிக்கு ஆதாரமெனலாம்.

நமது தேசத்தில் குழந்தை விருத்திக்கான முறைமை எந்தளவுக்கு பெறுமானமுடையதாக அமைந்துள்ளதென்பதனை குழந்தைக் கல்வி அடைவுச்சுட்டிகள் வழியே பார்க்கும் போது போதாமைகள் வெளிப்படுவதையும் பார்க்கலாம்.

குழந்தைகளின் மனதை வெல்வதற்கு இன்றைய பாடசாலைகளின் முன்றல் தயார் நிலையில் இருக்கின்றனவா என்கிற கேள்வி தானாக எழுந்து நிற்கிறது.

இருபத்தோராம் நூற்றாண்டுத் திறன்களை உருவமைப்பதில் கற்றல் வலுவூட்டல் மற்றும் கற்பித்தல்சார் திறனூட்டல் எந்தளவு பெறுமானம் கொண்டுள்ளதென்பதும் சிந்திக்கத்தக்கது.

தலைமுறைச் செல்வங்களுக்கான முயலாடு முன்றில் ஒளிபெறவேண்டும்.

## ஔவன் கவிதை

### அந்தியின் நிழல்



மஞ்சள் நிழல் படிந்த அந்தி
சருகுதிர்ந்த தெருவில்
ஒற்றைச் சுவடாய்க் காய்ந்திற்று
தருக்களடர்ந்த மௌனத்தை
ஒற்றைக்குயிலின் நாதம் கீறிற்று
மெல்லிய மழையின் சங்கீதத்திடை
ஒன்று இரண்டென சில துளிகள்
வதனத்தில் வழிந்திற்று

யாரும் கடந்திலர்

தெருவில்
எவரும் சிறு புன்னகை விதைத்திலர்

தருக்களிடை அலையும் ஒற்றைக்குயிலின்
மௌனத்தை மொழிபெயர்த்திற்று
வானம்
நிறைந்த நட்ஷத்திரங்களில்

அந்தியும்
சில சொற்களில் கரைந்திற்று

# வருஷன்



வருஷன் என்ற பெயரைத் தான் எல்லோரும் தெரிவு செய்தனர். போன வருஷன் போனவன் தான். அவன் திரும்பி வரமாட்டான் என்று யாரும் சொல்லவில்லை.

ஒ வ் வொ ரு வ ரு க் கு ள் ளு ம் அவன் தோற்றங் காட்டிக்கொண்டு திரிவான். 'மெலிஞ்சு வாடிப்போன கறுத்த உருவம்.... போலிங்கில நிண்டு தேஞ்சுபோன காலடி...'' வருஷன் குறித்து அவனது டையரியிலேயே எழுதி வைத்ததாகப் பெருமைப்பட்டது யார்?

வாற வருஷன் வருவான். 'மெலிஞ்சோ உடஞ்சோ அல்லது சாயம் வெளுத்த பிஞ்சு சட்டையோடையோ வரக்கூடுமென்று'' எதிர்வு கூறியது யார்?

'எது எப்பிடியோ இண்டைக்குப் புது வருஷன் வாறான். வெடிகளெல்லாம் வெடிச்சுத் தீர்த்தாச்சு. போன வருஷனுக்கும் அப்புடித் தானென்டு....'' ஞாபகப் பக்கங்களைப் புரட்டினான் வருஷனின் கடைசி நண்பன்.

இந்த வருஷன் மீது ப்ளேனிங் யுனிற் ஒன்றைக் கட்டமைப்பது பற்றி வருஷனின் வீட்டு முற்றத்தில் நின்றவர்கள் எழுதித் தீர்த்தார்கள்.

### ப்ளேனிங்

01. புள்ளடிகள் தோட்டத்துல நல்லாக் காய்க்கும். அள்ளிக் கொண்டு போய் அதே பழைய குழியில கொட்ட வேணும்.
02. மின்சாரத்த, தண்ணிய, பெற்றோல, டீசல, மாவ, பாண, நல்லா வில குறைக்கவேணும்
03. அலை கடந்து பெயர்ந்து ஆரும் போகக்கூடாது.
04. தொழில் வத்திப் போய் வருமானமும் இல்லாம ஆரும் இருக்க முடியாது.
05. போஷாக்கு குறைபாட்டால் மந்த புத்தியுள்ள புள்ளையள் பிறக்கக் கூடாது.
06. பள்ளிக்கூடச் சுவர்களில் ஐசக் கரைக்க விடப்படாது.
07. வரிவரியாய் வரிச்சுக்கட்டி ஆரையும் மூச்சுத்திணற சாகடிக்கக்கூடாது.
08. சுக போகத்த எழுதி வச்ச ஓயாவுக்கு நடுவ இருக்கிற கூட்டத்த சரிய விட ஏலாது.
09. மாஸ்க் போடுற காலம் இனி இந்த வருஷத்திலையும், எந்த வருஷத்திலையும் இருக்கக் கூடாது.

ப்ளேனிங்கப் பார்க்கப் பார்க்க கோபம் வந்ததென்று ஒரு கூட்டம் சுலோகத்த தூக்கிக் கொண்டு திரிஞ்சதாம். இன்னொரு கூட்டம் விடுப்புப் பார்க்கப் போனயாம்.

வருஷனில கோபப்பட்டு என்னத்தைச் செய்ய. ஆரிந்த பிளேனக்கீறினதென்டு ஆருக்கும் தெரியாவாம். ஆனா...... சொல்ல முடியாமயும் விழுங்க முடியாமயும் தடுமாறின ஆளாரெண்டு எனக்குத் தெரியும்....

உண்மையில இந்தப்பிளேனக் கீறின அந்தா பழைய புளிய மரத்தடியில கிளி ஜோசியம் சொல்லுற அந்த ஆளுதான்.

வருஷனுக்குத் தல சுத்திற்று.

---

பொன்மீரா

# அருவியென வழியும் சிவனு சொற்கள்

என் கனவில் வரும் தேவதை/ எப்போதும் கையில் பூக்கள்/ ஏந்தி வருவதில்லை/ ஆனாலும் ஒளி மழையாய் / வெண்ணிற இரவு / மலைகளில் விடிந்திருந்தது / சிவனு மனோகரனின் மலைகளின் பாடல் ஏக்கமும் எதிர்பார்ப்புமாக ஒலிக்கத் தொடங்குகிறது.

'நமது பாடல் / நமது எளிய பாடல் / ஆன்மாவின் சருமத்துக்குக் கீழுள்ள / ஒரு தசை போன்றது'' என்பார் க்யூபா கவி நிக்கோலஸ் கியென்.



சிவனுவின் எளிய பாடல்களும் மலைகளின் தசைகளில் ஊறி வழிகிறது.

மலையக நிலம் வேர்கொண்டெழும் நவீன கவிதைகளின் தொடக்கமாக சி.வி.யைக் காணுகிறோம். அதன் தொடர்ச்சியாக சிவனு மேலெழுகிறார். 'ஆழப்புதைந்த அப்பனின் சிதை மேல் ஏறி மிதித்து இங்கெவர் வாழ்வோ தன்னுயிர் தருவன்'' என்கிற தேயிலைத் தோட்டத்திலே உறைந்த குரல், சிவனு மனோகரனின் 'ஒரு நாள் நானும் மலையேறுவேன் / அங்கு ஒலிக்கும் மலைகளின் குரல் / மரத்தில் கனிந்த பழத்தின் விதை / மண்ணில் விழுந்து வேரூன்றிஃவிருட்ஷமாவது போல் / மக்களின் குரலாய் ஒலிக்கும்''. கொடகே கையெழுத்துப் பிரதிப் போட்டியில் வென்று கொடகேயின் வெளியீடாக சுதர்மமஹாராஜனின் அட்டை ஓவியத்தில் லார்க் பாஸ்கரன் அட்டை வடிவமைப்பில் அழகுத் தோற்றம் எடுக்கும் மலைகளின் பாடல் குறித்து பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அணிந்துரைக்கிறார். 'மலைகள் இவரது கவிதைகளில் பயின்று வரும் படிமம் எனலாம். மலைகளின் பாடல் மட்டுமன்றி மலைகளின் விசித்திரம், மலை நல்வாடை, மலையில் வீழ்ந்த மழை முதலிய கவிதைகளும் இத்தகைய படிமங்களால் பின்னப்பட்டுள்ளன''.

'தவறுகளால் வெளியேற்றப்படும் பள்ளி மாணவர்களுக்கு'' சமர்ப்பணமாகும், மலைகளின் பாடல் உள் உணர்வுகளின் மென் குரலாகி நிற்கிறது. பிரிவு, துயரம், பாசம், கோபம், நம்பிக்கையென மலை மாந்தரின் அகவுணர்வுகளின் உள்ளெழுச்சியாகிறது சிவனுவின் குரலும் குரலடி மனமும். மலையகக் கவிதை நிலத்தில் விதை கொண்டெழும் சிவனுமனோகரனின் 'மலைகளின் பாடல்' என்கிற இந்தத் தொகுப்பு வெறும் தலைப்பு மட்டுமல்ல .சி.வி. முதல் சிவனு வரை கேட்கும் இதயத்தின் துடிப்பு.

# சுவிஸ் மதிவதனியின் இரு நூல்கள் வெளியீட்டு விழா












சுவிற்சர்லாந்தில் வாழ்ந்துவரும் எழுத்தாளர் மதிவதனி எழுதிய காட்சிப்பிழைகள் கவிதைத்தொகுதி மற்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தீர்வு கட்டுரைத் தொகுதி ஆகிய இரு நூல்களின் வெளியீட்டுவிழா அண்மையில் கொழும்புத் தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில் இடம்பெற்றது. ஞானம் கலை இலக்கியப் பண்ணையின் அனுசரணையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு ஞானம் சஞ்சிகை ஆசிரியர் சாகித்தியரத்னா தி. ஞானசேகரன் தலைமைதாங்கினார். செல்வி கார்த்திகா கார்த்தீஸ்வரன், செல்வி வேதவிலாசினி தர்மேஸ்வரன் ஆகியோரின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பித்த இவ்விழாவில் கொழும்புத் தமிழ்ச் சங்க நிர்வாக உறுப்பினர் இரகுபதி பாலஸ்ரீதரன் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் கருத்துரை வழங்கினார். கவிதை நூலின் விமர்சன உரையை மேமன்கவியும் கட்டுரை நூலின் விமர்சன உரையை டாக்டர் ரஞ்ஜனி சுப்ரமணியமும் நிகழ்த்தினர். இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகித்ததோடு நூல்களின் முதற் பிரதிகளையும் பெற்றுக் கொண்டார். நூல்களின் ஆசிரியை மதிவதனியின் ஏற்புரையைத் தொடர்ந்து கலாபூஷணம் கே. பொன்னுத்துரை நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சிகளை கலைஞானச் சுடர் ஸ்ரீமதி சுபாஷினி பிரணவன், செல்வி தேஜஸ்வினி பிரணவன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.




# " பாவேந்தல் பாடல்கள்" நூல் வெளியீட்டு விழா









வெறிச்சோடிக் கிடந்த கொரோனா காலத்தை வீணடிக்காமல் வீட்டில் தஞ்சம் அடைந்த பொழுதுகளில் பாலமுனை பாறூக் முகநூல் முற்றத்து வெளியில் பதிவிறக்கிய பாடல் வரிகளை இசை மற்றும் ஒளி வடிவில் உயிர்பெற வைத்து அவ்வப்போது அனுப்பி வைத்தார் நம் நாட்டுப் பிரபல பாடகர் கோவிலூர் செல்வராஜன். அப்பாடல்கள் நூல் வடிவம் பெற்று சென்ற அண்மையில் அட்டாளைச்சேனை சக்கீ மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி செயலாளர் பாத்திமா நஸீஹா முஸாபிர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல் ஹாபிழ் என். எம்.அப்துல்லாஹ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அவர் தனது உரையில் , "சிறுவர்கள் இளைஞர்களைக் கவரும் வகையில் இலக்கியம் இலகுவாக உள்ளீர்க்கப்படுவதற்கு இப்படியான பாடல்கள் வெகுவாக துணை நிற்கிறது. சம காலத்தில் அறிவு பூர்வமான ஆக்க நூல்களைக் காண்பதில் ஆனந்தம் அடைகிறோம்"எனக் குறிப்பிட்டார்.

நூல் நயவுரை செய்த விரிவுரையாளர் எம் அப்துல் றசாக் தனது உரையில்,"பாலமுனை பாறூக்கின் இந்த அவதாரம் புதிது. இம்முறை அவர் பாடல்களோடு வந்திருக்கிறார். நமது பிரதேசத்தில் கவிதையை வெகுஜனப்படுத்தியதில் பாறூக்கின் பங்கும் பணியும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது.

நவீனம் கடந்த கவிதை, காலாவதியான கவிதை என்றெல்லாம் கவிதையை இலக்கிய ஒதுக்கம் செய்யும் பிற்போக்கு மனநிலைகள் எதுவும் பாலமுனை பாறூக் போன்ற மக்கள் கவிஞனை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை.

தொடர்ச்சியான இயங்குதலே இலக்கிய செயற்பாடு அதுவே உயிரோட்டம் என்ற விதத்தில் இயங்குவதும், தான் இயங்கும் தளத்திற்கு விசுவாசமாக இருப்பதும் பாலமுனை பாறூக்கிடம் நாம் எப்போதும் காணும் தனித்துவம்.

ஒரு மரபுக் கவிதையோ, நவீன கவிதையோ தான் இன்றுவரை பாடலாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் பின்னணியில் பாலமுனை பாறூக்கின் எளிய மொழியே இங்கு பாடல்களாக உருவாகியிருக்கின்றன"என்று குறிப்பிட்டார். இனிதே நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் செ.யோகராசா, பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோரும் உரையாற்றினர். பாவேந்தல் பாலமுனை பாறூக் பொன்னாடை அணிவித்தும், நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

நாட்டாரியல் வித்தகர் எழுகவி ஜெலீலும் இஸ்ஸத் ஜெஸ்மீனும் இணைந்து பாடிய கிராமத்துப் பாடல் விழாவிற்கு சிறப்பு சேர்த்தது குறிப்பிடத்தக்கது.




**இந்தியாவின் தலைசிறந்த நூறு பேருக்கு அண்மையில் சமூக சேவைக்கான கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இதில் ஊடகவியலாளரும், சமூக சேவகரும், சாயி தர்மா ட்ரஸ்ட் ஸ்தாபகருமான இலங்கை, யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த தர்மசீலன் செந்தூரனுக்கு சௌத் அமெரிக்கன் யூனிவர்சிட்டி கொன்சுலர் மற்றும் இந்திய பாராளுமன்ற டெல்லி சட்டசபை உறுப்பினர்கள் பட்டம் வழங்கியபோது...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.